# பல்லவ திலகம்





சாண்டில்யன்

வானதி பதிப்பகம்

# பல்லவ திலகம்

(சரித்திர நவீனம்)

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

# முன்னுரை

இரண்டாவது நந்திவர்மன் புதல்வனான தந்திவர்மனுக்குப் பல்லவ திலகம் என்ற சிறப்புப் பெயர் இருந்ததாகவும், அவனுக்குப் பின் வந்த பல்லவர்கள் அதையொட்டி 'பல்லவதிலக குலோத்தவ' என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டதாகவும் திரு. சுப்பிரமணிய ஐயர் ''*Historical Sketches of Ancient India*'' என்ற நூலில் கூறுகிறார். பேராசிரியர் கோபாலன் இரண்டாவது நந்திவர்மனின் ராஷ்டிரகூட மனைவியான ரேவா தேவிக்குப் பிறந்தவன் தந்திவர்மனென்றும், அவன் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவனென்றும் *History of the Pallavas* (பல்லவர் வரலாறு) என்ற நூலில் சொல்லுகிறார். திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதிஸ்வாமி கோவிலிலுள்ள கல்வெட்டொன்று தந்திவர்மன் வைணவனென்பதற்கும் பாரத்வாஜ கோத்திரத்தவனென்பதற்கும் சான்று கூறுகிறது. ராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கோவிந்தன் காஞ்சிமீது படையெடுத்துத் தந்திவர்மனைத் தோற்கடித்த விவரங்கள் பண்டிட் விசுவேசுவரநாத் ரென் எழுதிய *History of Rashtrakudas* என்ற நூலில் இருக்கின்றன.

இந்த அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டு 'பல்லவ திலகம்' என்ற இந்தச் சரித்திர நவீனத்தைப் புனைந்திருக்கிறேன். தந்திவர்மன் தந்தையான இரண்டாவது நந்திவர்மன் சிறந்த வைணவனென்பதற்கும் அவன் திருமங்கையாழ்வாரின் பக்தனென்பதற்கும் சரித்திர ஆதாரமுமிருக்கிறது. இலக்கிய ஆதாரமுமிருக்கிறது. நாலாயிர திவ்யபிரபந்தத்திலுள்ள பரமேசுவர விண்ணகரத்தில் நந்திவர்மன் வெற்றிகளைச் சிறப்பித்து ஆழ்வார் பாடியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

வைகுந்தப் பெருமானிடம் பல்லவர் ஈடுபட்டிருந்தது அப்பெருமாள் கோயிலின் சிற்பங்களில் தெளிவாயிருக்கிறது. தென்னிந்திய சாஸனங்களும், அவர்கள் அக்கோயிலில் கொண்ட ஈடுபாட்டுக்கு அத்தாட்சியாயிருக்கின்றன.

தந்திவர்மன் வைணவச் சூழ்நிலையில் வளர்ந்ததாலும் வைகுந்தப் பெருமானுக்குச் செய்த திருப்பணிகளாலும் சிறந்த வைணவனாக இருந்திருக்கிறான். அவன் வாழ்நாளில் நடந்த போர்களில் அவன் தோல்வி

யுற்றாலும் அவன் ஆட்சியின் இறுதியில் அவன் ராஜ்யத்தின் நிலப்பரப்பு சிறிதளவும் குறையவில்லை. ஆகையால் அவனடைந்த தோல்விகள் உண்மையில் குறிப்பிடக்கூடிய தோல்விகளல்லவென்ற முறையில் இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.

நந்திவர்மனுடன் திருமங்கையாழ்வார் நெருங்கிப் பழகியவராதலால், அவன் மகன் நந்திவர்மனுக்கு உதவ ஆழ்வாரின் மந்திரிகளிலொருவரைத் துறவியாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

நந்திவர்மன் வாழ்க்கையைச் சூழ்ந்து நிற்கும் சின்னஞ்சிறு வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றைக் கூட்டி இந்தச் சரித்திர நவீனம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தொடர் நாவலாக வெளியிட்ட ''அமுதசுரபி'' காரியாலயத்துக்கும், புத்தகமாக வெளியிட உதவிய தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்துக்கும், எனது மற்ற நூல்களைப்போல் இதையும் தமது பட்டியலில் சேர்த்துக்கொண்ட வானதி அதிபர் திரு. திருநாவுக்கரசுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இக்கதையைப் புனைவதில் நான் உபயோகித்த வரலாற்று நூல்களின் பட்டியல் வருமாறு:

1. *Historical Sketches of Ancient India by Sri Subramania Iyer.*
2. *History of the Pallava's by Sri Gopalan.*
3. *History of Rashtrakudas by Pandit Visheshwarnath Reu.*
4. *S. I. I. Volume II part V.*
5. *Ep. India Volume XI.*
6. *The Pallava's by G. Jouveau Dubreuil. Doctor of University of Paris.*

சரித்திர ஆராய்ச்சி மாணவர்களின் உபயோகத்துக்காக இந்த நூல்களின் பட்டியலைத் தந்திருக்கிறேன்.

'பல்லவ திலகம்' என்ற இந்நூலை மக்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சாண்டில்யன்

## அத்தியாயம் 1

## சுதந்திரப் பறவை

'பல்லவன் வில்லவனென்று உலகில் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல்— பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகர'த்தின் அர்த்தஜாமப் பெருமணி டணார் டணார் என்று ஒலிப்பிய பேரொலி, 'நடஞ்சூழ்ந்த அழகாய கச்சி'யெனும் காஞ்சி மாநகரைப் பல முறை வளைந்துலவிச் சென்று நகரடங்கும் நாழி நெருங்கி விட்டதை உணர்த்தியுங்கூட, அந்த மாநகர் கண்ணுறங்க எத்தனிக்காததைக் கண்ட இதயவர்மன் இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் புரண்டதன்றி, அந்த வெள்ளத்தின் அலைக் கோடிகள் முகத்திலும் உருண்டதால் அவன் வீர உதடுகளும் ஆனந்த நகை பூத்தன. அந்த அர்த்த ஜாமத்தில் மிகவும் சாவதானமாக எதிலும் சிரத்தை காட்டாமல் உலகத்தையே அலட்சியமாக நினைத்து காஞ்சி மாநகரின் பிரதான ராஜவீதியில் நடந்துகொண்டிருந்த அந்த வாலிபன் தன்னைவிட அதிர்ஷ்டசாலி உலகில் இல்லையென்றே நினைத்தான். இருபத்திரண்டு ஆண்டுகள் நிறைவதற்கு முன்பாகவே இரண்டு போர்களைக் கண்டுவிட்டதாலும், கண்ட இரண்டு போர்களிலும் மன்னரே மெச்சிப் பல விருதுகளை அளித்ததாலும், காஞ்சிப் பேரரசின் பெரும்படைத் தலைவர்களும் தன்னிடம் மிகுந்த பயபக்தியுடன் நடக்கத் துவங்கிவிட்ட காரணத்தாலும், தன் அதிர்ஷ்டம் எல்லையற்றது என்று நினைத்த அந்த வாலிபன் காஞ்சி மாநகரின் அதிர்ஷ்டமும் எல்லையற்றதென்றே எண்ணினான். விஷ்ணு காஞ்சி, சிவ காஞ்சி, புத்த காஞ்சி, ஜைன காஞ்சியெனக் காஞ்சி மாநகர் நால்வகையாகப் பிரிந்திருந்தாலும், நால்வகைச் சமயங்களும் அந்த நகரத்தில் பரவியிருந்தாலும், பிரதானமாகத் துலங்கி சைவமும் வைணவமுமே என்பதை எண்ணிய இதயவர்மன், ''ஆத்திகத்துக்கு இது இருப்பிடமாயிருப்பதாலேயே இது அதிர்ஷ்டம் வாய்ந்தது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஈசுவர தத்துவத்தை எதிர்த்த பேரரசு காலவெள்ளத்தில் நிற்காமல் அழிந்து விட்டதை

கொண்டும் தங்கள் இருப்பிடங்களை நோக்கி விரைந்து கொண்டிருந்ததும் அந்த நகரத்தின் நலனுக்கு அத்தாட்சி என்று நினைத்தான் அந்த வாலிபன். அரச வீதிகளில் அர்த்த ஜாமத்திற்குப் பிறகும் அரவம் அனுமதிக்கப்படுகிற ஒரே நகரம் காஞ்சிமாநகர் என்பதை நினைத்துப் பார்த்த இதயவர்மன், ''நல்ல ஒலிகள் எங்கும் எப்பொழுதும் கேட்கலாம். அபசப்தங்களைப் போல் அவை ஆபத்து விளைவிப்பதில்லை. காஞ்சியின் அதிர்ஷ்டத்திற்கு இப்பொழுது காரணம் புரிகிறது'' என்று தன் எண்ணங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் செய்தான்.

காஞ்சியைப் போல் அவனும் இருந்தான். அவன் வாழ்விலும் உறக்கம் சொற்பம், விழிப்பு அதிகம். இருப்பினும் அதிக விழிப்பு அவன் உடலைப் பாதிக்கவில்லை அதற்கும் காரணமும் சொல்லிக் கொண்டான் இதயவர்மன். ''உறக்கம் மட்டும் உடலைப் பலப்படுத்துவதில்லை. நல்ல விஷயங்களைக் கேட்பதால் உண்டாகும் விழிப்பும் உடலைப் பலப்படுத்துகிறது. திருமங்கை மன்னன் பாசுரங்கள் அளிக்கக் கூடிய உடல் பலத்தையும் மனப் பலத்தையும் வேறு எது அளிக்க முடியும்?'' என்று கூறிக்கொண்ட அவன், ''முடியாது முடியாது. வேறு எதற்கும் அந்தப் பலம் இல்லை. அந்தப் பாசுரங்களை உச்சரிப்பதிலேயே இன்பமிருக்கிறது. அந்த இன்பம் நரம்புகளில் ஊடுருவுகிறது. நரம்புகள் பலப்படுகின்றன. நரம்புகள் தசைகளுக்கு வலுவூட்டுகின்றன'' என்று ஆயுர்வேத மனோதத்துவ பூர்வமாகவும், தன் விழிப்பினால் ஏற்படும் வலுவுக்குக் காரணமும் கூறிக் கொண்டான். அதுவும் பரமேச்சுர விண்ணகரத்தின் பாசுரங்களை அடிக்கடி சொல்வதில் அவன் பேரானந்தம் அடைந்தான். அதனாலேயே தன்னைப் பெரும் அதிர்ஷ்டசாலி என்று எண்ணினான். அது மட்டுமல்ல, அந்தப் பாக்களைப் பெற ஒரு விண்ணகரத்தை நலமுற நிறுவிய பரமேஸ்வரனையும் அதிர்ஷ்டசாலி என்று நினைத்தான். அந்தப் பரமேஸ்வரனைப் பெற்ற பல்லவ குலம், அந்தப் பல்லவ குலத்தின் தலைநகரான காஞ்சி



அனைத்துமே அதிர்ஷ்ட வெள்ளத்தில் மூழ்கியது என எண்ணினான் அந்த வாலிபன்.

இத்தனைக்கும் அவன் பெரும் பக்தனல்ல. காஞ்சியின் காவலனைப்போல் வைணவத்தில் அதிகமாகத் திளைத்துவிட்டவனுமல்ல. அவன் பெற்றோர்கள் வடக்கேயிருந்து வந்தவர்கள் என மன்னரும் மற்றோரும் சொல்லக் கேட்டிருந்தான் அவன். அவன் குல வழக்கப்படி அவனுக்குக் குழந்தைப் பருவத்தில் கோபி சந்தனமே இட்டார்கள் மறையவர்கள். மறையவர் மேற்பார்வையில் அரசமாளிகையில் வைணவனாகவே வளர்க்கப்பட்டும் வீரவைணவனாக வளராமல் வீரனாக மட்டுமே வளர்ந்த இதயவர்மன் பரமேச்சுர விண்ணகரத்தைப்பற்றி அடிக்கடி நினைத்ததற்கும் நாடியதற்கும் அங்கு குடிகொண்டிருந்த வைகுந்தப் பெருமாளின் திவ்ய சேவையும் ஒரு காரணந்தான். திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்களின் இனிப்பும் ஒரு காரணந்தான். எனினும் அதற்கு வேறொரு முக்கிய காரணமும் உண்டு.

ஆழ்வார் அந்தப் பாசுரங்களில் வைகுந்தன் பெருமையோடு பல்லவர்கோன் வீரப் பெருமைகளையும் கலந்து பாடியது அவன் வீர இதயத்துக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. ''தேர்மன்னு தென்னவனை முனையில் செருவில் திறல் வாட்டிய திண் சிலையோன்'' என்றும், ''விடைத்திறல் வில்லவன் நென் மெலியில் வெருவச் செருவேல் வலங்கை பிடித்த, படைத்திறல் பல்லவர்கோன்'' என்றும், இன்னும் பலவாறும் பல்லவர்கோன் வீரத்தை ஆழ்வார் பல தலைமுறைகளும் பாடி மகிழப் பாசுரமிழைத்ததை எண்ணி, ''ஆழ்வார் பாசுரம் உள்ளளவும் பல்லவர்கோன் புகழ் நிற்கும். ஆழ்வார் பாசுரம் அழியாதது. ஆகவே பல்லவர்கோன் புகழும் அழியாதது'' என்று பல்லவ மன்னனின் வீரத்திற்குச் சான்று கூறும் பாக்களை நினைத்து நினைத்துப் பரவசமடைந்தான் இதயவர்மன் அந்த நள்ளிரவில்.

வாலிப வயதுள்ள இதயவர்மன் நல்ல உயரத்துடனும், நீண்ட கைகளுடனும் காணப்பட்டான். அவன் முகத்தில் ஓர் அலட்சியச் சாயை படர்ந்து கிடந்தது. உள்ளத்தில் அணுவளவும் கவலையில்லாததையும் மகிழ்ச்சி நிரம்பி நின்றதையும் அந்த அலட்சியச் சாயையை ஊடுருவி நின்ற பொலிவு தெளிவுபடுத்தியது. உலகில் யாருமில்லாத அநாதை அவன். ஆனால் அவன் அநாதையாகி விட்டதையே ஒரு பெரும் பேறாக நினைத்தான். "கேட்பதற்கு யாருமில்லை. மடிந்தாலும் துன்பப்படுவதற்கு யாருமில்லை. ஆகவே என்னால் யாருக்கும் துன்பமில்லை. இருக்கும் வரையில் எனக்கும் மகிழ்ச்சி; பிறர்க்கும் மகிழ்ச்சி. இருக்கும் வரையில் நான் சுதந்திரப் பறவை சுதந்திரத்திலேயே மகிழ்ச்சி இருக்கிறதல்லவா?" என்று எண்ணிய இதயவர்மன் தானாகவே சிரித்துக்கொண்டு பிரதான ராஜ வீதியிலிருந்து பரமேச்சுர விண்ணகரத்துக்குப் பிரியும் சிறிய பக்கச் சாலையில் திரும்பினான். கோவிலுக்குச் செல்லும் அந்தச் சாலையிலுள்ள வீடுகளில் பலவும் வேதியர் வீடுகளாதலால் அங்கு அவர்கள் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த மறையொலிகள் மிகக் கம்பீரமாகக் கேட்டுக் கொண்டிருந்தன. அந்த ஒலிகளை இன்பமாகக் காதில் வாங்கிக்கொண்டு சென்று கோயிலின் வெகு அருகில் வந்துவிட்ட இதயவர்மன் சந்தேகச் சிந்தனையுடன் சட்டென்று நின்றான். வழக்கத்துக்கு விரோதமாக அன்று கோவிலில் காவல் இல்லை. சதா காவல் செய்ய வேண்டிய புரவி வீரர் இருவரும் மறைந்துவிட்டதாகத் தோன்றியதால் சற்று நடையைத் துரிதப்படுத்திக் கோபுர வாயிலில் அடியெடுத்து வைத்த இதயவர்மன் கோயிலின் வாயில் விளக்குகள் இரண்டும் அணைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து, "இது யார் வேலை?" என்று சிறியவண்ணம் விண்ணகரத்தின் பெருங் கதவை வெகு வேகமாக அணுகினான். அவன் வேகம் திடீரெனத் தடை செய்யப்பட்டது. யாரோ இருவர் அவன் தோள்மீது கையை வைத்துப் பலமாக அழுத்தினார்கள்.



இருப்பினும் வலிய மற்றொரு கை அவன் வாயை மூடி இறுக்கிப் பிடித்தது. "மூச்சு விடாதே" என்ற மந்திரம் அவன் காதில் ஒதப்பட்டது. அதுவரையில் சுதந்திரப் பறவையாக இருந்த இதயவர்மன் கண்ணிமைக்கு முன்பாகத் தான் சுதந்திரமிழந்து விட்டதை உணர்ந்தான்.

## அத்தியாயம் 2

## விளக்கொளி விளக்கிய உண்மை

அர்த்த ஜாமத்துக்குப் பின்பும் எரியவேண்டிய கோபுர வாயில் விளக்குகளிரண்டும் அணைந்து கிடந்தாலும், சதா கோபுர வாயிலைக் காக்கவேண்டிய புரவி வீரர் இருவருங்கூட மறைந்துவிட்டதாலும் சந்தேகங்கொண்டு விண்ணகர வாயிற் பெருங் கதவை அணுகிய இதயவர்மன் கோபத்தின் வசப்பட்டிருந்ததால், கோபுர வாயிலின் பக்கச் சுவர்களின் இருட்டில் மறைந்து நின்ற இருவரைக் கவனிக்கவோ அவர்கள் தன்னைப் பின்புறத்தில் நெருங்கி வந்ததை உணரவோ திராணியில்லாதிருந்தானாகையால், தன் இருதோள் அழுத்தப்பட்டு வாயும் பலமாக மூடப்பட்டதுமே சற்று நிதானப்பட்டான். அப்படி நிதானப் பட்ட சமயத்தில், கோபம் தன்னை எப்படி நிதானமற்றவனாகவும் குருடனாகவும் அடித்து விட்டதென்பதை உள்ளூர உணர்ந்தாலும் அந்த உணர்வினால் அந்தச் சமயத்தில் பலன் எதுவுமில்லை என்பதை அறிந்து கொண்டான். உண்மையில் அந்தச் சில விநாடிகளில் அவன் கோபம் அடியோடு அவன் சித்தத்திலிருந்து மறைந்து வியப்புக்கே இடமளித்தது.

பலமான காவலையுடைய பல்லவர் தலைநகரத்தில், சதா வீரர் நடமாட்டம் இருந்து கொண்டிருக்கும் பிரதான ராஜ வீதியின் வெகு அருகில், அதுவும் மன்னர் எந்த சமயத்திலும் விஜயம் செய்யக்கூடும் என்பதாலேயே இரவும் பகலும் புரவி வீரர் காவல் உள்ள அந்த விண்ணகரத்தின் வாயிலில் இப்படியுமொரு நிகழ்ச்சி ஏற்படக்கூடும் என்பதை அவன் அந்த விநாடிவரை சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை. ஆகையால் சில விநாடிகள் பிரமிப்பிலேயே ஆழ்ந்தான். வியப்பிலாழ்ந்த அந்தச் சில விநாடிகளுக்குள்ளேயே ''மூச்சுவிடாதே'' என்று காதில் ஓதப்பட்ட எச்சரிக்கையும், அதை அடுத்து ''பேசாமல் முன்னே நட'' என்ற உத்தரவும் அவன் வியப்பையும் பிரமிப்பையும் ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தின.



இதயவர்மன் புத்தி வெகு துரிதமாக வேலை செய்தது. தன்னைப் பிடித்த இருவர் மிகுந்த வலுவுள்ளவர்கள் என்பதைத் தன் தோளிலும் கைகளிலுமிருந்த பிடியாலும், கழுத்தைச் சுற்றி வளைத்து வாயை மூடிய இரும்புக் கரத்தின் உறுதியாலும் புரிந்து கொண்ட இதயவர்மன், அந்த வலுவுள்ளவர்களையும் தன்னால் உதறிவிட முடியுமென்பதை அறிந்தேயிருந்தான். இத்தகைய வல்லவர் நால்வரைக்கூட, மற்போரில் சிறந்த காரணத்தால் 'பல்லவ மல்லனென்று' பிரசித்திபெற்ற இரண்டாம் நந்திவர்மனுடைய பிரதானியிடமிருந்து நேரிடையாகப் பயிற்சி பெற்ற தன்னால் உதறிவிட முடியும் என்பதை அறிந்திருந்த இதயவர்மன் அப்படிச் செய்வது உசிதமா என்று மட்டும் சிந்தித்தான். தான் மட்டும் மூச்சுப் பிடித்து உடற்சதைகளை ஒரு முறை புடைத்து ஒரு குனி குனிந்து நிமிர்ந்து உதறினால் தன்னைப் பிடித்திருந்த வீரர் இருவரும் எதிரேயுள்ள விண்ணகரப் பெருங்கதவில் மோதிக் கொள்வார்களென்பதைச் சந்தேகமற அறிந்திருந்த அந்த வாலிபன், அப்படி மட்டும் தான் செய்து விட்டால் தன்னைப் பிடித்த இருவரும் ஓடி மறைந்து விடுவார்களென்பதை நினைத்தால் மற்போர் முயற்சியைச் சற்றே நிறுத்திக்கொண்டான். தான் போர் வீரனாயிருந்தும் ஆயுதங்களணியாமல் எப்பொழுதும் இராக்காலங்களில் நடமாடுவதைக் காஞ்சிப் பெருவீரர் அபாயமாகக் கருதமாட்டார்களென்பதை அவன் அறிந்திருந்தான். ''மற்போரில் திறன் மிக்க இதயவர்மனுக்கு வாளெதற்கு. வேலெதற்கு?'' என்று வீரர்கள் கூறுவது வழக்கமாக இருந்த அந்த நகரத்தில் நிராயுதபாணி என்ற நினைப்பில் தன்னைப் பிடிக்க வந்தவர்கள் தொண்டை நாட்டு வீரர்களாயிருக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்டதால், அவர்கள் யார், எதற்காகத் தன்னைப் பிடிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் சொற்படி கேட்கத் தீர்மானித்த இதயவர்மன், அந்த வீரனில் ஒருவனிட்ட உத்தரவின்படி முன்னே நடந்தான்.

இதயவர்மன் நின்ற இடம் கதவுக்கருகிலேயே இருந்த
ால் முன்னே எங்கு நடப்பது என்பதை அறியாமல்
ாலைத் தூக்கிவைத்த அவன் காதில் ''போதும் தலையைக்
ுனி, திட்டிவாசல் திறந்திருக்கிறது'' என்று கூறினான்
ுவன் வாயை மூடியிருந்த வீரன். இதைக் கேட்ட இதய
ர்மன் வியப்பு உச்சிக்குச் சென்றது. கோயிலின் திட்டி
ாசற் கதவு வழியாகத் தன்னைக் கோயில் பிராகாரத்துக்
ுள் கொண்டு செல்ல அந்த வீரர்கள் முயல்கிறார்கள்
ன்பதை அறிந்த இதயவர்மன், கோவிலுக்குள் அர்த்த
ாமத்துக்குப் பிறகு அரச அனுமதியின்றி நுழைபவர்
ளை வெட்டுப் பாறைக்கு அனுப்ப மன்னனின் திட்ட
ான உத்தரவிருக்க எந்தத் துணிவில் அந்த வீரர்கள்
ன்னைக் கோயிலின் உட்பக்கம் அழைத்துச் செல்ல
ற்பாடு செய்கிறார்கள் என்பதை எண்ணி விடை
ாணதவனாய் அவர்கள் இஷ்டப்படி தலையைக் குனிந்து
ிட்டி வாசலுக்குள் தலையை நுழைத்துத் தனது காலை
ும் எடுத்துத் தாண்டி அப்புறமிருந்த படியில் ஊன்றி
ான் அப்படி அவன் தாண்டிய உடன் அவன் மீதிருந்த
ிடியை தளர்த்தாமலே அவனுடன் உள்ளே நுழைந்த
இருவரும் திட்டி வாசற்கதவை அடைத்துத் தாழும்
இட்டனர். கோவிலின் உட்புறம் வந்ததும் வாய் மூடப்
ட்டிருந்தாலும் கண்கள் மூடப்படாததால் பிராகாரத்
தைச் சுற்றி நோக்கிய இதயவர்மன், தன்னைப் பிடித்து
ந்த இரு வீரரைத் தவிர வேறு மனித நடமாட்டம்
துவும் அங்கில்லாததையும் கோவில் பூராவும் பரம
அமைதியாயிருந்ததையும் கவனித்தான். ஆகவே எந்த
த்தேசத்துடன் அந்த வீரர் இருவரும் தன்னை அழைத்து
ந்திருக்கிறார்களென்பதைப் புரிந்து கொள்ள முடியாத
னாய் மேற்கொண்டு நடப்பதைக் காண இஷ்டப்பட்டுத்
ன்னைப் பற்றி வந்த காவலர் சொற்படி நடக்கத்
ீர்மானித்தான்.

அவனைப் பற்றிவந்த காவலர் இருவரும் உள்ளே
நுழைந்து திட்டி வாசலைச் சாத்தி வெளிப் பிராகாரத்துக்கு



வந்ததும் இதயவர்மன் மீதிருந்த பிடியைத் தளர்த்தி விட்டதால், தன் கைகளை அப்படியும் இப்படியும் அசைத்துத் தன்னைச் சரி செய்துகொண்ட அந்த வாலிபன் அக்கம்பக்கத்திலிருந்த வீரர் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். இருவர் முகங்களும் உடல்களும் இரும்புக் கவசத்தால் மூடப்பட்டிருந்ததால் இருவரையும் இதயவர்மனால் யாரென்று ஊகிக்க முடியாதிருந்தது. தவிர, அவர்கள் கைகளின் முன் பகுதிகளில் தற்காப்புக்காக அணியப்பட்ட இரும்பு வலைச்சுருளைக் கவனித்ததால் தன்னைப் பிடிக்க மிகுந்த முன்னேற்பாட்டுடன் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அர்த்தஜாம வேளையிலோ அதற்குப் பின்போ கோயிலுக்குள் நுழைந்து பெருமானை வழிபட அரசரால் அனுமதிக்கப்பட்ட வெகு சிலரில் தான் ஒருவனாயிருந்தாலும், தான் தினசரி அர்த்த ஜாமத்தில் வரும் வழக்கம் அவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்பதை எண்ணிப் பார்த்து விடை காணாமல் தவித்தான் இதயவர்மன். இராக் காலங்களில் கோவில் நடமாட்டமின்றி நிம்மதியாயிருக்கும் காலத்தில் பெருமானைத் தொழவும், அந்த விண்ணகரப் பிராகாரங்களிலுள்ள சிறப்புச் சிற்பங்களைக் கண்டு மகிழவும் தான் அடிக்கடி அங்கு வருவதை நன்றாக அறிந்த யாரோதான் அந்த வீரர்களை அனுப்பியிருக்க வேண்டுமென்றும் ஊகித்துக் கொண்டான் அவன். அப்படித் தன்னை அத்தனை தூரம் கண்காணித்துப் பிடிக்க வேண்டிய அவசியமென்னவென்பது மட்டும் அவனுக்குப் புரியாததால் அந்த வீரர்களில் ஒருவனை ஏறெடுத்து நோக்கி, ''எதற்கு இங்கு அழைத்து வந்தீர்கள் என்னை?'' என்று வினவினான்.

''உட்பிராகாரத்துக்குச் செல் தெரியும்'' என்றான் கவசமணிந்த இரு வீரரில் ஒருவன்.

''என்ன தெரியும்?'' என்று வினவினான் இதயவர்மன் சர்வசாதாரணமாக.

அவன் குரலில் எந்தவித உணர்ச்சியுமில்லாததையும், தங்களிடம் அகப்பட்டிருந்த சமயத்திலும் அவன் பெரும் அசட்டையுடன் கேள்வி கேட்டதையும் கண்ட அந்த வீரர் இருவரும் வியப்பின் வசப்பட்டார்கள். அவர்களில் முதலில் பேசியவன் வியப்பு குரலிலும் ஒலிக்கச் சொன்னான், ''உள்ளே உனக்காக ஒருவர் காத்திருக்கிறார்'' என்று.

''அவர் வெளியே வரமாட்டாரா?'' என்று ஏளனத் தொனியில் வினவினான் இதயவர்மன்.

''அவரையே அதைக் கேட்பது நல்லது.'' கடுமையுடன் வந்தது மற்றொரு வீரனின் பதில்.

''யாரவர்?'' என்று மீண்டும் வினவினான் இதயவர்மன்.

''நேரில் பார்த்தால் தெரியும்'' என்ற வீரர்களில் ஒருவன், ''உம் சரி சரி நட'' என்றான்.

மேற்கொண்டு அவர்களிடம் பேசிப் பயனில்லை என்பதை அறிந்துகொண்ட இதயவர்மன் மௌனமாக நடந்து உட்பிராகாரத்துக்குள் சென்றான். அந்தப் பிராகாரச் சுவர்கள் அவனுக்குப் புதிதல்ல. அவற்றிலிருந்த சிற்பங்கள் அனைத்துடனும் அவன் பேசிப் பழகி இருக்கிறான் பல சமயங்களில். அவை சொன்ன வீர சரிதங்களைக் காதால் கேட்டதாகக்கூட அவனுக்குப் பிரமை உண்டு. பல்லவர் தோன்றிய காலத்தில் இரண்டாம் நந்திவர்மன் வரையில் இருந்த பலர் வரலாறும் செதுக்கப்பட்ட அந்தச் சிற்பங்களை அவன் கோவிற் சுவர்களிலும், கோவிலில் இல்லாத சமயங்களிலும் பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்த நாழிகைகள் அனந்தம். ஆகவே தன்னை மர்மம் சூழ்ந்த அந்த இரவிலும் சிறிது ஆனந்தத்துடனே அந்தப் பிராகாரத்தில் நுழைந்த இதயவர்மன் மனம் மிகுந்த நிம்மதியடைந்தது. அந்த நிம்மதி அளித்த நிதானமான உறுதியான நடையுடன் முன்னே நடந்த இதயவர்வன், அந்தப் பிராகாரத்தின் ஒரு மூலையில் விளக்கொன்று



லேசாக எரிந்ததையும் அந்த விளக்குக்கு அருகில் ஒரு மனிதன் தலை வணங்கி நின்று கொண்டிருந்ததையும் கவனித்தான். அதுமட்டுமல்ல, அந்த மனிதன் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கித் தான் நகரும் முன்பாகவே தன்னைப் பின்பற்றி வந்த வீரர்கள் இருவரும் பின்தங்கி விட்டதையும் கவனித்தானாகையால், விளக்குக்கு அருகில் நின்று கொண்டிருந்தவன் சாமானிய மனிதனா யிருக்க முடியாது என்று தீர்மானித்துக்கொண்டு மெல்ல மெல்ல அவனை நோக்கிச் சென்றான் இதயவர்மன் தலை வணங்கி நின்ற மனிதன் பிராகாரச் சுவரை நோக்கி நின்று கொண்டிருந்ததால் அவன் முதுகுப்புறமே இதயவர்மனுக்குத் தெரிந்ததன் விளைவாகவும், அந்த மனிதன் 'நீண்ட தியானத்தில் இருக்கிறது போல் தோன்றியதாலும், நாலைந்து அடிகளுக்கு முன்பே நின்றுவிட்ட இதயவர்மன் அந்த மனிதனைக் கூர்ந்து நோக்கினான். அந்த மனிதன் அணிந்திருந்த நீளச் சால்வை அவன் நிலையிலிருந்து முதுகுப்புறம் முழுவதையும் மூடித் தொங்கிக் கொண்டிருந்ததால் அவன் உடற் பரிமாணத்தைக்கூட நிர்ணயிக்க முடியாவிட்டாலும், அவன் நின்ற தோரணையிலிருந்து அவன் பெருங்குடிமகனாயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். அது தவிர அவன் சால்வையில் வேலைப்பாடு ஏதுமில்லாமல் அது வெகு சாதாரணப் பட்டாகவும், பட்டிலும் சிறிது மலிவுப் பட்டாகவும் இருந்தபடியால் தலை வணங்கி நின்றவன் செல்வநிலை அத்தனை விரும்பத் தக்கதாக இருக்க முடியாதென்று ஊகித்தான் இதயவர்மன். செல்வநிலை விரும்பத்தக்கதாக இல்லையென்றாலும் நின்றவன் இருந்த தோரணையிலிருந்து, அவன் மிக நிதானமும் உறுதியும் துணிவும் உள்ளவனாகவும் இருக்க வேண்டுமென்றும் தீர்மானித்த இதயவர்மன், தன் ஊகம் எத்தனை தூரம் சரியென்பதை உணர எண்ணி, ''யார் நீ? ஏன் இங்கு வரவழைத்தாய் என்னை?'' என்று இரு கேள்விகளை வீசினான் அதிகாரம் இருந்த குரலில்.

விளக்கை நோக்கித் தலை வணங்கி நின்றவன் தலையை நிமிர்த்தவில்லை, திரும்பவில்லை, பதில் சொல்லவும் எண்ணவில்லை. மிகுந்த சிந்தனையோ தியானமோ சொல்ல முடியாது. அப்படித் தீவிர மௌனத்தில் நிலைத்து நின்றான்.

அவன் நிலை பரிதாபத்துக்குரியதா, அச்சத்துக்குரியதா என்ற விளங்கமுடியாத தன்மையிலிருந்தபடியால் உடனே கேள்வியை இரண்டாம் முறை திருப்பாத இதயவர்மன் சற்று நிதானிக்கவே செய்தான். அப்படித் தன்னை நிதானிக்க வைத்தது எதுவாயிருக்குமென்பது அவனுக்குப் புரியவில்லை. இரு வீரரை விட்டுத் தன்னை முரட்டுத்தனமாக உள்ளே அழைத்து வந்தவனிடம் தனக்கு ஓரளவு பயமும் மரியாதையுங்கூடத் தோன்றிவிட்டதே. அந்த நிதானத்துக்குக் காரணமென்பதைச் சிறிது யோசனைக்குப் பின்பு புரிந்துகொண்டதும் இதயவர்மன் இதயத்தில் பெருவியப்பு மண்டிக்கொண்டது. மெள்ள மெள்ள அந்த வியப்பை உதறி விட்டு அந்த மனிதனைப் பற்றிய மர்ம முடிச்சை அவிழ்த்துவிடத் தீர்மானித்த இதயவர்மன் மேலும் ஓரடி எடுத்து வைக்க முற்பட்டதும், ''அப்படியே நில்! அருகில் வராதே'' என்று எழுந்த சொற்கள், திக்பிரமையை ஊட்டின இதயவர்மனுக்கு. 'அந்தக் குரல்! அந்தக் குரல்! மிகவும் பழக்கமான குரல்' என்று எண்ணிய இதயவர்மன் இதயம் சட்டென்று நின்றுவிடும் போலிருந்தது. குரல் அளித்த ஊகம் குலைநடுங்க வைத்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து இதயவர்மன் விடுபடுமுன்பாக, விளக்கை நோக்கி நின்றவன் தலை நிமிர்ந்து விளக்கைவிட்டுச் சற்று நகர்ந்து திரும்பினான். விளக்கொளி அவன் முகத்தில் நன்றாக விழுந்தது. குரல் அளித்த ஊகம் எத்தனை சரியென்பதை விளக்கொளி விளக்கிய முகம் நிரூபித்தது இதயவர்மனுக்கு. இதயவர்மன் திக்பிரமை பிடித்து, வைத்த கண் வாங்காமல், பேச நா எழாமல் பல விநாடிகள் அசைவற்று நின்றுவிட்டான். விளக்கொளி விளக்கிய உண்மை அடியோடு நம்பத்தகாததாயிருந்தது.

## அத்தியாயம் 3

## அபாயப் பணி

''அப்படியே நில் அருகில் வராதே'' என்ற குரலைக் கேட்டதுமே தனக்கு முதுகுப்புறத்தைக் காட்டிக் கொண்டு நின்றவன் யாரென்பதை ஊகித்துக் கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியால் நிலைகுலைந்துபோன இதயவர்மன், அந்த மனிதன் திரும்பிச் சற்று விலகி விளக்கொளி வதனத்தில் விழ நின்றதும், ஏதும் பேசச் சக்தியற்று சிலையெனப் பல விநாடிகள் நின்றுவிட்டான். விண்ணகரத்தின் கோபுரக் கதவுக்கருகில் இரு வீரர்கள் தன்னைப் பிடித்துப் பலவந்தமாகக் கோவிலுக்குள் கொண்டு வந்தபோது தான் எண்ணிய பல விஷயங்கள் மாறுபட்டு விட்டதையும், தான் சற்றும் எதிர்பாராத ஒருவர் தன்னெதிரே நிற்பதையும் கண்டதும் இதயவர்மன் எண்ண அலைகள் பெரிதாக எழுந்து சித்தத்தில் புரண்டு தாக்கின 'இவர் என்னை அழைப்பதற்கு இத்தனை ஏற்பாடுகள் ஏன்? இத்தனை மர்மம் ஏன்' என்று தனக்குள் கேள்விகளை எழுப்பிக் கொண்ட அந்த வாலிப வீரன் தன்னெதிரே சற்றுத் தள்ளி விளக்கொளியில் நின்ற மனிதனைத் திக்பிரமை பிடித்துப் பல விநாடிகள் பார்த்த பிறகு ஏதோ நினைத்துக் கொண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியுடன் சட்டென்று தலையை வணங்கவும் செய்தான்.

வணங்கிய தலை வணங்கியபடியே நின்றது. உத்தரவு கிடைத்தாலொழிய தலையை நிமிர்த்தத் தனக்கு அதிகாரமில்லையென்பதை உணர்ந்து கொண்டிருந்தான் இதயவர்மன். நின்றுகொண்டிருந்தது தெய்வத்துக்கு அடுத்தபடி தான் தினம் வணங்கும் பல்லவகுலத் தோன்றலும் காஞ்சியின் மாமன்னனுமான தந்திவர்மன் என்றிருந்ததால் ஏற்பட்ட மனநெகிழ்ச்சி தலை வணங்கி நின்ற சமயத்திலும் அவனை விட்டகலவில்லை. ''வணங்கியது போதும் இதயவர்மா! நிமிர்ந்து நில்! பேச வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன'' என்ற தந்திவர்மனின் குரல் இதயவர்மன் தலையைத்தான் நிமிர்த்தியதேயொழிய வணங்கிய

மனதை நிமிர்த்தவில்லையாகையால் அவனிடமிருந்து பணிவு நிரம்பிய பார்வையொன்று மன்னனை நோக்கிச் சென்றது அந்தப் பார்வை மன்னன்மீது நிலைக்க நிலைக்கச் சற்று வியப்பும் விரிந்தது அந்த வீரன் இதயத்தில்

நல்ல உயரத்துடனும் அழகும் கம்பீரமும் நிரம்பிய வதனத்துடனும் நின்ற பல்லவ மன்னனான தந்திவர்மன் முகத்தில் அழகு, கம்பீரம், இவற்றுடன் கவலையும் அன்று மிதமிஞ்சி நின்றதையும் அந்தக் கவலையின் சாயைகூட அந்த முகத்தின் அழகை அதிகப்படுத்தியதையும் இதயவர்மன் கண்கள் கண்டன. விளக்கொளியில் பிராகாரச் சுவரில் கம்பீரமாக உட்கார்ந்து மகுடாபிஷேகம் செய்து கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவின் சிற்பத்தைப்போல் இன்னொரு சிற்பமென அதன் கீழே நின்ற பல்லவ தந்திவர்மன் நீள்விழிகளில் வீரத்துக்குப் பதில் சோகமே படர்ந்து நின்றதையும், அவன் விற்புருவங்கள்கூட சற்றே சுளித்திருந்ததையுங் கண்ட இதயவர்மன், சக்கரவர்த்தியின் இதயத்தை ஏதோ பெரும் சுமை அழுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான் சக்கரவர்த்தியின் நீண்ட கரங்கள் ஒன்றையொன்று பற்றி அவன் இடையருகே பிணைந்திருந்ததும் விரல்களும் பின்னிக்கிடந்ததும் உள்ளச் சுமைக்கு அத்தாட்சி கூட்டின.

பல்லவ காஞ்சியின் பெருமன்னர்கள் கூட்டி வைத்த அளவிடமுடியாத செல்வம், அசைக்கமுடியாத பேரரசு, முறியடிக்க முடியாத படைபலம், அனைவரையும் பெற்ற பல்லவ சாம்ராஜ்யாதிபதியின் இதயத்தில் கவலை என்ன இருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்த்தான் இதயவர்மன். தவிர கவலை உள்ளவர்களுக்கு ஏற்படக் கூடிய புறத்தோற்றங்களும் தந்திவர்மனிடம் காணவில்லை. நடு வயதை எட்டிக்கொண்டிருந்த அவன் முகம் இருபத்தைந்து வயது வாலிபன் முகம் போலவே இருந்ததையும், தலையை மூடியிருந்த சால்வையையும் மீறித் தொங்கிய



மயிரிழைகள் கன்னங்கரேலென்று இருந்ததையும் கவனித்த இதயவர்மன், மன்னனுக்கு ஏற்பட்டிருப்பது ஏதோ தற்காலிகக் கவலையே என நினைத்தான். அந்தக் கவலை எதுவாயிருக்க முடியும் என்று எண்ணிய அந்த வாலிபன் அதைக் கேட்கத் துணிவற்றவனாய் மன்னனே பேச்சைத் தொடங்கட்டும் என்று மௌனமே சாதித்தான்.

அவன் மௌனத்தின் காரணம் மன்னனுக்கும் புரிந்திருக்கவேண்டும்; ஆகவே அவன் தனது வீர உதடுகளைத் திறந்து, "இதயவர்மா! இங்கு உன்னை நான் அழைத்த முறை உனக்கு வியப்பாயிருக்கலாம்..." என்று மெள்ள பேச்சைத் துவக்கினான்.

"ஆம்" என்ற ஒற்றைச் சொல்லையே பதிலாகச் சொன்னான் இதயவர்மன்.

இரண்டு விநாடிகள் மௌனம் சாதித்த தந்திவர்மன், "வேண்டுமானால் உன்னை அரண்மனையிலேயே அழைத்துப் பேசியிருக்கலாமென்று நினைக்கிறாய்" என்று மேலும் கூறினான்.

"வீரர்களை மன்னர் அழைப்பதும் ஆணையிடுவதும் அநேகமாக அரண்மனையில்தான்" என்று சுட்டிக் காட்டினான் இதயவர்மன்.

"சாதாரணமாக அதுதான் வழக்கம். ஆனால் அசாதாரண காலங்களில் அசாதாரண ஏற்பாடுகள் அவசியமாகின்றன" என்றான் பல்லவ மன்னன்.

"இருப்பினும்..." என்று இழுத்தான் இதயவர்மன்.

"பயப்படாதே, தைரியமாகச் சொல்" என்று ஊக்கினான் தந்திவர்மன்.

"இந்தக் கோயிலில் சந்திக்க வேண்டுமென்றாலும்..."

"நீயாக வந்திருப்பாய்?"

"அரச ஆணைக்குத் தலை வணங்க வேண்டியது அடிமையின் கடமையல்லவா?"

''ஆம், கடமைதான். அப்படியிருக்க இரண்டு முரடர்களைவிட்டு உன்னை வாயைப் பொத்திப் பலவந்தமாக அழைத்து வருவானேன் என்று கேட்கிறாய்?''

''ஆம்; மன்னவா. மன்னரின் ஒரு சொல் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் என்னை வரவழைத்திருக்கும். அதற்காகக் கோவில் காவலரை அப்புறப்படுத்தத் தேவையுமில்லை, என்னைப் பலவந்தமாகக் கொண்டுவர அவசியமுமில்லை...'' என்று சொல்லிக்கொண்டு போன இதயவர்மனை இடைமறித்த தந்திவர்மன், ''அவசியமிருக்கிறது இதயவர்மா!'' என்றான்.

இதைச் சொன்ன தந்திவர்மன் குரலில் ஏதோ ஒரு புதிய ஒலி உறைந்து கிடந்ததைக் கவனித்த இதயவர்மன் அதற்குக் காரணம் புரியாமல் மன்னனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். மேற்கொண்டு பேச்சை மன்னனே தொடர்ந்தான். ''அவசியமிருக்கிறது இதயவர்மா! உன்னைச் சந்திக்க இந்த வழியைத் தவிர வேறு வழி கிடையாது எனக்கு. அரண்மனையில் உன்னை நான் சந்திப்பதில் பயனில்லை, உனக்குச் சொல்லியனுப்புவதிலும் பயனில்லை. அரண்மனையில் நான் தற்சமயம் எதையும் ரகசியமாகச் செய்ய முடியாது'' என்றான் தந்திவர்மன்.

இதயவர்மனின் அழகிய புருவங்கள் வியப்பினால் உயர்ந்தன. ''என்ன! அரண்மனையில் அரசர் ரகசியமாக எதுவும் செய்யமுடியாதா? அப்படி யார் மன்னர் அந்தரங்கமாகப் பேசுவதைத் தடை செய்ய முடியும்?'' என்று ஆத்திரத்துடன் வினவினான்.

''தடை செய்ய யாராலும் முடியாது, ஆனால் பேசுவது அந்தரங்கமாயிருக்காது'' என்றான் மன்னன் வருத்தத்துடன்.

''ஏன்?'' என்று வினவினான் இதயவர்மன்.

''அரண்மனையிலிருக்கும் ஒருவருக்கு நான் எதைச் செய்கிறேன், என்ன பேசுகிறேன், யாரைச் சந்திக்கிறேன் என்பதில் அக்கறையிருக்கிறது'' என்ற மன்னவன் குரலில் வருத்தம் தோய்ந்திருந்தது.



''யாருக்கு அக்கறை?'' என்று கேட்டான் இதயவர்மன் மன்னனின் வருத்தத்துக்குக் காரணம் புரியாமல்.

பதில் நிதானமாகத்தான் வந்தது. ஆனால் அந்தப் பதிலில் துயரம் பூரணமாக ஊறிக் கிடந்தது. ''என் அன்னைக்கு'' ' என்று மன்னன் சற்றுத் தயங்கியே சொற்களை உச்சரித்தான்.

இதைக் கேட்டதும் சில விநாடிகள் சிலையென நின்றுவிட்ட இதயவர்மன், ''நம்பத் தகாததாயிருக்கிறது மன்னவா! பெற்ற தாய் மகன்மீது வேவு பார்ப்பதென்றால் அது...'' என்று இழுத்தான்.

''நம்பத்தகாததுதான். ஆனால் நம்பத்தகாதது நடக்கிறது. நடப்பதில் நான் அன்னையின் மேல் தவறு சொல்வதிலும் அர்த்தமில்லை. அவர்கள் வந்த வழி அப்படி'' என்று கூறிய தந்திவர்மன், ''என் அன்னை வீரன் மகள். வீரன் மனைவி. என் போக்கு அவர்களுக்குப் பிடிக்காததில் வியப்பில்லை'' என்றான்.

''என்ன உங்கள் போக்குக்கு?'' ஏதும் புரியாமல் வினவினான் இதயவர்மன்.

தந்திவர்மன் சிறிது நேரம் சிந்தித்துவிட்டுத் திடமான குரலில் சொன்னான், ''போர்களை நான் வெறுக்கிறேன்'' என்று.

இளவயதில் தன் தந்தை நந்திவர்மனின் போர்களில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூடி பெருவீரனென்று பெயர்பெற்ற தந்திவர்மன் போர்களை வெறுப்பதாகச் சொன்னதன் பொருள் புரியாததால் குழம்பிய பார்வையொன்றை மன்னன்மீது வீசிய இதயவர்மன், ''நீங்கள் போரை எப்படி விரும்பாதிருக்க முடியும்?'' என்று கேட்டான் பணிவுடன்.

இளநகை

நந்திவர்மன் இதழ்களில் வருத்தங்கலந்த இளநகை ஒற்றுமை விரிந்தது. "உனக்கும் ராஜமாதாவுக்கும் கருத்து இருக்கிறது" என்றான்.

"ஏன்?"

"என் அன்னையும் இதைத்தான் சொல்லுகிறார்கள். பெரும் போர்களை நடத்திய நந்திவர்மன் மகன் அடிக்கடி தியானத்தில் ஆழ்ந்துவிடுவதும், ஆழ்வார் பாசுரங்களைப் பாடுவதும் வெறுப்பாய் இருக்கிறது அவர்களுக்கு. 'இது மறையவர் செய்யவேண்டியது, உனக்கெதற்கு? கற்பூரத் தட்டை ஏந்த மற்றவர்களிருக்கிறார்கள்? நீ வாளை ஏந்து' என்று அடிக்கடி கூறுகிறார்கள். உண்மையில் அவர்கள் கூறுவதுதான் எனக்குப் பழக்கமான அலுவல், சுலபமான அலுவலும்கூட" என்றான் நந்திவர்மன்.

"எது சுலபமான அலுவல்?"

"வாளேந்துவது."

"கற்பூரத் தட்டேந்துவது?"

"மிகவும் கஷ்டம்."

"அப்படியா?"

"ஆம்; வாளேந்துபவன் உணர்ச்சிகளைப் பறக்கவிடுகிறான். கற்பூரத் தட்டேந்தி வைகுந்தன் சந்நிதானத்தில் நிற்பவர்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறார்கள். பிந்தியது மிகக் கஷ்டமான வேலை" என்று திட்டமும் உறுதியும் உணர்ச்சியும் நிரம்பிய குரலில் அறிவித்தான் நந்திவர்மன்.

இதைக் கேட்ட இதயவர்மன் மன்னனைக் கூர்ந்து நோக்கி "தாங்கள் துறவறம் மேற்கொள்ள உத்தேசமோ?" என்று வினவினான் வியப்புடன்.

நந்திவர்மன் மிக நிதானத்துடன் பதில் சொன்னான்: "இல்லை, சாந்திக்குத் துறவறம் தேவையில்லை. துறவறத்தில் விரக்தியடையாதவர்களும் உண்டு. துறவறங்



கொண்ட ஜட பரதன் மானொன்றிடம் பற்றுக் கொண்ட கதை இருக்கிறது புராணத்தில். இல்லை இல்லை. நான் துறவறம் மேற்கொள்ளப் போவதில்லை. இல்லத்திலிருந்தே, அரண்மனையிலிருந்தே, அரசுக் கட்டிலில் அமர்ந்தே அமைதியைத் தேட உத்தேசிக்கிறேன். எனக்கு மட்டுமல்ல, என் மக்களுக்குங்கூட அமைதி வேண்டும். போர்களால் உண்டாகும் உயிர் நஷ்டம் இனி இந்தப் பேரரசில் ஏற்படக்கூடாது. அதை எவ்விதமும் தடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். அந்த உறுதிக்கு ராஜ மாதா இடைஞ்சலாயிருக்கிறார்கள். இடைஞ்சலா யிருப்பது மட்டுமல்ல, போரைத் தூண்டவும் ஏற்பாடு செய்கிறார்கள் ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன. சீக்கிரம் அவற்றை நான் களையாவிட்டால் வெகு சீக்கிரம் போர் மூண்டுவிடும்" இதைக் கூறிய மன்னன் குரலில் பெரும் உறுதியிருந்தது. மேலும் சொன்னான் நந்திவர்மன்: "என் அரண்மனையைக் காணவரும் சாக்கில் ராஷ்டிரகூட உறவினர்கள் பலர் அரண்மனையில் அடிக்கடி சஞ்சரிக்கிறார்கள். ராஜமாதாவின் உறவினர்கள் என்ற காரணத்தால் அவர்களை நமது வீரர்கள் யாரும் தடைசெய்ய முடியவில்லை. அரண்மனையே ஒரு பெரும் சதிக்கூடமாயிருக்கிறது. என் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் கவனிக்கப்படுகின்றன. ஆனால் இந்த ஓர் இடத்தில், இந்த நள்ளிரவில், நானிட்டுள்ள உத்திரவின் காரணமாக யாரும் வரமுடியாது. ஆகவே இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன் உன்னைச் சந்திக்க."

"நான் இங்கு இப்பொழுது வருவேனென்பது எப்படித் தெரியும்?" என்று சந்தேகத்துடன் கேட்டான் இதயவர்மன்.

"ஒற்றர்களைக் கொண்டு சென்ற பத்து நாட்களாக உன்னைக் கவனித்தேன்" என்றான் நந்திவர்மன்.

"இன்று நான் வந்திராவிட்டால்?"

"நாளை மீண்டும் இங்கு வருவேன். எப்படியும் இரண்டொரு நாளில் உன்னைச் சந்தித்திருப்பேன்."

''அத்தனை முக்கியமானவனா நான்?''

''ஆம்.''

''எப்படி?''

''என் அன்னைக்கு உன்மேல் சந்தேகமில்லை. நீ வீரன் ஆகையால் எனக்கு இணங்க மாட்டாய் என்று நினைக்கிறார்கள்.''

''மன்னவன் கட்டளைக்குச் சாதாரண வீரன் எப்படி இணங்காதிருக்க முடியும்?''

''பணி அவனுக்கு விருப்பமில்லாவிட்டால் இணங்காதிருக்கலாம். அன்னை போர் மூளச் செய்ய ஏற்பாடு செய்கிறார். அமைதியை நிலைக்கச் செய்ய நான் விரும்புகிறேன். எங்கள் இருவரின் இந்த லட்சியப் போரில் நீ யார் பக்கம் இருக்க விரும்புகிறாய் இதயவர்மா? அச்சமின்றிச் சொல், அரசன் பக்கமா, அவன் அன்னை பக்கமா?'' இந்தக் கேள்வியை மிகத் திடத்துடன் விடுத்தான் தந்திவர்மன்.

இதய்வர்மன் அணுவளவும் யோசிக்கவில்லை, ''பல்லவ மன்னர்க்குத் தொண்டு புரியப் பிறந்தவன் இவன்'' என்று தன் மார்பைத் தட்டிக் காட்டினான் இதயவர்மன்.

இதைக் கேட்டதும் அவனருகில் வந்த தந்திவர்மன், ''இதயவர்மா! உன் முடிவு மெச்சத் தக்கது. இதனால் பல மக்களின் உயிர்ப்பலியை நீ தடுக்கலாம்'' என்று கூறிவிட்டு, ''ஆனால்...'' என்று சற்று நிதானித்தான். பிறகு மேலும் தொடர்ந்து, ''உன் உயிர் அதைப்பற்றி நிச்சயம் சொல்ல முடியாது. அத்தகைய அபாயப் பணியில் இன்று முதல் நீ இறங்க வேண்டியிருக்கும்'' என்று கூறிய தந்திவர்மன் தன் வலது கரத்தை அந்த சாதாரண வீரன் தோள்மீது வைத்து விளக்கிருந்த இடம் அழைத்துச் சென்று அவன் செய்ய வேண்டிய அபாய அலுவலை விளக்க முற்பட்டான்.

## அத்தியாயம் 4

## மறைந்து வந்த மாமன்

பல்லவ தந்திவர்மன் கை, தோளின்மீது பதிந்த மாத்திரத்திலேயே பரவசமடைந்துவிட்ட இதயவர்மன் மனம் அந்தச் சில விநாடிகளில் பெரும் பணிவையும் அடைந்து நின்றது. யாரும் அருகே நெருங்க முடியாத பல்லவ சாம்ராஜ்யாதிபதி தன் உதவியை நாடியதும், அதற்காகத் தன்னை எதிர்நோக்கி வைகுந்தப் பெருமாள் கோவிலில் காத்திருந்ததுமே யாரும் பெறுதற்கரிய பேறென்று நினைத்த அந்த வாலிப வீரனுக்கு, பேரரசரின் வீரக் கையொன்று தன் இளந்தோளைத் தொட்டதுமே பெரிய சாம்ராஜ்யமே தனது தோளில் இறங்கிவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டதால், அந்தத் தோளை விடாமல் தந்திவர்மன் அவனை அழைத்துக் கொண்டு விளக்கினருகில் சென்றபோது அவன் சுய நிதானத்தைப் பெரிதும் இழந்தே நடந்து சென்றான். மன்னன் அவன் தோளைத் தீண்டிய இடத்திற்கும் விளக்கு இருந்த இடத்துக்கும் இடையே இருந்த அடிகள் பத்துதானென்றாலும், உள்ள நெகிழ்ச்சியின் காரணமாக அந்தப் பத்தடிகளைக் கடப்பது பத்தாயிரம் அடிகளைக் கடப்பது போன்ற பிரமையை அளித்ததன் விளைவாக இதயவர்மன் சற்று தயக்கத்துடனும் உள்ளச் சுமையுடனுமே மன்னனுடன் நடந்து சென்றான்; அறிவில் யாருக்கும் குறைந்தவனல்லாத தந்திவர்மன் அந்த வாலிப வீரனின் நடையிலிருந்தும் தோளின் சதைகள் சற்றே இறுகியதிலிருந்தும் அவன் இதயத்தின் நிலையைப் புரிந்துகொண்டானாகையால் அத்தனைக் கவலையிலும் சிறிது புன்முறுவலும் அவன் வீர இதழ்களில் தவழ்ந்து நின்றது; விளக்குக்கு அருகில் வந்தவுடன் அந்தப் புன்சிரிப்புடனேயே இதயவர்மனை ஏறெடுத்து நோக்கிய பல்லவ சக்கரவர்த்தி, ''இப்பொழுது புரிகிறதா இதயவர்மா, அமைதியின் பாதை எத்தனைக் கடினமென்பது?'' என்று வினவினான்.

அதுவரை உணர்ச்சிப் பெருக்கால் தலைகுனிந்தே நடந்து வந்த இதயவர்மன் சற்றே உணர்ச்சிகளைக்

கட்டுப்படுத்திக் கொண்டு மன்னனைத் தானும் நிமிர்ந்து நோக்கி, ''அமைதியின் பாதையா மன்னவா?'' என்று வினவினான் ஏதும் புரியாமல்.

தந்திவர்மன் இதழ்களில் தவழ்ந்து நின்ற புன்னகை அதிகமாக விரிந்தது. அந்தப் புன்னகை உள்ளிருந்து விரித்த உணர்ச்சியின் சாயை குரலிலும் ஒலிக்கச் சொன்னான் தந்திவர்மன், ''ஆம் இதயவர்மா! அமைதியின் பாதைதான் மிகக் கடினமானது. நடப்பது எளிதல்ல நடந்து முடிவை எய்துவதும் எளிதல்ல'' என்று.

பல்லவ மன்னன் சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ள முடியாததால், சற்றுக் குழப்பமடைந்த இதயவர்மன், ''தாங்கள் சொல்வது விளங்கவில்லை'' என்றான் பணிவுடன்.

"நீ இரண்டு பெரும் போர்களைக் கண்டிருக்கிறாயல்லவா?" என்று வினவினான் மன்னன்.

''ஆம். கண்டிருக்கிறேன்'' என்றான் இதயவர்மன், எதற்காக மன்னன் அந்தப் பழைய கதையைத் தொடங்குகிறான் என்பது புரியாமலே.

''போர்களில் அலட்சியமாக முன்னேறியிருக்கிறாய் எதிரிக் கூட்டங்களை நோக்கி.''

"ஆம்."

''எத்தனை பேர் எதிர்த்தாலும் கவலைப்படவில்லை!''

''இல்லை.''

''அப்பொழுதும் உயிர் அபாயத்திலிருந்தது.''

''ஆம்.''

''இருப்பினும் அதைப்பற்றிச் சிந்திக்கக்கூட இல்லை தைரியமாகப் புரவியிலமர்ந்து முன்னேறினாய். புரவி இறந்து விழுந்துவிட்ட சமயத்திலும் கால்களால் நடந்து போரிட்டு அலட்சியத்துடன் முன்னேறினாய்.''



''ஆம் மன்னவா?''

''போரின் பணியில் அப்படி முன்னேற முடிந்தது. அப்பேர்ப்பட்ட உனக்கு இந்தப் பத்தடி தூரத்தைக் கடப்பது எத்தனைக் கடினமாயிருந்தது?'' என்ற தந்திவர்மன் இதயவர்மனை நோக்கி, ''அமைதியின் பாதை அத்தனை கடினமானது இதயவர்மா. போரின் பாதை சுலபமானது'' என்றும் கூறினான்.

இதயவர்மன் பிரமை பிடித்து நின்றான். மன்னன் தனது தோளில் கை வைத்த இடத்திலிருந்து பத்தடி தூரம் நடக்க முடியாமல் தான் திணறியதை ஸ்பரிசத்திலிருந்தே புரிந்து கொள்ளக் கூடிய சக்கரவர்த்தியின் நுண்ணிய அறிவை எண்ணிப் பெரிதும் வியந்தான். ஆனால் தான் அப்படித் தயங்கியதற்குக் காரணம் அரசன் நிலைநாட்டவிருந்த அமைதியை எண்ணி அல்லவென்பதையும், அரசனுக்கும் தனக்குமுள்ள ஏற்றத்தாழ்வினால் ஏற்பட்ட உணர்ச்சி வேகமே என்பதையும் புரிந்துகொண்டிருந்த இதயவர்மன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, ''என் தடுமாற்றத்துக்குக் காரணம் அமைதியைப் பற்றிய நினைப்பல்ல'' என்று கூறினான் திடமாக.

அதைக் கேட்ட தந்திவர்மன் அதை ஒப்புக்கொள்ளாத பாவனையில் தலையை அசைத்தான். ''உனக்குப் புரியவில்லை இதயவர்மா. அமைதியின் பாதைதான் அது அமைதியை நாடாவிட்டால் உன் அரசன் இங்கு வரமாட்டான், வராவிட்டால் உன் தோள்மீது கையை வைத்திருக்கமாட்டான், அப்படி என் கை தொடாவிட்டால் உன் உணர்ச்சிகளும் உன்னைத் திணற அடித்து நடைக்குக் கடினத்தை அளித்திருக்காது. அமைதியின் வழிகள் பல. அதன் தொடுப்பு, சம்பந்தமற்றவையாகத் தோன்றும். ஆனால் சம்பந்தமுள்ளவையுமான பல அம்சங்களைக் கொண்டது. அத்தகைய அமைதியை அடைவதற்கே ஞானிகள் முயன்றிருக்கிறார்கள்'' என்று தத்துவ ரீதியில்

பேசினான் மன்னன். அதை மேலும் விளக்கவும் முற்பட்டான். "இதயவர்மா! ராஜமாதா போரை விரும்புகிறாள். அவள் மகன் அமைதியை விரும்புகிறான். போருக்கு விளைநிலங்கள்— அரசமாளிகை, படாடோபங்கள், பண விசேஷங்கள். அமைதிக்கு விளைநிலம் ஆண்டவன் சந்நிதி. இங்கு குண விசேஷங்கள், நிதான புத்தி, தீவிர தியாக உணர்ச்சி— இவை பிரதானம். இங்கு அரசனும் ஆண்டியும் ஒன்றுதான். இங்கு நீ வேறு நான் வேறு அல்ல. இருவரும் அமைதிப் பணியில் உறங்கும் இரு சகோதரர்கள். ஆகவே உன் தோளில் கை வைப்பது எனக்கு சகஜமாயிருந்தது. உனக்கு அது சகஜமாயில்லாததற்குக் காரணம் ஆண்டவன் சந்நிதியிலும் நீ ஏற்றத்தாழ்வை நினைக்கிறாய். அந்த ஏற்றத் தாழ்வு உணர்ச்சி உனக்குப் பலவீனத்தை அளிக்கிறது. நடையைத் தளர்த்துகிறது. மனச்சுமையை ஏற்றுகிறது. அந்தச் சுமையை உதறிவிடு இதயவர்மா. பெரும் பணியில் இப்பொழுது இறங்குகிறாய். அப்பணி தர்மம் காட்டும் பணி. அதை நினைத்துச் சோர்வை உதறிவிடு. பார் என்னை இப்பொழுதும்" என்ற நந்திவர்மன் குரலில் ஆவேசம் இருந்தது.

இதயவர்மன் மன்னனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான். மன்னன் முகத்தில் பெரும் பொலிவு விரிந்து கிடந்தது. 'தெய்வீகக் களை என்றால் இப்படித்தானிருக்கும் போலிருக்கிறது' என்று நினைத்த இதயவர்மன், 'அமைதியின் பாதை உண்மையில் கடினமானது என்றாலும் அதில் தெய்வீகமும் கலந்திருப்பதால் அதில் நடப்பது அப்படியொன்றும் பிரமாதமல்ல' என்று தனக்குள் வலியுறுத்திக் கொள்ளவும் செய்தான்.

பல்லவ தந்திவர்மன் முகத்தில் அந்த தெய்வீகப் பொலிவு நிமிடத்துக்கு நிமிடம் விரிந்தது. மேற்கொண்டு அவன் பேசியபோது அந்தப் பொலிவின் அஸ்திவாரமான உள்ளத்தின் ஒளி, உதிர்ந்த சொற்களிலும் தெரிந்தது.



"வைணவம் காட்டும் பாதை இதுதான் இதயவர்மா! அண்டை வீட்டுக்காரன் அவதிப்பட்டால் ஐயோ என்று அனுதாபப்படுபவன் வைணவன் என்று சமயாச்சாரியார்கள் சொல்கிறார்கள். அன்பே சிவமெனும் சைவமும் அமைதியின் பாதையை வலியுறுத்துகிறது. ஆகவே துன்பத்தை விளைவிக்கும் போரை என்னால் முடிந்தவரை தடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். மக்கள் துன்பம் என் துன்பம். அவர்களுக்கு அவதியை விளைவிக்கும் போரைத் தவிர்ப்பதே என் ஆயுள் பணி. அதன் முதல் திட்டம் இன்று தொடங்குகிறது" என்று உணர்ச்சியுடன் பேசிய தந்திவர்மன், "இப்பொழுது கவனி இதயவர்மா. இந்த முதல் கட்டத்தில் நாடு வெற்றி பெற்றுவிட்டால் ஆயுள் பூராவும் வெற்றிப் பாதையிலேயே செல்வோம். அந்த முதல் கட்டத்தில் நாம் நமது அன்புக்கும் மதிப்புக்கும்— என் பக்திக்குங்கூடப் பாத்திரமானவர்களுடன் மோத வேண்டியிருக்கிறது. அவர்களில் ஒருவர் யாரென்பதை ஏற்கெனவே விளக்கிவிட்டேன்" என்று சொல்லிச் சற்று நிதானித்தான்.

மன்னன் யாரைக் குறிப்பிடுகிறானென்பதைப் புரிந்துகொண்ட இதயவர்மன் தலையை அசைத்துவிட்டுச் சொன்னான்: "ஆம் மன்னவா, விளக்கிவிட்டீர்கள் உங்கள் அன்னையார் ஒருவர்" என்று.

"இரண்டாமவர் எனது மாமன்" என்றான் தந்திவர்மன்.

இதைக் கேட்ட இதயவர்மன் சந்தேகத்துடன் நோக்கினான் பல்லவச் சக்கரவர்த்தியை, "என்ன சொல்கிறீர்கள்? தங்கள் மாமனா?" என்றும் வினவினான்.

"ஆம்." சர்வசாதாரணமாக வந்தது மன்னன் பதில்.

"ராஷ்டிரகூடர்கள் தலைநகரத்திலிருந்துகொண்டு அவர் என்ன செய்ய முடியும்?"

''அங்கிருந்துகொண்டு எதுவும் செய்யமுடியாது. இங்கிருந்துகொண்டு செய்யலாமல்லவா?''

''செய்யலாம்!''

''செய்கிறார்.'' இதைச் சொன்ன மன்னவன் முகத்தில் அதுவரை இருந்த இளநகை மறைந்து அதன் இடத்தைக் கவலை ஆக்ரமித்துக் கொண்டது. ஆனால் இதயவர்மன் சொல்லொணா வியப்பும் பிரமிப்பும் அடைந்தான் மன்னனின் மாமன் பல்லவ காஞ்சியிலிருக்கிறானென்பதும், சதி செய்கிறான் என்பதும் பெரும் விசித்திரமாயிருக்கவே கேட்டான் அவன்: ''தங்கள் மாமன் இங்கா இருக்கிறார்?'' என்று.

''ஆம்'' என்று தலையை அசைத்தான் தந்திவர்மன்.

''ராஜமாதாவின் சகோதரர் வருகை அறிவிக்கப்படவில்லையே.''

''அறிவிக்கப்படவில்லை, தாரைகள் ஊதப்படவில்லை. அரண்மனை வாத்தியங்கள் சப்திக்கவில்லை.''

''ஏன்?''

''அவர் வரப்போகிறாரென்பது தெரியாது. வந்த பின்னும் வந்திருப்பது தெரியாது.''

''யாருக்கு?''

''என்னைத் தவிர யாருக்கும் தெரியாது.''

''ராஜமாதாவுக்குக் கூடவா?''

''ஆம்.''

''ஏன்?''

இதயவர்மனின் இந்தக் கடைசிக் கேள்விக்குப் பல்லவ தந்திவர்மன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். கடைசியாக அவன் பேசியபோது குரலில் மிருந்த எச்சரிக்கை ஒலித்தது. உறுதியும் அதில் கலந்திருந்தது. ''அதைத்தான் நீ கண்டுபிடிக்க வேண்டும். ராஜமாதாவே போரைத் தூண்டச் சித்தமாயிருக்க, சகல வசதிகளைச் சகோதரருக்கு அளிக்கத் துடித்துக் கொண்டிருக்க, அந்தச் சகோதரர் ஏன் யாருக்கும் தெரியாமல் திருடன்போல் பல்லவ காஞ்சியில் நுழைந்திருக்கிறார்? ஏன் மாறு பெயரில் மறைந்திருக்கிறார்? இது எனக்கு விளங்கவில்லை இதயவர்மா! இந்த மர்மத்தை அறியவே உன்னை அனுப்புகிறேன்'' என்றான் தந்திவர்மன்.



இதயவர்மன் அடுத்து விவரம் எதுவும் கேட்கவில்லை. ''அவர் இருக்குமிடம் எது?'' என்று கேட்டான்.

இருக்குமிடத்தை விளக்கினான் தந்திவர்மன். அதைக் கேட்ட இதயவர்மன் வியப்பு எல்லை கடந்தது. ''அங்கேயா! அப்படியானால்...?'' என்று இழுத்தான் இதயவர்மன்.

''அவரும் சம்பந்தப்பட்டுத்தானிருக்க வேண்டும் இந்தச் சதியில்'' என்று தந்திவர்மன் கூறினான். இதயவர்மன் நாவடைத்து நின்றான். ஒரு சதியில் சம்பந்தப்படக்கூடிய மனிதருடைய பெயரல்ல அது. அந்தப் பெயரைக் கேட்டதும் ஒன்று திட்டமாகப் புரிந்தது இதயவர்மனுக்கு. அரசன் விவரித்ததைவிட தான் மேற்கொண்டுள்ள பணியில் ஆபத்து பன்மடங்கு அதிகமென்பதைச் சந்தேகமின்றி அறிந்து கொண்டான் இதயவர்மன்.

## அத்தியாயம் 5

## பாரத்வாஜம்

ராஜமாதாவான ரேவாதேவியின் சகோதரர் யாருமறியாமல் திருடன் போல் பல்லவ காஞ்சியில் நுழைந்திருக்கிறாரென்பதே இதயவர்மனுக்குப் பெரும் வியப்பாவிருந்ததென்றால், அவர் ரவிவர்மன் மாளிகையில் தங்கியிருக்கிறாரென்பதை மன்னன் எடுத்துச் சொன்னவுடன் வியப்பு பிரமிப்பாக மாறியது. பல்லவப் பெருமானின் சேனாதிபதியும் நாட்டைக் காக்கும் பணியைப் பிரதானமாக உடையவனுமான ரவிவர்மனும் போர் மூனச் செய்யும் சதியில் பிணைந்திருக்க வேண்டுமென்று மன்னன் சொன்னதைக் கேட்டதும் சில விநாடிகள் மௌனம் சாதித்த இதயவர்மன் தான் மேற்கொண்டுள்ள பணி பரம ஆபத்தானதென்பதைப் புரிந்து கொண்டான். ஆபத்தைப் பற்றி என்றும் அச்சப்படாதவனேயென்றாலும் ராஜமாதாவும், பல்லவ மன்னனும், ராஷ்டிரகூடப் பிரதானியும், பல்லவ சேனாதிபதியும், இன்னும் பல பெருந்தலைகளும் மோதவிருக்கும் இந்த அரசியல் சதிப் போரில் சாதாரண வீரனான தன் நிலைமை அத்தனை விரும்பத்தக்கதன்று என்பதை திட்டமாக உணர்ந்தாலும், எந்த விநாடியிலும் சதியால் மோதும் பெருந்தலைகள் தன்னை நசுக்கிவிட முடியும் என்பதை எண்ணியதாலும் சற்று அசரவும் செய்தான் இதயவர்மன். அவன் உள்ளத்தே ஓடிய உணர்ச்சிகளை மன்னன் நன்றாகப் புரிந்து கொண்டதால் கேட்டான், "பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களேயென்று யோசிக்கிறாயா இதயவர்மா?" என்று.

"ஆம்" என்று உண்மையை ஒப்புக்கொண்டான் இதயவர்மன்.

"பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்ட சதியாகையால் தான் அதைப்பற்றி அறிய உன்னைத் தேர்ந்தெடுத்தேன்" என்றான் நந்திவர்மன் திட்டமாக.



"தங்கள் ஒற்றர்களைவிட நான் எந்த வகையில் சிறந்தவன்?" இதயவர்மன் இதைக் கேட்டபோது மன்னனை நன்றாக ஏறெடுத்து நோக்கினான்.

"ஒற்றர்களில் பலரை ஏற்கெனவே என் தாயாருக்குத் தெரியும்" என்று சுட்டிக்காட்டினான் நந்திவர்மன்.

"ஆம்."

"அவர்களில் சிலரை விலைக்கு வாங்கலாம். அல்லது உயிர்ப் பயம் காட்டிச் சித்திரவதை செய்து விஷயத்தைக் கக்கவைக்கலாம். என் தந்தையே பல முறை அதைச் சாதித்திருக்கிறார்."

"அதை என் விஷயத்தில்..."

"கையாண்டு பயனில்லை என்பதை நான் நன்கு அறிவேன்."

"எப்படி அறிவீர்கள்?"

"உன்னைச் சிறுவயது முதல் பார்த்து வருகிறேன். உன் பிடிவாதம் எனக்குத் தெரியும். உன்னைச் சித்திரவதை செய்தாலும் உனக்கு இஷ்டமில்லாவிட்டால் விஷயம் வெளிக்கு வராது. தவிர..."

"சொல்லுங்கள் மன்னவா?"

"நீ வைணவன்..."

"அதற்கும் இந்தச் சதியைப் புலன் விசாரிப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?"

"பெருத்த சம்பந்தமிருக்கிறது; அறத்துக்குப் புறம்பான எதையும் நீ செய்யமாட்டாய்."

"செய்தால்?"

"எம்மடியார் அது செய்யார்; செய்தால் நன்றே செய்வார் என்பது ஓர் ஆழ்வாரின் வாக்கு."

இதயவர்மனுக்கு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. பல்லவ மன்னனான நந்திவர்மன் புதல்வனும்

வைதீகச் சக்கரவர்த்தியுமான தந்திவர்மன் தீவிர வைணவன் என்பதை இதயவர்மன் அறிந்தேயிருந்தான். இருப்பினும் வைணவன் என்பதற்காக ஒருவனைப் பூராவாக நம்பி முக்கியமான அரசியல் பணியில் புகவிடும் அளவுக்கு வைணவ வெறி அரசனுக்கு இருக்குமென்பதைச் சொப்பனத்திலும் நினைக்காத இதயவர்மன், ''மன்னவா! மதம் வேறு, அரசியல் வேறு அல்லவா? ஒன்றையொன்று பிணைப்பது சரியா?'' என்று வினவினான்.

தந்திவர்மன் குரல் திடமாக ஒலித்தது. ''இரண்டும் வேறல்ல இதயவர்மா. அரசியலில் நாம் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டாலும் மதம் ஊறி நிற்கின்றது. மத நம்பிக்கையற்ற மன்னனுக்குத் தெய்வ நம்பிக்கை இருக்காது. தெய்வ பயமற்றவன் எந்தக் கெடுதலையும் செய்யத் தவறமாட்டான். ஆகவே, நாத்திக அரசுகளிடமிருந்து நன்மை விளைவதில்லை. கேடே விளைகிறது. ஆகவே தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் மன்னனுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. நான் வைகுந்தப் பெருமானை நம்புகிறேன், வைணவத்தையும் நம்புகிறேன். ஆத்திக அடிப்படையுள்ள அத்தனை மதங்களையும் ஆதரிக்கிறேன்...'' என்ற தந்திவர்மன் சற்றே நிதானித்தான்.

அந்த இடைவேளையில் குறுக்கே ஒரு கேள்வியை வீசத் தொடங்கிய இதயவர்மன், ''அப்படியானால் நாத்திக அடிப்படையுள்ள...'' என்று வாசகத்தை முடிக்குமுன்பே சரேலென அவனை நோக்கிய தந்திவர்மன், ''நாத்திக மதங்களைக் கண்டு அனுதாபப்படுகிறேன். நாத்திகர்களிடம் என் நெஞ்சு கனிகிறது. நோயுள்ள மனிதர்களிடம் எனக்கு ஏற்படும் பரிதாபம் அவர்களிடமும் எனக்கு ஏற்படுகிறது'' என்றான். மேலும் சொன்னான் தந்திவர்மன் உறுதி நிரம்பிய குரலில்: ''தெய்வ மதங்களை நம்புகிறேன். தெய்வத்தை நம்புகிறேன். ஆகையால்தான் தெய்வ



நம்பிக்கையுள்ளவனும் பிரதி தினம் வைகுந்தன் சந்நிதிக்கு வருபவனுமான உன்னைத் தேர்ந்தெடுத்தேன் இந்த அபாயப் பணிக்கு. இந்த இடத்தையும் அதை முன்னிட்டுத் தான் தேர்ந்தெடுத்தேன். இடம், பொருள், ஏவல் மூன்றும் பரமதிருப்தியாயிருக்கிறது எனக்கு. இந்த இடத்தைவிட நாம் பேசுவதற்குச் சிறந்த இடம் கிடையாது. பொருள் போரைத் தவிர்ப்பது பற்றியது. ஏவல்— அதில் சந்தேகமேயில்லை. நல்ல காரியத்திற்கு ஏவுகிறேன், அதுவும் உன்னை. என்ன சொல்கிறாய்?''

தந்திவர்மன் குரலிலிருந்த உறுதியைக் கண்ட இதயவர்மன் மன்னர் முன்பு தலையை வணங்கினான். அவன் இதயமும் வணங்கியே நின்றது. ''ராஜரிஷியென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்படியொருவர் இக்காலத்திலுமிருப்பதை இன்றுதான் கண்டேன்'' என்ற அவன் குரலில் பணிவு பெரிதும் நிரம்பியிருந்தது.

தந்திவர்மன் மீண்டும் அவன் தோள்மீது கையை வைத்து, ''இதயவர்மா, உன் ராஜபக்தியை மெச்சுகிறேன். இருப்பினும் ரிஷி என்று என்னை அழைக்காதே'' என்றான்.

''ஏன் மன்னவா?'' வியப்புடன் வினவினான் இதயவர்மன்.

''ரிஷிகள் பலபடி இருந்திருக்கிறார்கள். ஆழ்வார்கள் அப்படியில்லை. ஆண்டவனுக்கு அடிமையாயிருப்பது ஒன்றையே விரும்பினார்கள். அதற்காக உன்னை ஆழ்வாராக்க வேண்டாம் நீ. நாமிருவரும் ஒரு சித்தாந்தத்தின் அடிமைகளாயிருப்போம். அது வைணவமாயிருக்கட்டும். அதன் முதல் படி நீயாயிருந்தாலும் பாதகமில்லை. நாளையே நீ செல், ரவிவர்மன் மாளிகைக்கு'' என்றான் மன்னவன்.

இதயவர்மன் அதற்குமேல் வீணாக மதத் தர்க்கத்தில் இறங்க இஷ்டப்படாததால் தனது பணியைப் பற்றிப் பேசத் தொடங்கி, ''நாளையே என்றால்?'' என்று வினவினான் சந்தேகத்துடன்.

''காலையிலல்ல'' என்ற மன்னவன் குரலில் சூசகம் ஏதோ இருந்தது.

''ஏன்? காலையில் போனாலென்ன?'' என்று வினவினான் இதயவர்மன்.

''காலையில் அது சேனாதிபதியின் மாளிகை. வருவாரும் போவாரும் மிகுதி. இரவில்தான் சதிக்கூடம். இரவுதான் சதிக்கும், கொள்ளை, கொலை சகல அக்ரமங்களுக்கும் சௌகரியமானது.''

''அப்படியே இரவில் செல்கிறேன்.''

''இரவு என்றால் மிகவும் நேரம் ஏறியபின் செல்ல வேண்டாம்.''

''ஏன்?''

''பத்து நாழிகைகள் வரையில் ரவிவர்மன் மாளிகையில் பெரும் கூட்டமிருக்கிறது. பிறகு கூட்டம் கலைகிறது. சிலர் மட்டும் உணவருந்தத் தங்குகிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினான் நந்திவர்மன்.

''என்னை உணவருந்தச் சொல்லாவிட்டால்?'' என்று வினவினான் இதயவர்மன்.

''நீயாக அழைத்துக் கொள்.''

''எப்படி?''

''அதற்கு மந்திரமிருக்கிறது.''

''என்ன மந்திரம்?''

''என் கோத்திரம் தெரியுமா உனக்கு?''

''தெரியும். பாரத்வாஜம்.''

''அதை இருமுறை ரவிவர்மன் காதில் விழும்படியாக உச்சாடனம் செய்.''

''செய்தால் விருந்து கிடைக்குமா?''



''ஆம்; நிச்சயமாய் விருந்து கிடைக்கும், வேறென்ன கிடைக்கும் என்று மட்டும் எனக்குத் தெரியாது. நீதான் அதை அடுத்த நாள் எனக்குச் சொல்ல வேண்டும்.''

இதயவர்மன் தன் பணியின் ஆரம்பப் பகுதியை நன்றாகப் புரிந்து கொண்டான். ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு தான் சேனாதிபதி மாளிகைக்குள் நுழைய வேண்டுமென்றும், பிறகு இரவில் அங்கேயே தங்க ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்றும், தங்கி அங்கு நிறுவப்படும் சதியை ஆராய வேண்டுமென்றும், தெள்ளெனத் தெரிந்தது அவனுக்கு. இந்த மூன்று படிகளில் முதல்படி சுலபமானது. தன்னைப் போன்ற பிரபல வீரனாயிருப்பவன் சேனாதிபதி மாளிகைக்குச் செல்வது சகஜம். அங்கு சேனாதிபதியைப் பார்ப்பதும் சாதாரண காரியமாகவே நினைக்கப்படும். அரசன் கோத்திரத்தைச் சொல்லி தானும் சதிகாரனென்று தெரியப்படுத்திய பிறகு தன் கதி என்னவென்பது மட்டும் திட்டமாகத் தெரியவில்லை அவனுக்கு. இரண்டாவது படியிலேயே அபாயம் நேராவிட்டாலும் மூன்றாவது படியில் நிச்சயம் தன் உயிர் தப்பாது என்பதைப் புரிந்து கொண்ட இதயவர்மன் இதயத்தில் மகிழ்ச்சி பெரிதும் பொங்கியது. போர்க்களத்தை விட இந்தச் சதிக்களத்தில் அபாயம் அதிகமென்பதையும் போர்க்களத்தில் கண்ணுக்கெதிரில் காணும் எதிரிகளைச் சமாளிப்பது சுலபமென்பதையும் கண்ணுக்கெதிரில் வராத பல பேர்களைச் சமாளிக்க வேண்டிய இப்பணி மிக மிக அபாயமென்பதையும் புரிந்துகொண்டதாலும், எப்பொழுதும் ஆபத்தை வரவேற்பதில் உள்ள ஆர்வத்தாலும் ''சரி! மன்னவா! நாளையே செல்கிறேன் ரவிவர்மன் இல்லத்துக்கு'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

அவன் உற்சாகத்தைக் கண்ட நந்திவர்மன் பேருவகை கொண்டான். அந்த உவகையுடன் அனுதாபமும் நிரம்பிக் கிடந்தது. நந்திவர்மன் உள்ளத்தில், சிறு வயதினனான

இதயவர்மனை அத்தகைய அபாயப் பணிக்கு அனுப்புகிறோமே. இவனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற அனுதாபமும் கலந்துகொண்டதால் உவகையும் கனிவும் நிறைந்த குரலில் சொன்னான் நந்திவர்மன், ''இதயவர்மா! செல் இந்தப் பணிக்கு. வைகுந்தன் உன்னைக் காப்பாற்றட்டும்'' என்று. அத்துடன் கர்ப்பக்கிருகத்தை நோக்கிச் சிரம் வணங்கிக் கைகுவித்துவிட்டு இதயவர்மனிடம் விடைபெற்றுச் சென்றான்.

மன்னன் சென்றதற்குப் பிறகு கிட்டத்தட்ட அரை ஜாம நேரத்தை அந்தப் பிராகாரத்திலேயே செலவிட்டான் இதயவர்மன். திரும்பத் திரும்ப திருமங்கை ஆழ்வாரின் பரமேச்சுர விண்ணகரப் பாசுரங்களை மனத்தில் ஸ்மரித்தான்; சற்று வெளியே கேட்கும்படியாக முணுமுணுக்கவும் செய்தான். வைகுந்தன் கர்ப்பக்கிருகத்தை அணுகி அதனருகே உடல் முழுவதும் பூமியில் பட நமஸ்காரமும் செய்தான். கடைசியாகத் திட்டிவாசல் வழியாக வெளியே வந்து திட்டிவாசலையும் சாத்திக்கொண்டு தனது இருப்பிடம் சென்றான். மன்னன் உத்தரவுப்படி மறுநாள் இரவின் ஆரம்பத்திலேயே சேனாதிபதியின் மாளிகையை அடைந்த இதயவர்மனுக்கு அதன் வெளிப்புறமிருந்த நிலைமை மிக விசித்திரமாயிருந்தது. வியப்புடன் படிகளில் ஏறி உள்ளே நுழைந்த அவனுக்கு உட்புறம் வெளிப்புறத்தைவிட அதிக வியப்பை அளித்தது! ஒருவேளை மன்னர் தவறாகக் கணக்குப் போட்டிருப்பாரோ என்ற சந்தேகமும் இதயவர்மன் இதயத்தில் எழுந்தது. பாரத்வாஜ கோத்திரத்தின் சூத்திரக் கயிற்றை வீசத் தேவையிருக்காத ஒரு வியப்புக்குரிய நிலை அந்த மாளிகையில் நிலவியிருந்தது. இருப்பினும் அந்தச் சூத்திரம் வீசப்பட்டது. அவனல்ல வீசியது; அவன் எதிர்பாராத ஒருவரிடமிருந்து வந்தது அந்த வீச்சு.

அத்தியாயம் 6

## கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு

வைகுந்தப் பெருமான் சந்நிதியில் பாரத்வாஜ கோத்திரத்தின் மகிமையையும் அரசாங்கச் சதியில் அதற்கிருந்த மகிமையையும் ஓரளவு ஊகித்திருந்தானானாலும் அந்தக் கோத்திரத்தின் சூத்திரக் கயிறு தான் முற்றிலும் எதிர்பாராத ஒருவரால் தன்மீது வீசப்படும் என்பதை அறியாததால், அந்தக் கயிற்று வீச்சு ஏற்பட்டபோது பெரிதும் அசந்து போனான் இதயவர்மன். முதல் நாளிரவு அவன் வைகுந்தன் கோவிலுக்குச் சென்றதிலிருந்தே அவன்மீது பிரமிக்கத்தக்க அஸ்திரங்கள் தொடுக்கப்பட்டதை எண்ணியந்திருந்த அவனுக்குக் கடைசியாக வீசப்பட்ட அஸ்திரம் அதிர்ச்சியை விளைவித்தது. அந்த அதிர்ச்சியின் விளைவாக அரசன் பணியை மேற்கொண்டு எப்படித் தொடருவது, நிறைவேற்றுவது என்பதுகூடத் தெரியாமல் திணறினான் அந்த வீரன்.

முதல் நாளிரவு வைகுந்தப் பெருமானை வணங்கி விட்டுக் கோயிலில் இருந்து வெளிப்போந்த இதயவர்மன், பலவித உணர்ச்சிகளுடனேயே வெளிப்போந்தான். பல்லவச் சக்கரவர்த்தி தன்மீது வைத்த நம்பிக்கையை எண்ணியதால் பரவசமும், சக்கரவர்த்தியின் அன்னைக்கு எதிராகப் பணி புரிய வேண்டுமேயென்ற நினைப்பால் குழப்பமும், எதிர்நோக்கியிருக்கும் பணியில் அபாயம் நிரம்ப உண்டு என்பதால் மகிழ்ச்சியும் கொண்ட அந்த வாலிப வீரன், கலந்த பல எண்ணங்களுடன் அன்று மூன்றாம் ஜாமக் கடைசியில் அரண்மனைக் கோயிலிலிருந்து தனது இருப்பிடத்தை எய்தினான் வைகுந்தப் பெருமான் சந்நிதிக்குச் சென்றபோது காஞ்சிமீது கண்வீசி தன் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்த அவன் உள்ளம், திரும்பிய சமயத்தில் காஞ்சியைக் காண கண்களை வீசவில்லை. ஜாமம் ஏறிவிட்ட காரணத்தாலோ அல்லது இதயவர்மன் சித்தத்தைப் புரிந்து கொண்டதாலோ சொல்ல முடியாது, காஞ்சியின் வீதிகள் அரவமழிந்து

இருந்தன. இல்லங்களிலிருந்து வந்த நடன ஒலிகளும் யாழ் ஒலிகளும் பூர்ணமாக அடங்கிவிட்டதால் இல்லங்களும் சுரணை கெட்டு கிடப்பதாகத் தோன்றியது. இந்த நிலையில் மௌனத்துடனும் எதையும் ஏறெடுத்து நோக்காமலும் அரண்மனைக் கோடியிலிருந்த காவல் வீரர் கூட்டத்தைத் தாண்டித் தனது அறையை அடைந்த இதயவர்மன் தனது அங்கியைக் கழற்றிவிட்டு மஞ்சத்தில் படுத்தான். படுத்தானே தவிர உறங்க முடியவில்லை அவனால். அடுத்த நாள் காத்திருந்த பணியையும் அதில் கலந்திருந்த பெரும் மனிதர்களையும் நினைத்து நினைத்துப் பொழுதைக் கழித்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் எழுந்திருந்து காலைக் கடனை முடித்துக் கொண்ட பிறகும் உள்ளத்தின் நெகிழ்ச்சி காரணமாக அறையைவிட்டு அசையாமல் இருந்த இதயவர்மன் மாலை வேளை வந்து விளக்குகள் எரியத் தொடங்கியதுமே தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு சேனாதிபதியின் மாளிகையை நோக்கிக் கிளம்பினான். அவன் கிளம்பிய தோரணை அவனுடைய சகாக்கள் பலருக்குக்கூட வியப்பை அளித்தது. சாதாரணமாக எளிய உடையை அணிபவன் அன்று படாடோப உடையை அணிந்து கொண்டதையும், கழுத்தில் கூட என்றும் போடாத வீர கண்டியை அணிந்ததையும், இடுப்பில் வாளை அமைத்துக்கொள்ள அரசர் வீரப் பரிசாக கொடுத்த நவமணிக் கச்சையை இறுகக் கட்டிக் கொண்டதையும் கவனித்த சக வீரர், "இந்த அலங்காரத்துக்கு என்ன காரணம்?" என்று ஒருவருக்கொருவர் வினவிக் கொண்டனர். அவர்களில் ஒருவன் நேரிடையாக அவனைக் கேட்டும் விட்டான், "என்ன இதயவர்மா! அலங்காரம் பலமாயிருக்கிறது" என்று.

இதயவர்மன் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. "அலங்காரம் நன்றாயிருக்கிறதா?" என்று வினவினான் புன்முறுவலின் ஊடே.



"முதல் தரமாயிருக்கிறது" என்றான் வீரன்.

"யாராவது பார்த்தால்..." என்று பேச்சை முடிக்காமல் விட்டான் இதயவர்மன்.

அந்த வீரன் பதில் சொன்னான். பதிலில் ஏளனமிருந்தது. ஆனால் அந்த ஏளனத்தைக் கவனிக்கவில்லை இதயவர்மன். அவன் முகத்தில் திடீரெனப் பெருமகிழ்ச்சி பளிச்சிட்டது. "சொல்! இன்னொரு முறை" என்று ஆவலுடன் வினவினான்.

வீரன் பதிலைத் திருப்பிச் சொன்னான். "ஆம் இதயவர்மா! உன் அலங்காரத்தைப் பார்ப்பவர்கள் உன்னை ராஷ்டிரகூடனென்றுதான் சொல்வார்கள்" என்று.

"எனப்படி?"— இதயவர்மன் மீண்டும் கேட்டான்.

"இப்படிப் படாடோப உடையை ராஷ்டிரகூட அரச குலத்தார்தான் அணிவார்கள். பல்லவ அரச குலத்து உடையும் சிறப்பாயிருக்கும். ஆனால், அதில் வீரம கலந்திருக்கும். உதாரணமாக பெரும் வாளிருக்கும். ஆனால், நவமணிக் கச்சையிருக்காது. கழுத்தில் மகரகண்டியிருக்காது" என்றான்.

இதைக் கேட்ட இதயவர்மன் பெரிதும் திருப்தியடைந்தான். எந்த நோக்கத்தை முன்னிட்டுத் தான் படாடோப உடையணிந்தானோ அந்த நோக்கம் ஈடேறியதை நினைத்து சகாக்களிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினான். அவன் அலங்காரத்தையும் உடையையும் பார்த்த சகாக்கள் அவன் எண்ணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு இதயவர்மன் ஏதோ காதல் விஷயத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறானென்று நினைத்தார்கள். ஆனால், அந்தக் காதல், இதயவர்மன் இயற்கையாக அபாயத்தினிடம் கொள்ளும் காதலென்பதையும், அவன் பெரும் அரசப் பணியை முன்னிட்டுச் செல்கிறானென்பதையும் அறியாத அவர்கள், "எந்த அழகி இவனுக்காகக்

காத்திருக்கிறாள்?" என்று பரஸ்பரம் கேட்டுக் கொண்டு கேலியும் செய்தார்கள்.

அந்தக் கேலியையோ, அவர்கள் தனக்குப் பின்னால் சிரித்ததையோ சிறிதும் லட்சியம் செய்யாமலே ராஜவீதிகளைக் கடந்து சேனாதிபதியும் உபசேனாதிபதிகளும் உறையும் மாளிகைகளின் இருப்பிடத்திற்கு வந்த இதயவர்மன், அந்த வீதிக்குள் மேலுக்கு சகஜமாகவும் இதயத்தில் எச்சரிக்கையுடனும் நுழைந்தான். அரண்மனையின் அந்தப்புர வழியாக வந்ததாலும், ராஜஸ்திரீகள் மஞ்சள் நீராட்டத் துறைகள் இருந்த காரணத்தாலும், மஞ்சள் நீர் வாய்க்கால் என்றழைக்கப்பட்ட சிறு வாய்க்காலின் கரையோரமாக நீளக் கட்டப்பட்டிருந்த படைத்தலைவர் இருப்பிடங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் ராஜவீதிகளைப் போலவே காவல் பலமாயிருந்தது. ஆனால் அந்தக் காவலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் வீதிக்குள் நுழைந்த இதயவர்மனைக் காவல் வீரன் ஒவ்வொருவனும் வணங்கினாலும், அந்த வணக்கங்களை அதிகமாகக் கவனிக்காமலே சேனாதிபதியின் மாளிகையை அடைந்த இதயவர்மன் அங்கிருந்த நிலை கண்டு பெரிதும் ஆச்சரியமடைந்தான்.

சதிக்கூடத்துக்கு முற்றும் மாறான நிலையிலிருந்தது ரவிவர்மன் மாளிகை. மாளிகையின் முன்கட்டுப் படிகளில் வீரர்கள் காவல் புரிந்துகொண்டு இருந்தாலும் உள்ளே போவோர் வருவோரை அவர்கள் சிறிதும் கட்டுப்படுத்தாதது மட்டுமன்றிக் கல்யாண வீட்டுக்கழைப்பது போல் முகமன் கூறி வரவேற்கவும் செய்தார்கள். உண்மையில் ரவிவர்மன் மாளிகை அன்று கல்யாண வீடு போல் அமர்க்களப்பட்டுக் கொண்டுதான் இருந்தது. வருவோரும் போவோரும் அதிகமிருந்தனர். உள்ளேயிருந்து நடன ஒலிகளும் இசைக் கருவிகளின் ஒலிகளும் வந்துகொண்டிருந்தன. பலவித ஆபரணங்களை அணிந்தவர்களும், பலவித வாகனங்களில் வந்து இறங்கியவர்



களுமான சதிபதிகள் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். இரண்டொருவர் சிரித்துக்கொண்டு படிகளில் ஏறி வந்த வேகத்தில் இதயவர்மனை இடித்துக் கொண்டு சென்றார்கள்.

இத்தகைய சூழ்நிலைக்குள் பிரவேசித்த இதயவர்மன் சதிக்கு முற்றும் புறம்பான கேளிக்கைக் கூடமாக ரவிவர்மன் மாளிகை விளங்குவதை எண்ணி, அன்று எது நடந்தாலும் சதி மட்டும் அந்த மாளிகையில் நடக்க முடியாதென்றும் இன்னொரு நாள்தான் வந்தே ஆகவேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டே, படிகளில் ஏறி மாளிகையின் முன் மண்டபத்துக்கு வந்தான். விசாலமான அந்த மண்டபத்தில் ஏராளமான பிரமுகர்கள் உலாவிக் கொண்டும், பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தார்கள். அவர்களில் சிலர் இடையிடையே உள் கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்த நடன இசைக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்தனர். பெண்கள் பலர் புஷ்பத் தாம்பூலத் தட்டுகளுடன் நாற்புறமும் வளைந்து நடந்து வருபவர்களை வரவேற்று உட்கூடத்திற்குள் அனுப்பிக் கொண்டிருந்தனர். அப்படி அனுப்பப்பட்ட இதயவர்மன் சொர்க்கலோகத்தில் நுழைவது போல் மாளிகையின் உட்கூடத்தில் நுழைந்தான். அங்கு ஒரு மூலையில் இரு அழகிகள் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். பலவகை இசைக் கருவிகள் இன்ப ஒலிகளைப் பரப்பிக் கொண்டிருந்தன. அங்கு கூடியிருந்த பெண்களும் சரி ஆண்களும் சரி, கூடத்தின் மூலையில் நடந்துகொண்டிருந்த நடனக் கச்சேரியை ஓரளவே கவனித்துக் கொண்டும், மற்றபடி குதூகலமாகப் பேசிக்கொண்டுமிருப்பதைக் கவனித்த இதயவர்மன், கலையை அசட்டை செய்யும் அந்தப் பெருமக்கள் கூட்டத்தை அலட்சியத்துடன் பார்த்துக் கொண்டே நடனம் நடந்து கொண்டிருந்த இடத்தை அடைந்தான்.

நடனமாடிய இரு பெண்களின் அழகு இணையற்றதாயிருந்ததன்றி, அவர்கள் ஆடிய ஜதிகளில் குற்றம் குறை

எதுவுமேயில்லையென்பதையும், பாதங்கள் ஒரே சீராகப் பாவி சதங்கை ஒலிகள் முரண்படாமல் இணைந்து சப்திப்பதையும் கண்ட இதயவர்மன் சிறிது நேரம் நடனத்தில் இதயத்தைப் பறிகொடுத்து நின்றான். நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன. கூட்டம் வந்துகொண்டே இருந்தது. போஜன வேளை வந்ததும் அறுசுவை உணவும் அளிக்கப்பட்டது. சுமார் இருநூறுக்கு மேற்பட்ட விருந்தினர்களுடன் விருந்துண்ட ரவிவர்மன் பெரும உற்சாகத்திலிருந்தான். விருந்துண்டபின் ஒவ்வொருவரையும் தனிப்பட விசாரித்தான். இதயவர்மனிடம் வந்ததும் அவன் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, "இதயவர்மா! என் அழைப்பை நீ ஏற்று வந்தது எனக்குப் பெரு மகிழ்ச்சியளிக்கிறது" என்றும் நன்றி தெரிவித்தான். விருந்து முடிந்ததும் வந்திருந்த பிரமுகர்கள் வெளியேறத் தொடங்கினார்கள். ரதங்களும் இதர வாகனங்களும் மெள்ள ரவிவர்மன் மாளிகையிலிருந்து கிளம்பிச் சென்றன.

இதயவர்மன் ஏதும் புரியாமல் நின்றான். அந்த மாளிகையில் அந்தப் பெருவிருந்து நடந்ததன் காரணம் கூடப் புரியவில்லை அவனுக்கு. எல்லோரும் வந்தார்கள், விருந்து அருந்தினார்கள், போனார்கள், அவ்வளவுதான் புரிந்தது அவனுக்கு. ரவிவர்மன் அழைப்பைப் பற்றிப் பிரஸ்தாபித்தானே, அதுகூட விளங்கவில்லை இதயவர்மனுக்கு. அழைப்பை ஏற்று தான் வந்தது பற்றி சேனாதிபதி கூறியது கேலியாயிருக்குமோ என்றுகூட முதலில் எண்ணினாலும் அந்த மாதிரி ஏளனத்தை விளக்கக் கூடிய குறி எதுவும் ரவிவர்மன் முகத்திலோ பேச்சிலோ தெரியாததால் அப்படி ஏதுமில்லையென்ற முடிவுக்கு வந்தான் இதயவர்மன். கடைசியாக அவனும் புறப்பட எத்தனிக்கையில், "இரு, இதயவர்மா போகலாம்" என்று கூறிய ரவிவர்மன், விருந்தினர்களில் மீதிப்பேரை அனுப்பும் பொறுப்பை உபசேனாதிபதியொருவனுக்கு அளித்து விட்டு இதயவர்மனை அழைத்துக்கொண்டு மாளிகையின்



மூன்றாம் கூடத்துக்கு அழைத்து வந்து "இதயவர்மா! இந்த விருந்து எதற்கென்று தெரியுமா?" என்று வினவினான் சிரித்துக் கொண்டு.

அப்பொழுதுதான் விழித்துக்கொண்ட இதயவர்மன், "தெரியாது தளபதி" என்று உண்மையையே சொன்னான்.

"பெண்ணுக்குத் திருமணம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். சரியான மணமகன் கிடைக்கவில்லை! நமது பிரமுகர்களில் யார் தகுந்தவன் என்று நிர்ணயிக்க அடிக்கடி இங்கு விருந்து நடத்துகிறேன். இது மன்னனுக்கும் தெரியும்" என்றான் ரவிவர்மன் சிரித்துக்கொண்டே.

இதயவர்மன் மெள்ள மெள்ளத் தன்மீது வலை வீசப்படுவதை உணர்ந்தான். "அப்படியா!" என்றான் மேலுக்கு.

"ஆம். ஆனால் கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்று பழமொழி இருக்கிறதே" என்றான் ரவிவர்மன்.

"அப்படியா!"

"ஆம். இங்கு வருபவர்கள் கோத்திரங்களெல்லாம் மோதுகின்றன. ஆமாம் உன் கோத்திரம் என்ன?"

இதயவர்மனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. சதிக் கூடம் எத்தனைத் திறம்பட அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்து பிரமிப்புக்குள்ளானாலும் அதை வெளிக்குக் காட்டாமலே, "பாரத்வாஜ கோத்திரம்" என்றான்.

மிகுந்த மகிழ்ச்சியைக் காட்டிய ரவிவர்மன், "மன்னர் கோத்திரமா?" என்று கேட்டான்.

"ஆம் அந்த அதிர்ஷ்டம் எனக்கிருக்கிறது" என்றான் இதயவர்மன்.

"அப்படியானால் அந்த அறைக்குப் போ" என்றான் ரவிவர்மன் தூரத்திலிருந்த அறையொன்றைக் காட்டி.

''எதற்கு?''

''கோத்திரத்தின் பலனை அடைவதற்கு.''

''என்ன பலன்?''

''போய்ப் பார் புரியும்'' என்ற ரவிவர்மன், அவனை விட்டு மீண்டும் வெளிக் கூடத்துக்குச் சென்றுவிட்டான். இதயவர்மன் மெள்ள நடந்து அந்த அறையை நெருங்கி இருமுறை கதவைத் தட்டினான். கதவு மெள்ளத் திறந்தது. ''வாருங்கள் உள்ளே'' என்று அழைத்தது ஒரு குரல். உள்ளே நுழைந்த இதயவர்மன் ஸ்தம்பித்துப் பல விநாடிகள் நின்று விட்டான்; கடைசியில், ''நீயா! நீயா!'' என்று குழறினான்.

''ஆம்'' என்று கூறித் தலையையும் அசைத்தாள், அங்கு ஆசனமொன்றில் படுத்துக் கிடந்த பைங்கிளி. அவள் இதழ்கள் இளநகை கூட்டின.

இதயவர்மன் அவளை நீண்ட நேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தான். தன்மீது கோத்திரம் வீசிய ரூத்திரக் கயிறு எத்தனை பலமானது, அதிலிருந்து விடுபடுவது எத்தனைக் கஷ்டமானது என்பதை எண்ணி எண்ணி வேதனை அடைந்தது அவன் இதயமும். அந்த வேதனையைத் துடைக்கவோ, தூக்கவோ சொல்ல முடியாது. அந்தப் பைங்கிளி எழுந்திருந்து அன்னநடை நடந்து அவனருகில் வந்தாள்.

## அத்தியாயம் 7

## சந்தித்த கண்கள்! சந்தேகச் சாயை!

விருந்துக்குப் பின் ஏற்பட்ட விநோத நிகழ்ச்சிகளால் வியப்பின் விளிம்பைத் தொட்டுவிட்ட இதயவர்மன் மனம் மாளிகையின் மூன்றாம் கட்டிலிருந்த அறைக் கதவு திறந்தவுடன் திகைப்பின் எல்லையை எட்டிவிட்டதால், அவன் கை கால்களை அசைக்கவும் சக்தியற்று ஸ்தம்பித்துப் பல விநாடிகள் வாயிற்படியிலேயே நின்றுவிட்டான். உணர்ச்சிகள் அடியோடு ஸ்தம்பித்திருந்ததால் கதவைத் திறந்த பணிமகளொருத்தி தன்னைச் சற்றே இடித்துக்கொண்டு சென்றதைக்கூட அவன் கவனிக்கவில்லை. அன்றைய இரவு நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் முறுவலுடன் ஆசனத்தில் படுத்துக் கிடந்தாள் அந்தப் பைங்கிளி. அவளை வெறித்து வெறித்துக் கண்கள் பார்த்த சில நிமிஷங்களில் இதயவர்மன் சித்தமும் அந்த இரவின் நிகழ்ச்சிகளைக் கோத்துப் பார்த்துப் பார்த்து ஏதும் புரியாமலே குழம்பிக் கொண்டிருந்தது.

முதல் நாள் நள்ளிரவில் வைகுந்தன் கோவிலில் தன்னைச் சந்தித்தபோது மன்னன் நந்திவர்மன் போட்ட கணக்கு பலவிதங்களில் தப்பிவிட்டதை உணர்ந்த இதயவர்மன் அவற்றை எண்ணிப் பார்த்து, மன்னனையும் மீறி மூடு மந்திரம் இந்தச் சதியில் ஏதோ புதைந்திருக்கிறது என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான். பாரத்வாஜ கோத்திரம் இந்தச் சதியின் மூலமந்திரமென்பதை மன்னன் உணர்ந்து கொண்டானே தவிர அது ரவிவர்மன் மாளிகையில் உபயோகப்படும் முறையை மன்னன் உணரவில்லையென்பது வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது இதயவர்மன் அறிவுக்கு. விருந்தின்போது சதி நடப்பதாக மன்னன் எண்ணியதும், அந்த விருந்துக்கு அழைத்துக்கொள்ள பாரத்வாஜ கோத்திரத்தை ரவிவர்மன் காதில் படும்படியாகச் சொல்ல வேண்டுமென்று மன்னன் தனக்கு உபதேசித்ததும் எத்தனை தவறு என்பதை அந்த இரவின் நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டதை இதயவர்மன் உணர்ந்-

சொல்லாமலிருக்கும்போதே தான். கோத்திரத்தைச் விருந்துக்கு அழைக்கப்பட்டதும், தான் ரவிவர்மனால் புறப்பட்டுக் கொண்டிருந்த விருந்து முடிந்து மற்றவர்கள் வலுவிலேயே கோத்திரத்தைத் சமயத்தில் ரவிவர்மன் வரவழைத்துவிட்டதையும் எண்ணிப் தன்னிடமிருந்து விஷயங்கள் புரியவில்லை. பார்த்த இதயவர்மனுக்குப் பல விருந்தாளியான தன்னை, அழையா வீட்டுக்குள் நுழைந்த பெருமகிழ்ச்சி ''என் அழைப்பை ஏற்று நீ வந்தது எனக்குப் அளிக்கிறது'' என்று ரவிவர்மன் அழைத்ததே விந்தையா யிருந்ததென்றால், தன்னை மூன்றாம் கட்டுக்கு அழைத்து வந்து வலுவில் கோத்திரத்தை விசாரித்து, ''அதோ அந்த அறைக்குப் போ'' என்று ரவிவர்மன் கூறியது குழப்பத்தை அதிகப்படுத்தியது. அந்த நிலையில் ரவிவர்மன் காட்டிய அறைக் கதவு திறந்ததும் உள்ளேயிருந்தவள் யாரென்பதை அறிந்ததும் அவன் குழப்பமும் வியப்பும் திகைப்பும் ஆயிரம் மடங்கு அதிகமாயிற்றென்றால் அதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது?

ஆச்சரியப்படுவதற்கேதுமில்லையென்பதையும் அச்சப் படுவதற்குத்தான் இடமிருக்கிறதென்பதையும் புரிந்து கொண்ட இதயவர்மனை நோக்கிப் புன்முறுவல் கொண்ட அறையிலிருந்த பைங்கிளி ஆசனத்தை விட்டு எழுந்து அவனை நோக்கி மெல்ல நடந்தும் வந்தாள். அவன் படுத்திருந்த சமயத்தில் முன்னிரவு நிகழ்ச்சிகளை நினைத்துக் குழம்பியிருந்த அவன் மனம் அவள் தன்னை நோக்கி நடக்கத் தொடங்கியபின் குழப்பத்தை உதறிக் கொண்டு துள்ளி எழுந்தது. அந்தத் துள்ளலும் சில விநாடி களில் பற்பல பட்டுக் கயிறுகளால் பிணைக்கப்படவே மீண்டும் சுயநிலை இழந்தான் இதயவர்மன். பல்லவ சாம்ராஜ்யத்திலேயே சிறந்த அழகியென்றும் பெயர் பெற்றவளும் யாராலும் அணுகக்கூட முடியாதவளும் தந்திவர்மன் சகோதரி மகளுமான இந்திராதேவி சேனாதிபதியின் மாளிகையின் அறையொன்றின் ஆசனத்



தில் படுத்துக் கிடந்தது பெரும் பிரமிப்பை அளித்தது இதயவர்மனுக்கு.

எந்த இந்திராதேவியின் இந்தீவர நயனங்களின் கடை வீச்சுக்குக் கணக்கற்ற இளவரசர்கள் ஏங்கி நிற்கிறார் களோ, எந்தத் தேவியின் புன்முறுவலைப் பெற பல்லவ காஞ்சியின் புருஷ சிங்கங்கள் பல தவம் செய்தனவோ, அந்த இந்திராதேவி சேனாதிபதி மாளிகைக்கு வர முடியு மென்பதே பெரும் விசித்திரம். அதுவும் அங்கு ஓர் அறையில் தனித்துப் படுத்துக் கிடக்கமுடியும் என்பதும் எண்ணவும் முடியாத பெருவிந்தை! ஆனால் அந்த எண்ணங்களையெல்லாம் விழுங்கிவிட்டு அவள் விந்தை அழகில் சிந்தையைப் பறி கொடுத்த இதயவர்மன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். ஆசனத்தில் சற்றே சாய்ந்து கிடந்த அந்தப் பூவுடலில்தான் எத்தனை வளைவுகள், எத்தனை எழுச்சிகள், சுழற்சிகள், தாழ்வுகள்! முகத்தில்தான் எத்தனை விற்கள், எத்தனை மலர்கள்! இவற்றையெல்லாம் அவன் கண்கள் ஆராயத்தான் செய்தன! புருவங்களை மாத்திரம் விற்களென்று வர்ணித்த பழம் புலவர்கள் எத்தனை அறியாதவர்கள் என்று அந்தச் சில விநாடிகளில் நினைத்துப் பார்த்தான் இதயவர்மன். ''புருவங்கள் விற்களென்றால் இமைகள் மாத்திரம் என்ன விற்களில்லையா? மேலும் கீழுமாக சிறியதும் பெரியதுமாக கண்ணைக் காக்கும் நான்கும் விற்களில்லையா? இந்த நான்கையும் புருவ விற்களுடன் சேர்த்தால் விற்கள் ஆறு ஆகுமே! இப்படி ஏன் கணக்குப் போடவில்லை புலவர்கள்? இவற்றுடன் செழுமையான கன்னத்தாமரைகள், இந்தீவிரக் கருங்கண்கள், நாசிச் செண்பகம், கர்ண சங்கு புஷ்பங்கள், உதட்டுச் செம்பருத்தி, இப்படிப் பல மலர் களைக் கொண்டு காதலின் விளையாட்டுத் தோட்டம் போலிருந்த முகத்தை ஒருவேளை அந்தக் காலத்துக் கவிகள் பார்த்திருக்க மாட்டார்களோ?'' என்றெல்லாம் தன்னைக் கேட்டுக்கொண்ட இதயவர்மன் ஆராய்ச்சி, வெளிப்படை

யாகத் தெரிந்த முகத் தோட்டத்தின் சிறு மலர்க்குவியலிலிருந்து கீழிறங்கி, மறைந்திருந்தாலும் மதியை மயக்கிய செண்டுகளையும் தண்டுகளையும் ஆராயத் தொடங்கியதும் சட்டென்று ஆசனத்திலிருந்து எழுந்த இந்திராதேவி தரையில் கால்களை ஊன்றி அவனை நோக்கி அறைக் கோடியிலிருந்து நடந்து வந்தாள். அவள் சயனத் திருக்கோலம் அளித்த இன்பஜாலத்தைவிட நடையாய் நெளிந்த அங்கலாவண்யங்கள் அவனுக்குப் பெரும் பிரமையை ஊட்டின. உடலில் உறுதியான மேல் கீழ் பகுதிகளைத் தாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் வேதனைப்பட்டுத் துவண்ட சிறு இடை, தனக்கு எத்தனை வேதனையைத் தர முடியுமென்பதை அந்தச் சில விநாடிகளில் உணர்ந்து கொண்ட இதயவர்மன் சிலையென நின்றான். அவள் நடந்தபோது ஏற்பட்ட ஆடையின் சரசரவென்ற ஒலி, இதயத்தின் மந்திரத்தைச் சுண்டியது; பாதரசத்தின் கிண்கிணி இதயக்கோவிலில் எத்தனையோ மணிகளைக் கணகணவென்று ஆட்டியது. ஏதோ பெரும் ஒலிகள் புத்தியில் எழுந்தன. பிரமிப்பை ஒலிகள் உடைப்பதுண்டு. ஆனால், இந்த ஒலிகள் ஏதோ புது விதமாயிருந்தன. விளைவு நேர்விரோதமாயிருந்தது பிரமிப்பு அதிகமாகியது. எந்தப் பிரமிப்பின் விளைவாக கதவு திறந்ததும் கௌரவமாக அழைக்க வேண்டிய அரசகுமாரியை, "நீயா! நீயா!" என்று முறை தவறி அழைத்தானோ அந்தத் தவறிய முறையை மேலும் கைக்கொண்ட இதயவர்மன், "உன்னை உன்னை..." என்று ஏதோ பேசத் துவங்கிச் சட்டென்று தன் நிலைமையைப் புரிந்து கொண்டதால் பேச்சை நிறுத்தினான்.

அதற்குள் இந்திராதேவி அவனைப் பெரிதும் நெருங்கி விடவே பெரும் குழப்பமடைந்த இதயவர்மன், "தேவி! மன்னிக்க வேண்டும்" என்று பேசத் துவங்கினான்.

அவன் குழப்பம் அவளுக்குப் பெரும் திருப்தியை அளித்திருக்கவேண்டும். அவள் உதடுகள் நன்றாக விலகிப்



புன்முறுவலை விரிவுபடுத்திக் கொண்டன. "உள்ளே வாருங்கள் பேசலாம்! அரசகுலத்தாராகிய உங்களை நான் இங்கு நிற்க வைப்பது தவறல்லவா?" என்று மெள்ள வார்த்தைகளை உதிர்க்கவும் செய்தாள்.

அவள் சமீபம் அவனைப் பெரிதும் வேதனைக்குள்ளாக்கியது என்றாலும் மெள்ளத் தன்னைச் சமாளித்துக் கொண்ட இதயவர்மன், "நிற்க வைப்பது தவறா?" என்று வியப்புடன் வினவினான்.

அவள் பதிலேதும் சொல்லாமல் தன்னைப் பின் தொடரும்படி சைகை செய்து மீண்டும் அறைக் கோடியிலிருந்த மஞ்சத்தை நோக்கிச் சென்றாள். பின்னழகைப் பருகிக்கொண்டு நின்ற இதயவர்மன் அதிக நேரம் கவனித்தால், தான் பைத்தியமாகிவிடுவது நிச்சயமென்று உணர்ந்ததன் விளைவாகப் பார்வையை அறையின் கூரை மீது செலுத்திக்கொண்டும் சுவர்களை ஆராய்ந்து கொண்டும் அவளைப் பின்பற்றி நடந்தான். ஆனால் அறையின் கூரையும் சுவர்களுங்கூட தனக்குப் பெரும் சத்துருக்களென்பதைப் புரிந்துகொண்ட இதயவர்மன் இதயத்தில் பெரும் சந்தேகம் எழுந்தது. கூரையிலிருந்த பல்லவ சிற்பங்களும் சரி, சுவரிலிருந்த வண்ணச் சித்திரங்களும் சரி ரதிகேளி விலாசத்திற்குச் சான்று கூறின. எல்லாம் புராணச் சிற்பங்கள்தான். இருப்பினும் புராணத்தின் சிருங்காரக் கட்டங்களே சிற்பத்திலும் ஓவியத்திலும் விரிந்து நின்றன. விசுவாமித்ரனின் முரட்டுக் காதல் பார்வையும், மேனகையின் அரை நிர்வாண வளைந்த நிலையும், வியாசன் பிரசவசமும், இளம் பெண்கள் நிர்வாண கோலமும், இப்படிப் பலவிதமான சிற்பங்களும் சித்திரங்களுமே அறையெங்குமிருந்ததைக் கண்ட இதயவர்மன் அது யாரோ ஒருவர் பள்ளியறையென்பதை புரிந்து கொண்டான். அவன் ஊகம் சரியேயென்பதை அறைக் கோடியிலிருந்த பெரும் பஞ்சணை இரண்டும் சிறு மஞ்சங்களும் நிரூபித்தன. இவற்றைப் பார்த்ததால் அதிகரித்த

மன நெகிழ்ச்சியுடன் அறைக்குள் நடந்த இதயவர்மனை மஞ்சமொன்றில் உட்காரச் செய்த இந்திராதேவி தான் எதிரேயிருந்த பெருங் கட்டிலில் அமர்ந்து இரு கால்களை ஆட்டிய வண்ணம் அவனை நோக்கினாள். பிறகு சொன்னாள், ''உம்! துவங்கலாம்'' என்று.

இதயவர்மன் ஏதும் புரியாமல் விழித்தான். ''எதை?'' என்று கேட்கவும் செய்தான். அவள் புன்முறுவல் செய்தாள். ''என் பேச்சைத்தான்'' என்றாள்.

''இதயவர்மன் பேசும் சக்தியை இழந்திருந்தான். இப்படித் திடீரென்று பஞ்சணையில் உட்கார்ந்துகொண்டு பேச்சை துவங்கலாமென்று ஓர் அழகி சொன்னால் எந்த ஆடவனுக்குப் பேச்சு வரும்? ஆகவே கேட்டான், ''என்ன பேசவேண்டும்?'' என்று.

இந்திராதேவி சர்வ சகஜமாகப் பேசத் தொடங்கி ''நீங்கள் பேச வந்ததை'' என்றாள்.

''நான் ஏதும் பேச வரவில்லையே'' என்றான் இதயவர்மன்.

இந்திராதேவியின் முகத்தில் ஒரு விநாடி சந்தேகத்தின் சாயை தோன்றி மறைந்தது. ''ஏதும் பேச வரவில்லையா?'' என்று வினவினாள்.

''இல்லை'' என்றான் இதயவர்மன் ஏதும் விளங்காமல்.

''பின் ஏன் இங்கு வந்தீர்கள்?'' இந்திராதேவியின் கேள்வியில் கடுமையிருந்தது.

''விருந்துண்ண வந்தேன்'' என்றான் இதயவர்மன்.

''உண்டாயிற்றல்லவா?''

''ஆயிற்று.''

''பின் போவதுதானே.''

''போகத்தான் பார்த்தேன்.''



இந்திராதேவியின் கண்கள் அவனை ஊன்றிப் பார்த்தன. பிறகு உதடுகள் விரிந்தன, சொற்கள் உதிர்ந்தன. ''பிறகு எண்ணத்தை மாற்றிக் கொண்டீர்?'' என்றாள் இந்திராதேவி.

''நான் மாற்றிக் கொள்ளவில்லை'' என்றான் இதயவர்மன்.

''மாற்றப்பட்டது?''

''ஆம்.''

''அது சரி.''

''மாற்றப்பட்டதும் இங்கு அனுப்பப்பட்டேன்.''

''எப்படி?''

''கோத்திரத்தைச் சொன்னேன்.''

''சரி சரி'' என்று உணர்ச்சியுடன் கூறிய இந்திராதேவி, இதுவரையில் சரியாகத்தான் இருக்கிறது. அப்படியானால் சொல்லுங்கள். அஞ்சவேண்டாம்'' என்றாள்.

''என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?'' என்று கோபம் குரலில் உதயமாகக் கேட்டான் இதயவர்மன்.

''சொல்ல வந்ததை'' என்றாள் இந்திராதேவியும் கோபத்துடன்.

''நான் ஏதும் சொல்ல வரவில்லை'' என்றான் இதயவர்மன்.

''பின் என்ன? பெண் பார்க்க வந்தீர்களா?'' என்று பெருங்குரலில் சீறினாள் இந்திராதேவி. இதயவர்மன் ஏதும் புரியாமல் அவளை உற்று நோக்கினான். அவளும் பதிலுக்கு நோக்கினாள். சந்தித்த இரண்டு ஜோடிக் கண்களிலும் சந்தேகத்தின் சாயை விரவிக் கிடந்தது.

## அத்தியாயம் 8

## அவள் அச்சம்

இந்திராதேவியும் இதயவர்மனும் ஒருவரையொருவர் ஊன்றிப் பார்த்துக்கொண்டு நின்ற அந்த சில விநாடிகளில் எங்கோ ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்பதை இருவருமே புரிந்துகொண்டதால் இருவர் மனங்களிலும் சந்தேகம் பெரிதும் துளிர்விட்டது. விருந்துண்ட பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அரசன் சொன்னதற்குப் பெரிதும் மாறுபட்டு இருந்ததன் விளைவாக இதயவர்மன் குழப்பத்தின் வசப்பட்டானென்றால், இந்திராதேவிக்கும் வழக்கமான நிகழ்ச்சி முறையில் சிறிது மாறுபாடு இருந்திருக்க வேண்டுமென்பதை அவள் முகம் சந்தேகமற எடுத்துக் காட்டியது. இப்படிப் பரஸ்பரம் குழம்பி நின்ற அந்த இருவரில் முதன் முதலில் தன்னைச் சமாளித்துக் கொண்ட இதயவர்மன் உள்ள நிலையை மெள்ள மாற்றியமைக்க முயன்று, ''தாங்கள் கடைசியில் சொன்னது சரி'' என்று மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

இதைக் கேட்ட இந்திராதேவியின் கோபம் உச்ச நிலைக்குச் செல்லவே அவள் கட்டிலை விட்டுக் கீழே குதித்து அவனைச் சுடச்சுட நோக்கினாள் சில விநாடிகள். பிறகு கேட்டாள், ''கடைசியில் என்ன சொன்னேன்? எது சரி?'' என்று.

இந்தச் சில விநாடிகளுக்குள் தன்னைப் பெரிதும் திடப்படுத்திக் கொண்ட இதயவர்மன் சற்றே சங்கடப் படுவது போல் பாசாங்கு செய்து, ''எனக்கு சொல்லச் சிறிது கூச்சமாயிருக்கிறது'' என்றான்.

''கூச்சப்பட வேண்டியது பெண்கள்!'' என்று சுட்டிக் காட்டினாள் இந்திராதேவி. அவள் குரலில் உஷ்ணம் அதிகமாயிருந்தது.

''சற்று முன்பு வரையில் அப்படித்தான் நினைத்தேன்'' என்ற இதயவர்மன் பேச்சில் மேலுக்குச் சங்கடமும் உள்ளூர விஷமமும் தெரிந்தன.



''இப்பொழுது நினைப்பு மாறிவிட்டதாக்கும்?''

''ஆம்.''

''ஏன்?''

''பெண் பார்க்க வந்தாயா என்று தாங்களே கேட்டீர்கள்.''

இதை மெள்ளத்தான் சொன்னான் இதயவர்மன். சொற்களை அவன் மெதுவாகவும் சங்கடப்பட்டு உதிர்ப்பது போலுந்தானிருந்தது. ஆனால் அவன் தன்னை நோக்கி நகைக்கிறானென்பதை சந்தேகமறப் புரிந்து கொண்ட இந்திராதேவி, ''ஆகையால் என்னை வெட்கங் கெட்டவளென்று தீர்மானித்துவிட்டீர்?'' என்று சீறினாள்.

''இல்லை இல்லை. அப்படிச் சொல்ல எனக்குத் துணிவுமில்லை, உரிமையுமில்லை. ஆனால் நான் 'வந்த காரணத்தை நீங்கள் வாய்விட்டுக் கேட்டது எனக்கு அதிர்ச்சியை அளித்தது'' என்றான் இதயவர்மன்.

''அப்படியானால் நீங்கள் வந்தது... வந்தது...'' என்று குரல் லேசாக நடுங்கக் கேட்டாள் இந்திராதேவி. அவள் அழகிய முகத்தில் சந்தேகத்தின் சாயை மறைந்து அச்சத்தின் சாயை மெள்ள மெள்ளப் படர்ந்தது.

அவள் குரல் நடுங்கியதையும் முகத்தில் அச்சம் துளிர் விட்டதையும் கண்ட இதயவர்மன், ''பெண் பார்க்கத் தான் வந்தேன். ஆனால் இடம் தவறி வந்து விட்டே னென்று நினைக்கிறேன்'' என்றான்.

இந்திராதேவியும் தன்னைச் சிறிது திடப்படுத்திக் கொண்டாள். ''இடம் தவறி வந்து விட்டீர்களா?'' என்று கேட்கவும் செய்தாள் சர்வசாதாரணமாக.

''ஆம்'' என்றான் இதயவர்மன் வருந்தும் பாவனையில்.

அவன் குரலில் ஒலித்த வருத்தத்தை அவள் கவனிக்கவே செய்தாள். என்ன காரணத்தாலோ

அவனுக்கு அந்த ஒலி எரிச்சலைக் கொடுத்தது. "இடம் தவறி வந்துவிட்டது வருத்தமாயிருக்கிறதா?" என்றும் கேட்டான் சிறிது எரிச்சலுடன்.

"ஆம்" என்று ஒப்புக்கொண்ட இதயவர்மன், "வருத்தம் இருவகைப்பட்டது" என்றும் சுட்டிக் காட்டினான்.

"இருவகைப்பட்டதா?" வியப்பிருந்தது அவள் குரலில்.

"ஆம்; இருவகைப்பட்டது. ஒன்று, நான் இங்கு தேடிவந்தவர் வேறு, இருந்தவர் வேறு..."

"இரண்டாவது?"

"இருந்தவருக்கு அனாவசியமாகத் தொந்தரவு அளித்தது."

"என்ன தொந்தரவு?"

"நான் வந்தது தொந்தரவல்லவா?"

"அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை முதலில். சில விநாடிகளுக்குப் பிறகு சாமர்த்தியமாகப் பதில் சொன்னான், "நான் இருந்ததும் உங்களுக்குத் தொந்தரவுதானே" என்று.

"அதெப்படித் தொந்தரவாகும்? யாரும் அணுகவும் முடியாத பல்லவ சாம்ராஜ்யச் சக்கரவர்த்தியின் சகோதரி மகளை இத்தனை அருகில் சந்திப்பதும் பேசுவதும் சாதாரண வீரனுக்குக் கிடைக்கக்கூடிய பேறா?" என்றான் இதயவர்மன்.

இதைக் கேட்டதும் இந்திராதேவியின் இதழ்களில் மீண்டும் இளநகையொன்று உதயமாயிற்று. இதயவர்மனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள் அவள். அவன் கனை சொட்டும் வீரவதனத்தையும் வாளிப்பான உடல் முழுவதையுமே அவள் கண்கள் ஆராய்ந்தன. பிறகு மென்னச் சொன்னாள் அவள், "நன்றாகப் பேசுகிறீர்கள்" என்று.



"வாயுள்ள பிள்ளை பிழைக்கும் என்று பழமொழி உண்டு" என்றான் இதயவர்மன்.

அந்த வார்த்தைகள் அவனிடமிருந்து உதிர்ந்ததும் அவள் முகத்தில் அச்சத்தின் சாயை பெரிதும் படர்ந்தது. உள்ளுக்கு வெளியே கண்களை ஒருமுறை ஓட்டினாள் அவள். பின் இதயவர்மனை நோக்கி, "அந்தக் கதவைச் சாத்திவிட்டு வாருங்கள், தாளிடவேண்டாம்" என்று கூறினாள்.

இதயவர்மன் தயங்கினான். அவளை ஒருமுறை பார்க்கவும் செய்தான். அவள் எதையோ நினைத்து அஞ்சுகிறாளென்பது மட்டும் புரிந்தாலும் அது எதுவாயிருக்க முடியுமென்று புரியாததால் சற்று நிதானித்த இதயவர்மன், "தாங்களும் நானும்..." என்று வார்த்தைகளைத் துவங்கி மென்று விழுங்கினான்.

"அறையில் தனித்திருப்பதைப்பற்றிப் பயப்படுகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஆம்; ஆனால், என்னைப் பற்றியதல்ல பயம்."

"என்மீது அவதூறு கிளம்பி விடுமென்று பயப்படுகிறீர்களா?"

"ஆம்."

இந்திராதேவியின் கண்களில் அச்சத்துடன் இகழ்ச்சிக் குறியும் படர்ந்தது. அந்த இகழ்ச்சி, குரலிலும் ஒலிக்கக் கேட்டாள், "பல்லவ சக்கரவர்த்தியின் சகோதரி மகள் இந்தச் சமயத்தில் இருக்க வேண்டிய இடம் எது?" என்று.

"அந்தப்புரம்" என்ற இதயவர்மன் அவள் விளக்க முற்படுவது எது என்பதைப் புரிந்து கொண்டான்.

"இப்பொழுது சேனாதிபதியின் மாளிகையில் நான் இருப்பது புகழைக் கொடுக்குமென்று நினைக்கிறீர்களா?" என்று வெறுப்புடனும் வினவிய அவள், "காலதாமதம் செய்யாதீர்கள். சீக்கிரம் கதவை மூடுங்கள்" என்று கண்டிப்பாக உத்தரவும் இட்டாள்.

இதயவர்மன் அதற்குமேல் எதுவும் பேசாமல் அறை வாயிற்படிக்குச் சென்று கதவை மூடிவிட்டுத் திரும்பினான். அவன் திரும்பி வந்த பிறகும் அறைக் கதவை ஒருமுறை நோக்கிய இந்திராதேவி முதலில் சாய்ந்து கொண்டிருந்த மஞ்சத்தில் பழையபடி சாய்ந்துகொண்டு "வீரரே! நமக்குள் பரஸ்பரம் நேரிடைப் பரிச்சயமில்லாவிட்டாலும் ஒருவரையொருவர் நன்கு அறிவோம்" என்று கூறினாள்.

"தங்களை நான் அறிவது வியப்பல்ல. பல்லவ சக்கரவர்த்தியின் சகோதரி மகள், சாம்ராஜ்யத்திலேயே இணையிலா..." என்று மேலும் ஏதோ சொல்லப் போனவனைக் கையின் சைகையிலேயே நிறுத்திய இந்திரா தேவி, "சரி; அதெல்லாம் இருக்கட்டும். என்னை உங்களுக்குத் தெரியும். இதயவர்மன் வீரத்தைப்பற்றி அரண்மனையில் பேசாத பெண்கள் கிடையாது. அந்தப்புர வீதி வழியாக அவர் சென்ற சமயங்களில் சாளரங்களி லிருந்து எட்டிப் பார்க்காத அழகிகளும் இல்லை. ஆகவே உங்களையும் அனைவருக்கும் தெரியும். அனைவருக்கும் தெரிந்தவரை எனக்கு மட்டும் தெரியாமலிருக்க முடியுமா...?" என்று சற்றே வார்த்தைகளைத் தேக்கினாள்.

இதயவர்மன் மௌனம் சாதித்தான். அவளே பேச்சைத் தொடர்ந்து கூறினாள். "ஆகவே நாம் ஒருவரையொருவர் நேரில் சந்திக்காவிட்டாலும் அறிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இப்பொழுது உண்மையைச் சொல்லுங்கள். இங்கு ஏன் வந்தீர்கள்?" என்று வினவினாள் திட்டமான குரலில்.

இதயவர்மன் அவள் குரலில் இருந்த திட்டத்தையும் அதிகாரத்தையும் கவனித்தான். ஆகவே, பாதி உண்மையை யும் சொல்லத் துவங்கி, "நானாக வரவில்லை" என்றான்.

"பின் யார் அனுப்பினார்கள்?" என்று வினவினாள் அவள்.

"சேனாதிபதி."



"எதற்கு அனுப்பினார்?"

"பெண் பார்க்கத்தான் என்று நினைக்கிறேன்."

அதைக் கேட்ட இந்திராதேவி ஏளனம் சொட்ட நகைத்தாள் மெல்ல. பிறகு கேட்டாள், "சேனாதிபதியை எத்தனை வருஷங்களாகத் தெரியும்?" என்று.

"சேனையில் சேர்ந்த நாளாகத் தெரியும்!"

"அவர் குடும்பத்தைப் பற்றி என்ன தெரியும்?"

"எதும் தெரியாது."

"இங்கு எத்தனை முறை வந்திருக்கிறீர்?"

"இதுதான் முதல் தடவை."

இந்திராதேவி பரிதாபத்துடன் இதயவர்மனைப் பார்த்தாள். "அது தெரிகிறது எனக்கு" என்று பரிதாபத் துடன் கூறவும் செய்தாள்.

"எப்படித் தெரிகிறது?"

"நீங்கள் சொன்ன விஷயங்களிலிருந்து தெரிகிறது."

"என்ன சொன்னேன்?"

"சேனாதிபதி பெண் பார்க்க வரச் சொன்னதாகச் சொன்னீர்களே!"

"ஆம், சொன்னேன். அதற்கென்ன?"

இந்திராதேவியின் இந்நீவிர நயனங்கள் அவனை மீண்டும் பரிதாபத்துடன் பார்த்தன. "சேனாதிபதிக்குப் பெண் யாரும் கிடையாது" என்று மெள்ள மெள்ள வார்த்தைகளை உதிரவிட்டாள் இந்திராதேவி.

வாயடைத்து நின்றான் இதயவர்மன். தான் பெரும் அபாயத்தில் சிக்கிக்கொண்டதை அந்தச் சில விநாடிகளில் அறிந்துகொண்டான். அவன் திக்பிரமையை இந்திரா தேவியும் கவனித்தாள். இருப்பினும் அதைப்பற்றிச் சட்டை செய்யாமல் அவனை நன்றாக அருகில் வரச் சொல்லி சேனாதிபதிக்கும் அவனுக்கும் நடந்த சம்பாஷணையை விவரிக்க சொன்னாள். அவள் ஆணையை நிறைவேற்ற அவனுக்கு அருகில் சென்று தன் தலையை

நன்றாகக் குனிந்து பேச முற்பட்டான் இதயவர்மன். மஞ்சத்தின் எதிரே நின்று மஞ்சத்தில் உட்கார்ந்த இந்திராதேவியை நோக்கிக் குனிந்த அவன் நாவில் வார்த்தைகள் வரவில்லை. அவன் கண்கள் அவள் கழுத்துக்குக் கீழே சற்றே விலகியிருந்த ஆடையின் உட்புறத்திலிருந்து எட்டிப் பார்த்த எழுச்சிகளின் விளிம்பழகைக் கண்டன.

அவன் சமீபம் அவளையும் சங்கடத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். அவள் ஆசனத்தில் லேசாக அசைந்தாள். ''வாயுள்ள பிள்ளை பிழைக்குமென்று சொன்னீர்கள். எனக்கு அதில் பெரும் சந்தேகம் இருந்தது. இருக்கட்டும். அந்தப் பிள்ளை வாயைத் திறக்கட்டும் இப்போது'' என்றாள்.

பிள்ளை வாயைத் திறக்க மறுத்தது. அதன் கண்கள் தான் திறந்திருந்தன. திறந்த கண்கள் விருந்தை உண்டன. ''உம், சரி சரி சொல்லுங்கள்'' என்ற இந்திராதேவியின் ரகசியக் குரல் பிள்ளையின் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருந்தது.

மெள்ள மெள்ளச் சொன்னான் இதயவர்மன் தனக்கும் சேனாதிபதிக்கும் நடந்த சம்பாஷணையை. அவள் பல விநாடிகள் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள். பிறகு தலை நிமிர்த்திக் கேட்டாள், ''உங்களைச் சேனாதிபதி பூரணமாக ஏமாற்றிவிட்டது புரிகிறதா உங்களுக்கு?'' என்று.

பேசும் நிலையில் இல்லாத இதயவர்மன், ''தெரிகிறது'' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான். அவன் அவளை நோக்கி நன்றாகக் குனிந்திருந்ததால் அவன் குழல்கள் அவள் கன்னத்தில் புரண்டன. அந்த முரட்டுக் குழல்களை ஒதுக்கித் தள்ளிய அவள் பெருமூச்சு விட்டாள். பிறகு தன் கண்களை உயரத் தூக்கி அவன் கண்களுடன் உறவாட விட்டாள். பிறகு அச்சத்துடன் சொன்னாள், ''உங்கள் உயிர் பேராபத்திலிருக்கிறது'' என்று.

## அத்தியாயம் 9

## அபாயக் கதவு

**சேனாதிபதிக்கும்** தனக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டதும், ''உங்களைச் சேனாதிபதி பூரணமாக ஏமாற்றி விட்டது புரிகிறதா!'' என்று இந்திராதேவி வினவியதிலோ, ''உங்கள் உயிர் பேராபத்திலிருக்கிறது'' என்று சொன்னதிலோ இதயவர்மனுக்கு வியப்பு சிறிதும் ஏற்படவில்லை. பெரிய தலைகள் மோதும் அரசியல் சதிகளை ஆராய அவன் பரமேச்சுர விண்ணகரத்தில் மன்னனிடம் ஒப்புக் கொண்டபோதே பேராபத்தில் தான் இறங்கி விட்டதை உணர்ந்திருந்தான். அழையாமலே தான் விருந்துக்கு வந்திருக்கத் தன்னை அழைத்ததுபோல் சேனாதிபதி பேசியதும், பிறகு தனக்குப் பெண்ணிருப்பதாகவும் அவள் திருமணத்திற்கு ஒரு வீரனைத் தேர்ந்தெடுக்கவே அடிக்கடி விருந்து வைப்பதாகவும் கூறியதும், பிறகு இந்திராதேவி இருந்த அறைக்கு அனுப்பியதும் எல்லாம் ஏமாற்று வித்தையே என்பதையும் அவன் உணர்ந்திருந்ததால் அவற்றில் எதுவும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை அவனுக்கு. ஆனால், தன் உயிர் பேராபத்திலிருக்கிறது என்ற வார்த்தைகளை அத்தனை அச்சத்துடன் இந்திராதேவி உச்சரித்தது மட்டும் விந்தையாயிருந்தது அந்த வாலிப வீரனுக்கு. விந்தையாயிருந்தது மட்டுமல்ல, ஆனந்தத்தையும் அளித்தது அவள் அச்சம்.

தன் நலனில் அவளுக்கு ஏன் அத்தனை சிரத்தையிருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்த அவனுக்கு விடை கிடைக்கவில்லை. அவள் அச்சத்துக்குக் காரணம் காதலாயிருக்க முடியாதென்பதை அவன் நன்றாக அறிந்திருந்தான். அவள் அந்தஸ்துக்கும் தன் நிலைக்கும் இருந்த தாரதம்மியம் காதலுக்கு இடங்கொடாதென்பதையும், அப்படியே அந்தஸ்தை அலட்சியம் செய்த காதலானாலும் அவளுக்கும் தனக்கும் என்றும் எவ்விதப் பரிச்சயமும் இல்லாத காரணத்தால் அது திடீரென ஏற்படக் காரணமில்லையென்பதையும் அவன் தீர்மானித்துக் கொண்

அவன் போக்குக்கும் இரைச்சலுக்கும் காரணத்தை அவனால் ஊகிக்க முடியவில்லையென்றாலும் அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டானென்பதைப் புரிந்து கொண்டாள். ஆகவே அவனைப் போலவே அவளும் இரைந்து பேசத் தொடங்கி, "சேனாதிபதி தடுக்க முடியும்?" என்று கூறினாள்.

"நான் என்ன சேனாதிபதியின் அடிமையா?"

"ஆம்."

"என்றிலிருந்து அடிமையானேன்?"

"இன்றிலிருந்து.".

"என்ன! சாசனம் எழுதிக் கொடுத்திருக்கிறேனா?"

"கொடுத்த மாதிரிதான்."

"மாதிரிதானென்றால்?"

"பாரத்வாஜ கோத்திரத்தைச் சொன்னீர்களல்லவா?"

"ஆம். சொன்னேன்."

இதைக் கேட்ட இந்திராதேவி கோபம் வந்துவிட்டதாக நடித்தாள். "அரசர் கோத்திரத்தை உச்சரிக்க உங்களுக்கு யார் அதிகாரமளித்தது?" என்று சீறினாள்.

"யாரும் அதிகாரமளிக்க வேண்டியதில்லை?" என்ற இதயவர்மன் பதிலிலும் சீற்றமிருந்தது.

"அதிகாரமளிக்க வேண்டியதில்லையா?" இம்முறை இந்திராதேவியின் கேள்வியில் சீற்றத்துடன் வியப்பும் கலந்திருந்தது.

"இல்லை." அழுத்தந்திருத்தமாக மிகவும் தடித்திருந்த குரலில் பதில் சொன்னான் இதயவர்மன்.

"ஏன்?" என்றாள் குழப்பத்துடன்.

"என் கோத்திரமும் அதுதான். பாரத்வாஜ கோத்திரம் அரசரின் சொந்த சொத்தல்ல" என்று கடுங்கோபத்துடன் இரைந்தான் இதயவர்மன். அந்த முழுப்



பொய்யை அவன் வேண்டுமென்றே சொன்னான். அதைக் கேட்ட அவள் திகைத்தாள். ஏதோ உண்மையாகவே தவறு நேர்ந்துவிட்டதாகத் தோன்றியது அவளுக்கு. ஆகவே, "அப்படியா! அப்படியா!" என்றாள் தடுமாறிய குரலில்.

இதயவர்மன் மேலும் அறையில் நடமாடிக் கொண்டும் இரைந்தும் பேசினான். "ஆம், இந்திராதேவி! என் கோத்திரமும் அதுதான். அதனால்தான் கோத்திரத்தை சேனாதிபதி கேட்டவுடன் சிறிதும் சிந்திக்காமல் சட்டென்று கூறினேன். ஆனால் பிறகு நடக்கும் விஷயங்கள் வேடிக்கையாய் இருக்கின்றன. சேனாதிபதி இந்த அறைக்கு அனுப்புகிறார். நீங்கள் 'சொல்ல வந்ததைச் சொல், சொல்ல வந்ததைச் சொல்' என்று பிராணனை வாங்குகிறீர்கள். இந்த மாளிகையில் என்ன நடக்கிறது? அரசகுலத்திலுதித்த நீங்கள் ஏன் இங்கு வந்திருக்கிறீர்கள் இந்த நேரத்தில்? உங்களை யார் வர அனுமதித்தது? வெளியே செல்ல எதற்காக எனக்குச் சேனாதிபதியின் அனுமதி வேண்டும்? இது என்ன சர்வ சுதந்திரப் பிரஜைகள் உள்ள பல்லவ காஞ்சியா அல்லது ஏதாவது அடிமைக் கூடமா?" என்று கேள்விமேல் கேள்வியாக உக்கிரத்துடன் அடுக்கினான் இதயவர்மன்.

அந்த உக்கிரம் இந்திராதேவியையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டாலும் அவள் எதையும் வெளிக்குக் காட்டாமல் திடீரென அமைதியைப் பலவந்தமாக வரவழைத்துக்கொண்டு கம்பீரமாக அவனெதிரில் சில விநாடிகள் நின்றாள். பிறகு, அமைதியுடன் சொன்னாள்: "இதுவரையில் எந்த வீரனும் என் எதிரில் இத்தனை இரைந்து பேசியதில்லை, கேள்விகளையும் கேட்டதில்லை" என்று.

"அவசியமிருந்திருக்காது" என்றான் இதயவர்மன், குரலில் ஸ்தாயியைச் சிறிதும் குறைக்காமலே.

"உங்களுக்கெப்படித் தெரியும் அது?"

''அப்படியானால் இத்தகைய வினோதம் வேறு வீரர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறதா?''

''இருக்கலாம்.''

''அவர்களும் கோத்திரத்தைச் சொன்னார்களா?''

''ஏன் சொல்லியிருக்கக் கூடாது?''

''எனக்கு சகோத்திரர்கள் அத்தனை பேரா இருக்கிறார்கள் காஞ்சியில்?''

''மன்னரில்லையா?''

''இருக்கிறார். அவர் மட்டுந்தான் எனக்குப் போட்டியென்று நினைத்தேன், மற்றவர்களுமிருக்கிறார்களென்பதை இன்றுதான் அறிந்தேன். அவர்கள் யார் யார்? நான் அறியலாமா?'' இப்படிக் கேட்ட இதயவர்மன் பெரிதாக நகைத்துவிட்டுச் சொன்னான், ''இந்தப் பொய்யெல்லாம் இதயவர்மனிடம் செல்லாது அச்சுறுத்தியும் என்னை இங்கிருக்கச் சொல்ல முடியாது இது உங்களுக்குத் தெரியாவிட்டாலும் சேனாதிபதிக்குத் தெரியும்'' என்று.

அவன் அவளை மீண்டும் உற்று நோக்கினான். பிறகு சொன்னான், ''உங்களைப் பற்றிய மதிப்பு உங்களுக்கு அதிகமாயிருக்கிறது'' என்று.

''அதிகமா இல்லையா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்போம்'' என்றான் இதயவர்மனும் தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு.

''எப்படிப் பரீட்சிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''இந்த விநாடியே இங்கிருந்து வெளியேற முடிவு செய்துவிட்டேன். அது மட்டுமல்ல......'' என்று வார்த்தையை முடிக்காமல் விட்ட இதயவர்மன் அறையின் கோடியிலிருந்த கதவுக்கருகில் சென்று நின்று அவளை நோக்கித் திரும்பினான்.



அவன் முகத்தில் இகழ்ச்சிப் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்ததைக் கண்ட இந்திராதேவி அதன் காரணத்தை அறியாமல், ''அதுமட்டுமல்ல என்றால்?'' என்று வினவினாள்.

''உங்களையும் அழைத்துச் செல்ல முடிவு செய்து விட்டேன்'' என்றான் இதயவர்மன்.

இந்திராதேவியின் முகத்தில் திகில் குடிகொண்டது. ''நான் இஷ்டப்படாவிட்டால்?'' என்று கேட்டாள் தடுமாறிய குரலில்.

''பலவந்தமாக அழைத்துச் செல்வேன்.'' இதைச் சொன்ன இதயவர்மன் குரலில் உறுதி இருந்தது.

''அத்தனை துணிவு உண்டா உங்களுக்கு?''

''சந்தேகமாயிருக்கிறதா உங்களுக்கு?''

அவன் அடுத்து என்ன செய்யப் போகிறானென்பதை அவள் அறியுமுன்பே திகைப்பூட்டும் நிகழ்ச்சி ஏற்பட்டது. எதற்கும் அஞ்சாத இந்திராதேவியே அச்சத்தால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள் ''ஆம், சந்தேகமாகத்தானிருக்கிறது'' என்று அவள் வார்த்தையை முடிக்கு முன்பாகவே, ''சந்தேகமிருந்தால் இவரைக் கேளுங்கள்'' என்று சீறிய இதயவர்மன் சரேலென அறைக் கதவைத் திறந்து விட்டான். திறநதது சாதாரணக் கதவல்ல, அபாயத்தின் கதவு என்பதை அடுத்த விநாடி உணர்ந்து கொண்ட இந்திராதேவி முகம் பூராவும் அச்சம் நிலவ திறந்த கதவைப் பார்த்தபடியே நின்றுவிட்டாள்.

## அத்தியாயம் 10

## திட்டி வாசலும் திருட்டுக் கரமும்

சாதாரணமாகத் தன்னுடன் உரையாடிக் கொண்டிருந்த இதயவர்மன் உரையாடலைச் சட்டென்று ஒரு விநாடி நிறுத்தியதையும், முடிவில் தன்னைப் பலவந்தமாகச் சேனாதிபதியின் மாளிகையிலிருந்து கொண்டு செல்லப் போவதாகக் கூறியதன்றித் தனக்கு அத்தனை துணிவு உண்டென்பதை நிரூபிக்க, ''சந்தேகம் இருந்தால் இவரைக் கேட்கலாம்'' என்று சொல்லி அறைக் கதவைத் திடீரெனத் திறந்துவிட்டதையும் கண்ட இந்திராதேவி, அதுவரை, வியப்பின் வசப்பட்டாளென்றால், கதவு திறந்ததும் அந்த வியப்பு அச்சமாக மாறியது. கதவை ஒட்டியதுபோல் நின்றிருந்தான் சேனாதிபதி ரவிவர்மன் கதவை ஒட்டி நின்றிருந்ததால் கதவு திடீரெனத் திறக்கப்பட்டதன் காரணமாக முன்புறம் விழப்போன ரவிவர்மனை இதயவர்மன் வெகு லாகவமாகத் திடப்படுத்தி நிற்க வைத்ததன்றி, ''சேனாபதியவர்கள் நான் சொல்வதைக் கேட்க இத்தனை சிரமம் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்திருக்கலாம். நான் சொன்ன அனைத்தையும் உங்களிடம் நேருக்கு நேர் சொல்லியிருப்பேன்'' என்று பணிவுடன் கூறவும் செய்தான்.

அவன் வார்த்தையிலிருந்தது உண்மையில் பணிவின் தொனியா, அல்லது நகைப்பின் ஒலியாவென்பதை உணர மாட்டாத ரவிவர்மன் ஒருகணம் இதயவர்மனையும் நோக்கி இந்திராதேவியையும் நோக்கினான். கதவுக்கருகில் தங்கள் சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக்கொண்டு நின்றவன் சேனாதிபதியென்பதைக் கண்டவுடன் அச்சத்திற்கு இலக்கான இந்திராதேவி, சில விநாடிகளுக்குள்ளேயே அச்சத்தை உதறிவிட்டு, ''உரையாடலை ஒட்டுக் கேட்கும் அத்தனைப் பண்பு பல்லவ சேனாதிபதிக்கு ஏற்பட்டது சிறப்புதான்'' என்று இகழ்ச்சியுடனும் பேசினாள்.



இந்த இடத்தில் குறுக்கிட்ட இதயவர்மன், ''இதில் பண்பாட்டுக் குறைவு ஏதுமில்லை'' என்று கூறினான் சர்வ சாதாரணமாக.

இந்திராதேவியின் இந்தீவரக் கண்களின்மீது வளைந்து நின்ற புருவங்கள் வியப்பின் காரணமாக சற்று உயர எழுந்தன. ''ஒட்டுக் கேட்பது பண்பாட்டுக்கு உகந்தது என்பது உங்கள் கருத்தோ!'' என்று இகழ்ச்சியுடன் இதயவர்மனை நோக்கி வினவினாள்.

''கேட்கும் மனிதர், கேட்கும் காரணம், கேட்கப்படும் விஷயம் இவற்றைப் பொறுத்தது'' என்றான் இதயவர்மன்.

''நீங்கள் சொல்வது விளங்கவில்லை'' என்றாள் இந்திராதேவி.

''சேனாதிபதி அவர்கள் இந்த நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளவர்'' என்றான் இதயவர்மன்.

''அது தெரியும் எனக்கு?'' என்றாள் இந்திராதேவி கோபத்துடன்.

''பல்லவ சாம்ராஜ்யத்தின் கௌரவம் சீர்கெடா திருப்பதற்கும் அவர்தான் பொறுப்பாளி.''

''இல்லையென்று யார் சொன்னது?''

''அந்தக் கௌரவத்திற்கு ஹானி நேரும்படியான எந்த நிகழ்ச்சியையும் தடுப்பது அவர் கடமை.''

''சேனாதிபதியின் கடமைகளை நீங்கள் விளக்கித்தான் அவர் தெரிந்துகொள்ள வேண்டுமா?'' என்று மிகுந்த சீற்றத்துடன் வினவினாள் இந்திராதேவி.

இதயவர்மன் இந்திராதேவியை ஒருகணம் உற்று நோக்கினான். பிறகு சொன்னான், ''அவருக்கு விளக்க வில்லை'' என்று.

''அப்படியானால் எனக்கு விளக்குகிறீர்களா?''

''ஆம். நீங்கள்தானே அவர் ஒட்டுக் கேட்பது தவறென்று கூறுகிறீர்கள்?''

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திணறினாள் இந்திராதேவி. இதயவர்மனே மேலும் சொன்னான்: "இந்திராதேவி, சேனாதிபதி என்னை உங்கள் அறைக்கு ஏதோ காரியார்த்தமாக அனுப்புகிறார். நீங்கள் அதைப் பற்றி ஏதும் பேசாமல் என்னிடம் ஏதேதோ புதிர் போடுகிறீர்கள். அதைப்பற்றி நான் விழிக்கும்போது என் உயிர் ஆபத்திலிருக்கிறது என்று எச்சரிக்கிறீர்கள். நான் இந்த மாளிகையைவிட்டு வெளியேற முடியாது என்று அச்சுறுத்துகிறீர்கள். இதெல்லாம் பல்லவ சாம்ராஜ்யத்தின் கௌரவத்தை எத்தனை தூரம் பாதிக்கும் என்பதை உணர்ந்தீர்களா? நீங்கள் உணராதிருக்கலாம். ஆனால் உணர்ந்த சேனாதிபதி மேற்கொண்டு என்ன பேச்சு நடக்கிறதென்று ஒட்டுக் கேட்டால் தவறென்ன? அரச கௌரவத்திற்குப் புறம்பான பேச்சு எத்தனை தூரந்தான் போகுமென்பதை அறிய கதவுக்கு வெளியில் சற்று நிதானித்தால்தான் தவறென்ன?"

இந்திராதேவியோ ரவிவர்மனோ சிந்திக்கக்கூட நேரம் இல்லாதபடி விடுவிடு என்று பேசிக்கொண்டுபோன இதயவர்மன் சேனாதிபதியை நோக்கி, "என்ன நான் சொல்வதில் தவறு ஏதாவது உண்டா?" என்று இறுதியில் வினவினான்.

சேனாதிபதியின் முகத்தில் ஆரம்பத்தில் ஏதாவது குழப்பமோ சங்கடமோ இருந்திருந்தால் அது இதயவர்மன் உணர்ச்சி உரையால் உடைக்கப்பட்டுவிட்டதென்பதை முகம் தெளிவாக எடுத்துக் காட்டியது. பின்பு சேனாதிபதி பதில் சொன்னபோது சாதாரணமாகவே பதில் சொன்னான். "ஒரு தவறுமில்லை இதயவர்மா? உன் நிலையில் நான் இருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பேன்" என்று.

இதயவர்மன் இதைக் கேட்டதும் நன்றியுடன் சேனாதிபதியை நோக்கித் தலைவணங்கி, "தங்களைச்



சேனாதிபதியாகப் பெற்றது இந்நாடு செய்த பாக்கியம்" என்று கூறிவிட்டு இந்திராதேவியை நோக்கி, "நான் சொன்னது சரிதானே. சேனாதிபதியை இவரிடம் பணிபுரியும் வீரர்கள் புரிந்துகொண்ட அளவுக்கு அரண்மனைப் பெண்கள் புரிந்து கொள்ள முடியுமா?" என்று வினவினான்.

இந்தச் சமயத்தில் சேனாதிபதியின் முகத்தில் ஏதோ ஒரு யோசனை சட்டென்று தோன்றி மறைந்தது. சர்வ சகஜமாகப் பேச முற்பட்ட ரவிவர்மன், "இதயவர்மா! நீ சாதாரண வீரன். அரசகுல மகளிரைக் குறைபாடாகப் பேசுவது தவறு" என்று சுட்டிக்காட்டினான்.

"மன்னிக்க வேண்டும். தெரியாமல் பேசிவிட்டேன். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? உத்தரவிடுங்கள்" என்றான் இதயவர்மன்.

சேனாதிபதி சற்று யோசித்துவிட்டு, "ஒன்றுமில்லை. வேண்டுமானால் நீ இல்லம் செல்லலாம்" என்றான்.

"ஒரு விஷயம் மறந்துவிட்டீர்களே" என்று மீண்டும் பேச்சுக் கொடுத்தான் இதயவர்மன்.

"எது?" என்று ஏதும் புரியாமல் வினவினான் சேனாதிபதி.

"தங்கள் பெண்ணின் திருமண விஷயம்" என்று நினைப்பூட்டினான் இதயவர்மன்.

"ஆம் ஆம்; மறந்துவிட்டேன்" என்ற சேனாதிபதி அதைப் பற்றிச் சிறிது சிந்தனையில் இறங்கினான்; பிறகு சொன்னான்: "இதயவர்மா, நீ பல்லவ சாம்ராஜ்யத்தின் சிறந்த வீரர்களின் ஒருவன்" என்று.

"வீணாகப் புகழாதீர்கள்" என்று சங்கடப்படுவது போல் பாசாங்கு செய்தான் இதயவர்மன்.

"வீண் புகழ்ச்சியல்ல இதயவர்மா! இது அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். என் பெண்ணுக்கு நீ சகலவிதத்திலும் தகுந்தவன். கோத்திரமும் பாரத்வாஜம். அரசர்

கோத்திரம். ஆகவே அரசர் குலம். ஆனால் உன் தாய் தந்தையர் இன்னாரென்று தெரியவில்லை...'' என்று வருத்தத்தைக் காட்டினான், சேனாதிபதி.

''ஆம்'' என்று இதயவர்மனும் வருத்தம் தோய்ந்த குரலில் ஒத்துப் பாடினான்.

''அதுபற்றி விசாரிக்கவே உன்னை இந்திராதேவியிடம் அனுப்பினேன்'' என்றான் சேனாதிபதி.

ரவிவர்மனின் இந்தப் பெரும் பொய்யைக் கேட்ட இதயவர்மன், ''அதை நீங்களே கேட்டிருக்கலாமே'' என்றான்.

''இந்த விஷயங்களை நேரில் ஒரு தந்தை கேட்க முடியாது இதயவர்மா! அதற்காகத்தான் இந்திராதேவியை விட்டுக் கேட்கச் சொல்லலாமென்று நினைத்தேன்'' என்று கூறினான் சேனாதிபதி.

''நியாயம்! நியாயம்!'' என்று ஒப்புக்கொண்டான் இதயவர்மன். பிறகு சொன்னான், ''ஆனால் அதை என்னைக் கேட்டுப் பயனில்லை சேனாதிபதியவர்களே! எனக்கே தெரியாது'' என்று.

''அப்படியா!'' என்று வியப்பைக் காட்டினான் சேனாதிபதி.

''ஆம்.''

''யாருக்கும் தெரியாதா?''

''ஒருவருக்குத் தெரியும்.''

''யார் அவர்?''

''இந்நாட்டு மன்னர்.''

இதைக் கேட்ட சேனாதிபதி ஸ்தம்பித்து நின்றான். கடைசியாக நிதானித்துக்கொண்டு, ''அப்படியானால் அவரைத்தான் கேட்கவேண்டும்'' என்றான்.

மீண்டும் சட்டென்று பதில் வந்தது இதயவர்மனிடமிருந்து: ''அது பயனளிக்காது'' என்று திட்டமாகக் கூறினான் இதயவர்மன்.



''ஏன்?''

''நானே பலமுறை கேட்டுவிட்டேன்.''

''சொல்ல மறுக்கிறாரா மன்னர்?''

''வாயைத் திறக்கவும் மறுக்கிறார் மன்னர். அதிகமாகக் கேட்டால் பேச்சை மாற்ற பரமேச்சுர விண்ணகரப் பதிகங்களைப் பாடுகிறார்.''

இதைக்கேட்ட சேனாதிபதி சட்டென்று தன் ஜாக்கிரதையைக் கைவிட்டு, ''ஆழ்வார் பாடல், கோவில் குளம், பூசை புனஸ்காரம், ஏன் ராஜ மாதாவுக்கு...'' என்று சிறியவன் சட்டென்று பேச்சை நிறுத்தி இதயவர்மனை அச்சத்துடன் நோக்கினான்.

இதயவர்மன் சேனாதிபதியின் சொற்களைக் கேட்டதாகத் தெரியவில்லை. அவன் புத்தி எங்கோ யோசனையிலிருப்பதை முகம் காட்டியது. திடீரென்று அவன், ''என்ன! என்ன சொன்னீர்கள்? என் தாய் தந்தையரிடம் என் நினைப்பு போய்விட்டது. ஆகையால் தாங்கள் சொன்னதைக் கவனிக்கவில்லை. மன்னிக்க வேண்டும்'' என்றான்.

சேனாதிபதி சற்று ஆசுவாசப் பெருமூச்சுவிட்டு, ''ஒன்றுமில்லை இதயவர்மா! உணர்ச்சி வேகத்தில் ஏதோ பேசுகிறேன். நாட்டின் நிலைமை எனக்குக் கவலை தருகிறது. எப்பொழுதும் மனம் கிலேசத்தில் இருக்கிறது'' என்று கூறினான்.

''ஏனிருக்காது? நாட்டைக் காக்கும் பொறுப்பு தங்களுடையதல்லவா?'' என்ற இதயவர்மன், ''சரி, நேரமாகி விட்டது. என் திருமணமென்ன பெரிய விஷயம். சேனாதிபதியவர்கள் எப்பொழுது அழைத்தாலும் அடிமை வருகிறேன். நான் செல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''ஆகா!'' என்ற சேனாதிபதி ''ஒன்று செய் இதயவர்மா? போகும்போது இந்திராதேவியையும் அரண்மனை

யில் விட்டுப் போய்விடு. இங்கு யாரும் அவர்களுக்குத் துணை இல்லை'' என்றான்.

இதைக்கேட்ட இதயவர்மன் இந்திராதேவி இருவரும் பிரமிப்படைந்தார்கள். சேனாதிபதியின் கடைசி உத்தரவின் காரணம் இருவருக்கும் புரியவில்லை. மேன்மேலும் அவர்களுக்குப் புரியாத முறையிலேயே காரியங்கள் நடந்தன. சேனாதிபதியே அவர்கள் இருவரும் செல்ல ரதமொன்றைக் கொணரச் செய்தான். அவர்களிருவரையும் வாயில் வரை வந்து ரதத்தில் ஏற்றியும் விட்டு வழியனுப்பினான். ரதம் பறந்தது. இந்திராதேவியும் இதயவர்மனும் ஏதேதோ எண்ணச் சூழல்களில் சிக்கிக் கிடந்தார்கள். அரசவீதி வந்ததும் இந்திராதேவியிடம் விடைபெற்றுக் கொண்ட இதயவர்மன் ரதத்திலிருந்து கீழே குதித்தான். பக்கத்திலிருந்த புரவிச்சாலையில் புகுந்து புரவியொன்றை அவிழ்த்து அதில் பாய்ந்து மஞ்சள் நீர்க் கால்வாய் பக்கம் சென்று மீண்டும் சேனாதிபதி மாளிகை வந்து அதன்மீது கண்களை ஓட்டினான். மாளிகை அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. வாயிற்பெருங்கதவு மூடிக் கிடந்தது. அதை அணுகாமல் அந்த மாளிகையின் பின்புறம் சென்று புரவியிலிருந்து கீழே குதித்து அங்கிருந்த திட்டி வாசல் கதவைத் தட்டினான் இதயவர்மன். அந்தத் திட்டிக் கதவு மெல்லத் திறந்தது. ''யார்'' என்று மெல்லிய குரல் ஒன்று பின்புறத்திலிருந்து வெளிவந்தது.

''ஆசிரியன்'' என்றான் இதயவர்மன்.

'களுக்'கென்ற மகிழ்ச்சிச் சிரிப்பு திட்டிவாசலுக்குப் பின்புறமிருந்து வெளிவந்தது. வளையல் கரமொன்று அந்தத் திட்டிவாசலை மெல்லத் திறந்து இருட்டுத்தனமாக ஏதோ சைகையும் செய்தது.

## அத்தியாயம் 11

## ரஞ்சனி

திட்டி வாசற்கதவும் பூரணமாகத் திறந்து அதன் வழியே நீண்ட வளையல் கரமொன்று இருட்டுத்தனமாக ஏதோ சைகையும் செய்யவே அந்த வாசலுக்குள் நுழையு முன்பு இதயவர்மன் சுற்றும்முற்றும் ஒரு முறை பார்த்தான்

சேனாதிபதி மாளிகைக்குப் பின்புறத்தில் திட்டி வாசலுக்கெதிரில் இருந்த வீரர் இல்லங்களிலும் விளக்கு ஏதுமில்லாமல் இருள் மண்டிக் கிடப்பதையும் திட்டி வாசலைத் தாங்கி நின்ற பெருங்கதவின் மேல்புறத்தில் மட்டும் சிறு விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்ததையும் கண்ட அந்த வாலிப வீரன், திட்டிவாசல் கதவின் மூலம் உள்ளே நுழையும் யார்மீதும் மேலுள்ள விளக்கின் வெளிச்சம் விழுமென்பதையும் எதிர் சாரி வீடுகளின் இருட்டில் யாராவது நிற்கும் பட்சத்தில் அந்தப் பேர்வழி கண்டிப்பாய் உள் நுழைபவனைக் கண்டு கொள்ளலாமென்றும் புரிந்துகொண்டான். இரவிலும் தெருவிளக்குகள் விடாமல் எரியவேண்டுமென்ற அரச கட்டளைக்குப் புறம்பாக சேனாதிபதி மாளிகையின் பின்புற வீதி இருந்ததால் அங்கு ஏதோ விசேஷமிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான் இதயவர்மன். ஆகவே அந்த வளையல் கரம் தன்னை உள்ளே வரும்படி இருட்டுச் சைகை செய்த பின்பும் அவன் அந்த வாசற்கதவின் மேல் விளக்கு வெளிச்சத்தில் முகத்தைக் காட்ட இஷ்டப்படாமல் பக்கவாட்டத்திலிருந்த இருளிலேயே மறைந்து நின்ற வண்ணம், ''உஷ்! சற்று நிதானி'' என்று மெல்லக் கூறினான்.

''நிதானிக்க என்ன அவசியம்? வாருங்கள் உள்ளே'' என்று எழுந்த குயில் குரலைக் கேட்டும் இதயவர்மன் அசையாதிருக்கவே அந்த குரலுக்குடையவள் மெள்ள திட்டிவாசலில் தலையை நீட்டினாள்.

வாயிற் கதவின் மேலிருந்த விளக்கொளி பூரணமாக அவன் முகத்தில் விழுந்தது. பெருங்கதவின் கீழே நிலத்தி

லிருந்து மூன்றடி தள்ளி மேலேயிருந்த திட்டிவாயிற்கதவின் அடிக்கட்டையில் அவள் அழகிய மார்பகம் அழுந்த, திட்டி வாயிலின் மேல்மட்டக் கட்டையும் பக்கவாட்டு மரமும் அவள் அழகுக்குச் சட்டமிட, வெளி நோக்கிய அந்த மங்கையின் குறுகுறுத்த பெருவிழிகள் இருளில் நின்ற இதயவர்மனை ஏறெடுத்து நோக்கின, காற்றில் அலைந்த குழலிழைகள் அவள் முகத்தில் விளையாட, அவற்றில் சில பட்டையாக அவள் வலது கண்ணுக்குக் குறுக்கேயும் விழுந்து அதை அரைகுறையாக மறைத்தன. மேல்விளக்கின் மெல்லிய ஒளியில் அந்தப் பெண்ணின் தோற்றம் பிரமிக்கத் தக்கதாயிருந்தது. திட்டிவாயிலின் பக்கக்கட்டை இரண்டையும் பிடித்திருந்த இரு வளையல் கரங்களிலும் மென்மையில்லை. உழைப்பின் காய்ப்பே இருந்தது. அவள் மார்பகம் சிறியதாய் இருந்தாலும் வாலிபத்தின் வேகத்தைக் காட்டியது. கழுத்தில் வளைந்து வந்து அவற்றைச் சுற்றிய ஆடையையும் இரட்டை அழகு அலட்சியம் செய்தது. விஷமத்தால் கன்னங்களிரண்டும் நன்றாகக் குழிந்து அங்கும் இரண்டு கண்களிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தின. அவள் முகம் குழந்தை முகம் போலிருந்தது. பருவத்தை எட்டிவிட்டாளா எட்டிப்பார்க்கிறாளா அந்தத் திருடி என்று சந்தேகப்படும்படி இருந்தது அவள் திருக்கோலம்.

திட்டிவாசலை அடைத்து நின்ற அந்த அழகியை ஒரு விநாடியே பார்த்துப் பரவசமடைந்த இதயவர்மன் சட்டென்று தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, ''தலையை வெளியே நீட்டாதே. உள்ளே இழுத்துக்கொள்'' என்று எச்சரித்தான். அந்த எச்சரிப்பை ஏற்ற அந்தப் பெண் சட்டென்று உள்ளுக்குள் தலையை இழுத்துக்கொண்டதும் 'மேல்விளக்கை அணைத்துவிடு'' என்று கட்டளையிட்டான்.

சில விநாடிகள் அந்தத் திட்டி வாசற்கதவு திறந்து கிடந்தது. அவன் விடுவிடு என்று உள்ளே சென்று ஒரு



பெரும் கழியை எடுத்து வந்து திட்டிவாசலுக்கு வெளியே அதை நீட்டி நிமிர்த்தி மேல்விளக்கை அணைத்தான். விளக்கு அணைந்ததும் கழியைக் கையில் வாங்கிக்கொண்ட இதயவர்மன், கழியை உட்புறம் போகவிட்டுத் தானும் திட்டி வாசலுக்குள் நுழைந்து உட்புறம் சென்றதும் திட்டி வாயிற் கதவைச் சாத்தித் தாளிட்டான்.

அவன் ரகசியம், அவன் ஏற்பாடு, அவன் எச்சரிக்கை எல்லாமே வியப்பாயிருந்தன அந்தப் பெண்ணுக்கு. ஆகவே இதயவர்மன் உள்ளே வந்ததும் அவள் கேட்டாள், ''ஏன் இத்தனை மர்மம் இங்கு வர?'' என்று.

சேனாதிபதி ரவிவர்மன் மாளிகைப் பின்கட்டிலிருந்த வெளிவாசல் அது. நடுவேயிருந்த திறந்த வெளியின் தெற்குப் பகுதியில் குதிரை லாயமிருந்தது. அதிலிருந்த பல ஜாதிப்புரவிகள் கால்களை அசைத்ததாலும், வாலைச் சுழற்றித் தட்டியதாலும் ஏற்பட்ட சத்தங்களைத் தவிர அந்தப் பகுதியில் வேறு எந்த ஒலியுமில்லை. மாளிகைக் கடைச் சுவரின் கதவோரம் இருந்த ஒரு விளக்கையும், சுற்றிலுமிருந்த சுவர்களைத் தவிர மேற்கூரையில்லாததால் ஒளிவிட்ட விண்மீன்கள் அளித்த வெளிச்சத்தையும் தவிர வேறு வெளிச்சமில்லாதிருந்தும் அந்தப் பெண்ணின் முகம் மிகவும் அழகாகப் பிரகாசித்ததைக் கண்ட இதயவர்மன் அந்த மலர் முகத்தைத் தன் இரு கைகளாலும் பிடித்து ''ரஞ்சனி'' என்று அன்புடன் அழைத்தான்.

அவள் முகத்தில் அவன் கை வைத்ததை அவள் ஆட்சேபிக்கவில்லை. அந்தக் கைகளிரண்டும் தோள்மீது இறங்கியதும் சற்று அவன் பிடியிலிருந்து விலக முயன்றாள் அப்பெண்.

''ஏன் ரஞ்சனி! என்ன இது புதுமையாயிருக்கிறதே!'' என்றான் இதயவர்மன்.

''புதுமைதான் ஆசிரியரே'' என்றாள் ரஞ்சனி இதழ்களில் புன்முறுவல் கூட்டி.

''புதிர் போடுகிறாயே ரஞ்சனி!'' என்று வினவினான் இதயவர்மன்.

''வாழ்க்கையே ஒரு புதிர் என்று நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே'' என்றாள் ரஞ்சனி.

''நன்றாக வாயாடுகிறாய்'' என்று கன்னத்தை இடித்தான் இதயவர்மன்.

''ஆசிரியன் எவ்வழி அவ்வழி சீடர்கள்'' என்ற அவள், ''ஆசிரியரே! நீங்கள் நாளை முதல் இப்படி வந்து திட்டி வாசலைத் தட்டினால் நான் திறக்கமாட்டேன்'' என்றும் கூறினாள்.

இதயவர்மனுக்கு ஏதும் புரியவில்லை. மூன்று வயதுப் பெண் முதல் தன்னிடம் சர்வசகஜமாகப் பழகிய ரஞ்சனி யின் போக்கில் ஏற்பட்ட திடீர் மாறுதலுக்குக் காரணம் தெரியாததால் அவன் சொன்னான், ''உன் பேச்சு, நடவடிக்கை எல்லாமே புதுமையாயிருக்கிறது ரஞ்சனி'' என்று.

''ஆம் ஆசிரியரே பழமை போய்விட்டது'' என்றாள் அவள்.

''எந்தப் பழமை?'' என்று வினவிய அவன் குரலில் கோபம் துளிர்த்தது.

''உள்ளே வாருங்கள். அம்மாவே சொல்வாள்'' என்று கூறிய ரஞ்சனி அவனுக்கு வழிகாட்டி முன்னால் நடந்து சென்றாள். அவன் உடனே அவளைத் தொடரவில்லை உறுதியாகவும் அழகாகவும் நடந்து சென்ற அவள் கால்களைக் கவனித்துக்கொண்டு சில விநாடிகள் நின்றான். சற்று உயரத் தூக்கிக் கட்டியிருந்த சேலை அவள் நடையில் விசிறிய அழகையும், இடையின் துவளலில் அடிப்பகுதிகள் அசைந்த அழகையும் கைகளை அவள் வீசிச் சென்றதால் தோள்கள் திருப்பித் திருப்பி அசைந்த விந்தையையும் அவன் கண்டான். பல நாட்களாக அவள் விஷம நடையைப் பார்த்திருக்கும் அவனுக்கு அந்த நடையில்கூட ஏதோ புதுமையிருப்பதாகத் தோன்றியது. அது என்ன புதுமை, எது புதுமை என்பதை அறிய முடியாதவனாய் அவளைத் தொடர்ந்து அவனும் நடந்தான்.



அந்தப் புரவிக்கூடத்தின் ஒரு மூலையில் திட்டி வாசலி லிருந்து சில அடிகளே தள்ளியிருந்த சிறு கட்டிடத்தின் கதவைத் திறந்த ரஞ்சனி அங்கிருந்த விளக்கையும் தூண்டி னாள். அந்தச் சிறு விடுதிக்குள் அவளைத் தொடர்ந்து அவனும் சென்றான். அந்த விடுதியிலிருந்த அறைகள் இரண்டே இரண்டு முன்னறையில் இதயவர்மனை உட்காரச் சொன்ன ரஞ்சனி உள்ளறைக்குச் சென்று தன் தாயை எழுப்பிக் கொண்டு வந்து, ''இதோ ஆசிரியர் உன்னை ஏதோ கேட்க வேண்டுமாம்'' என்று கூறி உள்ளறைக்குச் சென்றுவிட்டாள். ரஞ்சனியின் தாய் ஏழ்மையின் இருப்பிடமாக விளங்கினாள். வயது அவளுக்கு ஐம்பதுதானென்றாலும் தலைமயிர் பாதி நரைத்து வயதைச் சற்று அதிகமாகவே காட்டியது. அர்த்த ஜாமத்தையும் தாண்டி தன் இல்லம் வந்த அந்த வீரனை அவள் வியப்புடன் பார்க்கவில்லை. எத்தனையோ முறை அவள் கணவனிருந்த நாட்களிலேயே அவன் அப்படி வந்திருக்கிறான். ''இந்தப் பிள்ளைக்கு இரவு பகல் கிடையாதா?'' என்று அவள் எரிந்து விழுந்த சமயங்கள் உண்டு. அப்பொழுதெல்லாம் அவள் கணவர் சொல்லுவார், ''இந்தப் பிள்ளைக்கும் மனம் வெளுத்த பால். அவனும் நம் பிள்ளைதான்'' என்று. இதயவர்மனுக்குச் சிறுவயதி லிருந்தே குதிரையேற்றம் கற்றுக் கொடுத்தவரும் அவள் கணவர்தான் இப்படி அந்தக் குடும்பத்துடன் ஏற்பட்ட நெருங்கிய நட்பு, நாள் செல்லச் செல்ல அதிக நெருக்க மாகியது. காஞ்சியில் மன்னர் அரண்மனைக்கு அடுத்த படியாக அவனுக்குப் பிடித்த இடம் அவர்கள் குடும்ப மிருந்த இடந்தான். சேனாதிபதி மாளிகையின் குதிரை களைப் பழக்கி வந்த ரஞ்சனியின் தகப்பன் இருந்த காலத் திலேயே அந்த சிறுமிக்கு அவன், தான் அரண்மனையில்

கற்ற பாடங்களைச் சொல்லிக் கொடுத்ததுண்டு. கல்விப் பழக்கத்திலும் விளையாட்டிலும் ஏற்பட்ட அந்த ஒற்றுமை அவர்களுக்குள் வளரவே நாளாவட்டத்தில் ரஞ்சனி அவனை ஆசிரியனென்றே அழைத்து வந்தாள். ஆனால் நாட்கள் ஆக ஆக அவன் பெரியவனாகிப் போர்களுக்குச் சென்று விட்டாலும் அவ்வப்பொழுது தலைநகர் வந்த பொழுதும் ஏதோ ஒவ்வொரு சமயங்களிலேயே வந்து கொண்டிருந்தபடியாலும் அவ்விருவர் சந்திப்பு அடிக்கடி சில மாதங்களுக்குத் தடைப்பட்டு வந்தது. சமீபத்தில் ரஞ்சனியின் தந்தை காலமாகி விடவே மறுபடியும் எப்பொழுதாவது ஒருமுறை அவர்களை வந்து பார்த்துப் போய்க் கொண்டிருந்தான் இதயவர்மன்.

வந்த சமயங்களில் எல்லாம் ரஞ்சனி அவனுடன் சிரித்துப் பேசி விளையாடிக் கொண்டிருந்தாள். சென்ற மாதம் அவன் வந்தபோதுகூட அவள் அப்படித்தான் விளையாடினாள். ஆனால் இந்த முறை அவன் வந்தபோது அவள் போக்கில், பேச்சில், சிரிப்பில், எல்லாவற்றிலும் மாறுதலிருந்ததைக் கவனித்தான் அந்த வாலிபன். தன்னிடமிருந்து அவள் எட்ட விலகுவதாக ஓர் உணர்ச்சி அவன் உள்ளே ஊடுருவிச் சென்றது. ''இந்த ஒரு மாதத்தில் என்ன வந்துவிட்டது இவளுக்கு?'' என்று யோசித்து ஏதும் புரியாமல் குழம்பிய இதயவர்மனை நோக்கிய ரஞ்சனியின் தாய், ''ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரப்பா!'' என்று ஒரு சிறு ஆசனத்தைச் சுட்டிக் காட்டினாள்.

ஏழை வீடாதலால் அங்கு அந்த ஒரு ஆசனமே யிருந்தது ரஞ்சனியின் தாய் அப்படி உபசரித்த பின்பும் உட்காராமலே நின்று கொண்டிருந்த இதயவர்மன் அவளைப் பார்த்துக் கேட்டான், ''அம்மா, எத்தனையோ முறை இங்கு நான் வந்திருக்கிறேன். ரஞ்சனிதான் திட்டி வாசலைத் திறந்து உள்ளே விடுவாள். இன்றும் உள்ளே



விட்டாள். ஆனால் இன்று அவள் வரவேற்பு புதுமையா யிருக்கிறது'' என்று.

அவள் தாய் வருத்தப் புன்முறுவலொன்றை வெளியிட்டாள். அத்துடன் வருத்தம் நிரம்பிய குரலிலும் சொன்னாள்: ''அப்பா! நீ ரஞ்சனியிடம் விளையாடுவதும் சரியல்ல; இங்கு இப்படி வருவதும் சரியல்ல'' என்று.

இதயவர்மன் முகத்தில் வியப்பு நன்றாகப் படர்ந்தது. திட்டிவாசலுக்குள் நுழைந்தது முதலே எல்லாமே வியப்பா யிருந்தது அவனுக்கு ரஞ்சனியின் புதுமைப் புதிர் தன்னை அங்கு வரக்கூடாதென்று அவள் தாய் எச்சரித்தது— எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்த அவன் அரசர் அளித்த அலுவலைவிட இந்த அலுவலில் மர்மம் அதிகமா யிருப்பதை நினைத்து, ''உண்மையாக நான் இங்கு வருவதை நீங்கள் விரும்பவில்லையா?'' என்று வினவினான்.

''என் விருப்பமோ ரஞ்சனி விருப்பமோ இதில் முக்கியமல்ல'' என்றாள் ரஞ்சனியின் தாய்.

''வேறு யார் விருப்பம் முக்கியம்?'' இதைக் கேட்ட இதயவர்மன் குரலில் சற்றுக் கடுமை தெரிந்தது.

''இந்த வீட்டுக்குடையவர்கள், எதிர் வீடுகளிலிருப்ப வர்கள், இவர்கள் எதை அனுமதிப்பார்கள் என்பது முக்கியம்?''

''அவர்கள் யார் அனுமதிப்பதற்கு?''

''உலகத்தவர்.''

''உலகத்தவர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''நாம் உலகத்தில்தானே வாழ்கிறோம்.''

''அதனால்?''

''உலகத்தின் நியதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். வயது வந்த பெண்ணுடன் ஒரு வாலிபன் பழகுவதை உலகம் விரும்பாது. இந்த வார்த்தைகளை மெள்ளவும்,

தலையை நிலத்தில் தாழ்த்தியும் உச்சரித்தாள் ரஞ்சனியின் தாய்.

இதயவர்மன் மனம் திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. "அப்படியானால்...... ரஞ்சனி......" என்று அவன் உதடுகள் குளறின.

"போன மாதம்..."

"அப்படியா!"

"உம் உம்."

இதைக் கேட்ட இதயவர்மன் இதயம் ஆனந்தத்தால் துள்ளியதா? வியப்பால் மலர்ந்ததா? திகைப்பால் திடுதிடு வென்று அடித்துக் கொண்டதா? ஏதும் புரியாத உணர்ச்சிகள் அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டன. பருவமடைந்த ரஞ்சனியைத் தான் சற்று முன்பு பிடித்து அழகு பார்த்ததை எண்ணி உவகையும் உதறலும் ஒருங்கே கொண்டான் அந்த வாலிபன். அவன் கண்கள் அந்தத் தாய் எதிரில் நின்ற சமயத்திலும் உள்ளறையை நோக்கின. அந்த அறை வாயிற்படியில் அரைவாசி ஒளிந்து நின்று விஷமமும் வெட்கமும் நிறைந்த பார்வையொன்றை அவன்மீது வீசினாள் ரஞ்சனி. அவள் இனித் தன் எதிரில் வரமாட்டாள் என்று நினைத்து ஒரு பெருமூச்சுவிட்டான் இதயவர்மன். ஆனால் அடுத்த வினாடி இதயவர்மனோ அவன் தாயோ எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. உள்ளறையிலிருந்து மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்த ரஞ்சனி இதயவர்மனைக் கையால் பிடித்து ஒருபுறம் தள்ளி முன்னறையின் விளக்கை 'உப்'பென்று வாயால் ஊதி அணைத்தான்.

அத்தியாயம் 12

## சேனாதிபதியின் உபதேசம்

தான் பருவம் எய்திவிட்டதைச் சொல்ல வெட்கப் பட்டு உள்ளறைக்கு ஓடித் தன் தாயை அனுப்பிய ரஞ்சனி திடீரென்று வெட்கத்தை உதறி மின்னல் போல் முன் அறைக்கு ஓடி வந்ததும், விளக்கை சட்டென்று ஊதித் தன்னையும் ஒருபுறமாகப் பிடித்துத் தள்ளியதும் சிறிதும் விந்தையாயில்லை இதயவர்மனுக்கு. சேனாதிபதி மாளிகை யில் சில தினங்களாகவே விசித்திர விருந்துகளும் சம்பவங் களும் நடந்து வருவதையும், அது சதிக்கூடமாக மாறி விட்டதையும் பல்லவ சக்கரவர்த்தியின் வாயிலாக மட்டு மின்றித் தானே நேரிடையாகவும் அறிந்திருந்ததால், அந்தச் சமயத்திலும் ஏதோ ஒரு முக்கிய நிகழ்ச்சி ஏற்பட்டு விட்டது என்ற முடிவுக்கு வந்தான் அந்த வாலிப வீரன். ஆகவே ரஞ்சனி பிடித்துத் தள்ளியதும் கதவு மூலையில் சட்டென்று மறைந்து கதவைச் சற்று ஒருக்களித்து வைத்தான். "வேண்டாம், நன்றாகச் சாத்திவிடுங்கள். இந்தப் புறம் சாளரமிருக்கிறது" என்று பக்கத்தில் இருந்த சாளரமொன்றைச் சுட்டிக் காட்டினாள் ரஞ்சனி. அவள் எச்சரிக்கைப்படி அவன் கதவைச் சாத்தியதும் அதைத் தாழிட்ட அந்தப் பெண் உள்ளறைக்குச் சென்று ஒரு பாயை எடுத்து வந்து போட்டு, "அம்மா, இதில் படுத்துக் கொள். மூச்சு விடாதே" என்று தாய்க்கும் கட்டளை யிட்டாள். தாய் அவள் சொன்னதற்கு மறுப்பு ஏதும் சொல்லாமல் படுத்துக் கொண்டதைக் கண்ட இதயவர்மன், மாளிகையின் அந்தப் பகுதியில் ஏதோ விசேஷம் அடிக்கடி நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அடுத்தபடி இதயவர்மன் கையைப் பிடித்த ரஞ்சனி, "ஆசிரியரே! நீங்கள் உள்ளறைக்குச் சென்று கதவின் மறைவில் நில்லுங்கள் இந்தச் சாளரத்தை நான் திறந்து வைக்கி றேன் நடப்பது அனைத்தையும் நீங்கள் அங்கிருந்தே பார்க்கலாம். யார் இங்கு வந்து எதைச் செய்தாலும் நீங்கள் மறைவிலிருந்து வெளிவர வேண்டாம் எது செய்தாலும் வெளிவர வேண்டாம் புரிகிறதா?" என்று

எது செய்தாலும் என்பதை ஒருமுறைக்கிருமுறையாக வலியுறுத்திச் சொல்லி அவளை உள்ளறைக்கு அனுப்பினான்.

ரஞ்சனியின் செய்கைகள், சொற்கள் எல்லாமே கவலையை ஊட்டின இதயவர்மனுக்கு. அடிக்கடி அந்தக் குதிரைக் கொட்டடி வெளி முற்றத்தில் ஏதோ நிகழ்ச்சிகள் ஏற்படுவதையும், அந்த நிகழ்ச்சிகள் ரஞ்சனியையும் அவள் தாயாரையும்கூட பெரிதும் பாதிப்பதையும் உணர்ந்து கொண்டான் அவன். ஆனால் பெரிய அரசியல் சதி நடக்கும் அந்தப் பெருமாளிகையில் இந்த ஏழைகளை என்ன விஷயம் பாதிக்க முடியும என்பதை அறியாததால் அந்த மர்மத்தை உடைக்கவும் அந்தக் குடும்பத்தை எப்படியும் காப்பாற்றவும் உள்ளூர ஆணையிட்டுக் கொண்ட இதயவர்மன் உள்ளறையிலிருந்து எதிரே தூரத்தில் தெரிந்த குதிரைக் கொட்டடியையும், அதற்கும் அந்தச் சிறு வீட்டுக்குமிடையே இருந்த பெரும் வெளி முற்றத்தையும் வைத்த கண் வாங்காமல் நோக்கிக் கொண்டிருந்தான் தாயைப் படுக்க வைத்த ரஞ்சனி தான் மட்டும் படுக்காமல் சாளரத்தின் ஒருபுறமாக மறைந்து நின்று வெளி முற்றத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

விநாடிகள் பல சென்றும் எதிரேயிருந்த வெளிமுற்றத்தில் யார் நடமாட்டமுமில்லை, வெளிச்சமுமில்லை. வீண் கிலியால் ரஞ்சனி அப்படித் தன்னையும் தன் தாயையும் எச்சரித்து விட்டாளோ என்றுகூட இதயவர்மன் எண்ணினான் ஆனால் சிறிது நேரம் கழித்த பின்பு, தான் பார்க்க வேண்டிய இடம் வேறு என்பதைப் புரிந்து கொண்டான். வெளி முற்றத்தின் கோடியிலிருந்த சுவரை ஒட்டி எழுந்திருந்த ஒரு அறையில் ஒரு விளக்கு இப்படியும் அப்படியும் அசைவது தெரிந்தது பிறகு அந்த விளக்கு உப்பரிகைப் படிகளில் இறங்கி வந்தது விளக்கைப் பிடித்திருந்தவன் அதை உயரத் தூக்கிப் பிடித்திருந்ததால் அவன் முகம் தெரியவில்லையே தவிர,



அவனைத் தொடர்ந்து வந்தவனை இதயவர்மனால் ஓரளவு பார்க்க முடிந்தது. விளக்கின் ஒளியில் வந்தவன் மிக உயரமாக இருந்தான். அவன் நடையும் பார்வையும் பல போர்களைக் கண்ட ராணுவத் தலைவன் பார்வை போலும் நடைபோலும் இருந்தன. பார்வை, நடை இரண்டிலுமே ஒரு கம்பீரம் நிலவியிருந்தது.

மிக நிதானமாகவும் அலட்சியமாகவும் உறுதியுடனும் அவன் நடந்து படிகளில் இறங்கினான். விளக்கை ஏந்தி வந்தவனும் பின்னால் வந்த பெருமானும் படிகளில் இறங்கிச் சுவரருகே வந்ததும் விளக்கு ஒரு விநாடி மறைந்தது. பிறகு கோடிக் கதவு திறக்கப்பட்டு மாளிகையிலிருந்து இருவரும் வெளி முற்றத்துக்கு வந்து சேர்ந்தார்கள். வெளி முற்றத்தை அடைந்ததும் அந்த இருவர் முகத்தையுமே நன்றாகப் பார்க்க முடிந்தது இதயவர்மனால். விளக்கை ஏந்தி நின்றவன் சேனாதிபதி ரவிவர்மன் என்பதைப் புரிந்துகொண்டதும் பெரு வியப்பெய்திய இதயவர்மன், அவனுடன் கூடவந்து வெளி முற்றத்தில் நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்த அந்த இன்னொரு பெருமகனைப் பார்த்ததும் அவனை யாரென்று அடையாளம் புரிந்துகொள்ள முடியாமல் சற்றுக் குழம்பவும் செய்தான் பணியாட்கள் ஏந்தி வரவேண்டிய விளக்கை ரவிவர்மன் ஏந்தி வந்ததும் அவனுடன் கூடவந்தவன் ஏதோ அதிகாரத் தோரணையில் சேனாதிபதியுடன் பேசியதையும் கண்ட இதயவர்மன் உற்று அவர்களைப் பார்த்துக்கொண்டே உள்ளறையில் நின்றான்.

சேனாதிபதியுடன் வந்தவன் சேனாதிபதியைத் துரும்பென மதித்து மேலும் கீழும் கை ஆட்டி மிக அலட்சியமாக ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். சேனாதிபதி மிகவும் பணிவுடன் அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். வந்தவனின் முகம் வெளி முற்றத்தில் நன்றாகத் தெரிந்ததால் அவன் பல்லவ காஞ்சி

யைச் சேர்ந்தவன் அல்லவென்பதையும் ராஜ்ய ரகசியமென் பதையும் புரிந்துகொண்டான் இதயவர்மன். காஞ்சி மன்னனின் மாமனை அவன் நன்றாக அறிந்திருந்தானா தலால் வெளிமுற்றத்தில் நின்றவன் மன்னனின் மாமனல்ல வென்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான். ஆனால் 'இவன் யார்? காஞ்சிக்கு எப்போது வந்தான்? சேனாதிபதி மாளிகையில் எதற்குத் தங்குகிறான்? நள்ளிரவு நகர்ந்து விட்ட இந்தச் சமயத்தில் எதற்காகச் சேனாதிபதியுடன் இந்த வெளிமுற்றத்திற்கு வந்திருக்கிறான்? இங்கு என்ன பேசுகிறார்கள் இருவரும்? பேசுவதை உள்ளேயே பேசினால் என்ன?' என்ற பலவிதக் கேள்விகளை இதய வர்மன் மனம் கேட்டுக்கொண்டிருந்ததேயொழிய விடை ஏதும் கிடைக்கவில்லை அவனுக்கு. ஆகவே, அடுத்து எதுவும் யோசிக்காமல் வெளியே நடப்பதை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தான். சேனாதிபதியும் அந்த மனிதனும் பெரு உணர்ச்சியுடன் ஏதேதோ நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் அந்த மனிதன் குரல் சற்றுப் பெரிதாகவும் கோபமாகவும்கூடக் கிளம்பியது. கடைசியில் சேனாதிபதி விளக்கை ஏந்தாத கையை ரஞ்சனியின் வீட்டை நோக்கி நீட்டினான். பிறகு அந்த இருவரும் அந்தச் சிறு வீட்டை நோக்கி வந்தார்கள்.

விளக்கு வீட்டை நோக்கி நகரத் துவங்கியதுமே ரஞ்சனி எச்சரிக்கைப் பார்வையொன்றை உள்ளறையை நோக்கி வீசி விட்டுக் கதவுத் தாள் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத் தனது தாயின் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். சில விநாடிகளில் அந்தக் கதவு சற்று அதிகாரத்துடன், ஆனால் மெதுவாகத் தட்டப்பட்டதன்றி அதைத் தொடர்ந்து, "ரஞ்சனி! ரஞ்சனி!" என்று அதட்டலான சேனாதிபதியின் குரலும் கேட்டது. முதல் இரண்டு குரல்களுக்கு ரஞ்சனி பதில் கொடுக்காமல் போகவே மீண்டும் சேனாதிபதி சற்றுக் கடுமையாகக் குரல் கொடுத்தான். அந்தக் குரலைக் கேட்டதும், "எசமான், இதோ



வந்துவிட்டேன்" என்று பதில் குரல் கொடுத்த ரஞ்சனி, வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து கதவைத் திறந்து அரைவாசி ஒருக்களித்துத் தன்னை மறைத்துக்கொண்டு நின்றாள்.

"கதவைத் திற ரஞ்சனி! நாங்கள் உள்ளே வர வேண்டும்" என்றான் சேனாதிபதி அதட்டலாக.

"அம்மா படுத்திருக்கிறாள்" என்று ரஞ்சனி கொஞ்சும் குரலில் கூறினாள்.

"எழுந்திருக்கச் சொல்" என்றது சேனாதிபதியின் குரல்.

"சற்று இருங்கள்" என்ற ரஞ்சனி, "அம்மா! அம்மா!" என்று தன் தாயாரை அசக்கி அசக்கி எழுப்பினாள்.

அவள் தாயும் முக்கி முனகிக்கொண்டு எழுந்திருந்து, "உனக்குத் தூக்கம் வரவில்லையென்றால் என்னை ஏன் எழுப்புகிறாய்?" என்று எரிந்து விழுந்தாள்.

"எழுந்திரம்மா! எசமான் வந்திருக்கிறார்!" என்று அதட்டினாள் ரஞ்சனி

இந்த நாடகத்தின் கடைசிக் கட்டமாக அவள் தாய் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருந்ததும், "நீ உள்ளறையில் வழக்கம்போல் படுத்துக்கொள்" என்று தாய்க்கு உத்தரவிட்ட ரஞ்சனி, தாயார் உள்ளறைக்குச் சென்றதும் கதவை நன்றாகத் திறந்துவிட்டாள். சேனாதிபதியும் அந்த மனிதனும் உள்ளே வந்ததும் சாளரத்தில் தீபத்தை வைத்த சேனாதிபதி, "ரஞ்சனி! யாருக்கும் கிடைக்காத பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது. அன்று ஒருவரை உனக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன் நினைப்பிருக்கிறதா? அவரைவிடப் பெரியவர் இவர்" என்று தன்னைத் தொடர்ந்து உள்ளே வந்தவரை அறிமுகப்படுத்தினான் ரவிவர்மன்.

ரஞ்சனி அந்த மனிதனை வியப்பு நிரம்பிய விழிகளுடன் பார்த்தான். "அப்படியானால் இவரும்...!" என்று இழுத்தான் பரிவாரதையுடன்.

"மன்னருக்கு உறவினர்" என்றான் சேனாதிபதி ரவிவர்மன்.

"அன்று வந்தவர்?" என்று வினவினான் ரஞ்சனி.

"ஊருக்குப் போய்விட்டார்" என்ற சேனாதிபதியின் குரலில் கடுமை இருந்தது. அவன் கேட்கக் கூடாத எதையோ கேட்டு விட்டதுபோல் முகத்தையும் சுளித்தான் சேனாதிபதி.

ரஞ்சனி சற்றுப் பயப்படுவதாகப் பாசாங்கு செய்தான். "எசமான் கோபிக்கக்கூடாது. எனக்கு இந்த விஷயங்கள் அதிகமாகத் தெரியாது" என்றும் சொன்னான்.

"அதிகமாகத் தெரியாதது உனக்கே நல்லது" என்றான் சேனாதிபதி.

"ஆம் எசமான்."

"உனக்கு அதிகமாக எதுவும் தெரியாததால்தான் உன் வீட்டுக்கு இவர்களை அழைத்து வருகிறேன், சில நாழிகைகள் தங்க."

"ஆமாம் எசமான்."

"என்று நீ இந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறாயோ, என்று நீ இவற்றில் அளவுக்கு மீறிய சிரத்தை காட்டுகிறாயோ அன்று உன்னைக் கொல்ல நான் தயங்கமாட்டேன்."

"இதைத்தான் அடிக்கடி சொல்லுகிறீர்களே எசமான்."



"அது மட்டுமல்ல ரஞ்சனி! உன் தாயையும் ஒழித்து விடுவேன்."

"இதையும் ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள்."

"திரும்பத் திரும்ப ஏன் சொல்லுகிறேன் தெரியுமா?"

"சொல்லுங்கள் எசமான்."

"விஷயம் எத்தனை ரகசியமாக இருக்கவேண்டு மென்பதை உன் புத்தியில் உறைக்கச் செய்யச் சொல்லு கிறேன். அது கிடக்கட்டும். அவன் சமீபத்தில் இங்கு வந்தானா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் ரஞ்சனியின் இதயம் திக்கு திக்கென்று அடித்துக் கொண்டது. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல், "யார் எசமான்?" என்று வினவினான்.

ரவிவர்மன் சொன்ன பதில் அவனைத் தூக்கிப் போட வில்லையே தவிர இதயவர்மனை ஒரு உலுக்கு உலுக்கியது. "அவன்தான் அந்த அதிகப்பிரசங்கி" என்றான் ரவிவர்மன்.

"புரியவில்லையே எனக்கு" என்றான் ரஞ்சனி.

"என்னடி பசப்புகிறாய்! அவன்தானடி, அரண்மனை யில் ஒரு குரங்கு இருக்கிறானே, இதயவர்மன், மன்னனின் செல்லப்பிள்ளை" என்ற சேனாதிபதி, "அவன் உன் ஆசிரியனாயிற்றே" என்றும் கூறி அவளை உற்று நோக்கினான்.

ரஞ்சனி தனது நடிப்புத் திறமையைப் பூர்ணமாகக் காட்டினான். "ஒரு மாதமாக வரவில்லை" என்றான் வருத்தத்துடன்.

"ஒரு மாதமாகவா!" ரவிவர்மன் கேள்வியில் வியப்பு, சந்துஷ்டி இரண்டும் இருந்தது.

''இனி அவர் இங்கு வரவும் முடியாது.'' இம்முறை ரஞ்சனியின் குரலில் வருத்தம், வெட்கம் இரண்டும் கலந்திருந்தன.

''ஏன்?''

''என் தாயார் அவர் வரவை விரும்பவில்லை.''

''ஏன்?''

''தாய்தான சொல்ல முடியும். வயது வந்த பெண்கள் ஆண்களுடன் பழகக்கூடாது என்று ஏதேதோ சொல்கிறாள்'' என்ற ரஞ்சனி நிலத்தில் கண்களைத் தாழ்த்தினாள்.

ரவிவர்மன் மிகுந்த மகிழ்ச்சியைக் காட்டினான். ''மிக நல்லது. இதயவர்மன் வடிகட்டின அயோக்கியன். அவன் உறவை முறித்துக்கொள்வதுதான் நல்லது. உன் தாயின் உத்தரவை மீறி அவன் வந்தால் என்னிடம் சொல் அவனையும் இந்த வெளி முற்றத்தில் பலி கொடுத்து விடுகிறேன்,'' என்ற ரவிவர்வன் குரலில் மகிழ்ச்சியுடன் குரூரமும் நிலவியது. அதற்கு மேல் ரவிவர்மன் ஏதும் பேசாமல் தன்னுடன் வந்த பெருமகனை அங்கிருந்த ஆசனத்தில் உட்கார வைத்துவிட்டு, ''சற்று இருங்கள்! வரலாமா என்று கேட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

வந்தவன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித்தவண்ணமிருந்தான். நாழிகைகள் ஓடின. சேனாதிபதி மட்டும் திரும்பவில்லை. மெள்ள மெள்ள இதயத்தில் பெரும் பயம் சூழ்ந்ததை ரஞ்சனியின் முகம் காட்டியது.

அத்தியாயம் 13

## அபாயத்துக்கிடையே ஆசைக்கனவுகள்!

ராஷ்டிரகூடப் பெருமகனொருவனை ரஞ்சனி வீட்டிலிருந்த ஒரே ஒரு ஆசனத்தில் உட்கார வைத்துவிட்டு ''சற்று இருங்கள், வரலாமா என்று கேட்டு வருகிறேன்'' எனக் கூறி வெளியே சென்ற சேனாதிபதி, பல நாழிகைகள் ஓடிய பின்பும் திரும்பாதது ரஞ்சனிக்குப் பயத்தையும், ஆசனத்திலமர்ந்தவனுக்குச் சற்று சங்கடத்தையும், உள்ளறையில் கதவு மறைவிலிருந்த இதயவர்மனுக்கு அடுத்து என்ன நடக்கும்?' என்ற எதிர்பார்ப்பையும் அளிக்கவே அந்த மூவரும் வெவ்வேறு மனநிலையில் இருந்தனர். ஆனால், வெவ்வேறு மனநிலையிலிருந்த மூவரும் பெரும் உரமான நெஞ்சம் படைத்தவர்களென்பதையும் அவர்கள் உள்ளங்கள் காட்டின. மூவரில் சேனாதிபதியின் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டிருந்த இதயவர்மன் நெஞ்சத்தில் எதையும் சமாளிக்க முடியும் என்ற துணிவு இருந்ததால் சேனாதிபதியைப் பற்றி அவன் அதிகம் கவலை கொள்ளாமல் சேனாதிபதி போன வழி, முறை, இவற்றைப் பற்றி மட்டும் சிந்தித்தான். ரஞ்சனியின் வீட்டிலிருந்து கையில் விளக்குடன் கிளம்பிய சேனாதிபதி வெளியே சென்றதும் புரவிக்கூட வெளி முற்றத்தின் கடைச் சுவரிலிருந்த விளக்கை வாயால் ஊதிவிட்டுப் புரவிகள் கொட்டடியை நோக்கிச் சென்றதையும் பிறகு சேனாதிபதி ஏந்திய விளக்கு மெள்ள மெள்ளப் பாதாளத்தில் இறங்கி மறைந்து விட்டதையும் கவனித்த இதயவர்மன், புரவிக் கொட்டடியின் பக்கத்தில் ஏதோ ஒரு நிலவறை இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். எத்தனையோ முறை தான் அங்கு புரவிப் பயிற்சிக்கு வந்திருந்தும் எத்தனையோ முறை எத்தனையோ நாழிகைகள் அதே கொட்டடியில் கழித்திருந்தும் தனது கண்களுக்கு மட்டும் அந்த அறை எப்படித் தெரியாது போயிற்று என்று வியப்படைந்த இதயவர்மன், ''இந்த சூட்சுமத்தை இன்று எப்படியும் அறிந்துவிடுகிறேன்'' என்று தனக்குள்

சொல்லிக் கொண்டான். எதை அறிலதானாலும் சேனாதிபதி வந்துபோன பிறகுதான் அது சாத்தியம் என்பதை உணர்ந்து கொண்டதால் அந்த வாலிபன் வெளி முற்றத்திலேயே கண்ணை நாட்டி நின்று கொண்டிருந்தான்.

நாழிகைகள் பல ஓடியும் சேனாதிபதி வராததால் மெள்ள மெள்ள நிதானத்தை இழக்கத் தொடங்கிய ராஷ்டிரகூடப் பெருமகன் எதிரே பயத்துடன் நின்றிருந்த ரஞ்சனியை, ''பெண்ணே!'' என்று அதட்டி அழைத்தான்.

ரஞ்சனியின் இதயத்தில் மீண்டும் பயம் சூழ்ந்தது. ஏற்கெனவே இரண்டு முறை நடந்துவிட்ட சம்பவம் மட்டும் மறுபடியும் அன்று நடக்குமானால் ஏற்படக்கூடிய விளைவுகள் பெரும் விபரீதமென்பதைப் புரிந்துகொண்டிருந்த ரஞ்சனி உள்ளறையை நோக்கி அச்சத்துடன் கண்களைத் திருப்பினாள்.

''அங்கு என்னடி பார்க்கிறாய்? நான் கேட்பது உன் காதில் விழவில்லை!'' என்று சீறினான் ராஷ்டிரகூடன்.

ராஷ்டிரகூடனின் அவமரியாதை சொட்டிய குரல், ஆணவம் மிகுந்த சொற்கள் இவற்றால் விளையக்கூடிய விபரீதத்தை எண்ணியதாலோ என்னவோ ரஞ்சனி சட்டென்று பார்வையை ராஷ்டிரகூடன்மீது திருப்பி, ''எசமான் என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினாள்.

ராஷ்டிரகூடன் அவளைச் சில விநாடிகள் வெறுப்புடன் நோக்கினான். பிறகு அருகில் வரச்சொல்லி அவள் வலது கரத்தை அழுத்திப் பிடித்து, ''அவன் ஏன் இன்னும் வரவில்லை?'' என்று சீற்றம் ததும்பிய குரலில் கேட்டான்.

''யாரைச் சொல்கிறீர்கள் எசமான்?'' என்றாள் ரஞ்சனி ஏதும் புரியாததுபோல்.

''அவன்தான் சேனாதிபதி.'' இம்முறை ராஷ்டிரகூடன் குரலில் வெறுப்பு இருந்தது.



''சேனாதிபதியவர்கள் ஏன், வரவில்லையென்பது எனக்கு எப்படித் தெரியும் எசமான்?'' என்று வினவினாள் ரஞ்சனி.

''உனக்கு எதுவுமே தெரியாதா?''

''எது எசமான்?''

''இங்கு நடப்பது?''

''என்ன நடக்கிறது எசமான்?''

''உண்மையாகத்தான் உனக்குத் தெரியாதா? எதைக் கேட்டாலும் வாயை மூடச்சொல்லி உனக்குச் சேனாதிபதி உத்தரவா?''

''நீங்கள் சொல்வது என்னவென்றே எனக்குத் தெரியவில்லையே!''

இதைக் கேட்ட ராஷ்டிரகூடன் வெகுண்டு ஆசனத்திலிருந்து எழுந்தான். ''பெண்ணே, என்னைப் பார்த்தால் யார் என்று தெரிகிறதல்லவா?'' என்று வினவினான், புயலுக்கு முன் நிலவும் அமைதியைக் காட்டி.

''பெருங்குடி மகன் தாங்கள் என்பது மட்டும் புரிகிறது'' என்றாள் ரஞ்சனி.

''மகிழ்ச்சி. அத்துடன் ராஷ்டிரகூடன் என்பது புரிகிறதல்லவா?'' என்ற அந்தப் பெருமகனின் பெரு விழிகள் அவள் முகத்தை ஆராய்ந்தன.

''ஆம்'' என்ற ரஞ்சனியின் குரல் உணர்ச்சியின்றி ஒலித்தது.

''என்னைப் போன்ற ராஷ்டிரகூடன் இஷ்டப்பட்டால் அரண்மனையில் நேரில் போய்த் தங்கலாம்...''

''ஆம்.''

''ஆனால் இந்தப் புரவிக்கூடத்துக்கு வருகிறேன்,...''

''ஆம், எசமான்.''

''புரவிகள் சாணத்தால் துர்நாற்றமெடுக்கும் இந்தச் சிறு அறையில் உட்கார்ந்திருக்கிறேன்...''

''ஆம் எசமான்.''

''அதுவும் சேனாதிபதியுடன் ரகசியமாக வருகிறேன்.''

''ஆம், எசமான்.''

''இதெல்லாம் உனக்கு வியப்பாயிருக்கவேண்டும்.''

''உண்மை.''

''ஆனால் சர்வ சாதாரணமாயிருக்கிறாய். பெண்ணே, இந்த வேஷமெல்லாம் என்னிடம் போடாதே. குதிரைக் கொட்டடிக்குப் போன சேனாதிபதி என்ன ஆனான்? இங்கு நடக்கும் விஷயமெல்லாம் உனக்குத் தெரியும். சொல்லிவிடு'' என்றான் ராஷ்டிரகூடன் கடுங்குரலில்.

ரஞ்சனியின் முகத்தில் மெள்ள மெள்ள அச்சம் பரவலாயிற்று. ''எசமான், இங்கு நடக்கும் விஷயங்கள் எதுவுமே எனக்குத் தெரியாது. என் தாய்க்குத் தெரியாது. சேனாதிபதியவர்கள் சில நாட்களாகத் தங்களைப் போல் இரண்டொருவர்களை அழைத்து வந்திருக்கிறார்கள். அவர்களையும் இப்படித்தான் உட்கார வைத்துவிட்டுப் போவார்கள். அவர்களை எதையும் விசாரிக்கவோ, அவர்களுடன் எவ்விஷயமும் பேசவோ கூடாதென்று சேனாதிபதியவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். வந்தவர்களை உபசரிக்க வேண்டிய வேலை எங்களுடையது. வேறு எதிலாவது தலையிட்டால் ஒழித்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார். சேனாதிபதி சொன்ன சொல் தவறாதவர்'' என்றாள் ரஞ்சனி.

''எங்களை உபசரிக்க உங்களை வைத்திருக்கிறானா சேனாதிபதி?'' என்று சீறினான் ராஷ்டிரகூடன்.

''ஆம்.''

''நள்ளிரவில் என்ன உபசாரம் செய்யமுடியும்?''

இதைக் கேட்ட ரஞ்சனியின் உடல் நடுங்கியது. ''சிலர் நள்ளிரவுக்கு முந்திகூட வந்திருக்கிறார்கள். சிலர் உண்ணாமல் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பால்



காய்ச்சிக் கொடுக்க எசமான் கட்டளையிட்டிருக்கிறார்'' என்று ரஞ்சனி கூறினாள்.

ராஷ்டிரகூடன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான். சில விநாடிகள் அந்தச் சிறு அறையில் அப்படியும் இப்படியும் உலாவினான். பிறகு ரஞ்சனியை நோக்கி, ''வா என்னுடன், சேனாதிபதியைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றான்.

ரஞ்சனி ஒரு துள்ளு துள்ளிக் கதவை மறைத்துக் கொண்டு நின்று, ''பிரபு, கூடாது; சேனாதிபதி அவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதி அளிக்க முடியாது'' என்று பதற்றத்துடன் சொன்னாள். அவள் முகத்தில் கிலி பரவிக் கிடந்தது. பெருமூச்சால் மார்பகம் எழுந்து எழுந்து தாழ்ந்தது.

இந்த நிலையில் ரஞ்சனி எத்தனை அழகாயிருந்தாளென்பதை உள்ளறையிலிருந்து கவனித்த இதயவர்மன் உவகை கொண்டானானாலும் அவள் அழகைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத ராஷ்டிரகூடன், ''பெண்ணே! வழியை விடு. என் கோபத்துக்கு ஆளாகாதே. உன் சேனாதிபதிக்காகக் காத்திருக்க நான் வரவில்லை. நான் வந்தது...'' என்று சொல்லிக் கொண்டே போனவன் தான் அத்துமீறிப் பேசிவிட்டதை நினைத்து மீதி வார்த்தைகளை விழுங்கிவிட்டான்.

ஆனால், ரஞ்சனி விடவில்லை. தாங்கள் வந்தது?'' என்று விவரம் அறிய வினாவொன்றை விடுத்தாள்.

''அதைப் பற்றி அக்கறையில்லை'' என்ற ராஷ்டிரகூடன் அதற்குமேல் ஏதும் பேசாமல் ரஞ்சனியின் ஒரு கையைப் பிடித்து அலட்சியமாக அவளை அறையின் குறுக்கே வீசியெறிந்துவிட்டுக் கதவைத் திறந்துகொண்டு கடுங்கோபத்துடன் வெளியே சென்றான். அறை நடுவே கீழே விழுந்த ரஞ்சனி சட்டென்று எழுந்திருந்து அவனுடன் வெளியே ஓட முயன்றாள். ஆனால் அதற்குள் உள்ளறையிலிருந்து வந்த இதயவர்மன் அவள் கையை இறுகப் பிடித்து

நிறுத்தி அவளைத் தன்மீது பலவந்தமாகச் சாத்திக் கொண்டு, ''உஷ்! ரஞ்சனி! உன் சக்தியை மீறிய முயற்சிகளில் இறங்காதே'' என்று அவள் காதுக்கருகில் ரகசியமாகக் கூறினான்.

ரஞ்சனியின் வலது கையைப் பிடித்து அவள் உடலைத் தன்மீது சாய்த்து இறுக்கிப் பிடித்துக்கொண்ட அந்தச் சில விநாடிகளில் அபாயத்தையறவே மறந்தான் இதயவர்மன். அவனுக்குப் பின்புறத்திலிருந்த அவள் உடலில் ஏதேதோ உணர்ச்சிகள் பாய்ந்து அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. உள்ளறையில் அவள் தாய் படுத்துக் கொண்டிருந்ததால் மிகுந்த எச்சரிக்கையுடன் அவளுடன் நின்ற நிலையில் இருந்தபோதிலும் அவள் வலது கரத்தை அவன் வலக்கையும் இடது தோளை இடக்கரமும் பற்றி நின்றதைத் தவிர, கைகளைச் சிறிதும் நகர்த்தாதிருந்த போதிலும் அவள் முதுகுப்புறம் அவன் உடலில் சாய்ந்திருந்ததே பெரும் இன்ப வேதனையைத் தந்தது இதயவர்மனுக்கு. அவன் ரகசியமாக அவள் காதில் பேசக் குனிந்தபோது அவள் கன்னம் அவன் கன்னத்துடன் அகஸ்மாத்தாகப் பட்டுவிட்டதுகூட அவனைச் சுய நிலையில் வைக்கவில்லை.

ரஞ்சனியின் நிலை அவன் நிலையைவிட மோசமாயிருந்தது. அவள் முதுகுப்புறத்தில் நின்ற அந்த ஆண்மகன் உடலின் ஸ்பரிசம் அவளுக்கு விவரிக்க இயலாத வேதனையைத் தந்தது. கடந்த மாதங்களில் பலமுறை அவளை அவன் முரட்டுத்தனமாகக் கட்டிப் பிடித்து விளையாடியிருந்தாலும் பருவமடைந்த பின் அவன் அவளை அப்படித் தொடுவது அதுதான் முதல் தடவை. திட்டிக் கதவு திறந்து உள்ளே வந்ததும் அவன் தனது தோளில் கை வைத்ததையே ஆட்சேபித்த ரஞ்சனி, அவன் தன் பின்புறம் நின்று தன்னை இறுக்கிப்பிடித்து உடலுடன் உடலுராய அந்த வேளையில் இன்பத்தால் மட்டுமன்றி, காரணம் சொல்ல முடியாத பயத்தாலும் வெலவெலத்துப்



போனாள். தாயார் உள்ளறையிலும் இருக்கிறாளே என்ற நினைப்பின் பயமல்ல அது. எந்த ஆண் மகனுடனும் தனியே இருக்கும்போது இயற்கை அளிக்கும் பயம் அது. அது பெண்களுக்குப் பெரும் கவசம். அந்தக் கவசமும் சில சமயங்களில் உடையவே செய்கிறது. அத்தகைய சமயம் அவ்விருவருக்கும் நெருங்கி வந்து கொண்டுமிருந்தது.

ரஞ்சனி மட்டுமல்ல, எதையும் எச்சரிக்கையுடன் நோக்கும் இதயவர்மன்கூட சற்று எச்சரிக்கையைக் கைவிட்டதால் அந்தச் சில விநாடிகளில் உள்ளே ரஞ்சனியின் தாயார் இருக்கிறாள் என்பதையும் மறந்து தன் தலையைத் தாழ்த்தி அவள் தோளில் முகவாய்க்கட்டையைத் தாங்கவைத்துக் கொண்டு கன்னத்துடன் கன்னத்தை ஒருமுறை இழைத்தான். அவள் குழல்கள் அவன் கழுத்தில் உராய்ந்தன. அவன் இடது கை அவள் தோளைவிட்டு இறங்கி இடையைச் சுற்றி வளைத்து முன்புறம் சென்றதன்றி வலது கையும் கீழிறங்கி இடது கையுடன் பிணைந்தது. இரு கைகளும் நெருங்கியதால் ஏற்பட்ட அந்த வளையத்தில் ரஞ்சனி மெள்ள இருமுறை அசைந்தாள் அசைவுகள் அத்தனைப் பெரிய சொர்க்க சுகத்தை அளிக்க முடியுமென்று அந்த விநாடிவரை இதயவர்மன் நினைக்கவில்லை உழைப்பினால் உறுதிப்பட்டிருந்த ரஞ்சனியின் தேகம் சில சில சமயங்களில் தாமரை மலராக மாறமுடியும் என்பதும் அவனுக்கு அப்பொழுது புரிந்தது அந்த நிலையில் அந்த இருவரும் உலகை மறந்தார்கள். வெளியே குதிரைக் கொட்டடியை நோக்கிக் கொண்ட அந்த இரு ஜோடிக் கண்களில் குதிரைகளும் தெரியவில்லை. பரஸ்பர ஆசைக் கனவுகள் கண்ணெதிரே விரிந்தன. ஒருவர் கண்ணுக்கு மற்றொருவர் தெரிந்தனர். உணர்ச்சிகள் பரஸ்பரம் பின்னிக்கொண்டு கிடந்தன.

இந்த நிலையை உள்ளறையிலிருந்த ரஞ்சனியின் தாயும் கவனித்தாள். கவனிக்கத்தான் கவனித்தாளே, ஏன் இடைபுகாமல், எச்சரிக்காமல் வாளாவிருந்தாள்?

அத்தியாயம் 14

## மண்ணின் அடியில் மண்டபம்

இதயவர்மன் தனது செல்வியை அணைத்து நின்றதை உள்ளறையிலிருந்து கவனித்த ரஞ்சனியின் தாய், வாலிபப் பருவத்தினரான அவ்விருவர் நிலையிலும் இடைபுகாம லிருந்தாளென்றால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கவே செய்தது. சென்ற சில நாட்களாகவே அவள் வீட்டுக்குச் சேனாதிபதி இரவில் யார் யாரையோ பிரமுகர்களை அழைத்து வந்து உட்கார வைத்துவிட்டுப் போவதும், பிறகு திரும்பி வந்து அழைத்துக் கொண்டு குதிரைக் கொட்டடியை நோக்கிச் செல்வதும் பழக்கமாயிருந்தது. தவிர, வந்த இரண்டொருவர் ரஞ்சனியிடம் முரட்டுத் தனமாகவும் நடந்து கொள்வதைப் பார்த்திருக்கிறாள். ஏதோ பெரும் ரகசியமோ சதியோ அந்தப் புரவிக்கூடத்தில் நடக்கிறதென்பதை ரஞ்சனியின் தாய் உணர்ந்து கொண்டதல்லாமல், தானோ ரஞ்சனியோ சிறிது நிதானம் பிசகினாலும் தங்கள் உயிரும் மானமும் விநாடி நேரத்தில் பறந்துவிடுமென்பதையும் புரிந்துகொண்டாளாகையால், வந்த விருந்தினர்களின் நடவடிக்கைகள் அளவுக்கு மீறிப் போகாதவரையில் பொறுத்துக் கொண்டாள் தான் பொறுத்துக் கொண்டதன்றி மகளையும் பொறுத்துக் கொள்ளப் போதித்தாள். போதித்தபோது தன் விதியையும் நொந்து கொண்டாள். இந்த விபரீத சம்பவங்கள் ரஞ்சனி பருவமடையுமுன்பு நடந்திருந்தால்கூட அவளுக்கு அதிக மனக்கிலேசமிருந்திருக்காது ஆனால் அவை ரஞ்சனி பருவமடைந்த பத்தாம் நாளிலிருந்து துவங்கவே அந்தத் தாயின் உள்ளம், பல சமயங்களில் திக்கு திக்'கென்று அடித்துக் கொண்டதுமல்லாமல் ஆண் துணையில்லாத நிலையில் 'இந்தச் சிறுமலரை எப்படிக் காக்கப் போகிறோம்?' என்று தவியாய்த் தவிக்கவும் செய்தது.

ஆனால் பெரும் ஆபத்துக்கள் ஏற்படும்போது இயற்கை அளிக்கும் பெரும் பொறுமையும் துணிவும் அவள் இதயத்துக்கும் கிடைக்கவே ரஞ்சனியின் தாய்,



புதிராக ராஷ்டிரகூடர்கள் வந்த சமயங்களிலெல்லாம் மிகப் பொறுமையுடன் நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொண்டதல்லாமல் தன் மகளுக்கும் பொறுமையைப் போதித்து வந்தாள். ஓரிருமுறைகளில் வந்த ராஷ்டிரகூடப் பிரமுகர்கள் ரஞ்சனியைக் காமக் கண்ணுடன் பார்த்துக் கையைப் பிடித்து இழுத்தபோதும் அவள் தாய் உள்ளறையிலிருந்து வந்து. ''இது முறையல்ல எசமான்'' என்று இடைபுகுந்திருக்கிறாள். ஒரு ராஷ்டிரகூடன் அத்துடன் தன் துர்ச்செயல் முயற்சியை நிறுத்திக் கொண்டான். ஆனால் இன்னொரு முறை வந்தவன், ''நீ யாரடி கேட்பதற்கு? விலகிப்போ'' என்று சீறினான். ரஞ்சனியின் கையைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, ''நான் அவள் தாய்'' என்று மன்றாடினாள் ரஞ்சனியின் தாய்.

''நீயும் அழகாய்த்தானிருக்கிறாய்'' என்று அவளையும் உற்றுப் பார்த்தான் அவன்.

மேற்கொண்டு நடந்தது ராஷ்டிரகூடனுக்கே அதிர்ச்சியாயிருந்தது. இடதுகையை அவன் பற்றியிருந்தாலும் வலது கை சுதந்திரமாயிருந்ததால் அதை வெகு வேகமாக வீசி அவன் கன்னத்தில் அறைந்துவிட்டாள் ரஞ்சனி. அந்த அறைக்குப் பின் ஏற்பட்டிருக்கக்கூடிய விபரீதங்கள் பல. ஆனால் நல்லவேளை கொட்டடிக்குச் சென்றிருந்த சேனாதிபதி சமயத்தில் திரும்பி வந்து இடைபுகுந்தான் ராஷ்டிரகூடனை அவன் சுடு விழிகள் பொசுக்கி விடுவனபோல் பார்த்தன. ''இங்கு எதற்கு வந்தீர்கள்? பணிமகளுடன் சரசமாடவா?'' என்ற சொற்கள் வெகு உக்ரத்துடன் வெளிவந்தன சேனாதிபதியின் வாயிலிருந்து.

ராஷ்டிரகூடனும் அவன் மிரட்டலுக்கு அஞ்சாமலே அவனை நோக்கி, ''எங்கள் நாட்டுப் பணிமகளுடன் நாங்கள் விளையாடுவதுண்டு அதை யாரும் ஆட்சேபிப்பதில்லை'' என்று சீறினான்.

சேனாதிபதியின் விழிகள் வெறுப்பைக் கக்கின. "இது பல்லவ சாம்ராஜ்யம், ராஷ்டிரகூடமல்ல" என்று வெறுப்பு குரலிலும் ஒலிக்கக் கூறிவிட்டு, தன்னுடன் வரும்படி சைகை செய்து அவனை அழைத்துச் சென்றான். மறுநாள் சேனாதிபதியே நேரில் வந்து ரஞ்சனியின் தாயிடம் மன்னிப்புக் கேட்டுத் தைரியமும் சொன்னான். "இனிமேல் இப்படி எதுவும் நேரிடாது. பல்லவ ராஜ்யத்தின் சிறப்புக்காக இங்கு வருபவர்களில் இப்படிச் சில அசம்பாவிதங்களும் வருகின்றன. எதற்கும் பயப்பட வேண்டாம். நானிருக்கிறேன்" என்று கூறினான் சேனாதிபதி.

அதற்குப்பின் வந்த ராஷ்டிரகூடர்கள் யாரும் ரஞ்சனியை அதிகமாகத் தொந்தரவு செய்யவில்லையே தவிர ஓரளவு விளையாடத்தான் விளையாடினார்கள். சென்ற சில நாட்களில் இத்தனை இம்சைக்கு உள்ளான அவ்விருவருக்கும் பல கஷ்டங்கள் சகஜமாகிவிட்டன. கூடியவரையில் மானத்துக்குப் பங்கமேற்படாமல் வாழ்ந்தால் போதும் என்று குதிரைக் கொட்டடி வீட்டை விட்டுக் கிளம்பிவிடவும் ரஞ்சனியின் தாய் முயன்றாள். இதைப்பற்றி சேனாதிபதியை அவள் அனுமதி கேட்ட போது சேனாதிபதி ருத்ரனாக மாறினான். "இங்கென்ன குறைச்சல் உனக்கு? உணவுக்குக் குறைச்சலா? உடைக்குக் குறைச்சலா?" என்று வினவினான் அவன் கடுங் கோபத்துடன்.

"இரண்டுமில்லை எசமான். குதிரைக் கொட்டடி வீட்டில் தனித்து இருக்கப் பயமாயிருக்கிறது" என்றாள் ரஞ்சனியின் தாய்.

"துணைக்கு யாரையாவது அனுப்பட்டுமா?" என்று வினவினான் ரவிவர்மன்.

"எசமான்? நீங்கள் சொல்வது சரியா?" என்று கேட்டாள் அவள்.



"ஏன் சரியல்ல?"

"வயதாகாத ஒரு விதவையும், வயது வந்த ஒரு பெண்ணும் இருக்கும் வீட்டில் ஓர் ஆண்மகன் துணையிருக்க முடியுமா?"

"வயதானவனாக அனுப்புகிறேன்."

இதற்கு ரஞ்சனியின் தாய் சம்மதித்தாலும் ரவிவர்மன் சொன்னபடி நடக்கவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு அதைப் பற்றி அவள் மீண்டும் கேட்டபோது, "பொறுப்புள்ளவனாக யாரும் கிடைக்கவில்லை. பொறு. யாரையாவது சீக்கிரம் அனுப்புகிறேன்" என்று சொன்னானே தவிர யாரும் வரவே இல்லை. ஆகவே துணை ஏதுமின்றி, அடிக்கடி வந்த ராஷ்டிரகூடர்களின் தொல்லைக்கு ஈடு கொடுத்துத் தங்கள் மானத்தைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டு காலங்கழித்தனர் ரஞ்சனியும் அவள் தாயும். இந்த நிலையில் திடீரென இதயவர்மன் தங்கள் வீட்டுக்கு வந்ததே பெரும் ஆறுதலாயிருந்தது தாய்க்கும் பெண்ணுக்கும். ஆகவே எத்தனையோ ராஷ்டிரகூடர்கள் இம்சை செய்திருக்க, ரஞ்சனியை இதயவர்மன் ஆதரவுடன் பற்றி நின்றது அவள் தாய்க்கு அதிகத் தவறாகத் தோன்றவில்லை. பணிமக்களின் கதி இதுதான் போலிருக்கிறது என்று நினைத்து உள்ளறையிலிருந்து பெருமூச்சு மட்டும் விட்டாள்.

அந்தத் தாயின் நினைப்புக்களையோ வேதனைகளையோ பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் உலகையே மறந்து பரஸ்பர ஸ்பரிசத்தில் நின்ற ரஞ்சனியும் இதயவர்மனும் எண்ணங்களை மட்டும் எங்கெங்கோ ஓடவிட்டுக் கொண்டிருந்தார்களேயொழிய உடல்களைச் சிறிதுகூட அசைக்காமலே இருந்தார்கள். அத்தனை ஆசைக் கனவுகளிலும் எங்கோ ஓர் உணர்ச்சிக் கதிர்வீச்சு இதயவர்மன் புத்தியில் மட்டும் புகுந்து விடுவிடுவென்று வெளியே சென்று ராஷ்டிரகூடப் பெருமகனைக் கவனிக்கச்

செய்ததால் அவன் ஓரளவு இவ்வுலகத்துக்கும் சில விநாடிகளில் திரும்பினான்.

ரஞ்சனியைப் பிடித்து வீழ்த்திவிட்டுக் கோபத்துடன் வெளியே சென்ற ராஷ்டிரகூடப் பெருமகன் வெளி முற்றத்தின் நடுவே சென்றதும் ஆகாயத்தை ஒருமுறை ஏறெடுத்து நோக்கினான். பிறகு அக்கம்பக்கத்தில் பார்த்தான். சற்று நேரம் ஏதோ சிந்தித்துவிட்டுக் குதிரைக் கொட்டடியை நோக்கிச் செல்ல அடி எடுத்து வைத்தவன் சட்டென்று அசையாமல் நிலைத்து நின்றுவிட்டான். அதே நேரத்தில் குதிரைக் கொட்டடியின் ஒரு மூலையின் பூகர்ப்பத்திலிருந்து விளக்கொன்று எழுந்தது.

ராஷ்டிரகூடனின் ஒவ்வொரு அசைவையும் கவனித்த இதயவர்மன் குதிரைக் கொட்டடியின் அடியிலிருந்து மந்திர தீபம்போல் எழுந்த விளக்கைக் கவனித்ததும் சட்டென்று ரஞ்சனியின் மீதிருந்த தனது பிடியைத் தளர்த்திவிட்டு, "ரஞ்சனி! அதோ விளக்கு வருகிறது பார்த்தாயா?" என்று வினவினான்.

"ஆமாம், பார்த்தேன்" என்றாள் ரஞ்சனி, அவளுக்கு அந்தச் சம்பவம் சர்வ சாதாரணமாகவும் அடிக்கடி ஏற்படும் நிகழ்ச்சியாகவும் இருந்த காரணத்தினால்.

"அது சேனாதிபதியாகத்தானிருக்க வேண்டும்."

"ஆம், சேனாதிபதியேதான்."

"என்ன அத்தனை திட்டமாகச் சொல்கிறாய்?"

"வேறு யாரும் அங்கு விளக்கெடுத்துப் போவதும் இல்லை. வருவதுமில்லை."

"உனக்கெப்படித் தெரியும் அது?"

"பல நாட்கள் இந்தச் சாளரத்தின் மூலம் அவர் போய் வருவதைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவர் தனிப்படப் போவார். அல்லது வேறு யாரை



யாவது அழைத்துப் போவார். அவர் இல்லாமல் தனிப்பட வேறு யாரும் போவதில்லை."

"குதிரைக் கொட்டடியில் நிலவறை இருக்கிறதா?"

"இருக்கிறது."

"நீ பார்த்திருக்கிறாயா?"

"இல்லை. பார்த்ததில்லை."

"ஏன்?"

"படிகள் இறங்கும் இடம் வரையில் போயிருக்கிறேன். உள்ளே இறங்கப் பயமாயிருந்தது."

"பகல் வேளையில் போய்ப் பார்ப்பதுதானே?"

"பார்க்க முயன்றிருக்கிறேன். ஆனால் பகல் வேளையில் தரை சாதாரணமாயிருக்கிறது. படிகள் இருக்குமிடம் தெரியவில்லை. தவிர குதிரைக் கொட்டடியில் பகல் பூராவும் ஆட்களிருப்பார்கள்."

இதற்குமேல் கேள்வி ஏதும் கேட்காத இதயவர்மன் வெளி முற்றத்தைக் கவனித்தான். கொட்டடியிலிருந்து தீபத்தைத் தாங்கி வந்த சேனாதிபதி வெளிமுற்றத்திடையே நின்ற ராஷ்டிரகூடப் பெருமகனை அணுகியதும் சில விநாடிகள் நின்றான். இருவரும் தலைகளை ஆட்டியதிலிருந்தும் கைகளை உயரத் தூக்கி ஏதோ பேசியதிலிருந்தும் மிக உஷ்ணமாக வாக்குவாதம் இருவருக்கும் இடையே நடக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான் இதயவர்மன். அதற்குக் காரணம் அவனுக்கு மட்டுமன்றி ரஞ்சனிக்கும் புரிந்தது. தனது உத்தரவில்லாமல் வெளிமுற்றத்துக்கு ராஷ்டிரகூடன் வந்தது பற்றி சேனாதிபதி பெருங்கோபமடைந்து விட்டானென்பதையும், அதை ராஷ்டிரகூடனும் இலட்சியம் செய்யாததாலேயே இருவருக்கும் பெரும் வாக்குவாதம் நடக்கிறதென்பதையும் புரிந்து கொண்டதால் ரஞ்சனியும் இதயவர்மனும் சில விநாடிகள்

மௌனம் சாதித்தாலும், அடுத்து நடந்த நிகழ்ச்சிகள் இதயவர்மனை செயல்படுத்தத் தொடங்கின.

சிறிது விவாதத்திற்குப் பிறகு சேனாதிபதி விளக்கை முன் காட்டிக்கொண்டு கொட்டடியை நோக்கிச் சென்றதையும், ராஷ்டிரகூடப் பெருமகனும் அவனைத் திடமாகவும் அலட்சியமாகத் தலையை நிமிர்த்திக் கொண்டும் சென்றதையும் கண்ட இதயவர்மன், "ரஞ்சனி! அதோ பார், அவர்கள் இருவரும் கொட்டடிக்குச் செல்கிறார்கள்" என்றான்.

ரஞ்சனி பதில் சொல்லவில்லை. மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு நின்றாள். விளக்கு மெள்ள மெள்ளக் குதிரைக் கொட்டடியை அடைந்ததும் பூமிக்குள் இறங்கத் தொடங்கியது. சற்று நேரத்தில் விளக்கு மறைந்தது. இதயவர்மன் அடுத்த விநாடி சுறுசுறுப்பைக் காட்டினான். "ரஞ்சனி! நீ இங்கேயே இரு. நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டு கிளம்ப யத்தனித்தவனை ரஞ்சனி கையைப் பிடித்து நிறுத்தினாள்.

"விடு! அங்கு என்ன நடக்கிறது என்று பார்த்து வருகிறேன்" என்று தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான் இதயவர்மன்.

ரஞ்சனி அவனை விட மறுத்தாள். "அங்கு போய்ப் பயனில்லை" என்றும் கூறினாள்.

"ஏன்?"

"இறங்கியதும் வழியை மூடிவிடுவார் சேனாதிபதி."

"எப்படித் தெரியும் உனக்கு?"

"இருமுறை நானே போய் உள்ளே எட்டிப் பார்க்க முயன்றேன்."

"எதுவும் தெரியவில்லையா?"



"தெரியவில்லை. கொட்டடியின் தரை சம மட்டமாயிருந்தது."

"மேல் கற்களைத் தட்டிப் பார்த்தாயா?"

"பார்த்தேன். ஒலியில் வித்தியாசமில்லை."

"அப்படியானால் உனக்கு அதிர்ஷ்டமில்லை."

"உங்களுக்கு?"

"அதிர்ஷ்டம்."

"எப்படி?"

"இன்று சேனாதிபதி நிலவறையை மூடவில்லை"

இதைக் கேட்ட ரஞ்சனி பிரமித்தாள். "பிரமிக்காதே ரஞ்சனி! முதலில் ராஷ்டிரகூடன் இறங்கியிருந்தால் அவன் கலசத்தில் சேனாதிபதியின் கையிலிருந்த விளக்கு பிரதிபலித்திருக்கும். ஆனால் முதலில் விளக்கு மறைந்தது" என்றான் இதயவர்மன்.

"அதனால்?" சந்தேகத்துடன் கேட்டாள் ரஞ்சனி.

"முதலில் விளக்கேந்தி சேனாதிபதி செல்ல பின்னால் இறங்கியிருக்கிறான் ராஷ்டிரகூடன். அவன் இறங்கும் போது விளக்கும் உள்ளே போய்விட்டது" என்று விளக்கிய இதயவர்மன், "இரு! நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று அவளிடமிருந்து வலுக்கட்டாயமாகத் தன்னை விடுவித்துக்கொண்டு வெளி முற்றத்துக்குச் சென்று கொட்டடியை நோக்கி வெகு மெதுவாகப் போனான்.

கொட்டடி அந்தகாரத்திலாழ்ந்திருந்தது. புரவிகள் கால்களை உதைத்தும் வாலை ஆட்டியும் கனைத்தும் ஒலிகளைக் கிளப்பிக் கொண்டிருந்தன. இத்தனை இருட்டிலும் விளக்கு மறைந்த மூலையை நோக்கிச் சென்றான் இதயவர்மன். அம்மூலையில் குறுகலான

படிகள் அடியை நோக்கி ஓடின. அவற்றில் மிக மெது வாக சப்தமேதும் செய்யாமல், மூச்சுக்கூட விடாமல் இறங்கிச் சென்றான் இதயவர்மன்.

படிகள் வளைந்து வளைந்து சென்றன. ஒரு வளைவின் கோடியில் எதிரே விரிந்தது நிலவறை. நிலவறையா? இல்லை, இல்லை. பெரும் மண்டபம் விரிந்தது அவன் கண்களுக்கெதிரே. விரிந்தது மண்டபம் மட்டுமல்ல, அவன் எதிர்பாராத வேறு பல உண்மைகளும் மண்ணின் அடியிலிருந்த அந்த மண்டபத்தில் விரிந்தன.

## அத்தியாயம் 15

## பக்தனா!

வியப்பு என்ற உணர்ச்சியின் முழு வேகத்தையும் புரிந்துகொள்ள வேண்டுமானால், இதயவர்மன் அந்த நில வறைப் படிகளிலே ஒளிந்து நின்று எதிரே விரிந்த அந்த மாமண்டபத்தை உற்றுப் பார்த்த சமயத்தில் அவன் முக மிருந்த நிலையைப் பார்க்கவேண்டும். அந்த வாலிப வீரன் இதயத்தைச் சூழ்ந்த பெரும் பிரமிப்பு அவன் முகத்திலும் விரவிக் கிடந்ததால் அவன் மூச்சைக்கூட விடாமல் அந்த மண்டபத்தை பார்த்துக் கொண்டு நின்றான். மண்டபத் தின் அளவுக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் பெரும் நிலவறையில் நிறுத்தப்பட்ட நான்கு பெரும் கருங்கல் தூண்களும், மேலிருந்து மண் சரியாதிருப்பதற்காக வெகு லாகவமாக காஞ்சியின் பழங்கலாச் சிற்பிகள் அமைத் திருந்த கருங்கல் கூரையும், கீழே உறுதியாகப் போடப் பட்டிருந்த தளவரிசையும், அந்த மண்டபம் எத்தனை உறுதியானது என்பதைத் தெளிவாக்கியதல்லாமல், எங்கிருந்தோ அந்த மண்டபத்துக்குள் வந்து இதயவர்மன் மேலும் வீசிய மெல்லிய காற்று, அந்த மண்டபம் எப்பொழுதும் வாசஸ்தலமாக இருக்க அருகதையுள்ளது என்பதையும் நிரூபித்தது. மண்டபம் மிகச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தாலும், மண்டபத்தின் கோடியில் இரண்டு சிற்றறைகளின் கதவுகளும் தெரிந்ததாலும், இடையே உட்காரும் மஞ்சங்கள் சிலவும் படுக்கும் பஞ்சணை ஒன்றும் இருந்ததாலும், அந்த மண்டபம் சில காலமாகத் தொடர்ந்து உபயோகத்திலிருந்து வந்திருக்கிற தென்பதும் புரிந்தது. இவற்றையெல்லாம் விநாடி நேரத்தில் கவனித்த இதயவர்மன் சாதாரணமாக நில வறையின் அமைப்புக்கே வியப்பைக் காட்டியிருப்பான். ஆனால், அந்த மண்டபத்தின் நடுவே அமர்ந்திருந்தவர் களைப் பார்த்துவிட்டப்படியால் அவன் இதயத்தில் விரிந்த சொல்லவொண்ணாத வியப்பு, மண்டபத்தின் அமைப்பைப் பற்றிய வியப்பைத் தலைதூக்காமல் அடித்து விட்டது.

மண்டபத்தின் நடுவே போடப்பட்டிருந்த நான்கு ஆசனங்களில் பெரிதாயிருந்த மஞ்சத்தில் பல்லவ சக்கரவர்த்தியின் மாமனும் ராஷ்டிரகூடக் குலத் தோன்றலுமான பிரதாபவர்மன் அமர்ந்திருந்தான். அவனுக்கருகே சற்றுத் தள்ளியிருந்த ஆசனத்தில் பல்லவ சேனாதிபதியான ரவிவர்மன் அமர்ந்திருந்தான். இதய வர்மன் நின்றிருந்த நிலவறைப் படிகளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான் சற்று முன்பு ரஞ்சனியின் வீட்டிலிருந்து கோபத்துடன் கிளம்பிவந்த ராஷ்டிரகூடப் பெருமகன். இந்த மூவர் உட்கார்ந்திருந்ததிலும் அதிக வியப்பில்லை இதயவர்மனுக்கு. ஆனால் பல்லவச் சக்கரவர்த்தியின் மாமனின் வலப்புறத்தில் தனது இந்தீவரக் கண்கள் பளிச்சிட இந்திராதேவி உட்கார்ந்திருந்தாளே, அது எப்படிச் சாத்தியம் என்பது புரியாததால் பெரும் பிரமிப்பை அடைந்தான் இதயவர்மன்.

சேனாதிபதியின் மாளிகையில் ராஜமாதாவான ரேவா தேவியின் மாமன் மறைந்துறைவதை முன்னமே சொல்லியிருந்தபடியாலும், சேனாதிபதி மாளிகை சதிக்கூடமாகி விட்டதைத் தானே புரிந்துகொண்டுவிட்டதாலும், பல்லவ மாமன்னன் மாமனோ அன்றிப் புதிதாக வந்த ராஷ்டிர கூடப் பெருமகனோ அங்கிருந்ததை இதயவர்மன் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், தான் சற்று முன்பு அரண்மனையில் இறக்கி விட்டு வந்த இந்திராதேவி, உடனே புரவிச்சாலையிலிருந்து புரவி ஏறி வந்திருக்கும் தன்னை விடத் துரிதமாக எப்படி இங்கு வந்து சேர்ந்தான் என்பது மட்டும் அந்த வாலிப வீரனுக்கு விளங்கவில்லை. "ஒரு வேளை ரஞ்சனி வீட்டில் தங்கிய நேரத்தில் அவள் வந்திருக்கக்கூடுமோ என்றால், அப்படி வந்திருந்தாலும் புரவிக் கொட்டடி வழியாகத்தானே நிலவறையில் புக வேண்டும்? அந்தப் புரவி கொட்டடியைத்தான் நானும் ரஞ்சனியும் கண்கொட்டாது பார்த்துக் கொண் டிருக்கிறோமே தவிர, நிலவறையின் பாறைகளைப்



புரட்ட இந்திராதேவியால் எப்படி முடியும்? அதுவும் இரவு நேரத்தில் சேனாதிபதியே விளக்கின் துணை கொண்டு அந்த அலுவல்களைப் புரிய வேண்டியிருக்க இந்திராதேவி மட்டும் இருட்டில் அந்தப் பணியை எப்படிச் செய்ய முடியும்?" என்று தன்னைத்தானே பல கேள்விகள் கேட்டுக்கொண்ட இதயவர்மன் அந்நிலவறைக் குப் புரவிக் கொட்டடி வழியைத் தவிர வேறு வழியிருக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தான். "அப்படி வேறு வழி இருந்தால் அந்த வழியில் இரகசியமாக எல்லோரையும் வரவழைக்காமல் ரஞ்சனி வீட்டில் எதற்காக அந்நியரைக் கொண்டுவந்து உட்கார வைக்கவேண்டும்? எதற்காக அந்த வழியாக அழைத்து வரவேண்டும்?" என்று மீண்டும் கேள்விகளை உள்ளத்தில் எழுப்பிக் கொண்ட இதய வர்மன், அவை எதற்குமே சரியான விடை கிடைக்காமல் குழம்பினான். அந்த குழப்பமான நிலையில், அரசியல் சதி பெரிதாக உதயமாகிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், இந்திராதேவியின் பேரழகுகூட அவன் இதயத்தை ஆட் கொள்ள மறுத்தது.

இந்திராதேவி உண்மையில் அந்த மண்டபத்தின் தூணில் பொருத்தப்பட்டிருந்த ஒரு பெரும் இரும்பு விளக்கின் ஒளியிலும் சற்று முன்பு சேனாதிபதி கொண்டு வந்து ஒரு மூலையில் வைத்திருந்த கைவிளக்கின் சிற்றொளியிலுங்கூட அப்சர மங்கைபோல் விளங்கினாள். சுமார் அரை ஜாமத்துக்கு முன்பு தான் சேனாதிபதியின் மாளிகையின் உள்ளறையிலே சந்தித்த இந்திராதேவி, அப்பொழுது அணிந்திருந்த சேலையையோ வேறு அலங்காரங்களையோ மாற்றாதிருந்ததையும், அவள் சேலைகூட சிறிது கலைந்திருந்ததையும் கண்டான் இதய வர்மன். ஆனால் அந்த அலங்கோலங்கூட அவளுக்குப் புதுச் சோபையை அளித்ததைக் கவனிக்காமல், அவள் எப்படி வெகு துரிதமாக சேனாதிபதி மாளிகைக்குத் திரும்பியிருக்கிறாள் என்பதைப் பற்றி மட்டும் யோசித் தான்.

வயோதிகனான பிரதாபவர்மனை அவன் முன்பே அறிந்திருந்தான். அப்படியிருந்தும் அந்த நிலவறையிலும் அவன் முகத்திலிருந்த ராஜகளையையும், கம்பீரத்தையும் ஓர் உறுதியையுங் கண்ட இதயவர்மன், ''மாமனுக்கு வயது தான் ஆகிவிட்டதே தவிர உறுதியிலும் வீரத்திலும் அவர் பழைய மாமன்தான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பல்லவ மாமன்னனின் மாமன் தனது கால்களை நன்றாக நீட்டிக்கொண்டு எதிரேயிருந்தவனும் புதிதாக வந்தவனுமான ராஷ்டிரகூடப் பெருமகனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட இதயவர்மன் ''பிரதாபவர்மன் மனத்தில் ஏதோ பெரும் சுமை ஏறியிருக்கிறது. அதை இறக்கவல்லவன் இந்த ராஷ்டிரகூடன்தான்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

இத்தகைய சிந்தனைகளிலிருந்த இதயவர்மனைப் பெரிதும் உலுக்கக்கூடிய கேள்வியொன்றை வீசினான் பிரதாபவர்மன். புதிதாக வந்த ராஷ்டிரகூடனை நோக்கி, ''ராஷ்டிரகூடத் திலகம், புவனச்சக்கரவர்த்தி சமரசிம்மம் கோவிந்த மகாராஜா எப்பொழுது இங்கு வருகிறார்?'' என்று வினவினான் பிரதாபவர்மன். இந்தக் கேள்விக்குச் சில விநாடிகள் பொறுத்துத்தான் பதில் சொன்னான் புதிதாக வந்த ராஷ்டிரகூடன். ஆனால் அந்த சில விநாடிகளில் சுய உணர்ச்சியே இல்லை இதயவர்மனுக்கு. ''ராஷ்டிரகூடச் சக்கரவர்த்தி இங்கு வருகிறாரென்றால் அதற்கு இத்தனை ரகசியமெதற்கு? நேராக தூதர்களை அனுப்பி பல்லவச் சக்கரவர்த்தியின் விருந்தினராக வரலாமே. அப்படி வர இந்த மர்மம் தேவையில்லை. தனியாக வரப் போகிறாரா? அது இருக்காது. ஒரு நாட்டு மன்னன் ரகசியமாக இன்னொரு நாட்டுத் தலைநகரில் நுழைவது தனது நாட்டையே பலி கொடுப்பதாகும். கடைசியாக உள்ளது படையெடுப்பு!'' என்று தானே விவாதித்துக்கொண்ட இதயவர்மன், ''ஆம். படையெடுப்பாகத்தானிருக்க வேண்டும். படையெடுப்பானால்



காஞ்சிக்கு எத்தனை அபாயம்? இங்கு அதற்குப் படை தயாராக இல்லையே?'' என்று மேலும் கேள்விகளைக் கேட்டுக்கொண்ட இதயவர்மன், அங்கு பேசப்படுவதை உற்றுக் கேட்கக் காதுகளைத் தீட்டிக்கொண்டான்.

பிரதாபவர்மன் கேள்விக்குப் பதில் சொல்லத் தாமதித்த ராஷ்டிரகூடப் பெருமகன் கடைசியில் சொன்னான், ''மகாராஜா கோவிந்தர் இப்பொழுது இங்கு வரப்போவதில்லை'' என்று.

''ஏன்?'' மீண்டும் எழுந்தது பிரதாபவர்மன் கேள்வி.

''நீங்கள் சொல்லியனுப்பியபடி காஞ்சியின் பாதுகாப்புப் பலவீனமாயில்லை என்று அவருக்குச் செய்தி கிடைத்திருக்கிறது'' என்றான் ராஷ்டிரகூடப் பெருமகன்.

இதைக் கேட்ட பிரதாபவர்மன் சேனாதிபதியைத் திரும்பி நோக்கினான். ''இது உண்மையா!'' என்றும் வினவினான் உஷ்ணத்துடன்.

சேனாதிபதி ரவிவர்மன் இதழ்களில் இகழ்ச்சி நகை விரிந்தது. ''பல்லவ சைன்னியத்தின் அதிபதி நான்'' என்று மட்டும் சொன்னான் சேனாதிபதி, பல பொருள்களை அந்தச் சில வார்த்தைகளில் பொதித்து.

''அதனாலென்ன?'' என்று வினவினான் புதிதாக வந்த ராஷ்டிரகூடன்.

''காஞ்சியின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதும் பலவீனமாக வைப்பதும் என் கையில் இருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினான் சேனாதிபதி. அத்துடன் பிரதாபவர்மன் மீதும் கண்களை நாட்டினான் அதிகாரத் தோரணையுடன்.

ஆனால் வந்தவன் அதற்கெல்லாம் மசிந்ததாகத் தெரியவில்லை. ''காஞ்சியின் முக்கிய வாயில் எது?'' என்று வினவினான்.

''கிழக்கு வாயில்'' என்று பதில் கூறினான் ரவிவர்மன்.

''அங்குதான் உமது படைகளின் பெரும் பிரிவு இருக்கிறது?''

''ஆம்.''

''ராஷ்டிரகூடத்தை எதிர்நோக்கியிருக்கும் வடக்கு வாயிலில் படைபலம் மிகக் குறைவு ''

''ஆம், காரணமாகவே அங்கு படைகளைக் குவிக்க வில்லை ராஷ்டிரகூடர்கள்கூட காஞ்சியைத் தாக்கு வதானால் கிழக்குப் பக்கம்தான் தாக்குவார்கள். ஏனென்றால் படைகள் வர அங்குதான் வசதி அதிகம். இப்படித்தான் நடந்திருக்கின்றன பல்லவ மன்னன் காலத்துப் போர்கள். இதற்கு முன்பு இங்கு நடந்த போரும் அப்படித்தான் நடந்திருக்கிறது. ஆகவே மகாராஜா கோவிந்தரின் தாக்குதலை நாங்கள் கிழக்கு வாயிலில் எதிர்பார்ப்போம். அங்குதான் படைகள் இருக்கும். வடக்கு வாயிலில் இருப்பது சாதாரணமாக ஐந்து படைப் பிரிவுகள். அவற்றில் மூன்றைச் சமீபத்தில் தான் மேற்கு வாயிலுக்கு அனுப்பினேன்.''

''சமீபத்தில் என்றால்?'' என்ற கேள்வி எழுந்தது ராஷ்டிரகூடனிடமிருந்து.

''ஒரு மாதத்திற்கு முன்பு'' என்றான் சேனாதிபதி ராஷ்டிரகூடனின் விசாரணையை ரசிக்காத குரலில்

''இன்றும் அதே நிலைதானா?'' என்று மீண்டும் கேட்டான் ராஷ்டிரகூடன்.

''ஆம்'' என்றான் சேனாதிபதி.

இதைக் கேட்ட ராஷ்டிரகூடன் உறுமினான் சிறிது. ''எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்?'' என்றும் கேட்டான்.

''என் ஆணையில்லாமல் படைகளை எந்தப் புறமும் யாரும் நகர்த்த முடியாது'' என்று திட்டமாக அறிவித் தான் சேனாதிபதி.



ராஷ்டிரகூடப் பெருமகன் தனது ஆசனத்தை விட்டு எழுந்து விளக்கிருந்தவிடம் சென்று திரும்பி நின்று அவர்கள் மூவரையும் நோக்கினான். அந்த பார்வையில் பெரும் இகழ்ச்சி மண்டிக் கிடந்ததாகத் தோன்றியது. படிகளில் மறைந்து நின்ற இதயவர்மனுக்கு இதயவர்மன் ஐகம் சரியென்பதை ராஷ்டிரகூடனின் அடுத்த சொற்கள் நிரூபித்தன. ''பல்லவ சாம்ராஜ்ய சேனாதிபதியவர்களே! உங்களுக்கு நான் முக்கிய செய்தியொன்று சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் மேற்கு வாயிலுக்கு அனுப்பிய மூன்று படைப் பிரிவுகளும் திரும்ப வடக்கு வாயிலுக்கு வந்து விட்டன'' என்றான் ராஷ்டிரகூடன் மிக நிதானமாக.

அதைக் கேட்ட இந்திராதேவியின் முகத்திலும் பிரதாபவர்மன் முகத்திலும் கோபம் கிளர்ந்தெழுந்தது. ''இது உண்மையா?'' என்று சீறி வந்தன சொற்கள் பிரதாபவர்மன் உதடுகளிலிருந்து. இந்திராதேவி பேசா விட்டாலும் கோபப் பார்வையொன்றை சேனாதிபதி மீது வீசினாள்.

சேனாதிபதி ரவிவர்மன் முகத்திலும் கோபம் எழுந்தது. ''இங்கு நானறியாததை ராஷ்டிரகூட சேனாதிபதி அறிந்து விட்டாரா?'' என்று கேட்டான் ரவிவர்மன் சினத்துடன்.

புதிதாக வந்த அந்த பெருமகன், ராஷ்டிரகூடப் படைகளின் தலைவன் கூறினான்: ''அந்தச் சிறப்பை பல்லவ சேனாதிபதி எனக்கு அளிக்க வேண்டாம். இந்த விவரத்தை அறிந்தவர் மகாராஜா கோவிந்தர்'' என்று.

இதைக் கேட்டதும் சேனாதிபதி ரவிவர்மன் அடியோடு கோபத்தின் வசப்பட்டு, ''பல்லவ சேனாதிபதிக் குத் தெரியாதது தொலை தூரத்திலிருக்கும் ராஷ்டிரகூட மகாராஜாவுக்குத் தெரியுமென்பது விசித்திரம். கண்ட வர்கள் சொல்லுகிற கட்டுக்கதைகளை வைத்துக்கொண்டு நமது பரஸ்பர பலத்தைக் குறைத்து மதிப்பிட்டால் நாம்

எடுத்துள்ள பெரிய காரியம் நிறைவேறாது. ஆகவே வெற்றுக் கதையை விடுவோம். உள்ள நிலையை உணர்வோம். என்னையல்லாமல் யார் படைப்பிரிவுகளை மீண்டும் வடக்கு வாசலுக்கு அனுப்ப முடியும்?'' என்று இரைந்து கூவினான்.

ராஷ்டிரகூட சேனாதிபதி மெல்லச் சிரித்தான் ''யார் படைகளை மீண்டும் வாசலுக்கு அனுப்பியது. சொல்லட்டுமா?'' என்று வினவவும் செய்தான்.

''சொல்''— மரியாதையின்றி வந்தது அந்த ஒற்றைச் சொல் ரவிவர்மனிடமிருந்து.

ராஷ்டிரகூட சேனாதிபதியின் பதிலிலும் ஒற்றைச் சொல்லே இருந்தது. ஆனால் அந்த ஒரு சொல் மண்டபத்தி லிருந்தோரை மட்டுமல்ல, படிகளில் நின்ற இதயவர்மனை யும் அசரவைத்தது. ''தந்திவர்மன்'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி. இதைக் கேட்ட மற்றவர் மலைத்தனர். ஆனால் மாமன் மலைத்ததன்றிச் சினந்தும் எழுந்தார். ''யார் இந்தப் பக்தனா!'' என்று வியப்பும் கொதிப்பும் நிரம்பிய சொற்களையும் உதிர்த்தார்.

## அத்தியாயம் 16

## கதவுகள் புது அமைப்பு

ராஷ்டிரகூட சேனாதிபதியின் தகவல் அளித்த அதிர்ச்சியால் மாமனான பிரதாபவர்மன் மட்டும் ''இந்தப் பக்தன்!'' என்று வியப்பும் கோபமும் இகழ்ச்சியும் கலந்த குரலில், தனது மருமகனைக் குறிப்பிட்டு இரைந்தா னென்றாலும் மற்றவர்கள் சில விநாடிகள் மூச்சுக்கூட விடவில்லை. அவர்கள் உள்ளத்தைக் கவ்விக்கொண்ட அதிர்ச்சி, வார்த்தைகளையும் மீறிய உணர்ச்சிகளைக் கிளறிவிட்டிருந்ததால் ஒருவரையொருவர் அச்சத்துடன் பார்த்துக் கொள்ள மட்டும் செய்தார்கள்.

அவர்கள் அச்சத்தைப் பார்த்துக்கொண்டு நிலவறைப் படிகளின் வளைவொன்று அளித்த மறைவில் ஒளிந்து நின்ற இதயவர்மன் மனோநிலை விவரிக்க இயலாததாயிருந்தது. போர்களையே விரும்பாதவனும், பரம பக்தனுமான மன்னன் தந்திவர்மனை நினைத்தும், போர்களை விரும்பும், போரை மூட்டச் சதி செய்யும் அந்த நிலவறைப் பிரமுகர்கள் அடைந்த கிலி பெரும் வியப்பைத் தந்தது இதயவர்மனுக்கு. வாளேந்துவதைவிட கற்பூரத் தட்டேந்துவதுதான் கஷ்டமென்பதையும் பிந்தியதே பெரும் பலமுடைத்ததென்றும் மன்னன் கோவிலில் சுட்டிக் காட்டியதில் பெரும் உண்மையிருக்கிறதென்பதற்கு ஏதாவது அத்தாட்சி வேண்டுமானால், அந்தச் சதிகாரர்கள் அடைந்த கிலியைப் பார்த்தாலே போதும், என்று இதயவர்மன் நினைத்தான். அது மட்டுமல்ல, எந்த அரசியல் விவகாரத்திலும் ஈடுபடாமலிருக்கும் மன்னன் எப்படி மேற்கு வாயிலுக்குச் சென்ற படைகளை மறுபடி யும் வடக்கு வாயிலுக்கு அனுப்பினான் என்பதும் புரிய வில்லை, அந்த வாலி ! வீரனுக்கு. தவிர சேனாதிபதிக்குக் கூடத் தெரியாமல் படைகளை மன்னன் எப்படிப் பழைய இடத்துக்கு அனுப்ப முடிந்தது என்பதும் புரியாத புதிரா யிருந்தது அவனுக்கு. அதைவிடப் பெரும் புதிர் ஒன்று அவன் சித்தத்தைப் பிடித்துக்கொண்டது. காஞ்சியில்

யாருக்கும் தெரியாது நடந்த இந்த விஷயம் தொலைதூரத்திலிருக்கும் ராஷ்டிரகூட மன்னனுக்கு எப்படித் தெரிந்தது என்ற புதிருக்கு அவன் விடை காண முடியவில்லை. ஒரு விஷயம் மட்டும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. பல்லவ சேனாதிபதி ரவிவர்மனைத் தவிர மிகவும் அந்தரங்கமான பேர்வழி யாரோ ராஷ்டிரகூட மன்னனுக்குச் செய்தியை அனுப்பி வருகிறான் என்பது வெட்டவெளிச்சமாக விளங்கவே, அவனைக் கண்டுபிடித்தாலொழிய காஞ்சியைக் காப்பது கடினம் என்று நிர்மானித்தான் இதயவர்மன் ஆகவே சேனாதிபதி மாளிகையில் நடக்கும் சதி அற்பமானதென்றும் அதை ஒரு பொருட்டாகக் கருதவேண்டிய அவசியம் இல்லையென்றுங்கூட நினைத்தான் இதயவர்மன். இருப்பினும் அங்கு நடப்பனவற்றைப் பூர்ணமாக அறிந்துகொள்ள இஷ்டப்பட்டு அந்த மறைவிலேயே நின்றான்.

நிலவறை மண்டபத்திலிருந்தவர்களின் ஆரம்ப அதிர்ச்சி சில நிமிஷங்களில் நீங்கிவிடவே அவர்கள் உள்ள நிலைபற்றிக் கவலை தெரிவிக்க ஆரம்பித்தார்கள். ''இந்தப் பக்தனா!'' என்று பிரதாபவர்மன் கேட்ட கேள்விக்குக்கூட ராஷ்டிரகூட சேனாதிபதி மற்றவர்கள் அதிர்ச்சி தீர்ந்த பிறகே பதில் கூறினான் ''ஆம்! பிரதாபவர்மரே! இந்தப் பக்தன்தான் அந்த உத்தரவைப் பிறப்பித்தவன். ஆனால் அவன் உண்மை பக்தனாவென்று மகாராஜா கோவிந்தர் சந்தேகப்படுகிறார்'' என்று அறிவித்தான் அந்த ராஷ்டிரக் கூடப் பெருமகன்.

''சந்தேகத்துக்கு ஏதும் இடமில்லை. என் மருமகனை நான் நன்றாகவே அறிவேன்'' என்றார் பிரதாபவர்மன்.

ராஷ்டிரகூட சேனாதிபதி நின்ற நிலையில் அவரைத் தைரியமாக ஏறிட்டு நோக்கிவிட்டுச் சொன்னான், ''நீங்கள் பல்லவ மன்னனை சரியாக அறியவில்லையென்பது மகாராஜா கோவிந்தர் முடிவு'' என்று. இதை மிகுந்த கம்பீரத்துடனும் தைரியத்துடனும் சொன்னான் ராஷ்டிரகூட சேனாதிபதி.



பிரதாபவர்மன் முகத்தில் கோபம் பீறிட்டு எழுந்தது. ''எனக்கு அறிவு குறைவென்று மகாராஜா நினைக்கிறாரா?'' என்று வினவினான் கோபத்துடன்.

''பொதுவில் அப்படி நினைக்கவில்லை மகாராஜா. நீங்கள் மருமகனைப் பற்றி அறிந்துள்ளது போதாது என்று கருதுகிறார் ராஷ்டிரகூட மன்னர்'' என்று கூறிய சேனாதிபதி, அவரைச் சற்றும் பயமில்லாமல் உற்று நோக்கினான்.

கொஞ்சம் நஞ்சமிருந்த நிதானத்தையும் பறக்கவிட்ட பிரதாபவர்மன், ''சேனாதிபதி! எங்களிடம் மகாராஜாவுக்கு நம்பிக்கையில்லாவிட்டால் நான் இப்பொழுதே இந்நகர் விட்டுக் கிளம்பச் சித்தமாயிருக்கிறேன்'' என்று இரைந்துகொண்டே எழுந்திருந்தான்.

ராஷ்டிரகூட சேனாதிபதி முகத்தில் இகழ்ச்சி மண்டியது. ''அதுவும் அத்தனை சுலபமல்ல என்று நினைக்கிறார் மகாராஜா'' என்றான் அந்த ராஷ்டிரகூடப் பெருமகன்.

''எது?''—பல்லவ மன்னன் மாமன் குரலில் சீற்றம் தாண்டவமாடியது.

''காஞ்சியிலிருந்து புறப்படுவது.''

''ஏன்?''

''புறப்பட முயன்றால் நீங்கள் சிறை செய்யப் படுவீர்கள்.''

''யாரால்?''

''உங்கள் மருகரால்.''

''நீங்கள் ஒரு கிளை தள்ளிப் பிறந்தவர்; ராஷ்டிரகூடர்களுடன் போரிட்ட தந்திவர்மன் மகளுக்கு மகள். நந்திவர்மன் சகோதரி மகள். உங்கள் உடலில் பல்லவ ரத்தம் ஓடுகிறது. அதுமட்டுமல்ல.''

''மேலும் என்ன?''

''இளரத்தம் ஓடுகிறது. அதில் அஜாக்கிரதையிருக்கும். அறிவு நிதானமிருக்காது. பெண்களுக்கு ரகசியத்தை வைத்துக் கொள்வதும் கஷ்டம்'' என்ற ராஷ்டிரகூட சேனாதிபதி, ''தேவி! இதெல்லாம் நான் சொல்வதல்ல, மகாராஜா கோவிந்தர் சொன்னது'' என்று மன்னிப்பு கேட்கும் பாவனையிலும் சொற்களைக் கூட்டினான்.

இந்திராதேவியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. சாதாரணமாக அழகைச் சொட்டும் இந்தீவிரக் கண்கள் கோபத்தால் விகாரமடைந்தன. அவள் முகம் பெரிதும் சிவந்து பந்தங்களின் வெளிச்சத்தில் மற்றொரு பந்தச் சுடர்போல் பிரகாசித்தன. அவள் சேனாதிபதியின் மீதிருந்த கண்களைப் பிரதாபவர்மன்மீது திருப்பி, ''மாதுலர் என்ன சொல்கிறார்?'' என்று கேட்டாள். ''நான் இருக்கவா போகவா?'' என்றும் கேட்டாள். அவள் குரல் கொதித்துக் கிடந்தது. சொற்கள் சீறி வந்தன.

பிரதாபவர்மன் சிறிது நேரம் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு கேட்டான் ராஷ்டிரகூட சேனாதிபதியை நோக்கி, ''காஞ்சியைக் கைப்பற்றும் ஏற்பாட்டை நிலைக்கச் செய்யவா?'' என்று.

''நிலைக்கத்தான் செய்ய வேண்டும்'' என்றான் ராஷ்டிரகூடப் பெருமகன்.

''இந்திராதேவியின் துணையில்லாமல் இங்கு நாம் எதுவும் செய்யமுடியாது. ராஷ்டிரகூடப் பேரரசின் விஸ்தரிப்பில் தந்திவர்மன் தாயைவிட இவள் அதிக அக்கறையுள்ளவள்'' என்றான் பிரதாபவர்மன் திடமாக.



ராஷ்டிரகூட சேனாதிபதி சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினான். ''சரி உங்களிஷ்டம்; இந்திராதேவியிடம் ராஷ்டிரகூட மன்னருக்கு அவநம்பிக்கை எதுவுமில்லை. ஆனால் சிறிய வயதினராயிற்றே என்று யோசிக்கிறார். தவிர, இத்தகைய ஆபத்தான காரியத்தில் அரச குடும்பத்துப் பெண்ணை ஈடுபடுத்துவது சரியல்லவென்றும் அபிப்பிராயப்படுகிறார். அவ்வளவுதான்'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

''வேறு ஏதாவது செய்தி அனுப்பியிருக்கிறாரா மகாராஜா?'' என்றான் பிரதாபவர்மன்.

''அனுப்பியிருக்கிறார்.''

''என்ன?''

''படையெடுப்பு ஏற்படுமானால் ராஷ்டிரகூட படைகள் வடக்குப் புறத்தில் தாக்காது.''

''பின் எந்தப் புறம் தாக்கும்?''

''வழக்கம்போல் கிழக்கு வாயிலைத் தாக்கும்.''

இந்தச் சமயத்தில் ரவிவர்மன் இடைபுகுந்து, ''தவறு தவறு! கிழக்கு வாயிலைத் தகர்க்க ராஷ்டிரகூடப் படைகள் அனைத்தும் வந்தாலும் முடியாது.'' என்றான் எரிச்சலுடன்.

''என்ன அப்படித் திட்டமாகச் சொல்கிறீர்?'' என்று எழுந்தது பிரதாபவர்மன் கேள்வி.

''பிரதான அரண் கிழக்கு வாயில். அங்கு ஆயிரம் யானைப் படைகள் இருக்கின்றன. மதில்மீது கண்ணுக்குத் தெரியும்வரை அம்பு வீசும் பெரும் விற்கூடங்கள் இருக்கின்றன. ஒன்றன்பின் ஒன்றாக வயிரம் பாய்ந்த மரங்களும் பெரும் இருப்புப் பாளங்களும் இணைக்கப்பட்ட பாரிக் கதவுகள் நான்கும் இருக்கின்றன'' என்றான் ரவிவர்மன்.

''ஏற்கனவே இருப்பவைதானே இவை, புதிதல்லவே'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

''ஒரு புதுமையும் இருக்கிறது'' என்றான் ரவிவர்மன்.

''என்ன புதுமை?''

''சமீபத்தில் இரண்டு சுழல் சக்கரங்களை மன்னர் பொருத்தியிருக்கிறார் கதவுகளுக்கு.''

''அதனால் என்ன பயன்?''

''சுழற்சக்கரங்களை விட்டுப் பல அடிகள் தள்ளி இரண்டு ஆட்டும் கட்டைகள் இருக்கின்றன, கட்டைகளைத் திருப்பினால் கதவுகள் பிரமாத வேகத்துடன் திறக்கும். மூடினால் திடீரென்று மூடும். நடுவில் ரதங்களோ புரவிகளோ வீரர்களோ அகப்பட்டால் பளுக்கென்று முறித்து உருத்தெரியாமல் போய்விடும்.''

இதைக் கேட்டதும் நிலவறை மண்டபத்திலிருந்த அனைவரும் பிரமித்தனர். ''இந்தச் சக்கரங்களை அமைத்து எத்தனை நாட்களாயின?'' என்று கேட்டாள் இந்திராதேவி.

''ஒரு மாதம் ஆயிற்று?'' என்றான் ரவிவர்மன்.

''இதை ஏன் மக்களுக்குச் சொல்லவில்லை மன்னர்?'' என்று மீண்டும் வினவினாள் இந்திராதேவி.

''இரண்டு மாதங்கள் போனபிறகு பறையறைவித்துத் தெரிவிக்கலாம் என்று மன்னர் ஆணையிட்டிருக்கிறார்.''

''ஏன்?''

''மக்களை அதிசயத்தில் ஆழ்த்த வேண்டுமாம்.''

''எதற்கு?''

''விண்ணகரக் கருடசேவையின்போது பெருமாளைக் கொண்டுவரும் சமயத்தில் இந்த அற்புதத்தை மக்களுக்குக் காட்ட வேண்டுமென்பது மன்னர் அவா.''



''பெருமாள்! கருடசேவை!'' என்று வெறுப்புடன் முணுமுணுத்தான் பிரதாபவர்மன்.

ராஷ்டிரகூட சேனாதிபதி முணுமுணுக்கவில்லை. அவன் முகத்தில் கவலை பெரிதும் பாய்ந்தது. ''இதில் கருடசேவை மட்டுமல்ல...'' என்றான் அவன்.

''வேறு என்ன?'' என்று கேட்டான் பிரதாபவர்மன்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை. இதில் பெரும் மர்மம் ஏதோ இருக்கிறது'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி கவலை உச்சிக்குச் செல்ல.

மற்றவர்கள் முகங்களிலும் கவலை நிரம்பி நின்றதை இதயவர்மன் கண்டான். அவன் மூளையில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்துலாவின. அவன் புத்தியே குழம்பி விடும் போலிருந்தது. பல்லவ மன்னர் உண்மையில் பத்தரா பெரும் நுழைநரியா என்ற சந்தேகம் இதயவர்மன் புத்தியையும் ஆட்கொண்டது.

## அத்தியாயம் 17

## மரண தண்டனை

சதி செய்ய முற்பட்டவர்களை மட்டுமன்றி வேவு பார்க்க வந்த தன்னையும் குழப்பத்திலாழ்த்திவிட்டு ஏதுமறியாதவன்போல் நிம்மதியுடனிருந்து வரும் பல்லவ மன்னன் தந்திவர்மனை அந்த சில நிமிஷங்களில் நினைத்துப் பார்த்த இதயவர்மனுக்குப் பல விஷயங்கள் புரியவில்லை. 'மாமன் வந்திருக்கும் காரியம், வந்து தங்கியிருக்கும் இடம் இத்தனையையும் அறிந்துள்ள மன்னர் என்னை எதற்காக இங்கு வேவு பார்க்க அனுப்பினார்? ராஷ்டிரகூடச் சதிகாரர்கள் அசைவு ஒவ்வொன்றையும் அவர் எப்படி உணர்ந்தார்? உணர்ந்தும் ஏன் ரவிவர்மனையோ மற்றவர்களையோ விசாரணைக்குக் கொண்டு வரவில்லை. இத்தனை விஷயங்களை உணர்ந்தவர் என்னை பரமேச்சுர விண்ணகரத்தில் நள்ளிரவில் சந்தித்து ரகசியம் பேசுவானேன்? தந்திவர்மன் எப்படி ராஷ்டிரகூடர்களின் நடவடிக்கைகளை அறிந்திருக்கிறாரோ அப்படியே ராஷ்டிரகூட மன்னர் கோவிந்தரும் காஞ்சியில் நடப்பதையெல்லாம் அறிந்திருக்கிறாரே, அது எப்படி? இங்கு இந்தச் சேனாதிபதியையும் இந்திராதேவியையும் தவிர அவருக்கு யார் ஒற்றர்? ஒருவேளை ராஜமாதாவாயிருக்குமோ?' என்று இப்படி பல கேள்விகளைத் தன்னுள் எழுப்பிக் கொண்ட இதயவர்மன் எதற்கும் பதில் காணாமல் தவித்தான். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயமாகத் தெரிந்தது இதயவர்மனுக்கு. அரசன், தான் அறிந்த விவகாரங்களைத் தவிர ஏதோ முக்கிய செய்தியொன்றை எதிர்பார்க்கிறார் என்பதுதான் அது. அது என்ன என்பதும் விளங்கவில்லையாயினும், அது எதுவாயிருந்தாலும் தான் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டியது ஏதுமில்லாவிட்டாலுங்கூட இந்தச் சதிகாரர்கள்மீது ஒரு கண்வைப்பது என்று தீர்மானித்துக் கொண்ட இதயவர்மன் அங்கு மேற்கொண்டு என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துக் கொண்டு நின்றான்.



கதவுகளைப் பற்றியும் சுழல் சக்கரங்களைப் பற்றியும் சேனாதிபதி சொன்னதுமே பெரும் குழப்பம் அங்கிருந்தவர்களைச் சூழ்ந்து கொண்டதை அவர்கள் முகங்கள் விளக்கியதைப் பந்தங்களின் ஒளியில் தெளிவாகக் கண்டான் இதயவர்மன். கதவுகளின் புது அமைப்பை ரகசியமாக வைத்திருந்ததற்குத் தந்திவர்மன் கூறியதாக ரவிவர்மன் சொன்ன கருடசேவைக் காரணத்தை ராஷ்டிரகூட சேனாதிபதி மட்டுமல்ல, இதயவர்மன்கூட நம்பவில்லை. அது சம்பந்தமான ஒரு ஆச்சரியமும் எழுந்தது அவன் மனதில். அந்தக் கதவுகள் பகலிலேயே பழுது பார்க்கப்பட்டு வந்ததை இதயவர்மனே சென்ற ஒரு மாதத்தில் நேரிடையாகப் பார்த்திருந்தாலும் அதைப் பற்றி அவன் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. ஒரே ஒருமுறை அங்கிருந்த சிற்பியை மட்டும் விசாரித்தான், என்ன மாறுதல் கதவுக்கு நடக்கிறதென்று. ''கதவு பழங்கதவு. திறந்து மூடும் உருளைகள் பழுதுபட்டுவிட்டன. அரசர் மாற்றியமைக்கச் சொன்னார்'' என்றான் அரசமாளிகைப் பிரதான சிற்பி. இப்படி கோயிற் கதவுகள், கோட்டைக் கதவுகள் எல்லாமே பழுதுபார்க்கப்படுவது ஆயிரம் கோயில்களையுடைய காஞ்சியில் சகஜமாகையால் அதைப்பற்றி இதயவர்மன் மேற்கொண்டு அந்தச் சமயத்தில் எந்த அக்கறையும் காட்டவில்லை. எந்த விஷயத்தையும் ஆராயும் கண்ணுடைய இதயவர்மனே அந்தப் பழுதுபார்க்கும் வேலையைப் பெரிதாக மதிக்கவில்லையென்றால் மற்ற சாதாரண மக்கள் ஏன் அதைக் கவனிக்கப் போகிறார்கள்? இப்படி யாரும் அதிக அக்கறை காட்டாவண்ணம் யாரும் சந்தேகப்படாத முறையிலும் கிழக்கு வாயிற் பெருங்கதவுகளுக்குப் புது அமைப்பும் அதன்மூலம் நகரத்துக்கொரு புது பாதுகாப்பும் அளித்த தந்திவர்மன் தந்திரத்தை எண்ணிப் பார்த்த இதயவர்மன் பெரும் பிரமிப்பில் மூழ்கினான். தவிர, அப்படி யாரும் கவனிக்காததை சேனாதிபதி ரவிவர்மன் மட்டும் எப்படிக்

கவனித்தான் என்ற சந்தேகமும் ஏற்பட்டது இதய வர்மனுக்கு.

அந்தச் சந்தேகம் இதயவர்மனுக்கு மட்டுமின்றி உள்ளேயிருந்த சதிகாரர்களுக்கும் ஏற்பட்டதால் அதைப் பற்றிச் சேனாதிபதியைக் கேட்கவே செய்தார்கள். "இந்தக் கதவின் புது அமைப்பைச் செய்து ஒரு மாதம் ஆகிறது என்கிறீர்களே? எங்களுக்கு ஏன் அதுபற்றிச் செய்தியனுப்பவில்லை நீங்கள்?" என்று கேட்டான் ராஷ்டிரகூட சேனாதிபதி

"இதைப்பற்றி இப்பொழுதுதான் நான் கேள்விப்படு கிறேன்" என்றான் பிரதாபவர்மன் கசப்பு தொனித்த குரலில்.

"எனக்கும் இது புதுச் செய்தி" என்றாள் இந்திரா தேவி.

"உங்களுக்குக்கூட சொல்லவில்லையா இந்தச் செய்தி யைப் பல்லவ சேனாதிபதி" என்று வினவிய ராஷ்டிரகூட சேனாதிபதி ரவிவர்மனைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தான்.

ரவிவர்மன் பெரிதும் சங்கடத்துக்குள்ளானான் என்பதை அவன் முகத்தில் ஏற்பட்ட சஞ்சலம் நிரூபித்தது. "இதைச் சொல்ல அவசியமில்லையென்று நினைத்தேன்" என்றான் ரவிவர்மன்.

"காஞ்சியின் பிரதான வாயிலுக்குச் செய்யப்படும் பாதுகாப்பு அத்தனை முக்கியமற்றது என்பது உமது நினைப்பா?" என்று வினவினான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

"இல்லை. அப்படி நினைக்கவில்லை" என்று பதில் சொன்னான் பல்லவ சேனாதிபதி.

"பின் ஏன் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை நீங்கள்?" என்று மீண்டும் கேட்டான் ராஷ்டிரகூடர்களின் படைத் தலைவன்.



"ரகசியமான விஷயங்களை மட்டும் சொன்னால் போதுமென்று நினைத்தேன்."

"இது ரகசியமல்லவா?"

"இல்லை. கதவுகள் புனரமைப்பு நல்ல பட்டப்பகலில் மக்கள் கண்களின் முன்பு நடந்தது, பல நாட்கள் நடந்தது."

"மக்களோ மற்றவர்களோ அதைப்பற்றிக் கேட்க வில்லையா?"

"இல்லை. காஞ்சி ஆயிரம் கோயில்களுடையது. இத்தகைய பழுது பார்க்கும் வேலை இங்கு சகஜம்."

"சுழல் உருளைகள் புதைப்பதும் சகஜமா?"

"ஆம்; சில கோயில்களில் உருளைகள் அமைத்த கதவுகள் இருக்கின்றன ஆரம்பத்தில் இவையும் அப்படித் தான் என்று நினைத்தேன். பிறகுதான் உண்மை தெரிந்தது?"

"எப்போது தெரிந்தது?"

"பிரதாபவர்மன் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு."

"எப்படித் தெரிந்தது?"

ராஷ்டிரகூட சேனாதிபதியின் கேள்விகளுக்கெல்லாம் பட்டென்று பதில் சொல்லி வந்த ரவிவர்மன் இந்தக் கடைசிக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வகையறி யாமல் சில விநாடிகள் திணறி மென்று விழுங்கி மௌனமாக நின்றான். அவன் மௌனம் மற்ற அனைவருக்கும் சந்தேகத்தை அளிக்கவே பிரதாபவர்மன் சற்றுக் கோபத்துடன் கேட்டான், "ராஷ்டிரகூட சேனாதிபதி கேட்டது உங்கள் காதில் விழவில்லையா ரவிவர்மரே?" என்று.

''விழுந்தது'' என்றான் ரவிவர்மன்.

''பின் பதில் சொல்வதுதானே. எப்படித் தெரிந்தது உமக்குக் கதவுகளின் புனரமைப்பு சூட்சுமம்?'' என்று கேட்டான் பிரதாபவர்மன் அதிகாரத் தோரணையில்.

ரவிவர்மன் மெள்ளத்தான் பதில் சொன்னான். ஆனால் பதில் அனைவரையும் ஒரு உலுக்கு உலுக்கியது. ''மன்னர்தான் என்னிடம் வலுவில் சொன்னார்'' என்று கூறினான் ரவிவர்மன்.

ஒரு விநாடி அங்கு பெரும் திகைப்பு நிலவியது. ''மன்னரா! மன்னரா! தந்திவர்மனா!'' என்று மற்ற மூலரிடமிருந்தும் ஏககாலத்தில் கேள்விகள் அடுத்த விநாடி வெளிவந்தன.

''ஆம்'' என்ற ரவிவர்மன் குரல் ஆட்டங் கண்டிருந்தது.

''மன்னரிடம் நீங்கள் விசாரித்தீர்களா?'' என்று வினவினான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

''இல்லை, அவரே கூறினார்'' என்றான் ரவிவர்மன்.

''அவனாகவா! வலுவிலா!''— ஆச்சரியம் ஒலித்தது மன்னரின் மாமன் குரலில்.

''ஆம்! என்னை வரவழைத்துக் காட்டி விளக்கினார்'' என்றான் ரவிவர்மன்.

''ரகசியமாகவா?'' என்று கேட்டான் மன்னன் மாமன்.

''ஆம்; ஒருநாளிரவு கூப்பிட்டு அனுப்பினார் அரண்மனைக்கு. நகரத்தைப் பார்த்து வருவோம் வாருங்கள் என்றார். நான் கூடச் சென்றேன். பல இடங்களைப் பார்த்துக்கொண்டு கிழக்கு வாயிலுக்கு வந்தோம். திடீரென்று மன்னர் அங்கு நின்று காவலரை



விளித்தார். காவலர் வந்ததும் கதவுகளை ஒருமுறை மூடித் திறக்கும்படி கூறினார். கதவுகள் ஒருமுறை மெல்லத் திறந்து மூடின. இன்னொரு முறையும் மூடித் திறக்கும்படி கூறினார். இரண்டாம் முறை அசுர வேகத்துடன் பெரும் புயலில் அகப்பட்ட சாதாரண சாளரக் கதவுகள் போல் அந்தப் பெரும் கதவுகள் விசிறி மூடின. நான் பிரமித்து நின்றேன். மன்னர் என் பிரமிப்பைப் பார்த்தார். 'என்ன சேனாதிபதி! இத்தனை வியப்படைந்து விட்டீர்கள்?' என்று வினவினார்,'' என்ற ரவிவர்மன் இந்த இடத்தில் பேச்சை நிறுத்தினான்.

''மேலே சொல்லுங்கள்'' என்று ஊக்கினான் மாமன்.

''நான் சில விநாடிகள் பதில் சொல்லவில்லை. வாயடைத்து நின்றேன். பிறகு சொன்னேன், 'பயங்கரம், பயங்கரம்' என்று. மன்னர் முகத்தில் வருத்தக் குறி படர்ந்தது. 'இதைப் பயங்கரம் என்று சொல்வது தவறு' என்றார். 'படைகள் புகும்போது அப்படி மூடினால் பெரு நாசம் ஏற்படும்' என்றேன் நான். 'படைகள் ஏன் உட்புக வேண்டும்? யார் நம்மீது படையெடுக்கப் போகிறார்கள்?' என்று வினவினார் மன்னர். என் மன உறுதி அன்று மிகவும் சோதிக்கப்பட்டது பிரதாபவர்மரே. ஏதாவது படைகள் வந்தாலும் இது நல்ல பாதுகாப்பு என்றேன் சமாளித்துக்கொண்டு...'' என்றான் ரவிவர்மன்.

''அதற்கு தந்திவர்மன் என்ன சொன்னான்?'' என்று வினவினான் மன்னனின் மாமன்.

''நான் சேனாதிபதியாதலால் போரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறிச் சிரித்தார். பிறகுதான் அது கருடசேவைக்காக என்றார்'' என்றான் ரவிவர்மன்.

''அதை நீர் நம்பினீர்?'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

"ஆம், நம்பினேன். பல்லவ மன்னருக்குப் பெருமாளிடத்தும் ஆழ்வார்களிடத்தும் உள்ள பக்தி உலகமறிந்தது" என்றான் ரவிவர்மன்.

"பெருமாளும் கருடனும் இந்தக் கதவுகளுக்கு நடுவில் அகப்பட்டுக் கொண்டால் என்ன ஆகும்?" என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

"அதைப்பற்றியும் சொன்னார் மன்னர்" என்றான் ரவிவர்மன்.

"என்ன சொன்னார்?"

"போரை நினைப்பவர்களுக்குத்தான் அக்கதவுகள் கெடுதல் என்றும் சமாதான மார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் இருப்பவர்களுக்கு அவை மிக நல்லவை யென்றும் கூறிக் காவலரை வேறு விதமாக அவற்றை இயக்கச் செய்தார். மீண்டும் கட்டைகள் இழுபட்டு உருளைகள் சுழன்றபோது அந்த கதவுகள் மிக மெதுவாய் அணு அணுவாகத் திறந்தன. அப்பொழுது மன்னர் உணர்ச்சியுடன் சொன்னார், 'கதவுகள் திறக்கின்றன சேனாதிபதி. வெளியே கருடாரூபராய் வருகிறார் பெருமான் என்று நினைத்துப் பாரும். மஞ்சள் வெயில் கதவுகள் அணு அணுவாக விரியும்போது உதயசூரியன் போல் சேவை தருவார் வைகுந்தநாதர்' என்று. அதைச் சொன்னபோது மன்னர் குரலில் உணர்ச்சி ததும்பி நின்றது. கண்களில் நீர் திரண்டதை நானே பார்த்தேன்" என்று விளக்கினான் ரவிவர்மன்.

"உமது கண்களில் என் மருமகன் நன்றாக மண்ணைத் தூவிவிட்டான்" என்றார் மன்னனின் மாமன்.

"உம்மீது சதா ஒரு கண்ணை வைத்திருக்கின்றான் மன்னன்" என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

"உண்மை" என்றாள் இந்திராதேவி.



இதைக் கேட்ட பிரதாபவர்மன் இந்திராதேவியை நோக்கித் திரும்பினான். "எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று கேட்கவும் செய்தான் வியப்புடன்.

"இன்றிரவின் ஆரம்பத்தில் மன்னன் ஒற்றன் ஒருவன் வந்தான் சேனாதிபதி மாளிகைக்கு" என்றாள் இந்திராதேவி.

"யாரவன்?" ராஷ்டிரகூட சேனாதிபதியின் குரலில் கவலை ஒலித்தது.

"இதயவர்மன்" என்றாள் இந்திராதேவி. அதைச் சொன்ன குரலில் வெகு நயமிருந்ததை ராஷ்டிரகூட சேனாதிபதி கவனித்தான். அதனால்தானோ என்னவோ அவன் வெகுண்டு கூறினான்: "ரவிவர்மரே! அவனை நாளைக்குள் ஒழித்துவிட வேண்டும்" என்று.

"எப்படி?" என்று கேட்டான் ரவிவர்மன்.

நினைப்பதற்குப் பயங்கரமான மார்க்கத்தைக் கூறினான் ராஷ்டிரகூட சேனாதிபதி. அதைக் கேட்ட இந்திராதேவியின் கண்களில் எல்லையற்ற அச்சம் குடி கொண்டது. ராஷ்டிரகூட சேனாதிபதியை எரித்து விடுபவள்போல் பார்த்தன அவளுடைய இந்திவரக் கண்கள். தனக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையைக் கேட்டுப் படிகளின் மறைவில் நின்ற இதயவர்மன் மட்டும் உள்ளூர நகைத்துக் கொண்டான்.

## அத்தியாயம் 18

# வைகுந்தன் திருவடி

ராஷ்டிரகூட சேனாதிபதி தன்னை மறுநாளைக்குள் ஒழித்துவிட வேண்டுமென்று கூறியதைப் பற்றியோ, ஒழிக்க அவன் கூறிய முறையைப் பற்றியோ இதயவர்மன் சிறிதும் கவலைப்படவில்லை. உண்மையில் ராஷ்டிரகூடப் பெருமகன் கூறியது மிகப் பயங்கரமான வழிதான். கவலையையும் உதறலையும் ஒருங்கே அளிக்கக்கூடிய திகிலூட்டும் முறைதான். இருப்பினும் தன் மரணத்தைவிட முக்கியமாக அந்த நிலவறையில இருந்த சூழ்நிலையைப்பற்றிய நினைப்பே இதயவர்மன் இதயத்தை ஆட்கொண்டது. ஒன்றுடன் ஒன்று முரணாக மோதிக்கொண்டிருந்த பல விஷயங்களுக்கு விடைகாண முடியவில்லை அந்த வாலிபனால்

அதே இரவின் ஆரம்பத்தில் சேனாதிபதியின் மாளிகையில் தனி அறையில் "உங்கள் உயிர் ஆபத்திலிருக்கிறது" என்று எச்சரித்த இந்திராதேவி ஒரே ஜாமத்திற்குள் அடியோடு மாறி, தான் ஒற்றன் என்பதை அந்தச் சதிகாரர்களுக்கு உணர்த்தித் தன் அழிவுக்கு அடிகோலியது ஏன் என்பது விளங்கவில்லை அவனுக்கு. மாமனான பிரதாபவர்மன் வந்துள்ள இடம், காரியம் அனைத்தையும் அறிந்துள்ள பல்லவ மன்னன் அதே விஷயங்களைப்பற்றி வேவு பார்க்கத் தன்னை எதற்காக அனுப்பினான் என்பது புரியவில்லை அவனுக்கு. மூன்றாவதாக, காஞ்சியிலுள்ள தந்திவர்மனும் வெகு தொலைவிலுள்ள கோவிந்தனும் அறிந்த விஷயங்களில் பத்திலொரு பங்குகூட அந்தச் சதிகார மேதைகளுக்குப் புரியாதிருந்தது பெரும் வியப்பாயிருந்தது அந்த வீரனுக்கு.

இத்தனையிலும் இந்திராதேவிக்குத் தன் அழிவில் இஷ்டமில்லையென்பதை மட்டும் புரிந்து கொண்டான் இதயவர்மன். "உங்கள் உயிர் ஆபத்திலிருக்கிறது" என்று அவள் எச்சரித்த குரலில் இருந்த பரிவு உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று அவன் மனம் திட்ட



மாகச் சொல்லியது. தவிர, தன்னை அழித்துவிட ராஷ்டிரகூட சேனாதிபதி ரவிவர்மனுக்கு உத்தரவிட்டதையும் அதற்கான வழியையும் கேட்டதும் இந்திராதேவியின் கண்களில் சீற்றம் மிதமிஞ்சிப் பறந்ததை இதயவர்மன் கவனிக்கவே செய்தானாதலால், ஏதோ காரணத்தை முன்னிட்டே அந்தச் சதிக்கூட்டத்தில் இந்திராதேவி தன் பெயரை இழுத்திருக்கிறாள் என்றாலும் அதில் அவளுக்குப் பூர்ண இஷ்டமில்லையென்பதையும் அறிந்துகொண்டான் இதயவர்மன். இருப்பினும் அந்தக் காரணத்தை ஊகிக்க அவனால் முடியவில்லை. காரணம் எதுவாயிருப்பினும் இந்திராதேவி ராஷ்டிரகூட சேனாதிபதியைத் துணிவுடன் எதிர்த்ததை அவன் இதயம் பாராட்டவே செய்தது.

இதயவர்மன் என்ற அரச ஒற்றன் சேனாதிபதி மாளிகைக்கு வந்திருந்தான் என்று இந்திராதேவி தெரிவித்ததும் ராஷ்டிரகூட சேனாதிபதி, "நாளைக்குள் அவனை ஒழித்துவிடவேண்டும்" என்று கூறியதைத் தொடர்ந்து, "எப்படி?" என்று சேனாதிபதி ரவிவர்மன் வினவியதும் ராஷ்டிரகூடனிடமிருந்து உடனடியாகப் பதில் வரவில்லை. சிறிது நிதானித்தே பதில் சொன்னான் அவன். பதிலில் நகைச்சுவையுமிருந்தது குரூரமுமிருந்தது. அவன் முகம் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்த பின்பே சொற்களை உதடுகள் உதிர்த்தன.

"ரவிவர்மரே! அரசனிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல இருக்கின்றன" என்று மெள்ளத் தொடங்கிய ராஷ்டிரகூட சேனாதிபதியின் இதழ்களில் விசித்திரப் புன்னகையொன்று படர்ந்தது.

"எங்கள் மன்னனிடமிருந்தா?" என்று ஏதுமறியாமல் வினவினான் ரவிவர்மன்.

"ஆம். பல்லவ மன்னனிடமிருந்துதான்!" என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

''என்ன படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்?'' என்ற ரவிவர்மன் கேள்வியில் பதற்றமிருந்தது.

''முதலில் இந்தப் பதற்றம் கூடாது. உங்கள் மன்னன் எதிலாவது பதற்றம் காட்டுகிறானா? அவனுடைய அமைதி, நிதானம் அனைத்தும் நமக்குத் தேவை'' என்று ராஷ்டிரகூடன் கூறினான்.

''சரி'' என்றான் ரவிவர்மன் வெறுப்புடன்.

''அடுத்தபடி மன்னன் எத்தனை எச்சரிக்கையுடன், ஏதுமறியாத நுழைநரி போல் அலுவல்களைப் புரிகிறானோ அப்படி நாமும் புரியவேண்டும்.''

''சொல்லுங்கள்.''

''பட்டப் பகலில் அவன் காரியங்களைப் பகிரங்கமாகவும் மிகத் தந்திரமாகவும் செய்வதுபோல் நாமும் செய்ய வேண்டும்.''

''இந்த மந்திராலோசனைக் கூட்டத்தை நடுத்தெருவில் போட வேண்டுமென்று கூறுகிறீரா?''— இதைக் கேட்ட ரவிவர்மன் கேள்வியில் இகழ்ச்சியிருந்தது.

அந்த இகழ்ச்சியைக் கவனிக்காமலேயே பதில் கூறினான் ராஷ்டிரகூட சேனாதிபதி. ''உங்கள் மன்னன் மந்திராலோசனையை நடுத்தெருவில் நடத்துவது இல்லை ரவிவர்மரே, தனது நினைப்பைக்கூட வெளியில் காட்டுவதில்லை, ஆனால் காரியங்களை மட்டும் பகிரங்கமாகச் செய்கிறான். அந்த வழியை நாம் பின்பற்ற வேண்டும்'' என்று சேனாதிபதி கடுமையுடன் சொன்னான்.

அதைப்பற்றி மேற்கொண்டு தர்க்கிக்க இஷ்டப்படாத ரவிவர்மன், ''என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்!'' என்று கேட்டு உத்தரவுக்குக் காத்திருந்தான்.

உத்தரவு நேரிடையாக வரவில்லை. மெள்ள மெள்ளவே வந்தது. ஏதோ பழைய விஷயத்தைப் பேசுபவன்போல் ஆரம்பித்த ராஷ்டிரகூட சேனாதிபதி, ''இந்த இதயவர்மன் யார்?'' என்று வினவினான்.



''என் படையில் ஒரு வீரன்'' என்றான் ரவிவர்மன்.

''சாதாரண வீரனா?'' என்று மீண்டும் கேட்டான் ராஷ்டிரகூடன்.

இம்முறை சேனாதிபதிக்குப் பதில் இந்திராதேவி பதில் சொன்னாள், ''இல்லை சாதாரண வீரனில்லை'' என்று. அவள் குரலில் இருந்த வேகத்தை இதயவர்மன் கவனித்தான். ராஷ்டிரகூட சேனாதிபதியும் அதைக் கவனித்திருக்க வேண்டும். ஆகவே இந்திராதேவியை நோக்கிக் கேட்டான் அவன், ''படைப்பிரிவின் தலைவனா?'' என்று.

''இல்லை'' என்றாள் இந்திராதேவி.

''பின் என்ன அசாதாரணம் அவனிடத்தில்?'' என்று வினவினான் ராஷ்டிரகூடன்.

''மக்களால் விரும்பப் பெற்றவன், அரசனால் மதிக்கப் பெற்றவன்!''

''ஏன்?''

''போர்களில் அதிகத் துணிவைக் காட்டியிருக்கிறான். காஞ்சியின் பெரு விழாக்களில் அபாயமான விளையாட்டுகளை அனாயாசமாக விளையாடியிருக்கிறான். போர்க்களத்தில் காட்டிய திறனுக்குப் பல விருதுகளை மன்னர் அவனுக்கு அளித்திருக்கிறார்.''

ராஷ்டிரகூட சேனாதிபதி சில விநாடிகள் தீவிர சிந்தனையில் இறங்கினான். ''இத்தனைக்கும் அவனுக்கு ஒரு படைப்பிரிவின் தலைமைப்பதவிகூட கிடைக்கவில்லை!'' என்று கடைசியாக வினவினான்.

''இல்லை'' என்றாள் இந்திராதேவி.

''இது வியப்பாயில்லையா உங்களுக்கு? இவன் செய்த சாகசச் செயல்களில் பாதியைச் செய்திருந்தால்கூட

ராஷ்டிரகூடப் படையில் இவனுக்குப் பெரும் பதவியைக் கொடுத்திருப்போமே'' என்றான் ராஷ்டிரகூட சேனாதிபதி.

இதற்குப் பதில் சொல்ல யாருக்குமே தெரியாததால் எல்லோருமே மௌனமாயிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து இந்திராதேவி மட்டும் கூறினாள், ''காரணமில்லாமல் மன்னர் பதவியளிக்காமலிருக்கமாட்டார்'' என்று.

''என்ன காரணம் அது?'' சீறி வந்தது ராஷ்டிரகூடன் கேள்வி.

''உறவினர்களைப் பதவியில் அமர்த்துவதை மன்னர் சாதாரணமாக விரும்புவதில்லை. அப்படி விருப்பம் இருந்தால் ராஜமாதுலரான பிரதாபவர்மன் நிலை இந்த நாட்டில் அரசருக்கு அடுத்தபடி இருந்திருக்கும். இவர் ராஷ்டிரகூடத்தில் இருக்கவேண்டிய நிலைமையிலிருந்தே அரசர் நோட்டத்தைப் புரிந்து கொள்ளலாம்'' என்று சுட்டிக் காட்டினாள் இந்திராதேவி.

ராஷ்டிரகூட சேனாதிபதியின் புருவங்கள் சிந்தனையுடன் குறுகின சற்று. ''இதயவர்மன் அரசன் உறவினனா?'' என்று உதிர்ந்த சொற்களிலும் சிந்தனை பிரதிபலித்தது.

''ஆம்'' என்றாள் இந்திராதேவி.

''என்ன உறவு?''

''தெரியாது.''

''யாருக்குமே தெரியாதா?''

''அரசனுக்குத் தெரியும்.''

''ஆனால் சொல்ல மறுக்கிறாராக்கும்?''

''ஆம்.''

ராஷ்டிரகூடன் முகத்தில் சில விநாடிகள் குழப்பம் தெரிந்தது. பிறகு புன்முறுவல் படர்ந்தது. அதைத்



தொடர்ந்து முகத்தில் பெரும் கடுமை நிலவியது. அவன் அடுத்த சொற்கள் நிதானத்துடனும் கடுமையுடனும் உதிர்ந்தன. ''பல்லவ மன்னன் மன ஆழத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டம் இந்திராதேவி. நாம் அனைவரும் சேர்ந்து முயன்றாலும் அது நடக்காதெனத் தோன்றுகிறது. பக்திப் போர்வையில், வைணவ வேடத்தில் உலாவும் மன்னன் தனது இதயத்தை யாருக்கும் சிறிதளவு திறக்க மறுக்கிறான். இந்த இதயவர்மன் வாழ்வில் பெரும் மர்மம் ஏதோ இருக்கிறது. காரணமாகவே மன்னன் அவனை இந்தச் சதி பற்றி வேவு பார்க்க அனுப்பியிருக்கிறான். இதயவர்மன் சிறந்த வீரன் என்பது மட்டுமல்ல இதற்குக் காரணம், வேறு ஆழ்ந்த காரணமும் இருக்கிறது. காரணத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் இதயவர்மன் அரசனின் முக்கியக் கருவிகளில் ஒருவன் என்பது மட்டும் புலனாகிறது. ஆகவே அக்கருவியை நாம் அழித்துவிட்டால் மன்னன் கையையும் உடைத்தது போலாகும். அப்படி அழிப்பதற்கும் மன்னன் வழியையே கையாளுவோம். பகிரங்கமாகவே இவனை அழிப்போம்,'' என்றான் ராஷ்டிரகூடன்.

சேனாதிபதி ரவிவர்மன் முகத்தில் கவலை அரும்பி நின்றது. ''பகிரங்கமாகவா!'' என்று வியப்பு நிறைந்த வினாவொன்றை வீசினான் அவன்.

''ஆம்''— திட்டமாக வந்தது ராஷ்டிரகூடன் பதில்.

''பகிரங்கமாக அவனை அழித்தால் அழிப்பவன் பாடு?''— ரவிவர்மன் கேள்வியில் அச்சமிருந்தது.

''அழிப்பவனுக்கு எதுவும் நேரிடாது,'' என்றான் ராஷ்டிரகூடன்.

''ஏன்?''

''இதயவர்மன் கொல்லப்பட மாட்டான், எதிர்பாராத விபத்தில் சிக்கிக் கொள்வான்.''

''எப்படி?''

''எந்தக் கதவுகளை ராஷ்டிரகூடர்களை நசுக்க மன்னன் மாற்றியமைத்தாரோ அந்த கதவுகள். அவர் ஒற்றனும் உறவினனுமான இதயவர்மனுக்கு யமனாகும்'', என்று கூறிய ராஷ்டிரகூட சேனாதிபதி, காரியத்தை எப்படி முடிக்க வேண்டும் என்பதை விளக்கவும் முற்பட்டு, ''இதயவர்மன் உமது படை வீரனாதலால் ஊரைச் சுற்றியுள்ள படைகளைப் பார்க்க நீர் செல்லும்போது அவனையும் அழைத்துச் செல்லும். உம்மை மன்னர் அழைத்துச் சென்றதுபோல அந்த அசுரக் கதவுகளுக்கருகில் வந்ததும் அவற்றை இயக்கும் முறைகளை அவனுக்கும் காட்டும், மன்னன் உமக்குக் காட்டியது போல. சுழற்கதவுகள் வேகமாக மூடும் சமயத்தில் திடீரென இதயவர்மன் அதற்குக் குறுக்கே விழுந்துவிடுகிறான்...'' என்று கூறியவன் மீதி வார்த்தைகளை முடிக்காமல் விட்டான்.

இதைக் கேட்டதும் அந்த நிலவறையில் பெரும் நிசப்தம் நிலவியது. அந்தக் கதவுகளுக்கிடையில் அசப்பிலிருக்கும் இதயவர்மனைச் சேனாதிபதி திடீரெனத் தள்ளிவிட வேண்டியதென்பதையும் உடனே விபத்து ஏற்பட்டதுபோல் கூக்குரல் கிளப்பவேண்டுமென்பதையும், இதனால் இதயவர்மன் உடல் நசுக்குண்டு போவதோடு விபத்தின் காரணமாக ரவிவர்மன்மீதும் எந்த அவநம்பிக்கையும் ஏற்படாதென்றும் அங்கிருந்த மற்றவர்களுக்குப் புரிந்திருந்தது. புரிந்திராத ஒன்றையும் ராஷ்டிரகூட சேனாதிபதி உணர்த்தினான். ''இதனால் இதயவர்மன் நீக்கப்படுவது மட்டுமல்ல, சேனாதிபதி தப்புவது மட்டுமல்ல, இன்னொரு பலனுமிருக்கிறது'' என்றான் ராஷ்டிரகூடன்.

''என்ன அது?'' என்று வினவினான் பிரதாபவர்மன்.

''மக்களால் விரும்பப்பட்டு மதிக்கப்பட்ட ஒரு வீரன் துர்மரணம் அடைந்தால் அந்தக் கதவுகளைச் சமைத்த மன்னனை மக்கள் நிந்திப்பார்கள். வைகுந்தன்



கருடசேவைக்காக அந்தக் கதவுகள் நிர்மாணிக்கப்பட்டதாக மன்னன் சொல்லி வருவதால் அந்த வைகுந்தனையும் மக்கள் நிந்திப்பார்கள். அரசன் மதவெறி பிடித்துத் திரிவதைச் சைன்னியங்கூட வெறுக்கும். இத்தனைக்கும் இந்த விபத்து அஸ்திவாரமாகும்,'' என்று சுட்டிக்காட்டிய ராஷ்டிரகூட சேனாதிபதி மெல்ல குரூரமாக நகைத்தான். அந்த நகைப்பின் ஊடே சொல்லவும் செய்தான், ''வைகுந்தன் கருடசேவைக்காக நிர்மாணிக்கப்பட்ட கதவுகள் அவன் அடியார்களை வைகுந்தன் திருவடியடைய உதவுவது பொருத்தமல்லவா? மிக மிகப் பொருத்தம்'' என்று.

அவனுடைய அந்த நகைப்பை மறைவில் நின்ற இதயவர்மன் லட்சியம் செய்யவில்லை. அவன் மனத்தைச் சிறிதும் தொடவில்லை அது. ஆனால் மறுநாள் காலையில் நந்திவர்மன் நகைத்ததும், அதுபற்றி அவன் பேசிய பேச்சும் பாடிய பாட்டும் பெருங்கோபத்தை ஊட்டின இதயவர்மனுக்கு. வைகுந்தன் திருவடி மகிமையை அத்தனை சிறப்பாக எடுத்துரைத்தான் மன்னன். அதைச் சேருவதில் உள்ள இன்பம் இணையற்றது என்றும் சுட்டிக் காட்டினான்.

## அத்தியாயம் 19

# எட்டாப் பழம்

சுழல் கதவுகளுக்கிடையே தன்னைத் தந்திரமாகத் தள்ளிக் கொன்றுவிடுமாறு சேனாதிபதி ரவிவர்மனுக்கு ராஷ்டிரகூடனிட்ட உத்தரவைக் கேட்ட பின்பு நிலவறைப் படிகளில் நிற்க அவசியமில்லாது போயிற்று இதயவர்மனுக்கு. நேரம் மிக அதிகமாகிவிட்டதாலும் முதலில் அரச ஒற்றனை அழிக்க வேண்டியது முக்கியமாகையாலும் மற்ற விஷயங்களை அடுத்த நாள் பேசிக்கொள்ளலாமென்று மன்னனின் மாமன் கூறிவிட்டபடியால், அத்துடன் அன்றைய மந்திராலோசனை முடிந்துவிட்டதென்று தெரிந்துகொண்ட இதயவர்மன் அதற்குமேலும் அங்கு நிற்க வேண்டிய அவசியமில்லாததால் விடுவிடுவெனப் படிகளில் ஏறிக் குதிரைக்கொட்டடிக்கு வந்து, அங்கு கட்டியிருந்த புரவிகள் வரிசையின் கோடியில் இரண்டு புரவிகளுக்கிடையில் மறைந்து சுவரோடு சுவராக நின்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் விளக்கை எடுத்துக்கொண்டு ராஷ்டிரகூடனுக்கு வழிகாட்டி மேலே அழைத்து வந்த சேனாதிபதி ரவிவர்மன், ராஷ்டிரகூடன் மேலே வந்ததும் அங்கிருந்த பாறையை நகர்த்தி வெகு லாகவமாக மூடிவிட்டுப் பழையபடி மாடிப்படியின் வழியாக ராஷ்டிரகூட சேனாதிபதியைத் தன் மாளிகையின் மேல் தளத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டான். அந்த இருவரும் மட்டும் நிலவறையிலிருந்து வந்ததையும் இந்திராதேவியையும் பிரதாபவர்மனையும் நிலவறையில் வைத்தே சேனாதிபதி மூடிவிட்டதையும் கண்ட இதயவர்மன் அந்த நிலவறைக்கு வேறு ஒரு வழியும் இருப்பதைப் புரிந்துகொண்டானானாலும், அந்த வழி எங்கிருக்கிறது, எப்படி இருக்கிறது என்பதை மட்டும் புரிந்துகொள்ள அவனால் முடியவில்லை. தவிர, அப்படியொரு வழியிருக்குமானால் ராஷ்டிரகூட சேனாதிபதியையும் அந்த வழியில் அழைத்துப் போகாமல் குதிரைக் கொட்டடிப்பக்கம் அழைத்துவர வேண்டிய அவசியமும், ரஞ்சனியையும் அவள் தாயையும் அவதிக்குள்ளாக்க



வேண்டிய தேவையும் என்ன என்பதும் புரியவில்லை இதயவர்மனுக்கு. ஆகவே ரவிவர்மன் ராஷ்டிரகூடனுடன் மாடிக்குச் சென்று தளக்கதவைத் தாளிட்ட பின்பு மிக மெதுவாக நடந்து ரஞ்சனியின் இருப்பிடத்தை எய்திய இதயவர்மன், ''ரஞ்சனி! வா, திட்டிவாசலைத் தாளிட்டுக் கொள்'' என்றழைத்தான்.

இதயவர்மன் புரவிக் கொட்டடிக்குச் சென்றது முதல் திகிலுடன் உட்கார்ந்து சாளரத்தின் மூலம் கொட்டடியையே கவனித்துக் கொண்டிருந்த ரஞ்சனி, அவன் குரல் கேட்டதும் ஆசுவாசப் பெருமூச்சொன்று விட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். ''அப்பா! இப்பொழுதுதான் எனக்கு உயிர் வந்தது! நீங்கள் எப்பொழுது நிலவறையிலிருந்து வெளி வந்தீர்கள்? எங்கிருந்தீர்கள்?'' என்று கேள்விகளை அடுக்கவும் செய்தாள் அவள்.

''அப்பொழுதே வந்து விட்டேன். புரவிகளிடையில் மறைந்திருந்தேன். அதிருக்கட்டும். அம்மாவைக் கூப்பிடு நான் சொல்லிக்கொண்டு போகிறேன்'' என்றான் இதயவர்மன்.

அம்மாவைக் கூப்பிடத் தேவையில்லாதிருந்தது. ''போய் வா? அப்பா?'' என்ற ஈனக்குரல் உள்ளிருந்து எழுந்தது. இதயவர்மனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள் ரஞ்சனி. ''பார்த்தீர்களா! அம்மாவை எழுப்பத் தேவையில்லை, இங்கிருக்கிற நிலையில் யாருக்குத்தான் தூக்கம் வரும்?'' என்று கூறிவிட்டு அவனுக்கு வழிகாட்டி நடந்தாள். இரண்டடி அவள் சென்றதும் அவளை அணுகி, அவள் கையின் மேல் பாகத்தைத் தனது கையால் இறுகப் பிடித்துக் கொண்ட இதயவர்மன், ''என்ன அவசரம் ரஞ்சனி! ஏன் ஓடுகிறாய்? சேனாதிபதி வந்துவிடப் போகிறானென்று பயப்படுகிறாயா?'' என்று வினவியது மட்டுமல்லாமல் அவளைத் தன்னருகாமையில் இழுக்கவும் செய்தான்.

அவன் கைப்பிடித்த இடத்தில் ரஞ்சனிக்கு மிகவும் வலிக்கவே செய்தது. ''நீங்கள் எந்த ஊர்?'' என்று கேட்டாள் ரஞ்சனி உள்ளூர நகைத்துக் கொண்டே.

''அதுதான் எனக்கே தெரியாதே'' என்றான் இதயவர்மன், அவள் கையை விட்டுத் தோளைப் பற்றித் தன்னருகில் இழுத்து நடந்து கொண்டே.

''நான் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் அவள்.

''மன்னரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத என் பிறப்பு ரகசியம் உனக்குத் தெரியும் போலிருக்கிறது!'' என்று கேட்டான் மெல்ல நகைத்து.

''ஆம்.''

''அப்படியானால் நீ மன்னருக்குச் சமம்.''

''இந்த விஷயத்தில் சமம்தான்.''

''எப்பொழுது தெரிந்துகொண்டாயோ இந்த கசியத்தை?''

''சில நாழிகைகளுக்கு முன்புதான்.''

''அப்படியானால் சொல் பார்ப்போம். நான் எந்த டு, எந்த ஊர்?''

''ராஷ்டிரகூடம்.''

''நான் ராஷ்டிரகூடனா!''— இதயவர்மன் கேள்வியில் யப்பிருந்தது.

''ஆம், சந்தேகமேயில்லை'' என்ற ரஞ்சனியின் குரல் தானமாக ஒலித்தது.

''ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லு ாயா அல்லது அத்தாட்சி ஏதாவது இருக்கிறதா?'' று வினவினான் இதயவர்மன் அவள் தோளிலிருந்து து இடது கையை இடைக்கு இறக்கி.

''அத்தாட்சி பலமாயிருக்கிறது. விநாடிக்கு விநாடி கமாகிறது'' என்ற ரஞ்சனி கலகலவென நகைத்தாள்.



''உஸ்! இரையாதே. யாராவது நம்மைப் பார்த்து விடப் போகிறார்கள்'' என்று எச்சரித்த இதயவர்மன் ''உன் பேச்சே இன்று ஒரு மாதிரி இருக்கிறது ரஞ்சனி' என்று அவளைத் தன்னருகே மிகப் பலமாக இழுத்தான்.

''இப்பொழுது பூர்ணமாகிவிட்டது'' என்றாள் ரஞ்சனி அவனைப் பக்கவாட்டில் நோக்கி.

''என்ன பூர்ணமாகிவிட்டது?''

''ராஷ்டிரகூடர்களின் குணம்'' என்று நகைத்த ரஞ்சனி, ''ஆசிரியரே...!'' என்று மிக மெதுவாக அழைத்தாள்.

''என்ன ரஞ்சனி?''— இதயவர்மன் குரல் மிகவும் குழைந்து கிடந்தது.

''நீங்கள் இந்த திட்டிவாசல் வழியாகப் பலமுறை நுழைந்து இருக்கிறீர்கள்...'' என்று மெள்ள இழுத்தாள்.

''ஆம் ரஞ்சனி!''

''ஆனால் அப்பொழுதெல்லாம் நீங்கள் திருட வில்லை.''

''இப்பொழுது?''

''நல்ல திருடர்!''

''ஏன் ரஞ்சனி?''

''முன்பெல்லாம் நீங்கள் என்னைக் கட்டிப் பிடித்து விளையாடியிருக்கிறீர்கள். அப்பொழுதெல்லாம் அது சகஜமாயிருந்தது.''

''உம்...''

''இப்பொழுது சகஜமாயில்லை. அது மட்டிலு மில்லை...''

''உம்.''

"இப்பொழுது என் மனத்தில் புதுவிதமான திகில் இருக்கிறது. அத்துடன் ஏதோ இன்பமும் இருக்கிறது. என் தாய் என்னைத் தொடக்கூடாதென்று கூறிக் காரணமும் சொன்னாள் உமக்கு. அதற்குப் பிறகும் உமது நடத்தை..."

"உம்."

"அசல் ராஷ்டிரகூடர்கள் நடத்தையாயிருக்கிறது. இப்பொழுது புரிகிறதா உமது நாடு எது என்று?"—இதைக் கேட்ட ரஞ்சனியின் குரல் விவரிக்க இயலாத பல உணர்ச்சிகளைக் கொண்டதாயிருந்தது.

சாதாரண சமயமாயிருந்தால் இந்த விவரணத்தைக் கேட்ட இதயவர்மன் கலகலவென இரைந்து நகைத்திருப்பான். ரஞ்சனியை இருகைகளாலும் இடுப்பைப் பிடித்து மேலே தூக்கிக் கீழே போட்டு வேடிக்கை பார்த்திருப்பான். ஆனால், அந்த இரவில், அதிக தூரத்திலில்லாத திட்டிவாசலை நோக்கி வெகு தாமதத்துடன் நடந்த அந்த வேளையில், இதயவர்மன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து உலாவின. ரஞ்சனி பருவமெய்திவிட்டாள் என்பதை அவன் தாய் உணர்த்திய பிறகு தன் மனம் பெரிதும் வேறுபாடடைந்து விட்டதையும் அதில் என்றுமில்லாத ஒரு கள்ளத்தனம் புகுந்துவிட்டதையும் நினைத்துப் பார்த்தான் அவன். குழந்தையாயிருந்த ரஞ்சனியோடு விளையாடுவது வேறு. பருவ மடந்தையான ரஞ்சனியுடன் விளையாடுவது வேறு என்பது அவனுக்குச் சந்தேகமறப் புரிந்தேயிருந்தது. அந்த வேற்றுமையை மனம் அறிந்திருந்தும் உணர்ச்சிகள் அவளைத் தொடவே அவனை உந்தின. அவளைத் தொட்டது பெரிதல்ல. எத்தனையோ முறை தொட்டிருக்கிறான். இருப்பினும் அவன் தொட்ட முறையே அன்று மாறுபட்டிருந்தது. இந்த ஸ்பரிசத்தில் முந்தியளவு துணிவில்லை, முந்தியளவு பகிரங்கமில்லை. முந்தியளவு



அவசியமுமில்லை. ஏதோ ஒரு திருட்டுத்தனம், பயம், ரகசியம் எல்லாமே கலந்திருந்தன இந்த ஸ்பரிசத்தில்.

ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு பெண் திடீரென்று அடையும் மாறுதலில் அவள் எத்தனை மாறுகிறாள்; அவளைச் சேர்ந்தவர்களும் எத்தனை மாறுகிறார்கள்; அவளை அணுக முயல்பவருடைய எண்ணங்களில் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்த இதயவர்மன், இயற்கை திடீரென விளைவிக்கும் உணர்ச்சிகளின் மாறுதலை நினைத்துப் பெரிதும் வியந்தான். அத்தனை வியப்பிலும் ரஞ்சனி தன்னை ராஷ்டிரகூடனென்று அழைத்தது மட்டும் சுருக்கெனப் பட்டது அவனுக்கு. அதனால் ஏற்பட்ட கோபத்தினாலோ வேறெதனாலோ தெரியாது, அவளைத் திடீரென்று இரு கைகளிலும் தூக்கிக் கொண்டு திட்டிவாசலை நோக்கி வேகமாக நடந்தான். ரஞ்சனி அவனுடைய செயலைக் கண்டு வியப்படையவில்லை, அதிர்ச்சியடையவுமில்லை. மெல்லச் சிரிக்கவே செய்தாள்.

"சரி! சரி; நான் ராஷ்டிரகூடன்தானே. அவர்கள் நடக்கிறபடி நடக்கிறேன்," என்று கூறியவன் திட்டிவாசலை அடைந்ததும் அவளைத் தொப்பெனத் தரையில் இறக்கி விட்டு திட்டிவாசலைத் திறந்து தாண்டிக் குதித்து அவளுடன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் வெளியே வேகமாக நடந்துவிட்டான்.

அவன் போவதைத் இட்டிவாசலிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள் ரஞ்சனி. சற்று தூரம் சென்றதும் ஒருபுறமாக மேய்ந்து கொண்டு இருந்த புரவி மீது அவன் பாய்ந்து அதை முழு வேகத்துடன் முடுக்கி பறந்துவிட்டதையும் பார்த்தாள். அந்தக் கட்டழகி அவள் பெரு விழிகளில் மட்டற்ற மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது. இதழ்கள் ஆனந்த நகை பூத்தன. "ஆண்மக்கள் எத்தனை முரடர்கள்! கோபம் வந்தால் ஒரு வார்த்தைகூடச்

சொல்லாமல் போக வேண்டுமா என்ன?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட ரஞ்சனி, மெல்ல திட்டிவாசல் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டு உள்ளே சென்றாள்.

இம்முறையும் அவள் மிக மெதுவாகவும் ஆழ்ந்த சிந்தனையுடனுமே சென்றாள். இதயவர்மனுடன் அவன் திட்டிவாசலைத் திறக்கச் சென்றபோது அவன் ஸ்பரிச இன்பத்தின் வயப்பட்டதால் நடை தளர்ந்தது. திரும்பும் போது அவனைப்பற்றிய எண்ணங்கள் அலைமோதியதால் ஏற்பட்ட இன்பமும் பிரிவினைத் துன்பமும் கலந்த உணர்ச்சிகள் நடையைத் தளர்த்தின. மெல்ல நடந்து வந்து விடுதிக் கதவைச் சாத்தி தாயின் பக்கத்தில் பாயில் படுத்துக் கொண்ட பிறகும் உறக்கம் வரவில்லை ரஞ்சனிக்கு. அவள் சிந்தனை, சரீரம் எல்லாமே ஏதோ வேதனையிலிருந்தன. அவள் புரண்டு, புரண்டு படுத்தாள். மகளின் சங்கடத்தைப் புரிந்துகொள்ள தாய்க்கு வினாடி நேரம்கூடப் பிடிக்கவில்லை. அவள் வேறொன்றும் கேட்கவில்லை. ''மகன் போய்விட்டானா மகளே'' என்று கேட்டாள் தாய்.

''போய்விட்டார்'' என்றாள் ரஞ்சனி.

''நானும் உன் தந்தையும் அந்தச் சிறுவனை மகனாகத் ன் நினைத்தோம்'' என்றாள் ரஞ்சனியின் தாய்.

''உம்.''

''நீயும் அப்படி நினைத்துக்கொள் மகளே.''

''எப்படி?''

''என் வயிற்றில் பிறந்தவனாக.''

தாயின் அந்தச் சொல்லுக்குப் பொருள் தெரிந்தே ந்தது ரஞ்சனிக்கு. இதயவர்மனைச் சகோதரனாகப் விக்கச் சொல்கிறாள் தாய் என்பதை உணர்ந்து ண்டாள் அவள். 'ஆனால் அது எப்படி முடியும்? த நிலை மாறிவிட்டதே இந்த இரவில், சில நாழிகை



களில்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட ரஞ்சனி தாய்க்குப் பதிலேதும் சொல்லவில்லை. பெருமூச்சு ஒன்றை விட்டுத் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அவள் தாயும் அதற்குமேல் எதுவும் பேசவில்லை. ''எட்டாப் பழம்'' என்று மட்டும் கூறிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டு கண்களை மூடினாள். ரஞ்சனியும் கண்களை மூடத்தான் செய்தாள்; ஆனால் உறங்கவில்லை.

வெகு வேகமாகப் புரவியில் சென்று தனது இருப்பிடத்தை அடைந்த இதயவர்மன் மனோ நிலையில் அப்படித்தானிருந்தது. அவனும் தொப்பென்று தனது பஞ்சணையில் மல்லாந்து விழுந்து கண்களை மூடத்தான் செய்தான். ஆனால் அதுவும் முடியாததால் கண்களை விழித்துக் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். காஞ்சிபுரத்தைச் சேராத மணமாகாத ராணுவ வீரர்கள் தங்குவதற்கென்றே நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்த மாளிகையின் அறைக் கூரைகளிலும் சிற்பங்கள் இருக்கவே செய்தன. ஆனால், அன்று மட்டும் சிற்பிகள் ஜம்பம் இதயவர்மன் மனத்திடம் சாயவில்லையாகையால் சிற்பங்களெல்லாமே ரஞ்சனியாகவும் இந்திராதேவியாகவும் உருமாறிவிட்டதால் இதயவர்மன் மனக்களம் பெரும் போரில் காஞ்சிக்கு இருந்த ஆபத்து, தனக்கிருந்த ஆபத்து, ரவிவர்மன் மாளிகைச் சதி அனைத்தும் மறந்துவிடவே, கண்டபடி கனவுகளைக் கண்டு படுத்துக் கிடந்தான் இதயவர்மன். அப்படி இரு பெண்களின் நினைப்புக்கிடையில் விழித்துக் கிடந்தவன் விடியற்காலையில் அரைத் தூக்கமாகப் பேருக்குத் தூங்கி விழித்து நீராடி மன்னரைக் காண அரண்மனைக்குச் சென்றான்.

பல்லவ மன்னன் அப்பொழுது பூசையிலிருந்தான். இதயவர்மன் அரண்மனையில் காலெடுத்து வைத்ததும் அங்கிருந்த காவலாளியொருவன், ''உங்களை மன்னர் பூசை அறைக்கு வரச் சொன்னார்'' என்றான். ஆகவே அரண்மனை வழக்கப்படி தனது அங்கிகளைக் களைந்து

முதலறையில் கொடுக்கப்பட்ட பட்டை இடையில் அணிந்து கழுத்திலிருந்த வீரச்சங்கிலியொன்றுடன் மட்டும் பூசை அறையில் நிறைந்த இதயவர்மனைத் தன்னருகில் உட்காரும்படி சைகை செய்த மன்னன் முதல்நாள் செய்தி களைச் சொல்லுமாறு கண்ணாலும் ஜாடை காட்டினான். இதயவர்மன் சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகு மன்னன் நகைத்ததன்றி, ''இதயவர்மா! நீ பாக்கியசாலி! வைகுந்தன் துயரறு சுடரடி உனக்குக் கிடைக்கப் போகிறது. அது எளிதில் கிடைக்க கூடியதல்ல. எட்டாப் பழம். இதற்குத்தான் ஆழ்வார்கள் தவங்கிடந்தார்கள்'' என்று கூறியதுடன் ''பாடு இதயவர்மா, பாடு'' என்று கூறி, ''உயர்நல முடையவன் எவனவன், மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்; அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்; துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே!'' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை மிக இன்பமாக இசைக்கவும் முற்பட்டான்.

அத்தியாயம் 20

## பெருமான் பிரசாதம்!

வேதம் தமிழ் செய்த மாறனான குருகைப்பிரானின் திருவாய்மொழியின் ஆரம்பச் செய்யுள் குளிர்ச்சியான தான் அது. இனிமை தரும் தமிழின் வளமெல்லாம் பொருந்திய நான்கு அடிகளைக் கொண்ட அற்புதக் கவிதை தான் அது. வேத உபநிஷத் சாரங்களை அநாயாசமாக ஆழ்வார் அதில் பொதித்து இருந்ததும் உண்மைதான். திருவாய்மொழியின் ஆயிரம் பாட்டுகளின் சாரமாக பரதல நிர்ணயம் செய்யும் முதல் பத்துப் பாட்டுக்களின் கலையனைத்தையும் கர்ப்பமாக வைத்துக் கொண்டிருந்த கனமான பாட்டுதான் அது. அதைக் கானமாக இசைத்த பல்லவ மன்னன் நந்திவர்மனின் சாரீரமும் பரம இனிமை யாகவே இருந்தது. இத்தனையும் இருந்தும் ஆழ்வாரின் அந்தப் புனிதமான செய்யுள்கூட இதயவர்மன் இதயத்தில் புக மறுத்தது. தத்துவங்களையும், எந்த உயரிய பொருளை யும் கத்தரிக்கும் வல்லமை வாய்ந்த லௌகிக விஷயங்கள் அவன் சிந்தனையில் மோதிக் கொண்டிருந்ததால், அந்தப் பாட்டைக் கிரகிக்க மறுத்தது அவன் மனம். ஆகவே அரசன் பணித்தபடி அவன் அந்தப் பாட்டை இசைப்பதில் கலந்து கொள்ளாமல் வாளாவிருந்தான்.

அரசன் பூஜை அறையின் சூழ்நிலை பரமனைத் துதிப் பதற்கும் பாடிப் பரவசமடைவதற்கும்`மிக உயர்ந்ததாக இருந்தது அறையின் மேற்குச் சுவரையொட்டிக் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருந்த கல் மண்டபமும் சரி, அதற்குள் வைக்கப்பட்டிருந்த சின்னஞ்சிறு பொன் மண்டபமும் சரி, சிற்ப வேலைப்பாடுகளின் நன்மை எத்தனை மடங்கு காஞ்சியில் உயர்ந்திருந்ததென்பதற்குச் சான்றாய் விளங்கின. அந்தப் பொன்மண்டபத்தின் நடுவே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விஷ்ணு மூர்த்தியின் சதுர்ப்புஜங்களும் மந்தகாசவதனமும் கிழக்குப் புறத்தி லிருந்து சாளரத்தின் மூலம் வந்து கொண்டிருந்த காலை வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தன. அந்த அர்ச்சாவ

தாரத்துக்கு மன்னன் நகை ஏதும் அணிவித்தானில்லை. ஒரே ஒரு துளசிபத்ர மாலை மட்டும் அந்த மூர்த்தியின் கழுத்திலிருந்தது. இடையே ஒரு சிறு வேஷ்டியிருந்தது. பட்டல்ல, பருத்தி ஆடை.

அந்த மண்டபத்தின் எதிரில் மன்னனும் அமர்ந்திருந்தான். அவன் இடையில் மட்டும் ஒரு பட்டு இருந்தது. இன்னொரு பட்டு இடையில் வலம் வந்து முன்புறத்தில் செருகப்பட்டிருந்தது. மன்னன் கழுத்தில் ஒரே ஒரு இரத்தின ஹாரமிருந்தது. நெற்றியில் திருமண் காப்பு கூட இல்லை. கோபி சந்தனம் மட்டும் இருகூறாகத் திருமண்போல் அவன் நுதலில் மேலெழுந்து சென்றது. இந்தக் கோலத்தில் அரசன் துறவிபோல் காட்சியளித்தான். அவன் முகத்தில் தெய்வீகக் களை இருக்கத்தான் செய்தது. ஆனால் அந்தத் தெய்வீகக் களையுடன் ஆழ்ந்த சி... எண்ணங்களும் கலந்து இருந்ததும் தோன்றியது அந்தக் காலை வெயிலில். அரசன் இதழ்களில் சதா தவழ்ந்து கொண்டிருந்த புன்சிரிப்பு ஒன்று மன்னன் மன ஆழத்தைக் கண்டுபிடிப்பது எளிதல்லவென்பதை நிரூபித்தது.

அந்தப் பொன் மண்டபத்தின் எதிரில் இருந்த தட்டு காலியாகக் கிடந்தது. அதிலிருந்த புஷ்பங்கள் அர்ச்சாவதாரத்தின் திருவடிகளில் கிடந்ததால் அரசன் காலை அர்ச்சனையை முடித்துவிட்டானென்பதையும் பாட்டுக்களைப் பாடி சாற்றுமுறை செய்ய வேண்டிய சமயத்தில் தான் வந்திருப்பதையும் புரிந்துகொண்ட இதயவர்மன், அரசன் பூஜையை முடிக்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தான். அரசன் பூஜையை முடிக்கவில்லை. முதல் பாட்டை முடித்ததுமே இதயவர்மனை நோக்கித் திரும்பி, "இதயவர்மா! நீ ஏன் பாடலைப் பாடவில்லை? கற்கண்டு கசக்கிறதா உனக்கு?" என்று வினவினான். வினவியவன் இதயவர்மன் இருந்த நிலையை நோக்கிப் புன்முறுவல் செய்தான். இதயவர்மனின் இடைப் பட்டாடையும், கழுத்தின் வீரச்சங்கிலியும், நெற்றித் திலகமும் அவனைப்



பரம பாகவதனைப்போல் அடித்து இருந்தன. மன்னன் கேட்ட கேள்விக்கு இதயவர்மன் பதில் சொல்லவில்லை. அரசன் புன்சிரிப்பினால் வெகுண்டு, "நான் இருக்கும் நிலை மன்னருக்குச் சிரிப்பாய் இருக்கிறது போலிருக்கிறது?" என்று மட்டும் கேட்டான்.

மன்னன் கண்களில் ஆழமான பார்வை உதயமாயிற்று. "நீ இருக்கும் நிலையைக் கண்டு பொறாமைப்படுவதற்குக் காரணமிருக்கிறது இதயவர்மா; சிரிப்பதற்கு ஏதுமில்லை" என்றான் மன்னன் எந்த உணர்ச்சியும் தெரியாத குரலில்.

இதயவர்மன் வியப்புடன் விழித்தான். "என் நிலை பொறாமைப்படத்தக்கதா!" என்று வியப்பு குரலிலும் ஒலிக்கக் கேட்டான்.

"ஆம், இதயவர்மா! இந்த பூஜை அறைக்கு ராணியையும் உன்னையும் தவிர நான் வேறு யாரையும் அனுமதிப்பதில்லை. இதைக் கண்டு அரண்மனையில் பொறாமைப்படாதவர்கள் கிடையாது. என் மகன் நந்தியைக்கூட நான் இங்கு அனுமதிப்பதில்லை. அத்தகைய உயர் பதவியை உனக்களித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல இதயவர்மா! பூஜையில் என்னுடன் சேர்ந்து பாடும்படி நான் ராணியைக்கூடக் கேட்டதில்லை. உன்னை நான் கேட்டிருக்கிறேன். இந்தச் சந்நிதியில் நீயும் நானும் சேர்ந்து பாடியிருப்பது அரண்மனையில் அனைவருக்கும் தெரியும். அரண்மனையில் தெரிந்தால் அம்பலத்துக்குத் தெரிந்ததுபோலத்தான். இப்பொழுது அரண்மனை நிலை அப்படியிருக்கிறது" என்றான் மன்னன்.

மன்னன் திரும்பத் திரும்பப் பூசையைப் பற்றியும் ஆழ்வார் பாட்டைப் பற்றியும் பேசியதைக் கேட்டதால் வெறுப்படைந்த இதயவர்மன், பதிலேதும் சொல்லாமல் மௌனமாயிருந்தான். அந்த மௌனத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளாதது போலச் சொன்னான் நந்திவர்மன், "இதயவர்மா! நீயும் வைகுந்தன்

பக்தன். நானும் அப்படித்தானென்று நினைக்கிறேன். நாமிருவரும் இப்பொழுதிருக்கும் கோலத்துடன் வெளியே சென்றால், என்னையும் உன்னையும் குருவும் சீடனுமாக மக்கள் மதிப்பிடுவார்கள்'' என்று.

இதற்கு மேல் பொறுமையை இழந்துவிட்ட இதய வர்மன், ''நீங்கள் பூசையை முடியுங்கள். முக்கியமாகப் பேச வேண்டியது இன்னுமிருக்கிறது'' என்றான்.

''இன்னுமிருக்கிறதா? நேற்றிரவு நடந்த விஷயங்கள் அனைத்தையும்தான் சொல்லிவிட்டாயே நீ!'' என்றான் தந்திவர்மன்.

''சொல்லிவிட்டேன். மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் உத்தரவிடவில்லையே!'' என்று வினவினான் இதயவர்மன்.

''உத்தரவிடுவதற்கு என்ன இருக்கிறது? உனக்குத் தான் வைகுந்தன் திருவடி கிடைக்கப்போகிறதே, அதுவும் நமது சேனாதிபதி கையால், கருடசேவைக் கதவுகளிடை யில். அப்பப்பா! யாருக்கும் கிட்டாத பெரும்பாக்கியம். எனக்கும் அந்த மாதிரி பாக்கியம் கிடைக்க வேண்டு மென்று வைகுந்தனை இறைஞ்சுவோம்'' என்றான் பல்லவ மன்னன்.

இதயவர்மன் எரிச்சல் தாங்கமுடியாத நிலைக்கு வந்து விடவே, ''அப்படியானால் நான் பெருமாள் திருவடியை அடைய வேண்டியதுதானா?'' என்று வினவினான் சினத்துடன்.

''அதிலென்ன சந்தேகம்?'' என்று கேட்டான் மன்னன்.

அரசன் விளையாடுவதாகத்தான் தோன்றியது இதய வர்மனுக்கு. ''அதிலென்ன சந்தேகமா?'' என்றான் வியப்பும் எரிச்சலும் கலந்த குரலில்.



''ஆம்.''

''அப்படியானால்...''

''வைணவர் ஒவ்வொருவரும் எந்தத் திருவடியை அடையப் பிரயத்தனப்படுகிறார்களோ அந்தத் திருவடியை அடையப் போகிறாய் நீ.''

''இதுதான் தாங்கள் எனக்குக் குருவாயிருக்கும் லட்சணமா?''

''திருவடி மார்க்கத்தைக் காட்டுவதுதான் ஆசார்யன் காரியம். ஆனால் அந்தப் பயனை நான் இழந்து விட்டேன்.''

''எப்படி?''

''அதை உனக்குக் காட்டப் போவது நமது சேனாதிபதி; அதற்கு வழி சொல்லிக் கொடுத்தது ராஷ்டிர கூட சேனாதிபதி. அவ்விருவரும்தான் உனக்கு இனி ஆசார்யர்கள்.''

''அப்படியானால் அவர்களை நாடிச் செல்லட்டுமா?'' என்ற இதயவர்மன் கேள்வியில் கோபம் மிதமிஞ்சி ஒலித்தது.

''அவசியமில்லை'' என்றான் மன்னன்.

''அவசியமில்லையென்றால்?'' என்று கேட்டான் இதயவர்மன்.

''அவர்கள் உன்னைத் தேடி வருவார்கள். சீடனிருக் கும் இடம் நாடி அவனை மோட்ச பரனாகச் செய்ய வேண்டியது ஆசார்யன் கடமை. அந்த இரண்டு சேனாதிபதிகளையும்விட அக்கறையுடன் செய்யக் கூடியவர்கள் இப்பொழுது காஞ்சி மண்டபத்தில் இல்லை'' என்ற தந்திவர்மன், இதயவர்மன் இதயத்தில் துளிர்த்த கோபத்தையோ, கண்கள் வெகுண்டு வீசிய வெந்

தணலையோ லட்சியம் செய்யாமல் திருவாய்மொழியின் இரண்டாவது பாசுரத்தை ''மனனக மலமற...'' என்று துவங்கிப் பாடினான். அதைத் தொடர்ந்து மற்ற எட்டுப் பாடல்களும் மற்றும் திருமங்கையாழ்வாரின் சில பாடல்களும் வெகு வேகத்தில் பல ராகங்களில் வெளிவந்தன. பிறகு மன்னன் மீதிருந்த புஷ்பங்களையும் துளசி தளங்களையும் எடுத்து விக்ரகத்தை அருச்சித்தான். எதிரே தங்கவட்டிலிருந்து தீர்த்தத்தை உத்தருணியில் எடுத்து எடுத்து உபசரித்தான். பிறகு, அடுத்திருந்த பெரிய வெண்கலத் திருவிளக்கில் கற்பூரத்தைக் கொளுத்தித் தட்டில் வைத்து அவ்வொளியில் ஆண்டவன் திருமுகத்தை நீண்ட நேரம் தரிசித்தான். பிறகு திருவடியிலிருந்த துளசிப் பத்திரங்களை எடுத்துத் தட்டில் போட்டுக் கொண்டு திருவடிக்கு தீபாராதனை செய்தான். திருவடிக்கு தீபாராதனை செய்யும்போது, ''எம்பெருமான் திருவடிகளைப்பார். இதை, துயரறு சுடரடியென்கிறார் ஆழ்வார். உன் துன்பத்தை இது நிச்சயமாய் அறுக்கும்'' என்றான் மன்னன்.

இத்தனைக்குப் பிறகு கற்பூரத் தட்டை எதிரில் வைத்துக் கொண்டு, ''இதயவர்மா! ஆண்டவன் சந்நிதானத்தில் ஒளிவு மறைவு கிடையாது தெரியுமா?'' என்று கேட்டான்.

சங்கு சக்ர கதாபாணியாக நின்ற அந்த அர்ச்சா மூர்த்தியைத் தரிசித்ததில் இதயவர்மன் மனமும் மிகவும் கனிந்திருந்தது. நிதானத்துடன் சொன்னான்: ''தெரியும் மன்னவா!'' என்று.

''இந்த சேவைக்கு இடைப்படும் யாரையும் நாம் இங்கு அனுமதிப்பதுதானே நியாயம்?'' என்றும் கேட்டான் மன்னன்.

மன்னன் கேள்வி பெரும் புதிராயிருந்தது இதயவர்மனுக்கு. யாரையும் பூசை அறையில் புகவிடாத மன்னன் எதற்காகத் திடீரென்று அந்தக் கேள்வியைக்



கேட்கிறானென்பது விளங்கவில்லை அந்த வாலிப வீரனுக்கு. ஆகவே மன்னனை நோக்கிக் கேள்வி கேட்கும் பாவனையில் கண்களை உயர்த்தினான்.

''அந்தக் கதவுக்கருகில் இந்திராதேவி கஷ்டப்பட்டு நிற்கிறாள். அவளை அழைத்து வா'' என்று மன்னன் சற்று எட்ட இருந்த ஒரு திரைச்சீலையைக் காட்டினான்.

அந்தத் திரைச்சீலைக்குப் பின்னால் ஒரு கதவிருப்பது அன்றுவரை இதயவர்மனுக்குத் தெரியாததலால் ஒரு விநாடி விழித்தான். அடுத்த விநாடி துள்ளி எழுந்து சென்று திரைச்சீலையை விலக்கிக் கதவைச் சரேலெனத் திறக்கவே அதன்பின் நின்றிருந்த இந்திராதேவி சட்டென்று விலகியும் "அவள் நெற்றியில் கதவு மூலை இடித்துச் சிறு காயம் ஏற்படவே செய்தது. அந்தக் காயத்திலிருந்து துளிர்த்த ரத்தத்தைக் கண்டதும், ''மன்னிக்க வேண்டும்'' என்று மன்றாடிய இதயவர்மனை எரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்த இந்திராதேவி நந்திவர்மன் பக்கத்தில் போய் நின்றாள்.

நந்திவர்மன் முகத்தில் அவளைக் கண்டதும் அன்பு கனிந்தது. இந்தப் பூஜை அறையில் நான் யாரையும் அனுமதிப்பது கிடையாது. உனக்கு இத்தனை அக்கறை வைகுந்தன் சேவையிலிருக்கிறதென்று அறிந்திருந்தால் உனக்கு அனுமதி அளித்திருப்பேன். இனி நீ எப்பொழுதும் இங்கு வரலாம். இதயவர்மனுக்கு உள்ள சலுகை உனக்கும் இனி உண்டு. இனி நீ மறைந்திருந்து ஆழ்வார் பாசுரங்களைக் கேட்கவேண்டியதில்லை'' என்று அன்புடன் கூறி விட்டு அவளுக்கு வட்டிலிருந்து பெருமாள் தீர்த்தமும் தட்டிலிருந்து துளசி தளம் ஒன்றும் கொடுத்தனுப்பினான். இந்திராதேவி சரேலென்று வெகு கோபத்துடன் வெளியேறினாள். அடுத்தபடி இதயவர்மனுக்குத் தீர்த்தம் கொடுத்தான் நந்திவர்மன். ஆனால் இந்திராதேவிக்குக் கொடுத்ததுபோல் ஒரு தளம் மட்டும் கொடுக்காமல் ஒரு

கைப்பிடி நிறைய துளசிப் பிரசாதத்தை எடுத்து இதயவர்மன் கையில் போட்டான்.

''எதற்கு இத்தனை துளசி?'' என்று கேட்டான் இதயவர்மன், இரு கைகளிலும் துளசிதளக் கும்பலை ஏந்திய வண்ணம்.

''அதிகமாக இருக்கிறதா? பெருமாள் திருவடியிலிருந்து எடுத்ததை அப்படியே போட்டுவிட்டேன்'' என்று கூறிவிட்டு இதயவர்மன் கைகளிலிருந்த துளசிக் கும்பலில் மேலிருந்த சில தளங்களை எடுத்துக் கொண்டான் மன்னன். இதயவர்மன் முகம் விவரிக்க இயலாத பிரமிப்பில் ஆழ்ந்தது. மன்னன் எடுத்த துளசி தளங்களுக்கடியில் இருந்தது ஒரு ஓலை. ''பெருமாள் பிரசாதம்'' என்று கூறிய நந்திவர்மன் அர்த்தபுஷ்டியுடன் தலையை அசைத்தான்.

அத்தியாயம் 21

# ஆணையிடுங்கள்

மன்னனான நந்திவர்மன் பெருமாள் திருவடியிலிருந்து எடுத்துத் தன் கைநிரம்ப திருத்துழாய் தளங்களைப் போட்டதையும், பின்பு அதிலிருந்து சிறு பகுதியை எடுத்துக் கொண்டதையும், சாதாரண சம்பவமாக நினைத்த இதயவர்மன், அந்தத் திருத்துழாய்க்கு அடியிலிருந்த ஓலையைக் கண்டதும் பிரமித்தே போனான். அந்த ஓலையைப் பார்வையிலேயே சுட்டிக் காட்டிய மன்னன், ''பெருமாள் பிரசாதம்'' என்ற சொற்களை அழுத்திச் சொல்லியதையும் அர்த்தபுஷ்டியுடன் தன்னைப் பார்த்ததையும் கண்டதும் அரசனின் உத்தரவு அந்த ஓலையில் அடங்கியிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டதால் இரு கைகளையும் இறுக மூடிக்கொண்டு, திருத்துழாயோடு ஓலையையும் சேர்த்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு மன்னனுக்குத் தலை வணங்கி வெளியேறினான். முன்னறைக்கு வந்ததும் பட்டாடைகளைக் களைந்து பழைய உடை அணிந்து ஓலையையும் திருத்துழாய்க் குவியலையும் கச்சைக்குள் வைத்துக்கொண்டு அரண்மனையை விட்டு வெளியேற முற்பட்டான். அவன் அரண்மனையின் இரண்டாவது கட்டை அணுகியதும் காவலனொருவன் அவனைக் குறுக்கிட்டு, ''வீரரே! தங்களைப் பார்க்க யாரோ நந்தவனத்தில் காத்திருக்கிறார்கள்'' என்று பணிவுடன் கூறினாலும் அவன் குரலில் அது பெரிய இடத்து உத்தரவு என்பதற்கான திட்டமிருந்தது.

முதல் நாள் மாலையிலிருந்தே பல விசித்திரங்களைக் கண்டிருந்த இதயவர்மன் இதயம் ஆச்சரியமென்ற உணர்ச்சிக்குப் புறம்பாகிவிட்டதால் சர்வசகஜமாகக் காவலனை நோக்கி, ''யார் காத்திருக்கிறார்கள்!'' என்று வினவினான்.

"நேராக இந்த இரண்டு பின் வாசல்களைக் கடந்தால் அரண்மனைத் தோட்டமிருக்கிறது" என்று காவலன் விண்ணப்பித்துக் கொண்டான்.

"அது தெரியும் எனக்கு" என்றான் இதயவர்மன் கோபத்துடன்.

"அங்கு சென்றவுடன் காத்திருப்பது யாரென்பதைத் தாங்களே அறிந்து கொள்ளலாம்," என்றான் காவலன் பணிவுடன்.

இதயவர்மனுக்கு நிலைமை தெள்ளெனப் புரிந்தது. காத்திருப்பது யாரானாலும் அதைச் சொல்ல காவலனுக்கு அனுமதியில்லையென்பதைப் புரிந்துகொண்டான். தவிர, காத்திருப்பது யாரென்பதை ஊகிப்பதும் அவனுக்குக் கஷ்டமாயில்லை. மன்னனுடன் தான் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த இந்திராதேவியைத் தவிர வேறு யாரும் அரண்மனை நந்தவனத்தில் காத்திருக்க முடியாதென்பது அவனுக்குத் திட்டமாகத் தெரிந்திருந்தது. இருப்பினும் வெட்ட வெளிச்சமாக அந்தப்புரத்தின் அரச மகளொருத்தி தன்னைப் போன்ற வீரனை நந்தவனத்துக்கு அழைப்பதென்பது மிகத் துணிகரமான செய்கையாகப் பட்டது அவனுக்கு. இருப்பினும் இந்திராதேவியிருந்த நிலை, அவள் சிக்கிக்கிடந்த சதி, இவை சாதாரண சம்பிரதாயத்துக்கும் அந்தப்புர மரபுக்கும் அப்பாற்பட்டவையாகையால் அவள் அப்படித் தன்னை அழைப்பதைத் தவிர வேறு வழியில்லையென்பதைப் புரிந்து கொண்ட இதயவர்மன் காவலன் சொன்னபடி அந்தப்புர நந்தவனத்தை நோக்கிச் சென்றான்.

பல்லவ அரண்மனை நந்தவனத்தின் எழிலைப் பற்றியோ சிறப்பைப்பற்றியோ விவரிக்கத் தேவையென்ன இருக்கிறது? பெரும் சிற்பிகளைக் கொண்ட பல்லவ காஞ்சியின் அந்தப்புர நந்தவனமும் ஒரு சிற்பச்சாலை



போலவே இருந்தது. சின்னஞ் சிறு பூஞ்செடிகள், பெரும் புஷ்பமரங்கள், இடையிடையே கொடி வீடுகள், துர்க்கேச நந்தினியைப் போலவே வளைக்கப்பட்ட விருட்ச ஜாலங்கள் எல்லாமாகச் சேர்த்துப் பலப்பல விடுதிகள் இருப்பதைப் போன்ற பிரமையை அளித்தன. மரங்களையும் கொடிகளையும் இணைத்த மாதிரியில்கூட சிற்ப சாஸ்திரத்தின் நுட்பங்கள் தெரிந்தன. கொடிகளும் மரங்களும் இணைந்த சிற்பக் கூடங்களின் தலைகளிலும் உட்புறங்களிலும் மலர்ந்து கிடந்த மலர்க்கூட்டங்கள் காலை வெயிலில் பளபளத்தன. கண்ணுக்கும் நாசிக்கும் கிடைத்த அந்தப் பெருவிருந்தைப் பருகியவண்ணம் நந்தவனக் கொடிகளிடையும் மரங்களிடையும் நடந்து சென்ற இதயவர்மன் தன்னை அழைத்தவர் எங்கிருக்கிறார் என்பதைத் தேடிப் பார்த்துக் கொண்டே நடந்தான். நீண்ட தூரம் அவன் நந்தவனத்தில் செல்லுமுன்பே பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மறைவிலிருந்து லேசாக வளையலைச் சத்தம் செய்து அவனுக்குத் தன்னிருப்பிடத்தை உணர்த்தினாள் இந்திராதேவி.

இந்திராதேவியைக் கண்டதும் தனது ஊகம் சரியென்பதை நிர்ணயித்துக் கொண்ட இதயவர்மன் அந்த மரத்தை நோக்கிச் சென்றான். அவன் வரத் தொடங்கியதும் மரத்தின் மறைவிலிருந்து வெளிப்போந்த இந்திராதேவி தன்னைத் தொடர்ந்து வரும்படி அவனுக்குச் சைகை காட்டிவிட்டு நந்தவனத்தில் மரங்கள் அடர்ந்துகிடந்த உட்புறம் நோக்கி நடந்தாள். அவளைச் சற்று தூரத்தில் பின் தொடர்ந்து சென்ற இதயவர்மன் அவள் நந்தவனத்தின் நெருக்கத்தில் இருந்த ஒரு கொடி வீட்டில் நுழைந்தவுடன் சற்று சங்கடப்பட்டு அதன் வாயிலிலேயே நின்றான். "உள்ளே வாருங்கள்" என்ற இந்திராதேவியின் மென்மையான கண்டிப்புக் குரல் அவனை உள்ளே இஷ்டவிரோதமாக நுழைய வைத்தது.

கொடிவீடு அவ்விருவரையும் வளைத்து நின்றது. அதன் மேல் படர்ந்த சந்தன முல்லையின் மலர்கள் அந்த

இருவர் தலையை மட்டுமன்றித் தோள்களையும் தொட்டன. கொடியின் ஒரு பகுதி இந்திராதேவியின் செவ்விய கன்னத்தைத் தனது நுனியிலிருந்த மும்மலர் கொத்தால் தடவிக் கொடுத்தது. அந்தக் கொடி வீட்டினுள்ளே அப்சர மங்கைபோல் நின்ற இந்திராதேவியைப் பிரமிக்கும் கண்களாலும் சந்தேகப்பட்ட இதயத்தாலும் பார்த்தான் இதயவர்மன். அத்தகைய ஓர் அழகி என்ன காரணத்தைக் கொண்டு, எந்தப் பயனைக் கருதி, பல்லவ சாம்ராஜ்யத்தை அழித்துவிட முயலும் சதிக் கூட்டத்தில் சேர்ந்தாள் என்று எண்ணிப் பார்த்த இதயவர்மனுக்கு இந்திராதேவியிடம் வெறுப்புக்குப் பதில் அனுதாபமே ஏற்பட்டது. அவள் கன்னத்தைத் தடவும் சந்தனமுல்லை மலர்கள் எப்படி நன்றாக வெயில் ஏறியவுடன் வாடி கருகிவிடுமோ, அப்படியே சதியின் கடுமை ஏறியவுடன் இந்திராதேவியாகிய மலரும் அதன் சூழ்ச்சி வெப்பத்தில் அழிந்து போகுமென்பதை அவன் உணர்ந்திருந்தான். ஆகவே அவளை அவன் கேட்ட முதல் கேள்வியில் அனுதாபமே நிரம்பி நின்றது. ''இப்படிப் பகிரங்கமாகக் காவலனை விட்டு என்னை அழைப்பது அரசமகளிருக்குத் தகுதியா?'' என்று வினவினான் இதயவர்மன் வருத்தத்துடன்.

''இரகசியம் என்று நாம் நினைப்பது பறந்துபோகும் போது பகிரங்கத்திலிறங்குவதைத் தவிர வேறு வழியென்ன இருக்கிறது?'' என்று வினவினாள் இந்திராதேவி. அவள் கேள்வியில் வெறுப்பு மண்டிக் கிடந்தது. வருத்தமும் மிதமிஞ்சித் தெரிந்தது

அவள் எதைக் குறிப்பிடுகிறாளென்பது இதயவர்மனுக்கு நன்றாகப் புரிந்தது ''ஆம்; ஆம்'' என்று ''ஆம்''களை மட்டுமே பதிலாக உரைத்தான் அவன்.

இந்திராதேவி அத்தனை இக்கட்டான நிலையிலும் இன்பப் புன்முறுவல் ஒன்றைத் தன் செவ்விய இதழ்களில்



தவழவிட்டுக்கொண்டாள். ''என்ன ஆம் ஆம்?'' என்று கேட்கவும் செய்தாள்.

இதயவர்மன் பதில் சொல்லச் சிறிது சங்கடப்பட்டான். அப்சர மங்கை போன்ற அரச மகள், முல்லை மலர்கள் முகத்தையும் கன்னத்தையும் தடவ, தன்னுடன் தனித்துக் கொடி வீடு அளித்த மறைவில் நிற்கையில் பேசவும் சங்கடமாய் இருந்தது அந்த வாலிபனுக்கு. ஆகவே ''இரகசியம் பகிரங்கமாகிவிட்டது...'' என்றுமென்று விழுங்கி வார்த்தைகளைச் சிரமப்பட்டு உதிரவிட்டான்.

இந்திராதேவியின் இந்தீவிர நயனங்கள் அவனைக் கூர்ந்து நோக்கின. பிறகு சர்வ சாதாரணமாகச் சொன்னாள் அவள், ''நீங்கள் பூசை அறையில் மன்னரிடம் கூறிய அனைத்தையும் ஒட்டுக் கேட்டேன்'' என்று.

இப்படி அவள் பட்டவர்த்தனமாகப் பேசியதைக் கேட்ட இதயவர்மன் சங்கடம் மிக அதிகமாகிவிடவே, ''ஆமாம்'' என்றான் அவன். அந்த ஒற்றைச் சொல்லைச் சொல்வதற்கே பெரும் பிரயாசையாயிருந்தது அவனுக்கு.

இந்திராதேவி கொடி வீட்டின் உச்சியைத் தன் ஒரு கையால் பிடித்துக்கொண்டு தலையைச் சாய்த்தவண்ணம் விஷயத்தை சர்வ சகஜமாகவும் துணிவுடனும் அலச முற்பட்டு, ''நிலவறையில் நடந்ததை நீங்கள் எப்படி ஒட்டுக் கேட்க முடிந்தது?'' என்று ஒரு கேள்வியைத் தொடுத்தாள்.

இதயவர்மன் அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. ''சதியைக் கவனிக்க மன்னர் உத்தரவிட்டால் அதற்கு வேண்டிய வசதிகளை உண்டுபண்ணிக் கொள்வது வீரர்கள் கடமை'' என்று மட்டும் சொன்னான்.

''அங்கு நிலவறையிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள் இந்திராதேவி.

''ஆராய்ந்ததில் தெரிந்தது'' என்றான் இதயவர்மன் பிடி கொடுக்காமல்.

''யாரைக் கொண்டு ஆராய்ந்தீர்கள்?''— இந்திரா தேவி கடுமையுடன் கேட்டாள்.

''சதியை ஆராயத் துணைகொள்வது விவேகமல்ல'' என்று சுட்டிக் காட்டினான் இதயவர்மன்.

''துணையின்றி அந்த இடத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாது. அங்கு வரும் ராஷ்டிரகூடர்களே சேனாதிபதி துணை கொண்டுதான் வருகிறார்கள்'' என்று குறிப்பிட்டாள் இந்திராதேவி.

''நானும் சேனாதிபதி துணைகொண்டுதான் வந்தேன்.''

''சேனாதிபதி வழி காட்டினாரா?''

''ஆமாம்; ராஷ்டிரகூடர் சேனாதிபதிக்கு வழி காட்டிச் சென்றார். நான் புரவிகளிடை மறைந்து நின்று பார்த்தேன். அவ்விருவரும் நிலவறைப் படிகளில் மறைந்ததும் நானும் படிகளில் இறங்கினேன்.''

இந்திராதேவி ஒரு விநாடி மௌனம் சாதித்தாள். பிறகு கேட்டாள், ''புரவிக் கூடத்துக்குள் எப்படி நுழைந்தீர்கள்?'' என்று.

இதயவர்மன் அவளை ஏறெடுத்து நன்றாக நோக்கினான். ''நான் இதற்குப் பதில் சொல்லுமுன்பு நீங்களும் ஒன்று எனக்கு விளக்க வேண்டும்'' என்றான்.

''கேளுங்கள்'' என்றாள் இந்திராதேவி.

''புரவிக் கூடத்திலிருக்கும் வழியைத் தவிர உள்ளே வேறு வழி எங்கிருக்கிறது அந்த நிலவறைக்கு?'' என்று வினவினான் இதயவர்மன்.

''சேனாதிபதி மாளிகையின் கீழறை ஆயுதசாலை.''



''ஆம்''

''அதற்கும் நிலவறைக்கும் இடையிலிருப்பது ஒரே சுற்சுவர். குடவரைக் கோயில்களைப்போல் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது அந்த நிலவறை.

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த இதயவர்மன், ''நீங்கள் எனக்கு முன்பு அங்கு வந்து சேர்ந்தது எப்படி என்பது விளங்குகிறது'' என்றான்.

இந்திரதேவியின் இந்தீவிரக் கண்களில் ஏதோ விவரிக்க இயலாத ஒளியொன்று வீசியது. ''வீரரே! நீங்கள் வந்த முறையும் எனக்குத் தெரியும்'' என்றாள் இந்திராதேவி வேதனையுடன்

''எந்த முறையில் வந்தேன்?'' என்று வினவினான் இதயவர்மன் வியப்புடன்.

''சொந்த முறையில்.''

''சொந்த முறையிலா?''

''ரஞ்சனியிடம் உங்களுக்குச் சொந்த முறையிருக்கிறதல்லவா?''

''என்ன! என்ன!''

''நீங்கள் ரஞ்சனிக்கு...''

''ஆசிரியன்.''

''என்ன பாடம் சொல்லிக் கொடுக்கிறீர்கள்?''

''இப்பொழுது ஏதுமில்லை. முன்பு சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தேன்''

''அந்தப் பாடம் பயனற்றது. ஆனால்...''

''என்ன சொல்கிறீர்கள்?''

''நேற்றுச் சொல்லிக் கொடுத்த பாடம் பயனுள்ளது

''நேற்றுப் பாடம் சொல்லிக் கொடுத்தேனா இல்லையே. கதவைத் திறக்கச் சொல்லி உள்ளே வந்தேன்.

"அது தெரியாது எனக்கு."

"பிறகு கதவை மூடிக் கொள்ளச் சொல்லிவிட்டு வெளியேறினேன்."

"அது தெரியும்!"

"எப்படித் தெரியும்?"

"நிலவறையிலிருந்து புரவிக் கூடத்துக்கு நான்தான் முதலில் வந்தேன். தூரத்தே நீங்கள் ரஞ்சனியுடன் போய்க் கொண்டிருந்தீர்கள்."

"ஆமாம்."

"ஆசிரியராக..."

"ஆசிரியராகவா?"

"ஆமாம், பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு."

"என்ன பாடம்?"

"காதல் பாடம்."

"அதைக் கற்பிக்க அவள் இடையை அத்தனை இறுக்க வேண்டுமா வீரரே?"—இதைக் கேட்ட இந்திராதேவி அவனை உற்று நோக்கினாள்.

இதயவர்மன் முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது. இனி ரஞ்சனியின் உயிரும் மானமும் தங்குவது கஷ்டம் என்பதைப் புரிந்துகொண்டான் அவன். அவளைக் காப்பாற்ற துரித நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமும் புரிந்தது அவனுக்கு. "இது சேனாதிபதிக்குத் தெரியுமா?" என்று வினவினான் அவன்.

"என்னைத் தவிர யாருக்கும் தெரியாது. ரஞ்சனிக்கு எந்த ஆபத்துமில்லை தற்சமயம். கலங்காதீர்கள்" என்ற இந்திராதேவி மேலும் சொன்னாள், "வீரரே! நீங்கள் சதிகாரர்களைக் கவனிப்பதுபோல் சதிகாரரும் உங்களைக் கவனிக்கிறார்கள் என்பதைப் புரிய வைக்கவே உங்களை இங்கு வரவழைத்தேன். உங்களைக் கொன்றுவிட



இன்றோ நாளையோ முயற்சி நடக்கும். அப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது ஒன்று உண்டு" என்று.

"என்ன தேவி! ஆணையிடுங்கள்" என்றான் இதயவர்மன் உணர்ச்சிப் பெருக்குடன்.

"இன்றும் நாளையும் நானும் உங்களுடன் வருவேன். நான் இல்லாமல் நீங்கள் எங்கும் போகக்கூடாது" என்றாள் இந்திராதேவி.

இதயவர்மன் விழித்தான். "அதெப்படி சாத்தியம்? நீங்கள் அந்தப்புரத்து அரச மகள். நான் ஒரு சாதாரண வீரன். ஊர் பேர் தெரியாதவன்" என்றான் இதயவர்மன்.

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர். உங்களுடன் நான் வருவதற்கான ஏற்பாட்டை நானே செய்கிறேன்" என்றாள்.

"தேவியின் ஆணை" என்று தலை வணங்கினான் இதயவர்மன்.

"என் உத்தரவின்றி நீங்கள் இருப்பிடத்தை விட்டு அசைவதில்லையென்று ஆணையிடுங்கள்" என்று கூறித் தன் கையை நீட்டினாள் இந்திராதேவி.

அந்தக் கையைத் தொடவும் அஞ்சினான் இதயவர்மன் சில விநாடிகள். பிறகு தைரியத்துடன், "ஆணையிடுகிறேன் தேவி" என்று தன் வலக்கையை அவள் வலக்கரத்தில் வைத்தான். ஆனால் கையைப் பல விநாடிகள் எடுக்கவில்லை அவன். அவளும் கையைப் பின் வாங்கவில்லை. இரண்டு கைகளும் ஒன்றையொன்று தழுவி நின்றன. இந்திராதேவியின் கைமட்டும் லேசாக நடுங்கியது.

## அத்தியாயம் 22

## அசுரக் கதவுகளுக்கிடையில்

கையுடன் கை தழுவி நின்ற அந்தச் சமயத்தில் இந்திராதேவி, இதயவர்மன் இருவருமே சுயநிலை இழந்திருந்ததால் சில விநாடிகள் அந்தக் கொடி வீட்டில் மௌனமே நிலவிக் கிடந்தது. அந்த மௌனத்தை இதயவர்மனே இறுதியில் உடைத்து, "தேவி! நேரமாகிறது. நான் வருகிறேன். ஏதாவது உத்தரவிருந்தால் என் இருப்பிடத்துக்குச் சொல்லி அனுப்புங்கள்" என்று கூறித் தனது கையை அவள் கையிலிருந்து விடுவித்துக் கொண்டான். அதுவரை அவன் கையில் பிணைந்து கிடந்த இந்திராதேவியின் கை ஏதாவதொரு பிடியை நாடுவதற்காகக் கொடி வீட்டின் கூரைக்குச் சென்று அங்கிருந்த மூங்கில் பாளத்தை லேசாகப் பிடித்துக் கொண்டது. அச்சமற்ற அவள் கண்களிலும் அச்சம் லேசாக உதயமாகியிருந்தது. "மிகவும் எச்சரிக்கையுடனிருங்கள்! நான் சொன்னது நினைப்பிருக்கட்டும், நானின்றி எங்கும் செல்ல வேண்டாம்" என்று கூறிய அவள் உதடுகளில்கூட சிறிது நடுக்கம் தெரிந்தது.

அவள் நிலை மிகவும் பரிதாபமாயிருந்தது இதயவர்மனுக்கு. அதுவரை எட்ட நின்ற அவன் அவளை நன்றாக நெருங்கி அவள் கைகளிரண்டின் மேற்புறத்தையும் தன் கைகளால் சற்று அழுத்தியே பிடித்தான். "அஞ்சாதீர்கள் தேவி! நான் எங்கும் போவதில்லை. அரசர் உத்தரவானால் கூட உங்களிடம் நானிட்ட ஆணைக்குப் புறம்பாயிருந்தால் படிவதில்லை. ஒன்று மட்டும் எனக்கு விளங்கவில்லை. எதை உத்தேசித்து நீங்கள் பயனற்ற இந்தச் சதியில் சிக்கினீர்கள் என்பது மட்டும் புரியவில்லை எனக்கு. எதுவாயிருப்பினும் ஒன்று நிச்சயம். காஞ்சி மண்டலத்தின் இணையற்ற அழகிக்கு எந்த இன்னலும் வராது இந்த இதயவர்மன் இருக்கும் வரை" என்று அவளை உற்று நோக்கிக் கூறவும் செய்தான். பிறகு சரேலென்று அவள் கைகளை விட்டுவிட்டு அந்தக் கொடி வீட்டிற்கு



வெளியே சென்றான். அவன் சென்றதைக் கொடி வீட்டின் வாயிலுக்கு நேராக நின்று இந்திராதேவி பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் மரங்களுக்கிடை நடந்து சென்ற கம்பீரம், அந்த நடையிலிருந்த ஒரு அலட்சியம், இரண்டும் அவள் கண்களில் ஒரு பெருமிதத்தைத் தோற்றுவித்தன. அத்துடன் சிறிதளவு பொறாமையும் அதில் கலந்து நின்றது. பிறகு அவன் தன் கைகளை இறுக்கிப் பிடித்துத் தைரியம் சொன்னது, தன் கையை அவன் கை தழுவி நின்றது, இரண்டும் மகிழ்ச்சியையே அளித்தது அவளுக்கு. இருப்பினும் ரஞ்சனியிடம் அவன் முதல் நாள் காட்டிய சொந்தத்தைத் தன்னிடம் காட்டவில்லையே என்ற ஏக்கம் மட்டும் இருந்தது அவள் இதயத்தில். 'அவள் இடையை எப்படி அணைத்துச் சென்றார் இவர்!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள் இந்திராதேவி. "ஆனால் அவர்களுக்கு நெடுநாள் பழக்கம். அதனாலேற்பட்ட சொந்தம். தவிர அவள் கைக்கெட்டியவள். நான் இந்தச் சனியன் பிடித்த அரசகுலத்தில் பிறந்தேன். ஆகையால் என்னைத் தொடவும் அஞ்சுகிறார்" என்று தனக்குள் ஏதேதோ சொல்லிக் கொண்டு தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளவும் முயன்றாள். பிறகு அவளும் ஏக்கத்துடன் கொடி வீட்டிலிருந்து கிளம்பி அந்தப்புரம் நோக்கி நடந்தாள்.

கொடி வீட்டிலிருந்து கிளம்பிய இதயவர்மன் பல சிந்தனைகளுக்கு இலக்காகிக் கொண்டே தனது இருப்பிடம் நாடிச் சென்றான். இருப்பிடத்தை அடைந்ததும் அறைக் கதவை இறுகத்தாளிட்டுவிட்டு கச்சையிலிருந்த பெருமாள் பிரசாதத்தை எடுத்தான். திருத்துழாய் தளங்களைத் தனியாகப் பிரித்து ஓரிடத்தில் பத்திரமாக வைத்துவிட்டு அவற்றின் நடுவிலிருந்த ஓலையைப் பிரித்துப் படித்தான். "இன்று பகல் சேனாதிபதி எங்கு அழைத்தாலும் போய் வா. இன்றிரவு வைகுந்தன் சந்நிதியில் சந்திப்போம்' என்று இருந்தது. ஓலையில் கையெழுத்து மன்னருடைய

## அத்தியாயம் 22

## அசுரக் கதவுகளுக்கிடையில்

கையுடன் கை தழுவி நின்ற அந்தச் சமயத்தில் இந்திராதேவி, இதயவர்மன் இருவருமே சுயநிலை இழந்திருந்ததால் சில விநாடிகள் அந்தக் கொடி வீட்டின் மௌனமே நிலவிக் கிடந்தது. அந்த மௌனத்தை இதயவர்மனே இறுதியில் உடைத்து, "தேவி! நேரமாகிறது. நான் வருகிறேன். ஏதாவது உத்தரவிருந்தால் என் இருப்பிடத்துக்குச் சொல்லி அனுப்புங்கள்" என்று கூறித் தனது கையை அவள் கையிலிருந்து விடுவித்துக் கொண்டான். அதுவரை அவன் கையில் பிணைந்து கிடந்த இந்திராதேவியின் கை ஏதாவதொரு பிடியை நாடுவதற்காகக் கொடி வீட்டின் கூரைக்குச் சென்று அங்கிருந்த மூங்கில் பாளத்தை லேசாகப் பிடித்துக் கொண்டது. அச்சமற்ற அவள் கண்களிலும் அச்சம் லேசாக உதயமாகியிருந்தது. "மிகவும் எச்சரிக்கையுடனிருங்கள்! நான் சொன்னது நினைப்பிருக்கட்டும். நானின்றி எங்கும் செல்ல வேண்டாம்" என்று கூறிய அவள் உதடுகளில்கூட சிறிது நடுக்கம் தெரிந்தது.

அவள் நிலை மிகவும் பரிதாபமாயிருந்தது இதயவர்மனுக்கு. அதுவரை எட்ட நின்ற அவன் அவளை நன்றாக நெருங்கி அவள் கைகளிரண்டின் மேற்புறத்தையும் தன் கைகளால் சற்று அழுத்தியே பிடித்தான். "அஞ்சாதீர்கள் தேவி! நான் எங்கும் போவதில்லை. அரசர் உத்தரவானால் கூட உங்களிடம் நானிட்ட ஆணைக்குப் புறம்பாயிருந்தால் படிவதில்லை. ஒன்று மட்டும் எனக்கு விளங்கவில்லை. எதை உத்தேசித்து நீங்கள் பயனற்ற இந்தச் சதியில் சிக்கினீர்கள் என்பது மட்டும் புரியவில்லை எனக்கு. எதுவாயிருப்பினும் ஒன்று நிச்சயம். காஞ்சி மண்டலத்தின் இணையற்ற அழகிக்கு எந்த இன்னலும் வராது இந்த இதயவர்மன் இருக்கும் வரை" என்று அவளை உற்று நோக்கிக் கூறவும் செய்தான். பிறகு சரேலென்று அவள் கைகளை விட்டுவிட்டு அந்தக் கொடி வீட்டிற்கு



வெளியே சென்றான். அவன் சென்றதைக் கொடி வீட்டின் வாயிலுக்கு நேராக நின்று இந்திராதேவி பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் மரங்களுக்கிடை நடந்து சென்ற கம்பீரம், அந்த நடையிலிருந்த ஒரு அலட்சியம், இரண்டும் அவள் கண்களில் ஒரு பெருமிதத்தைத் தோற்றுவித்தன. அத்துடன் சிறிதளவு பொறாமையும் அதில் கலந்து நின்றது. பிறகு அவன் தன் கைகளை இறுக்கிப் பிடித்துத் தைரியம் சொன்னது, தன் கையை அவன் கை தழுவி நின்றது, இரண்டும் மகிழ்ச்சியையே அளித்தது அவளுக்கு. இருப்பினும் ரஞ்சனியிடம் அவன் முதல் நாள் காட்டிய சொந்தத்தைத் தன்னிடம் காட்டவில்லையே என்ற ஏக்கம் மட்டும் இருந்தது அவள் இதயத்தில். 'அவள் இடையை எப்படி அணைத்துச் சென்றார் இவர்!' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள் இந்திராதேவி. "ஆனால் அவர்களுக்கு நெடுநாள் பழக்கம். அதனாலேற்பட்ட சொந்தம். தவிர அவள் கைக்கெட்டியவள். நான் இந்தச் சனியன் பிடித்த அரசகுலத்தில் பிறந்தேன். ஆகையால் என்னைத் தொடவும் அஞ்சுகிறார்" என்று தனக்குள் ஏதேதோ சொல்லிக் கொண்டு தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளவும் முயன்றாள். பிறகு அவளும் ஏக்கத்துடன் கொடி வீட்டிலிருந்து கிளம்பி அந்தப்புரம் நோக்கி நடந்தாள்.

கொடி வீட்டிலிருந்து கிளம்பிய இதயவர்மன் பல சிந்தனைகளுக்கு இலக்காகிக் கொண்டே தனது இருப்பிடம் நாடிச் சென்றான். இருப்பிடத்தை அடைந்ததும் அறைக் கதவை இறுகத் தாளிட்டுவிட்டு கச்சையிலிருந்த பெருமாள் பிரசாதத்தை எடுத்தான். திருத்துழாய் தளங்களைத் தனியாகப் பிரித்து ஓரிடத்தில் பத்திரமாக வைத்துவிட்டு அவற்றின் நடுவிலிருந்த ஓலையைப் பிரித்துப் படித்தான். "இன்று பகல் சேனாதிபதி எங்கு அழைத்தாலும் போய் வா. இன்றிரவு வைகுந்தன் சந்நிதியில் சந்திப்போம்' என்று இருந்தது. ஓலையில் கையெழுத்து மன்னருடைய

தென்பது அதன் தெளிவிலிருந்து தெரிய வந்தது. இருமுறை ஓலையைப் படித்துப் பத்திரப்படுத்திவிட்டு அறைக் கதவைத் திறந்துவிட்டு மஞ்சத்தில் படுத்துக் கொண்ட இதயவர்மன் புத்தி பலபடி சஞ்சரிக்க ஆரம்பித்தது. பல கேள்விகளைத் தனக்குள்ளாகவே கேட்டுக் கொள்ளவும் துவங்கியது. பல விஷயங்களில் அவன் புத்தி ஒரு நிதானத்துக்கு வராமல் குழம்பியும் கிடந்தது

'இந்திராதேவியிடம் அவள் துணையின்றி வெளியே செல்வதில்லை என்று ஆணையிட்டு விட்டேன். சேனாதிபதி அழைத்தால் போகும்படி மன்னர் உத்தர விட்டிருக்கிறார். இரண்டையும் நிறைவேற்றலாம். சேனாதிபதி அழைத்தவுடன் இந்திராதேவியை எப்படி அணுகுவது? யாரிடம் அவளுக்குச் செய்தி சொல்லியனுப்பு வது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, விடை காணாமல் தவித்தான்.

அடுத்தபடியாக முன்னாளிரவு நடந்த விஷயங்களைப் பற்றி ஆலோசித்தான். 'அந்தச் சதி விஷயம் பெரும் பாலும் மன்னருக்குத் தெரிந்திருக்க அதைப்பற்றி வேவு பார்க்க என்னை ஏன் அனுப்பினார்?' என்று மற்றொரு கேள்வியை எழுப்பிக்கொண்டு அதற்கும் விடை காணாமல் தவித்தான். இவற்றுக்காவது விடை கண்டு பிடித்து விடலாம் போலிருந்தது அவனுக்கு. இவற்றையெல்லாம் விட பெரும் பிரச்னையொன்று அவன் மனத்தை அலைக் கழித்தது. அதுதான் ரஞ்சனியையும் இந்திராதேவியை யும் பற்றிய பிரச்னை. யாரிடம் தனது மனம் லயித்திருக் கிறதென்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. முதல் நாளிரவு புரவிக்கூடத்தின் வெளி முற்றத்தில் அவள் இடையை இறுக்கிப் பிடித்தபோது அவளிடம் அவன் மனம் பிணைந்து கிடந்தது.

இன்று காலை இந்திராதேவியின் மலர்க்கையின் ஸ்பரிசமே அவனை இந்த உலகத்திலிருந்து சொர்க்கத்துக்கு



இழுத்துச் சென்றுவிட்டது. ஒருத்தி சாதாரணப் புரவி பழக்குபவன் புதல்வி, ஏழை. இன்னொருத்தி மன்னரின் சகோதரி மகள், அரச குலத்தவள். அவள் ஆணைக்குக் காஞ்சி மண்டலமே பணியும். ஒருத்தி கைக்கெட்டிய கனி. இன்னொருத்தி உச்சாணிக் கொம்பிலிருக்கும் இன்பப் பழம். கைக்குக் கிடைப்பதும் கிடைக்காததும் கனியை மட்டும் பொறுத்ததல்ல. அரசியல், தன் அந்தஸ்து இரண்டையும் பொறுத்தது. இருப்பினும் அதிலும் அவன் இதயம் இணைந்திருந்தது. "இந்த இரண்டு பேரில் யாரை விடுவது? யாரைக் கைப்பற்றுவது?" என்று கேட்டுக் கொண்டே அவன் அதிலும் குழம்பினான்.

இப்படிப் பல குழப்பங்களுக்கிடை அன்றைய காலைப் பொழுதைக் கழித்தான் இதயவர்மன். உணவுகூட சரியாகப் பிடிக்கவில்லை அவனுக்கு. புத்தியில் பல கேள்வி கள் எழுந்து அலைக்கழித்த காரணத்தால். நடுப்பகலில் தான் அவனுக்குச் சேனாதிபதியிடமிருந்து அழைப்பு வந்தது. அவனை உடனே வடக்கு வாசலில் சந்திக்கும்படி உத்தரவு அனுப்பியிருந்தான் ரவிவர்மன். அந்தச் செய்தி கொண்டு வந்தவனிடம் சேனாதிபதி உத்தரவுப்படி வந்து சேருவதாகச் சொல்லியனுப்பிவிட்டு இந்திராதேவிக்கு இதை எப்படித் தெரிவிப்பதென்ற யோசனையுடன் தனது ராணுவ உடையை அணிந்து, வாளையும் எடுத்து இடையில் கட்டிக்கொண்டு புரவியிலேறி அரண்மனையை நோக்கிச் சென்றான். அரண்மனையையடைய அவன் பாதிதூரம் சென்றபோதே அவனுக்குப் பிரமிப்பை அளிக்கக்கூடிய சம்பவம் நிகழ்ந்தது. ஒற்றைப் புரவி இழுத்து வந்த ரதமொன்றில் இந்திராதேவி ராஜவீதியின் நடுவில் வந்து கொண்டிருந்தாள். இதயவர்மனைப் பார்த்ததும் ரதத்தை நிறுத்தும்படி சாரதிக்கு உத்தரவிட்ட மன்னன் மருமகள் சாரதியைக் கீழே இறங்கச் சொல்லி, "வீரரே! அவசரமாகப் போகிறீர்களா?" என்றும் விசாரித்தாள் சர்வ சகஜமாக.

அப்படிப் பகிரங்க வீதியில் இந்திராதேவி காவல் யாருமின்றித் தன்னந்தனியே ரதத்தில் வந்ததே ஆச்சரியமாயிருந்தது இதயவர்மனுக்கு. அத்துடன் அவன் நடு ராஜவீதியில் ரதத்தை நிறுத்தித் தன்னுடன் பேசியது அதைவிடப் பிரமிப்பை அளித்தது அவனுக்கு. அவன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றும் புரியவில்லை அவனுக்கு. "உங்களைப் பார்க்கத்தான் போகிறேன்" என்று எப்படி நடுச்சாலையில் ஓர் அரச மகளைப் பார்த்து அவன் சொல்ல முடியும்? ஆகவே அவன் தயங்கினான் சிறிது. அந்தத் தயக்கத்தை இந்திராதேவி கவனித்தாலும் கவனிக்காததுபோலவே, "ரதசாரதிக்கு உடல் நிலை சரியில்லை. நீங்கள் சற்று இந்த ரதத்தைச் செலுத்திக் கொண்டு வரமுடியுமா?" என்று கேட்டாள்.

அவள் உத்தரவுப்படி ரதத்திலிருந்து கீழே குதித்து நின்ற ரதசாரதி அந்தப் பெரும் பொய்யைக் கேட்டதும் ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தான் ஆனாலும் இந்திராதேவியின் ஒரு பார்வை அவன் வாயை இறுக மூடிவிட்டது. அவள் உத்தேசத்தைப் புரிந்துகொண்ட இதயவர்மனும், "உத்தரவு" என்று கூறித் தலைவணங்கிப் புரவியிலிருந்து கீழே குதித்தான். புரவியைக் கொண்டுபோய் படைவீரர் விடுதியின் புரவிக் கூடத்தில் சேர்த்து விடும்படி சாரதிக்கு உத்தரவிட்டு ரதத்தில் தான் ஏறி புரவிக் கயிறுகளை ஏந்தி புரவியைத் தட்டி லேசாக ஓடத் தூண்டினான்.

சாரதியைத் தவிர ஒருவரே போகக்கூடிய சிறு ரதமாதலால் அதிக நெருக்கமாக இல்லாவிட்டாலும் பேசும் அளவுக்குச் சாரதியின் அருகில் அமர இந்திராதேவிக்கு இடமிருந்தது அதில். இந்திராதேவி ஆசனத்தில் உட்கார்ந்திருக்க ரதத்தின் முனைப்பில் நின்ற வண்ணம் இதயவர்மன் புரவியைத் தூண்டினான். ரதம் ஓடிக்கொண்டேயிருக்கையில் இந்திராதேவி வேறு பக்கம் பார்த்தவண்ணம் கேட்டாள், "எங்கு வரச் சொல்லியிருக்கிறார் சேனாதிபதி?" என்று.



இதயவர்மனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. திரும்பி அவளைப் பார்த்தான் ஒருமுறை. "உங்களுக்கு எப்படித் தெரியும் சேனாதிபதி என்னை வரச்சொன்னது?" என்று கேட்கவும் முயன்றான்.

"கேள்வி எதுவும் கேட்க வேண்டாம். என் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்" என்றாள் இந்திராதேவி.

இதயவர்மன் கேள்வி அவன் உதட்டிலேயே உறைந்து விட்டது. அவள் கேட்டபடி அவன் மறுமொழி கூறினான். "வடக்கு வாசலுக்கு வரச்சொல்லியிருக்கிறார்" என்று.

"சரி, அங்கேயே ரதத்தை விடுங்கள்" என்றாள் இந்திராதேவி.

இதயவர்மன் பேசாமல் அவள் சொற்படி ரதத்தைச் செலுத்தினான். வடக்கு வாசலில் அவனுக்கு முன்பே சேனாதிபதி ரவிவர்மன் காத்திருந்தான். அவனும் அன்று ரதத்தில்தான் வந்திருந்தான். இதயவர்மனைக் கண்டதும் அவன் முகத்தில் பெருமாறுதல் ஏற்பட்டது. கண்களில் தீப்பொறி பறக்க, "இந்திராதேவியை யார் அழைத்து வரச் சொன்னது உன்னை?" என்று வினவினான் கடுமையுடன்.

அதற்கு இதயவர்மன் பதில் சொல்லுமுன்பே இந்திராதேவி பதில் கூறினாள். "அவர்மீது தவறில்லை. உங்களைச் சந்திக்க அவர் புரவியில் வந்தார். ரதத்தில் வந்த என் சாரதி திடீரென்று மயக்கமாயிருக்கிறது என்றான். அவனை அனுப்பிவிட்டுச் சற்று ரதத்தை ஓட்டி வரும்படி இவரைக் கேட்டுக்கொண்டேன். முதலில் மறுத்தார். அவசரமாகப் சேனாதிபதி வரச்சொல்லி இருக்கிறார். போகவேண்டுமென்றார். அப்படியானால் சேனாதிபதி சொன்ன இடத்துக்கு விடம் நான் சொல்கிறேன். அவர் சொன்ன இடத்துக்கு ரதத்தை விடுங்கள் என்றேன். இங்கு வந்து சேர்ந்தோம்" என்று விளக்கினாள் இந்திராதேவி.

சேனாதிபதி ரவிவர்மன் சற்று சங்கடப்பட்டான். பிறகு, ''சரி தேவி! நீங்கள் ஆணையிட்ட பின் நான் என்ன செய்யமுடியும்? உங்களுக்கு வேறு சாரதியைத் தருகிறேன். நீங்கள் அரண்மனை செல்லுங்கள். எங்களுக்குச் சிறிது வேலையிருக்கிறது'' என்று கூறி விட்டுச் சற்றுத் தொலைவிலிருந்த வீரர்களில் ஒருவனை, ''டேய்! இங்கே வா'' என்று கூப்பிட்டான்.

இந்திராதேவி மெல்லக் கேட்டாள் சேனாதிபதியை நோக்கி, ''உங்கள் வேலை மிக முக்கியமா?'' என்று.

''ஆம்'' என்றான் சேனாதிபதி.

''என்ன வேலையோ?''

''வடக்கு வாசல் கிழக்கு வாசல் இரண்டையும் பார்க்க வேண்டும்.''

''ஏன் வாசல்களுக்கென்ன?''

''கதவுகள் ஒழுங்கு, காவல் ஒழுங்கு இவற்றைக் கவனிக்கவேண்டும். அதுவும் கிழக்கு வாசலில் முக்கிய வேலையிருக்கிறது'' என்று கூறி இந்திராதேவியை உற்று நோக்கினான் சேனாதிபதி.

அந்த முக்கிய வேலை என்னவென்பதை இந்திரா தேவி இதயவர்மன் இருவருமே அறிந்திருந்ததால் இருவரும் அதுபற்றி எந்த வியப்பையும் காட்டவில்லை. இந்திராதேவி மட்டும் சொன்னாள், ''அந்த முக்கிய வேலையை நானும்தான் பார்க்கிறேனே'' என்று.

சேனாதிபதி ரவிவர்மன் முகத்தில்கூட அச்சம் உதய மாயிற்று. ஒரு வீரன் கொலையைப் பார்க்க விரும்பும் அவள் மனிதப் பிறவியா அரக்கியா என்று உள்ளூர எண்ணினான். ஆனால் வெளிக்கு மட்டும், ''இதெல்லாம் காஞ்சியின் பாதுகாப்பு வேலை. உங்களுக்கு எதற்கு இதெல்லாம்'' என்று சொன்னான்.



''காஞ்சியின் பாதுகாப்பில் உங்களைவிட எனக்கு அக்கறை உண்டு. நான் அரசன் மருமகள்'' என்றாள் இந்திராதேவி. அவள் குரலில் கண்டிப்பும் பிடிவாதமும் இருந்ததைக் கண்ட சேனாதிபதி அதற்குமேல் பதிலேதும் சொல்லாமல் இயதவர்மனை ரதத்தைவிட்டு இறங்கும்படி கூறிவிட்டு வடக்கு வாசற்கதவுகளைக் கவனிக்கச் சென்றான். இதயவர்மனும் அவனைத் தொடர்ந்தான். வாயிலுக்கு அருகிலிருந்த வீரர்கள் எண்ணிக்கை, காவல் முறை, கதவுகள் சாத்தித் திறப்பதற்கான ஏற்பாடுகள், கோட்டைச் சுவர்மீதிருந்த எண்ணெய்க் கொப்பறைகள், விற்கூடங்கள் இவற்றை ஒவ்வொன்றாக இதயவர்மனுடன் சேர்ந்து ஆராய்ந்த சேனாதிபதி, ''இந்த வாசலில் பழுதில்லை இதயவர்மா. இனி கிழக்கு வாசலுக்குப் போவோம்'' என்றான்.

மறுபடியும் இதயவர்மன் இந்திராதேவியின் ரதத்தைச் செலுத்திக் கொண்டுவர, புரவியில் பத்து வீரர்கள் சூழ்ந்து வர ரவிவர்மன் தனது ரதத்தில் முன் செல்ல நகரத்தின் வடக்கிலிருந்து கிழக்குத் திசைக்கு வருவதற்குள் கிட்டத் தட்ட மாலை நெருங்கும் நேரமாகிவிட்டது. காஞ்சி மாநகரின் விஸ்தீரணம் மிக அதிகமாகையாலும், கோட்டைச்சுவர் நீள இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ரவிவர்மன் நின்று நின்று பார்வையிட்டதாலும், கிட்டத் தட்ட மாலை வேளையில் கிழக்கு வாசற் கதவுகளுக்கருகில் வந்த ரவிவர்மன் ஒருமுறை அந்தக் கதவுகளை ஏறெடுத்து நோக்கினான். பிறகு புரவியிலிருந்து இறங்கி அந்த வாயிலின் பாதுகாப்புகளையும் இதயவர்மனுடன் சேர்ந்து பார்வையிட்டான்.

பிறகு இதயவர்மனை அந்த வாயிலின் நடுவில் நிற்கச் சொல்லிக் கோட்டை மதிலில் ஏறி அங்கிருந்த விற்கூடங் களைக் கவனித்துக் கொண்டிருந்தான். அப்படி இருந்து கொண்டேயிருந்த சமயத்தில் இந்திராதேவி ''வீல்'' என்று கதறினாள். அடுத்த விநாடி அவள் ரதம் காற்று வேகத்தில்

இதயவர்மனை நோக்கிப் பறந்தது. கிழக்கு வாசலின் அந்தப் பேய்க் கதவுகள் மின்னல் வேகத்தில் அந்த ரதத்தின்மீது மோதச் சென்றன. அந்த வேகத்தைக் கவனித்ததாலோ என்னவோ புரவிக் கயிறுகளைப் பிடித்திருந்த இந்திராதேவி மயக்கமுற்று ரதத்தின் தட்டில் சாய்ந்துவிட்டாள்.

இந்த விபரீதத்தைக் கண்ட சேனாதிபதி ரவிவர்மன் முகத்திலும் அச்சம் பெரிதும் படர்ந்தது. ஆனால் கண்ணிமைக்கும் நேரத்தில் வேறொரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சி சேனாதிபதியின் அச்சத்தை உச்சத்துக்குக் கொண்டு சென்றது.

அத்தியாயம் 23

## சிற்பி சொன்ன செய்தி

கிழக்குக் கோட்டை வாசல்மீது ஏறி நின்று, விற்கூடங்களைப் பார்க்கும் பாவனையில் இழிருந்த அசுரக் கதவுகளை மூடச்சொல்லி சுழற்பொறியாளருக்கு ஜாடை காட்டிவிட்ட சேனாதிபதி ரவிவர்மன், முந்திய நாள் சதிக் கூடத்தில் தீர்மானித்தபடி அத்துடன் இதயவர்மன் ஒழிந்தானென்றே தீர்மானித்தான். அந்த அசுரக் கதவுகளின் வேகத்தை ஏற்கெனவே மன்னர் காட்ட அவன் பார்த்திருந்தானாகையால் அவை இதயவர்மனை அடையாளந் தெரியாமல் நொறுக்கி விடுமென்பதிலோ, அப்படி நொறுக்கிவிடும் பட்சத்தில் அது ஏதோ எதிர்பார்ராத விதமாக ஏற்பட்ட விபத்தென மக்களாலும் மன்னனாலும் நீதிமன்றத்தாராலும் கருதப்படுமென்பதிலோ சிறிதளவும் சந்தேகமில்லை சேனாதிபதிக்கு. ஆனால் அத்தனை திட்டமாகவும் முன்னேற்பாட்டுடனும் இதயவர்மனை ஒழிக்க ஏற்பாடு செய்த சேனாதிபதி சற்றும் எதிர்பாராத, அவனுக்கு அச்சத்தை விளைவிக்கவல்ல நிகழ்ச்சிகள் திடீரென ஏற்படவே அந்தச் சதிகாரன் பிரமை பிடித்து நின்ற இடத்திலேயே நின்று விட்டான்.

அசுரக் கதவுகளின் சுழற்பொறிகள் இயக்கப்பட்ட மறு விநாடியில் இந்திராதேவி வீலெனக் கத்திக்கொண்டு தனது ரதத்துடன் அந்தக் கதவுகளுக்கு இடையில் மின்னல் போல் பாய்ந்துவிட்டதே சேனாதிபதிக்குப் பெரும் அதிர்ச்சியாய் இருந்ததென்றால் அதைவிடப் பெரும் அதிர்ச்சியொன்றும் அவன் கண்களுக்கெதிரே விரிந்தது. வெகு வேகத்துடன் இந்திராதேவியின் ரதத்தையும், அவள் அப்படி வந்துவிட்டாளே என்ற அதிர்ச்சியால் அவள் ரதப்புரவிகளின்மீது பாய்ந்து அவற்றை முன்புறம் தள்ளிவிட முயன்ற இதயவர்மனையும், சேர்த்தே அரைத்து விட வந்த அந்த இரு அசுரக் கதவுகள் அந்த இரு காதலர்களுக்கிடை வந்ததும் சட்டென்று மந்திரத்தால் கட்டுப்பட்டனபோல் நின்றுவிட்டன. அப்படி அவை நிறைதைப்

பார்த்ததால் பிரமிப்புடனும் சுழற்பொறியை இயக்கும் வீரர்களைக் கோபத்துடனும் பார்க்க முற்பட்ட சேனாதிபதியின் கண்கள் திடீரென வலதுபுறக் கதவின் சுழற்பொறியை நாடியதும் நிலைத்து நின்றுவிட்டன பல விநாடிகள். அந்தச் சுழற்பொறியை ஏதோ கூர்ந்து பழுது பார்த்துக் கொண்டிருந்தான் மன்னன் நந்திவர்மன்.

பல விநாடிகள் அந்தப் பொறியை ஊன்றிப் பார்த்து அங்கிருந்த வீரர் இருவருடன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்த பல்லவ மன்னன் பிறகு சர்வ நிதானத்துடன் மதில் சுவர் மீதிருந்த சேனாதிபதியை ஏறெடுத்து நோக்கிவிட்டு இந்திராதேவியின் ரதமிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான். சுழற்கதவுகள் நிற்பதற்குள்ளேயே அவற்றின் குறியிலிருந்து ரதத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்ட இதயவர்மன், சுற்றிலும் பெரும் கூட்டம் கூடிவிட்டதையும் வீரர்கள் அக்கூட்டத்தைத் தடுத்து நிற்பதையும்கூட லட்சியம் செய்யாமல் ரதத்திலேறிப் புரவிக் கயிறுகளைக் கையில் ஏந்தி ரதத்தை நோக்கி வருவதற்கும் மன்னன் ரதத்தை அணுகுவதற்கும் நேரம் சரியாயிருக்கவே மேற்கொண்டு என்ன உத்தரவென்று கேட்கும் பாவனையில் மன்னனை நோக்கிக் கண்களை ஓட்டினான் இதயவர்மன். ''இந்திராதேவியை அந்தப்புரத்தில் சேர்த்து விடு இதயவர்மா! அங்கு யாராவது மருத்துவரைக் கூப்பிட்டு அவள் மயக்கத்தைத் தெளிவிக்கச் சொல்'' என்று மன்னன் உத்தரவிடவே வேறெதுவும் பேசாமல் ரதத்தை ஓட்டிச் சென்ற இதயவர்மனை நெடுந்தூரம் மட்டும் கண்களால் தொடர்ந்த பல்லவ மன்னன், மதில்மீதிருந்த ரவிவர்மனைக் கீழே வரும்படி கையால் சைகை செய்தான்.

மன்னனை அந்தச் சமயத்தில் அந்த இடத்தில் சற்றும் எதிர்பாராததால் பிரமிப்புடன் நின்றுவிட்ட சேனாதிபதியின் இதயத்தில் ஏதேதோ எண்ணங்களும் சந்தேகங்களும் எழுந்து தாண்டவமாடிக் கொண்டிருந்தன. அந்தக் கதவுகள் எப்படித் திடீரென நிற்க முடியும்?



அவற்றை நிறுத்த சுழற்சக்கரங்களில் என்ன வசதியிருக்கிறது? அப்படியிருந்தாலும் திட்டமாக இதயவர்மனும் இந்திராதேவியும் நெருங்கவேண்டிய சமயத்தில் அந்த ரதத்திற்கு வெகு அருகில் வந்து கதவுகள் எப்படி நின்றன? மன்னன் திடீரென்று எங்கிருந்து வந்தான்? மன்னன் வந்தால் தாரைகள் ஒலிக்குமே, ஏன் ஒலிக்கவில்லை?' என்று பல கேள்விகளைத் தன்னுள் கேட்டுக்கொண்ட சேனாதிபதி ரவிவர்மன் அந்தக் கேள்விகளில் ஒன்றுக்குக் கூட விடை காணாமல் விழித்தானாதலால் அரசன் கீழிறங்கி வரும்படி சைகை செய்ததைக்கூட அவனால் கவனிக்க இயலவில்லை. அவன் பக்கத்தில் நின்றிருந்த வீரனொருவன், ''மன்னர் அழைக்கிறார்'' என்று வலியுறுத்திய பின்பே அதனை உணர்ந்த ரவிவர்மன் மதில் சுவர்ப்படிகளில் இறங்கிக் கீழே ஓடி வந்தான். அவன் கீழே வருவதற்குள்ளேயே மன்னன் உத்தரவுப்படி இதயவர்மன் இந்திராதேவியின் ரதத்தை ஓட்டிச் சென்றுவிட்டபடியால் சேனாதிபதியும் மன்னனும் கோட்டையின் கிழக்கு வாசல் காவல் வீரரும், ரவிவர்மனுடன் வந்த மற்ற வீரரும் மட்டுமே அந்த அசுரக் கதவுகளுக்கருகில் நின்றிருந்தனர். அதற்குள் கதிரவனும் மறைந்துவிட்டபடியால் காஞ்சியின் விளக்கேற்றுவோரும் ஆங்காங்கு தமது அலுவலைப் புரியத் தொடங்கியதன் காரணமாக, மெள்ள மெள்ளக் கோட்டை வாசலை எதிர்நோக்கியிருந்த வீடுகளில் விளக்குகள் தலைகாட்டத் துவங்கின. கதவுகள் கொடூரம் விளைவிக்கும் முன்பே வந்துவிட்ட மன்னன் போலவே இருள் கவ்வு முன்பே ஏற்பட்ட அந்த விளக்குகள் அளித்த காட்சியைப் பார்த்த மன்னன் தூரத்தே தெரிந்த பெரும் கோபுரங்களில் மினுமினுக்கத் தொடங்கிய பெரும் விளக்குகளையும் பார்த்துச் சாந்திப் பெருமூச்சு விட்டான்.

மன்னன் தன்மீது எத்தனை தூரம் சந்தேகப்படுகிறானோ? என்ன கேட்டு விடுவானோ? என்ற எண்ணத்

துடன் மதிலிலிருந்து கீழிறங்கி நடுக்கத்துடன் மன்னன் அருகில் வந்த சேனாதிபதி திடுக்கிடும் நெஞ்சத்துடன், "மன்னர் வரும் செய்தி எனக்குத் தெரியாது. இந்த இடத்தில் இந்த சமயத்தில் தங்களை நான் எதிர்பார்க்க வில்லை" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையிலும் பேசினான்.

மன்னன் சேனாதிபதிக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை, "நாம் எதிர்பார்க்கிறபடி எந்தக் காரியம் நடக்கிறது சேனாதிபதி?" என்று சில விநாடிகள் கழித்துக் கேட்ட மன்னன் தூரத்தே தெரிந்த பெரும் கோபுரத்தைக் காட்டி, "அது என்ன தெரியுமா?" என்று வினவினான்.

மன்னனின் முதல் கேள்வி சேனாதிபதியைத் தூக்கி வாரிப் போட்டது. இரண்டாவது கேள்வி குழப்பத்தை விளைவித்தது. முதல் கேள்விக்குப் பதிலேதும் சொல்ல அவசியமில்லையாகையால் இரண்டாவது கேள்விக்கே அவன் பதில் சொன்னான், "அது வரதராஜப் பெருமாள் கோயில் திருக்கோபுரம்" என்று.

"அது?"— இன்னொரு கோபுரத்தை மன்னன் காட்டினான்.

"சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோபுரம்" என்று சேனாதிபதி பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னான்.

"அது?"— மற்றொரு கோபுரத்தையும் மன்னன் காட்டினான்.

"ஏகாம்பரேசுவரர் கோபுரம்."

"அது, அது, அது?"

"காமாட்சியம்மன் கோவில், பாண்டவதூதன் கோவில், கைலாசநாதர் கோவில்."

"இப்பொழுது புரிகிறதா?" என்றான் மன்னன் முடிவில்.



ஏதும் புரியவில்லை சேனாதிபதிக்கு. ஆகவே உண்மையையே சொன்னான், "ஏதும் புரியவில்லை" என்று

மன்னனே விளக்கினான். "சேனாதிபதி! காஞ்சியின் அமைப்பு விசித்திரமானது. இந்த நகரத்தில் காரணமாகவே அதிக மரங்கள் வைக்கப்படவில்லை. மாளிகைகளும் சுமாரான உயரந்தான். கோபுரங்கள் மட்டும் வானளாவி நிற்கின்றன. அவற்றின் விளக்கொளி அறத்தின் ஒளி. அந்த ஒளி சதா இந்த நகரத்தின்மீது பட்டுக் கொண்டிருக்கிறது. ஆண்டவன் உறைவிட வாயில்களான கோபுரங்களின் ஒளிக் கண்கள் சதா இந்த நகரத்தைப் பார்த்து நிற்கின்றன. அனைத்தும் ஆண்டவன் கண்கள். அவற்றிலிருந்து எது தப்ப முடியும்?" என்று விளக்கிய மன்னன் தூரத்தே தெரிந்த விளக்குகளை ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்டினான்.

சேனாதிபதியின் கண்களும் அரசன் கரம் சென்றவிடமெல்லாம் சென்றன. அந்தக் கோபுரங்களின் கண்கள் அவனைச் சுட்டு விடுவனபோல் பார்த்தன. "அட துரோகி!" என்று அவை வாய்விட்டுக் கூறுவனபோலும் தோன்றின சேனாதிபதிக்கு. அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. வாய் மட்டும் "ஆம் ஆம்" என்று முணுமுணுத்தது.

"ஆம், சேனாதிபதி. ஆண்டவன் கண்களிலிருந்து எதுவும் தப்புவதில்லை. எந்தப் படையெடுப்போ, அழிவோ, ஆக்கமோ, நாசமோ, மோசமோ அனைத்தும் அவனன்றி நிகழ்வதில்லை. இல்லாவிட்டால்...?" இந்த இடத்தில் மன்னன் பேச்சை நிறுத்தினான்.

"இல்லாவிட்டால்?" சேனாதிபதியின் கேள்வியில் பயமிருந்தது, சந்தேகமிருந்தது.

"இன்று திடீரென சுழற்பொறிகள் பழுது படுமா?" என்று கேட்டான் மன்னன்.

''சுழற்பொறிகள் பழுதுபட்டு விட்டனவா?'' என்று கேட்டான் சேனாதிபதி ஆச்சரியத்துடன்.

''பழுதுபடாவிட்டால் கதவுகள் எப்படித் திடீரென நிற்கும்? இத்தனை நேரம் இந்திராதேவியும் இதயவர்மனும் அடையாளந் தெரியாமல் அறைபட்டுப் போயிருக்க மாட்டார்களா?''

''அப்படியானால்?''

''என்ன ரவிவர்மா?''

''கதவுகள் பழுதுபட்டதால்தான்?...''

''ஆமாம். அவர்கள் தப்பினார்கள். அதுவும் நீங்கள் இன்று பாதுகாப்பு வசதிகளைப் பார்வையிட வராவிட்டால் பழுதுபட்டிருப்பது தெரியவும் காரணமில்லை கருடசேவை நடப்பது சாத்தியமாயிருக்காது.''

மன்னனின் கடைசிச் சொற்கள் அந்தச் சமயத்தில்கூட எரிச்சலை ஊட்டின சேனாதிபதிக்கு தனது மருமகள் அறைந்து போக இருந்ததை அலட்சியமாகவும் கருடசேவைக்குக் கதவு சரியாக இல்லாததைப் பெரும் விபரீதமாகவும் நினைத்து மன்னன் பேசியதைக் கண்ட சேனாதிபதி ''கருட சேவையைவிட முக்கியமான விஷயங்கள் இன்று நடந்திருக்கின்றன'' என்றான் சற்றுக் கடுமையாக.

மன்னன் விழிகள் சேனாதிபதியை வியப்புடன் ஏறெடுத்து நோக்கின. ''அந்த முக்கிய விஷயங்கள் என்னவோ?'' என்ற கேள்வியிலும் வியப்பு இருந்தது.

''இந்திராதேவியும் இதயவர்மனும் அறைபட இருந்தது. நீங்கள் உங்கள் மருமகளையும் சிறந்த வீரனையும் இழக்க இருந்தீர்கள்'' என்று சுட்டிக் காட்டினான்.

''அதற்காக வருத்தப்படுகிறாயா ரவிவர்மா? வருந்தாதே. ஆபத்து, சம்பத்து, பிறப்பு, இறப்பு இதெல்லாம் வாழ்வில் சகஜம். இந்திராதேவியையும் இதய



வர்மனையும் பிறப்பித்தது அவன். அவர்களைக் கொண்டு
போகும் நாள் அவனுக்குத் தெரியும். உனக்கும் தெரியாது.
எனக்கும் தெரியாது. முன்னால் கொண்டுபோக யார்
முயன்றாலும் முடியாது'' என்ற மன்னன், ''ரவிவர்மா''
என்று ஏதோ கேட்கவும் முற்பட்டான்.

''என்ன மன்னவா?'' என்று கவலையுடன் வினவினான் சேனாதிபதி.

''திடீரெனப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சோதிக்கிறாயே, ஏதாவது எதிரி பயம் இருக்கிறதா?'' என்று கேட்டான் மன்னன் குரலில் கவலையைக் காட்டி.

''அப்படி ஏதுமில்லை, இருப்பினும் பாதுகாப்புகளை அவ்வப்பொழுது பார்வையிடுவது என் கடமையல்லவா'' என்றான் சேனாதிபதி.

''ஆமாம், ஆமாம்'' என்று மன்னனும் ஒப்புக்கொண்
டான். அந்த 'ஆமாம் ஆமா'மின் ஒலியில் ஏதோ விபரீதம்
இருப்பதாகப் பட்டது ரவிவர்மனுக்கு. அடுத்தபடி
மன்னன் அவனை நோக்கி, ''ரவிவர்மா! இந்தப்
பொறியை நிர்மாணித்த சிற்பிக்குச் சொல்லியனுப்பு.
இதைப் பழுது பார்க்கச் சொல். நான் வருகிறேன்'' என்று
சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டுத் தூரத்தே ஒருபுறமாக
நின்றிருந்த சிறிய ரதத்துக்குச் சென்றான் மன்னன்.

அந்த ரதம் சிறு படைத்தலைவர்களின் ரதமென்பதை
யும் அதனால்தான் அதில் அரசன் வந்ததை யாரும்
கவனிக்கவில்லையென்பதையும் புரிந்துகொண்ட
சேனாதிபதி மிகுந்த சிந்தனையுடன் சுழற் சக்கரங்க
ளிருக்குமிடம் சென்றான். அடுத்த விநாடி அரசன் ரதம்
பறந்துவிடவே அங்கிருந்த வீரர்கள் மீது எரிந்து விழுந்
தான் ரவிவர்மன். ''ஏன் கதவுகள் பழுதாகிவிட்டன? யார்
இவற்றை இயக்கியது இப்பொழுது?'' என்று கூவினான்
வெறிபிடித்தவன் போல். அடுத்த விநாடி வீரர்களின்

பதிலுக்குக் காத்திராமல், ''சரி சரி, விழிக்காதீர்கள் ஆந்தைகள் போல். சிற்பியை அழைத்து இதைச் சோதிக்கச் சொல்லிவிட்டு என்னை என் மாளிகையில் வந்து சந்திக்கச் சொல்லுங்கள்'' என்று இரைந்து விட்டு விடுவிடுவெனப் பக்கத்திலிருந்த ஒரு புரவி மீது ஏறிக் கடுவேகத்தில் பறந்தான்.

அங்கு கிளம்பிய வேகத்தில் தனது மாளிகைக்கு வந்த சேனாதிபதி நேராகத் தன் பள்ளியறைக்குச் சென்று பஞ்சணையில் வீழ்ந்தான். மாலை நேரம் ஓடியது. இரவின் முதல் ஜாமம் முடிய இருந்தது. அப்பொழுதுதான் வந்த சிற்பி அதிசயச் செய்தியொன்றைக் கூறினான் சேனாதிபதியிடம். தன் வாழ்வு அன்றுடன் முடிந்துவிட்டதென்று தீர்மானித்தான் சேனாதிபதி, அதைக் கேட்ட மாத்திரத்தில்.

## அத்தியாயம் 24

## இரு மரப்பட்டைகள்

சிற்பி சொன்ன அதிசயச் செய்தியைக் கேட்ட சேனாதிபதி ரவிவர்மனுக்குத் தலை சுழன்றது. சற்று நேரம் நிற்பதை விட்டுத் தனது பஞ்சணையில் உட்கார்ந்து கொண்டான். தன்னைப் பெரும் விபரீதம் சூழ்ந்துவிட்டது என்பதைச் சந்தேகமற உணர்ந்துகொண்ட சேனாதிபதி சிறிது நேரம் கழித்துக் குழப்பம் மிகுந்த கண்களைச் சிற்பியை நோக்கி உயர்த்தினான். சிற்பியின் சித்தமும் குழம்பிக் கிடந்ததை அவன் முகமும் உணர்த்தவே செய்தது.

''அப்பொழுது இரண்டாம் ஜாமம் துவங்கிக் கொண்டிருந்தது. முதல் ஜாமம் முடிந்துவிட்டதைக் குறிக்க அரண்மனையின் பெருமணி ஒருமுறை அடித்து ஒய்ந்தது. சிற்பி தனது மாளிகைக்கு வரும் வரையில் மனச் சங்கடத்துடன் தனது அறையின் பஞ்சணையில் படுத்துக்கிடந்த ரவிவர்மன் அன்றிரவு உணவைக்கூட அறவே வெறுத்திருந்தான். ஆயுத சாலையிலிருந்த அரசன் மாமனும் ராஷ்டிரகூட சேனாதிபதியும் அழைத்துங்கூட பிறகு வருவதாகவும் அவர்களைப் படுத்துறங்கும்படியும் சொல்லியனுப்பிவிட்டான். சிற்பி என்ன செய்தி கொண்டு வருவானோ என்ற கிலியிலேயே இருந்த சேனாதிபதிக்கு இரவின் ஆரம்ப நாழிகைகள் அனாவசியமாக மெள்ள நகருவதாகத் தோன்றியது. ஆகவே முதல் ஜாமம் முடியும் தறுவாயில் சிற்பி வந்துவிட்டானென்று காவலன் அறைக்குள் வந்து கூறியதும், ''வரசொல் உடனே. ஏன் அவனை வெளியிலேயே நிறுத்தியிருக்கிறாய்?'' என்று கூவினான். அடுத்த இரண்டு விநாடிகளில் உள்ளே நுழைந்த சிற்பியின் முகத்தைப் பார்த்ததும் சேனாதிபதியின் அச்சம் எல்லையைத் தொட்டது. சிற்பியின் முகத்தில் தெரிந்தது வியப்பா, அச்சமா, குழப்பமா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை சேனாதிபதியால். அவை

அத்தனையும் கலந்த முகக்குறியுடன் விழித்துக்கொண்டு நின்றான் சிற்பி.

சேனாதிபதி அவனை ஒருமுறை பார்த்துவிட்டு ''என்ன விஷயம்?'' என்று வினவினான்.

''கதவுகளின் விஷயந்தான்'' என்றான் சிற்பி ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

சேனாதிபதிக்குக் கோபம் தலைக்கேறியது. ''அது தெரியும் எனக்கு. கதவுகளைப் பற்றி என்ன விஷயம்?'' என்று கேட்டான் படபடப்புடன்.

சிற்பி சிறிது யோசித்தான். பிறகு சொன்னான், ''சுழற்பொறிகளில் யாரோ கை வைத்திருக்கிறார்கள்'' என்று.

அதையும் ஓரளவு ஊகித்தேயிருந்தான் சேனாதிபதி. சுழற்பொறியை யாரோ ஏதோ செய்திராவிட்டால் கதவுகள் திடீரென அப்படி நிற்காதென்பதை அவன் முன்னரே ஊகித்திருந்ததன்றி, அதை மன்னனோ அல்லது மன்னரால் ஏவப்பட்ட வேறு ஒருவனோ செய்திருக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருந்தான். ஆகவே கேட்டான்: ''கை வைத்திருக்கிறார்கள் என்றால்? கதவுகள் சுழலாமல் தடுத்து விட்டார்களா?'' என்று.

''இல்லை. கதவுகள் சுழலாமல் தடுக்க வேண்டுமென்றால் அதை யாரும் செய்யலாம். பொறியை உடைத்தாலோ சற்று சேதப்படுத்தினாலோ கதவுகள் மூடித் திறக்கமாட்டா. ஆனால் ஓரளவு மூடி அத்துடன் சட்டென்று நிற்கும்படி பொறி திருத்தப்பட்டிருக்கிறது'' என்று கூறினான் சிற்பி.

சேனாதிபதி பெரிதும் பிரமித்தான். ''பொறி திருத்தப்பட்டிருக்கிறதா?'' என்று பிரமிப்புடன் கேட்கவும் செய்தான்.

''ஆம்.'' சிற்பியின் குரல் திட்டமாக ஒலித்தது.



''திருத்தப்பட்டதென்றால்?'' சேனாதிபதி கேட்டான் சந்தேகத்துடன்.

''சற்றே மாற்றப்பட்டிருக்கிறது''

''எப்படி?''

''பொறியின் சுழற்சக்கரத்தில் பற்களை வைத்திருந்தேன்...'' என்று கூறி சேனாதிபதியை உற்று நோக்கினான் சிற்பி.

அவன் ஏன் அப்படி உற்று நோக்குகிறானென்பதும் சேனாதிபதிக்கு விளங்கவில்லை. அவன் சுழல் சக்கரத்தில் பற்களை வைத்திருந்ததற்கும் கதவுகள் நின்றதற்குமுள்ள சம்பந்தமும் புரியவில்லை சேனாதிபதிக்கு. ஆகவே, ''சரி சரி; மேலே சொல்'' என்றான்.

''மன்னர் என்னைச் சுழற்சக்கரங்களை அமைக்கச் சொன்னபோது மரவையில் மொத்தம் இருபத்து நான்கு பற்களை வைக்கும்படி உத்தரவிட்டார். அப்படியே வைத்தேன். கைப்பிடியைப் பற்றிச் சுழற்றும்போது ஒரு முறை பற்கள் பதிந்துவிடும். அப்பொழுது கதவுகள் மெள்ள மெள்ளத் திறக்கும். இன்னொரு முறை பதிவுக் குழல் அகன்றுவிடும். பற்கள் பதியமாட்டா. அப்பொழுது கதவுகள் திடீரென மூடும். இதுதான் பொறியின் அமைப்பு. ஆனால் இந்தப் பொறியில் ஒரு விசேஷமுண்டு...'' என்ற சிற்பி சிறிது நிறுத்தினான் பேச்சை, தான் சொல்வது சேனாதிபதியின் மூளையில் பதிகிறதா என்று பார்க்க.

''உம் உம்'' என்று ஊங்காரம் செய்தான் சேனாதிபதி 'மேலே சொல்' என்பதைக் குறிக்க.

சிற்பி மேலே சொன்னான். ''இப்படி அமைக்கப்பட்ட சுழற்பொறி ஒன்று மெதுவாகக் கதவுகளை மூடித் திறக்கும். அல்லது வேகமாக மூடித் திறக்கும். இரண்டுக்கும் நடுவில் எதையுமே செய்யாது. ஆனால் செய்திருக்கிறது.

முக்கால் வாசி சென்று சட்டென்று நின்றிருக்கிறது. அதைப் பார்த்த எனக்கே ஆச்சரியமாயிருந்தது அது எப்படி சாத்தியம் என்று. மறுபடியும் பொறியை இயக்கிப் பார்த்தேன். மீண்டும் அதே மாதிரி முக்கால்வாசி மூடி நடுவில் ஒரு ரதம் செல்லும் அளவுக்கு இடம் விட்டு நாய் பிடித்ததுபோல் நின்றன இரண்டு கதவுகளும். பிறகுதான் பரிசோதித்தேன் இரண்டு கதவுகளின் பொறியையும். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. என்னைவிட சிற்பசாத்திரத்தின் நுணுக்கங்களை அறிந்த ஒருவர் அதைத் திருத்தியிருப்பதை உணர்ந்தேன். இருபத்து நான்கு பற்களில் சரியாக எட்டுப் பற்களைத் தவிர மற்றவை லேசாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த எட்டுப் பற்கள் வந்ததும் கதவு தானாக நிற்கும்படி பற்கள் பதியும் குழிகள் ஆழப்படுத்தப்பட்டிருக்கின்றன.''

சிற்பி இத்துடன் பேச்சை நிறுத்தினான். சேனாதிபதி தீவிர சிந்தனையில் சில விநாடிகள் இறங்கினான். பிறகு கேட்டான், ''இதை யார் செய்திருக்க முடியும்?'' என்று.

''இதில் சந்தேகமில்லை. ஒருவர் தான் செய்திருக்க வேண்டும்'' என்றான் சிற்பி.

''யாரது?''

''மன்னர்.''

''மன்னரா?''

''ஆம்! மன்னரே தான்.''

''மன்னர் சிற்பியா?''

''ஆம்; சிற்பிதான். சாதாரணச் சிற்பியல்ல. என்னை விடப் பல மடங்கு சிறந்த சிற்பி.''

''அதெப்படி அத்தனை திட்டமாகச் சொல்லுகிறீர்கள்?''



பதிலுக்கு சிற்பி தனது மடியிலிருந்து இரண்டு சின்னஞ் சிறு மரப்பட்டைகளை எடுத்துச் சேனாதிபதியிடம் கொடுத்தான்.

அந்த மரப்பட்டைகள் இரண்டையும் கையில் வாங்கிய சேனாதிபதி அவற்றை உற்றுப் பார்த்தான். அவனுக்கு ஏதும் விளங்காததால், ''இவற்றில் என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

''விளக்கொளியில் மரப்பட்டைகளின் உட்புறத்தை நன்றாகப் பாருங்கள்.''

சிற்பி சொன்னபடி விளக்கடிக்குச் சென்று குனிந்து மரப்பட்டைகளின் உட்புறத்தைக் கவனித்த சேனாதிபதி, ''மிதமிஞ்சிய பிரமிப்பால் பல விநாடிகள் செயலற்று நின்றான். ஒரு மரப்பட்டையின் உட்புறத்தில், ''அற்றது பற்றெனில் உற்றது வீடு'' என்ற சொற்களும், மற்றொரு பட்டையின் உட்புறத்தில் ''வீடுமின் முற்றவும் உம்முயிர் வீடுடையானிடை வீடு செய்மினே'' என்ற சொற்களும் எழுதப்பட்டிருந்தன.

அவற்றின் பொருள் விளங்காததால் சேனாதிபதி சிற்பியை நோக்கி, ''இவை என்ன?'' என்று வினவினான்.

''திருவாய் மொழியின் இரண்டு பாட்டுகள்'' என்றான் சிற்பி.

''இவை என்ன கூறுகின்றன?''

''வீண் ஆசைகளை விடவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன.''

''நீயும் படித்திருக்கிறாயா ஆழ்வார் பாட்டுகளை?''

''நானும் ஆஸ்திகன் தானே.''

சிற்பியின் இந்தக் கடைசிச் சொற்கள் சேனாதிபதிக்குப் பெரும் சினத்தை விளைவித்ததானாலும் அவன் அந்தச் சினத்தை வெளியில் காட்டும் நிலையில் இல்லை. சினத்தை விட அச்சம் அவன் மனத்தைச் சூழ்ந்து நின்றது.

மன்னனுக்குப் புரவிக் கூடத்தின் கீழ் நடந்த சதி மண்டப நடவடிக்கைகள் எப்படியோ தெரிந்திருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான். அது எப்படிப் புரிந்திருக்கிறது? யார் வேவு பார்த்துச் சொல்லியிருப்பார்கள்? என்பதை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் அவன் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க அவனுக்குச் சதிக் கூட்டத்திலுள்ள யாரோ ஒருவர்தான் மன்னனிடம் விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டுமெனத் தோன்றியது. யாராவது சொல்லியிருந்தால் அது இந்திராதேவியாகத்தானிருக்க வேண்டுமென்றும் அவன் தீர்மானித்தான். இந்திராதேவி இதயவர்மனுக்குப் பதில் தன் உயிரையே கொடுக்க முன் வந்தது அந்தத் தீர்மானத்துக்குச் சான்று கூறியது. ஆடவன் கரம் பட்டதும் கரைந்து விடும் பெண்களைப் பெரும் அரசியல் காரியங்களில் இணைப்பது எத்தனை கெடுதல் என்று நினைத்தான் சேனாதிபதி. இந்திராதேவி மேற்கொண்டு சதிகாரர்களைக் காட்டிக் கொடுக்க முயன்றால் என்ன செய்வது என்றும் நினைத்துப் பார்த்தான். ஆனால் அது விஷயமாக அவன் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. எல்லாவற்றையும்விட அவன் மனத்தில் மன்னனுக்குச் சதி விவரங்கள் தெரிந்துவிட்டதே யென்பதாலேற்பட்ட அச்சமும், தான் ஏற்றுக்கொண்ட கொலை முயற்சியையும் மன்னன் அறிந்து கொண்டு விட்டானே என்ற திகிலும் எழுந்து தாண்டவமாடின. சிற்பிக்கு இந்தச் சங்கடங்கள் இல்லை. "சுழற் பொறியைத் திருத்துவதானால் மன்னர் தன்னைக் கூப்பிட்டுத் திருத்தாமல் தானே ஏன் திருத்தினார்? எப்பொழுது திருத்தினார்? சதா கதவுகளைக் காவல் புரியும் வீரர்கள்கூட அறியாமல் எப்படி அவரால் பொறியைத் திருத்த முடிந்தது?" என்ற கேள்விகள் சிற்பியைக் குழப்பியிருந்தன. அச்சப்பட்ட சேனாதிபதியும் குழம்பிய சிற்பியும் நீண்டநேரம் மௌனமே சாதித்தனர். கடைசியில் சேனாதிபதி ஒரு முடிவுக்கு வந்தவன் போல் தானாகத் தலையை ஆட்டிக் கொண்டு, "சரி சரி; நீ போய் வா" என்றான்.



சிற்பி அந்த அறையைவிட்டுச் செல்லக் கிளம்பினான். திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு திரும்பி, "சேனாதிபதியவர்களிடம் ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். இந்த மரப்பட்டைகளிரண்டும் சுழற்சக்கரத்துக்கு ஒன்றாக உருளைகளுக்குள் மிகச் சாமர்த்தியமாக வைக்கப்பட்டிருந்தன என்பதை நான் சொல்லத் தேவையில்லை. உருளைகள் சுழன்ற பின்பும் பட்டைகளின் நுனி கூட அரைபடவில்லை" என்று கூறிவிட்டு வெளியே சென்றான். அவன் சென்ற பின்பு சேனாதிபதி நீண்ட நேரம் விளக்கடியில் மௌனமாக நின்றான். பிறகு இதை எப்படியும் சற்று முன்பு தன்னைப் பார்த்துச் சென்ற ராஜமாதுலரிடம் சொல்ல வேண்டுமென்று வெகு துரிதமாகக் கிளம்பிச் சென்றான். நேராகத் தனது அறையிலிருந்து கிளம்பியவன் கீழிருந்த ஆயுத சாலைக்குச் சென்று அதன் கதவைத் திறந்தான். அங்கும் அவனுக்குப் பெரும் வியப்பு காத்திருந்தது. அங்கிருந்த பஞ்சணையில் ராஜமாதுலரும் இல்லை. ராஷ்டிரகூட சேனாதிபதியும் இல்லை. சேனாதிபதி சிறிது நேரம் திகைதது நின்றான். பிறகு வெறிபிடித்தவன் போல் வெளியே ஓடினான். ஆயுத சாலையை அடுத்திருந்த இடங்களில் தேடினான். பிறகு புரவிச் சாலைக்குச் சென்று அங்கெல்லாம் கவனித்தான். ரஞ்சனியையும் எழுப்பி, "இந்தப் பக்கம் ராஜமாதுலர் வந்தாரா?" என்று வினவினான்.

அதுவரை உறங்கிக் கொண்டிருந்த ரஞ்சனி விளக்குத் திரியைத் தூண்டிவிட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டு, "ராஜமாதுலரா?" என்று வினவினாள் வியப்புடன்.

"ஆமாம்; மன்னரின் மாமன்" என்றான் சேனாதிபதி அவசரத்துடன்.

"அவர் எப்படி இங்கு வரமுடியும்?" என்று வினவினாள் ரஞ்சனி வியப்புடன்.

"அதைப்பற்றி உனக்கென்ன? நீ பார்த்தாயா?"

''மன்னரின் மாமனை நான் பார்த்ததில்லையே.''

''சரி; சரி. இந்தப் பக்கம் யாராவது வந்தார்களா?''

''நான் விழித்திருந்த வரையில் வரவில்லை.''

''திட்டி வாசற் கதவு?''

''மூடித்தானிருக்கிறது.''

இதற்குப் பிறகு சேனாதிபதி சிறிது சிந்தித்துக் கொண்டு நின்றான். ''ராஜமாதுலர் எங்குதான் போயிருப்பார்?'' என்று சற்று இரைந்தே கேட்டான்.

எதிர்பாராத விதமாகப் பதில் கிடைத்தது அவனுக்கு. திடீரென காஞ்சியின் பெரும்பேரிகைகள் முழங்கின. அரண்மனையின் தாரைகளும் அந்த நள்ளிரவில் பயங்கரமாகச் சப்தித்தன. சேனாதிபதியின் காதுகளில் மட்டுமல்ல, இதயத்திலும் புத்தியிலுங்கூட அந்தப் பேரிகைகள் மடமடவென அடித்தன.



## தர்மம் வெல்லும்

புரவிச்சாலையின் நடுவெளிக் கூடத்தின் ஒரு பகுதியிலிருந்து ரஞ்சனி வீட்டு வாசலில் நின்று, ராஜமாதுலர் எங்குதான் போயிருப்பாரென்று ஏங்கி நின்ற சமயத்தில் காஞ்சியின் பெரும் பேரிகைகளும் அரண்மனைத் தாரைகளும் சப்தித்ததைக் கேட்டதும் சேனாதிபதி ரவிவர்மன் பெரும் பீதிக்குள்ளானான். அந்தப் பேரிகைகளும் தாரைகளும் அரசகுலப் பெருமக்கள் வெளிநாட்டிலிருந்து வரும் சமயங்களில மட்டுமே சப்திக்கும் வகையில் ஒலிப்பதைக் கேட்டதும் அநேகமாக ராஜமாதுலர் காஞ்சியில் உறைவது யார் கண்ணிலோ பட்டிருக்க வேண்டுமென்று சந்தேகமறப் புரிந்துகொண்டான், காஞ்சியின் சேனாதிபதி. சில நாழிகைகளுக்கு முன்பு தன்னை வரும்படி அழைத்த ராஜமாதுலரும் ராஷ்டிரகூட சேனாதிபதியும் அதற்குள் எப்படித் தனது மாளிகையைவிட்டுப் பறந்து மக்கள் கண்ணுக்கோ அரசன் கண்ணுக்கோ பட்டிருப்பார்களென்பதும் புரியவில்லை ரவிவர்மனுக்கு. ஆகவே பல விநாடிகள் பெருங்குழப்பத்துடன் ரஞ்சனி வீட்டு வாசலிலேயே நின்றுவிட்ட சேனாதிபதி முடிவில், ''ரஞ்சனி, நீ படுத்துக்கொள். யார் வந்தாலும் என் உத்தரவின்றித் திட்டி வாசற் கதவைத் திறக்காதே'' என்று கூறிவிட்டு மடமடவெனத் தனது மாளிகையின் முன்புறத்துக்குச் சென்றான். முன்புறத்தை அடைந்ததும் அங்கிருந்த காவலனொருவனை அழைத்து விரைவில் அரண்மனை சென்று அங்கு வந்திருப்பது யாரென்பதை அறிந்து தன்னை. மேலை ராஜவீதியிலுள்ள படை வீட்டில் சந்திக்கும்படி உத்தரவிட்டனுப்பினான். அந்த வீரன் சென்ற சில விநாடிகளுக்குள் தானும் புத்துடை அணிந்து புரவியொன்றில் ஏறிப் படை வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் மேலை ராஜவீதியை அணுகிய சமயத்தில் அவ்வீதியில் பாதுகாப்பு மையமிருந்தது. இரவிலும் கண்

விழிக்கும் காஞ்சியின் அந்த வீதியில் கும்பலும் அரவமும் வழக்கத்துக்கு விரோதமாகச் சற்று அதிகமாகவே காணப்பட்டன. தாரைகள் ஊதப்பட்டதும் பேரிகைகள் முழங்கியதுமே அதற்குக் காரணமென்பதை அறிந்து கொண்ட சேனாதிபதி தனது புரவியைச் செலுத்திக் கொண்டு முகப்பிலிருந்த படை வீட்டுக்கு வந்து சேர்ந்தான். படை வீட்டுக் காவலரிருவர் சேனாதிபதியைக் கண்டதும் பரபரப்புடன் அவனை வரவேற்று அவன் வழக்கமாகத் தங்கும் அறைக்கு அழைத்துச் சென்றதன்றி, படை வீட்டுத் தலைமைக் காவலனுக்கும் சேனாதிபதி வருகையை அறிவித்தனர். சேனாதிபதி விஜயத்தை அறிந்ததும் விரைந்து வந்த தலைமைக் காவலன், ரவிவர்மன் எதிரே நின்று தலை வணங்கி, "சேனாதிபதி திடீரென்று வந்தது வியப்பை அளிக்கிறது. இன்று எல்லாமே வியப்பாயிருக்கிறது" என்றும் கூறினான்.

சேனாதிபதி ரவிவர்மன் விழிகள் அவனைக் கூர்ந்து நோக்கின. "எல்லாமே என்றால் எதைக் குறிப்பிடுகிறாய்?" என்று வினவினான் சேனாதிபதி.

"இரவின் இரண்டாம் ஜாமம் இது......" என்று இழுத்தான் தலைமைக் காவலன்.

"ஆம்!" சேனாதிபதியின் பதிலில் வறட்சி இருந்தது.

"இந்தச் சமயத்தில் சேனாதிபதி இங்கு வருவது ஒரு விசித்திரம்..." என்றான் மேலும் தலைமைக் காவலன்.

"ஆம்."

"தவிர ராஜமாதுலரும் திடீரென, இந்தச் சமயத்தில் காஞ்சி வருகிறார்."

"என்ன! ராஜமாதுலரா!" போலி வியப்பைக் காட்டினான் சேனாதிபதி.

"ஆம், திடீரென்று ராஜமாதுலர் காஞ்சிக்குள் வந்தார். முன்னறிவிப்பு ஏதுமில்லை. மன்னருக்குக்கூட



அவர் வருகை தெரியாது. நமது காவல் வீரர்கள் கண்டு பேரிகைகளை அடித்தனர். அதைத் தொடர்ந்து அரண்மனைத் தாரைகள் முழங்கின. பிறகுதான் எனக்கே தெரியும்" என்றான் தலைமைக் காவலன்.

"வேறு யார் அவருடன் வந்திருப்பது?" என்று வினவினான் சேனாதிபதி.

"வேறு யாருமில்லை."

"தன்னந்தனியாகவா வந்திருக்கிறார்?"

"ஆம்."

"நம்ப முடியவில்லையே."

"யாரால் நம்ப முடியும்? அவர் இந்த வீதிவழியாக நமது காவலர் சூழச் சென்ற வரையில் என்னால்கூட நம்ப முடியவில்லை."

இதைக் கேட்ட சேனாதிபதி ரவிவர்மன் பெரிதும் குழம்பினான். சதியில் இறங்கி அதைப் பெரும் மர்மமாக வைத்திருந்த தன்னையே பெரும் மர்மம் சூழ்ந்துவிட்டதை உணர்ந்து திகைத்தான் அவன். ஆகவே தலைமைக் காவலனை நோக்கித் தன்னை யாராவது தேடிவந்தால் மட்டும் உள்ளே அனுமதிக்குமாறு திட்டம் செய்து அங்கிருந்த மஞ்சத்தில் சாய்ந்துகொண்டு சிந்தனையிலிறங்கினான். ராஜமாதுலர் எதற்காகத் திடீரென ஆயுதசாலையிலிருந்து வெளியேறினார் என்பதோ அவருடனிருந்த ராஷ்டிரகூட சேனாதிபதி என்னவானானென்பதோ அவனுக்குச் சிறிதளவும் தெரியவில்லை. 'காஞ்சியின் காவலர் சூழ ராஜமாதுலர் சென்றதாகத் தலைமைக் காவலன் சொல்லுகிறானே, அப்படியானால் ஒரு வேளை அரசனே அவரைச் சிறை செய்து அழைத்துச் சென்றிருப்பானோ?', என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் ரவிவர்மன் 'அப்படிச் சிறைசெய்வதானால் ராஜமாதுலர் வந்திருக்கும் விஷயம் மன்னருக்குத் தெரிந்திருக்க வேண்டும், எப்படித் தெரிந்திருக்கும்?' என்றும்

வினவிக்கொண்டான். எல்லாவற்றிற்கும் காரணம் இந்திராதேவியென்ற முடிவுக்கு வந்ததால் அவளை ஒழித்தாலன்றித் தான் தப்ப முடியாது என்றும், ஏதாவது ஒரு வியாஜ்யத்தை வைத்து அவளைத் தீர்த்து விடவேண்டியது என்றும் முடிவு செய்து கொண்டான் சேனாதிபதி.

இப்படிச் சிந்தனை செய்துகொண்டே மஞ்சத்தில் சாய்ந்திருந்த சேனாதிபதியைச் சந்திக்க அவன் மாளிகைக் காவலன், ''அரண்மனை சென்று வந்தேன். ராஜமாதுலர் வந்திருக்கிறாராம். அதனால்தான் தாரைகள் முழக்கப் பட்டனவாம்'' என்று புதிதாக ஏதோ தகவலைச் சொல்பவனைப்போல் சொன்னான்.

சேனாதிபதிக்கு அந்தத் தகவலை ஏற்கெனவே தலைமைக்காவலன் சொல்லியிருந்தாலும் அதைப்பற்றிச் சிரத்தையே காட்டிய சேனாதிபதி, ''எப்பொழுது வந்தாராம்?'' என்று வினவினான்.

''தெரியவில்லை'' என்றான் காவலன்.

''தெரியவில்லையென்றால்?''— சேனாதிபதி கோபத்துடன் கேட்டான்.

''அரண்மனைக் காவலருக்கே தெரியவில்லை.''

''உண்மையாகவே தெரியவில்லையா? தெரியாதது போல் நடிக்கிறார்களா?''

''அவர்கள் நடிக்கக் காரணமில்லை. தாங்கள் அறிந்து வரச்சொன்னதாகச் சொன்னேன். அப்படியும் எல்லோரும் விழிக்கிறார்கள்.''

''ராஜமாதுலரை அரண்மனையில் யார் வரவேற்றார்கள்?''

''அவர்கள் சகோதரியார், பெரிய ராணியார்.''

''யார் ரேவாதேவியா?''

''ஆம்.''



''இப்பொழுது ராஜமாதுலர் எங்கு தங்கியிருக்கிறார்?''

''சகோதரியார் மாளிகையில்.''

இந்தப் பதில் சற்று நிம்மதியை அளித்தது சேனாதிபதிக்கு. ராஜமாதாவின் மாளிகை அரண்மனையின் மேல் புறத்திலிருப்பதால் அங்கு எந்த வேளையிலும் ராஜமாதுலரைச் சந்திக்க முடியுமென்ற உணர்ச்சி பெரும் சக்தியைக் கொடுத்தது சேனாதிபதிக்கு. ராஜமாதாவுடன் ராஜமாதுலர் தங்கியிருப்பதால் சதியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஓரளவு பாதுகாப்பு இருக்கிறதென்ற முடிவுக்கு வந்தான் சேனாதிபதி. 'சதியே ராஜமாதாவின் ஏற்பாட்டால் நடப்பதாலும் அம்பலமானால் ராஜமாதாவின் கை அதில் கலந்திருப்பதும் அம்பலமாகுமென்றும், அப்படி ராஜமாதாவின் பங்கு வெளியானால் ராஜமாதாவைத் தண்டிப்பதையும் மன்னன் தவிர்க்க முடியாது' என்றும் தனக்குள் சொல்லிக்கொண்ட சேனாதிபதி 'அவசியமானால் ராஜமாதாவையும் மக்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அரண்மனைக்குக் கிளம்பினான் படைவீட்டை விட்டு.

அரண்மனையின் ராஜ வாயில்களைத் தாண்டி ராஜமாதாவின் மாளிகையை அடைந்ததும் அங்கு விளக்குகள் பேரொளி வீசுவதையும், காவலர் பெரும் குதூகலத்துடனிருப்பதையும் கவனித்தான் சேனாதிபதி. தன்னைக் கண்டதும் வீரர்கள் பரபரப்படைந்து புரவியை இருவர் பிடிக்க ஒருவன் பாதத்தைத் தாங்கக் கீழே இறங்கிய ரவிவர்மன் அங்கிருந்த காவலனொருவனிடம் ''நான் வந்திருப்பதை ராஜமாதாவிடம் தெரிவி'' என்று கூறினான். அக்கட்டளையை நிறைவேற்றப் பறந்த காவலன் சற்று நேரத்தில் திரும்பிவந்து ராஜமாதா பள்ளியறைக்குச் சென்றுவிட்டதாகக் கூறினான். இதனால் சற்றுக் கசப்படைந்த சேனாதிபதி ''அப்படியானால் ராஜமாதுலரிடம் நான் வந்திருப்பதைத் தெரிவி'' என்று உஷ்ணத்துடன் கூறினான். மீண்டும் உள்ளே சென்ற

திரும்பிய காவலன், ''நீண்ட பயணத்துக்குப் பின் ராஜமாதுலர் களைத்திருப்பதால் சயனித்துவிட்டார்'' என்று அறிவித்தான்.

''நீண்ட பயணத்துக்குப் பின்னா? எத்தனை நீண்ட பயணம்? என் மாளிகையிலிருந்து இங்கு வருவது நீண்ட பயணமா?'' என்று உள்ளூர சீறிக் கொண்ட சேனாதிபதி அதற்கு மேல் அங்கு நிற்காமல் புரவியேறி மீண்டும் தனது அறைக்குச் சென்று பஞ்சணையில் படுத்துக் கொண்டான். அவன் உள்ளத்தைப் பேரச்சமும் பெரும் குழப்பமும் சூழ்ந்திருந்தன. ராஜமாதுலர் தனது சகோதரி மாளிகைக்குத் திடீரென்று சென்றுவிட்டதற்கும், ராஷ்டிரகூட சேனாதிபதி திடீரென மறைந்துவிட்டதற்கும் காரணம் புரியவில்லை அவனுக்கு. ஏதும் புரியாவிட்டாலும் ஒன்று மட்டும் உறுதி செய்து கொண்டான் அவன். இத்தனைக்கும் காரணம் இந்திராதேவிதான் என்பதில் அவனுக்குச் சிறிதளவும் சந்தேகமில்லை. அவள் இதயவர்மனைக் காப்பாற்ற பகிரங்கமாகத் தனது உயிரையே அர்ப்பணிக்க முன்வந்தது அவன் முடிவுக்குச் சந்தேகமற்ற சான்று கூறியது. பெண்களைச் சதியில் சேர்க்கக் கூடாதென ராஷ்டிரகூட சேனாதிபதி கூறியதில் எத்தனை பொருளிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான் சேனாதிபதி எப்படியும் சதி விவகாரங்கள் பெரிதும் அம்பலமாகி விட்டதால் தன்னைக் காத்துக் கொள்ளும் முறைகளைப் பற்றியும் சிந்தித்த ரவிவர்மன் திடீரெனச் சுவரின் ஒரு மூலையிலிருந்த ரகசியப் பிறையொன்றைத் திறந்தான். மரப் பேழையொன்றை எடுத்துத் தனது இடைக் கச்சையிலிருந்த சாவியால் அதைத் திறந்து உள்ளே நோக்கினான். அவன் முகத்தில் பெரு மகிழ்ச்சி நிலவியது அதிலிருந்த ஒரு முத்திரை ஓலையை எடுத்துப் படித்தான். முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி பதின்மடங்காகியது. ராஜமாதா ரேவாதேவி அவனுக்கு அனுப்பிய ரகசிய ஓலை அது. அதில் சதியில் சேருவோர் பெயர், செய்ய வேண்டிய அலுவல், சகலமும் இருந்ததன்றி அடியில் அவள் கையொப்பமுமிருந்தது.



அந்த ஓலை தனக்குப் பெரும் ரட்சை என்பதை உணர்ந்திருந்த சேனாதிபதியின் மூளையில் சிறந்த யோசனை ஒன்றும் உருவாயிற்று. திடீரென ரவிவர்மன் பெரும் சுறுசுறுப்பைக் காட்டினான். அதே அறையிலிருந்த ஒரு வெள்ளித் தகட்டை எடுத்து அதில் ஓலையை வைத்து இறுக்கிச் சுருட்டினான். பிறகு அதில் ஒரு பட்டுக் கயிற்றைக் கட்டித் தனது வலது புஜத்தில் ரட்சை போல அணிந்துகொண்டு, ''இதைவிடப் பெரிய மந்திர ரட்சை கிடையாது. இது என்னைக் காக்கும் அல்லது என்னுடன் ராஜமாதா, இந்திராதேவி ஆகிய இன்னும் பலரையும் அழித்துவிடும். காஞ்சி மண்டல நீதிமன்றத்தில் மன்னர் குடும்பத்துக்கு ஒரு நீதி, மற்றொருவருக்கு ஒரு நீதி என்ற வேறுபாடு கிடையாதல்லவா?'' என்று உள்ளூர சிரித்துக் கொண்டு உறங்கச் சென்றான்.

இரண்டாம் ஜாமமும் முடிந்துவிட்ட வேளையது. மூன்றாம் ஜாமம் தொடங்கியதால் காஞ்சி மாநகர்கூட மெல்லத் துயிலும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கடைகள் மெல்ல மெல்ல மூடப்படும் சத்தம் நகர வீதிகளில் கேட்கலாயிற்று நடன இசை ஒலிகளும் அடங்கிவிட்டன. அநேகமாக எல்லாம் அடங்கத் தொடங்கிய அந்த நேரத்தில் இருவர் மட்டும் வைகுந்தன் சந்நிதிக்கெதிரில் ஆழ்ந்த சிந்தனையுடன் நின்றனர். ஒருவன் காஞ்சியின் அதிபதி தந்திவர்மன். மற்றவன் இதயவர்மன்.

எப்பொழுதும் சாந்தி நிலவும் மன்னன் முகத்தில் அப்பொழுது துயரம் நிரம்பி நின்றது. ''போரைத் தடுக்க முயன்றேன் இதயவர்மா, முடியவில்லை. கோவிந்தன் படை இன்னும் ஒரே வாரத்தில் காஞ்சியின் முன்பு நிற்கும்'' என்றான் தந்திவர்மன், குரலில் பெரும் துயரத்தைக் காட்டி.

''உண்மையாகவா!'' என்ற இதயவர்மன் குரலில் வியப்பு மட்டுமன்றி வேதனையும் இருந்தது.

''ஆம்.'' மன்னன் குரலில் துயரம் ததும்பியது.

''அப்படியானால் சதிகாரர்கள்...'' என்று இழுத்தான் இதயவர்மன்.

''ஒருவரைத் தவிர மற்றவர் என் பாதுகாப்பிலிருக்கிறார்கள்'' என்றான் மன்னன் நிதானமாக.

''அந்த ஒருவர்...?''

''ராஷ்டிரகூட சேனாதிபதி.''

''தப்பிவிட்டாரா?''

''இல்லை, தப்ப விட்டேன்.''

''புரியவில்லை மன்னவா?''

''அவர் அடையாளங்களைச் சொல்லி அவர் கோட்டைக்கு வெளியே செல்வதானால் தடை செய்ய வேண்டாமென்று உத்தரவிட்டேன்.''

''இது விவேகமா?''

''விவேகமல்ல, தர்மம்.''

''தர்மமா?''

''ஆம். ராஷ்டிரகூட சைன்யம் சேனாதிபதியில்லாமல் எப்படிப் போரிடும்?''

மன்னன் கேள்வி பெரும் வியப்பைத் தந்தது இதயவர்மனுக்கு. அதைக் கண்ட மன்னன் வேதனைப் புன்முறுவல் செய்து, ''இதயவர்மா! என் தாய் விளைவித்த சதியின் கடைசிக் கட்டம் இது. இதில் தர்மம் வெல்லும், நீயே பார்க்கப் போகிறாய்'' என்றான் தந்திவர்மன். அத்துடன் தர்மம் எப்படி வெல்லும் என்பதையும் விளக்கினான் காஞ்சியின் காவலன்.

## அத்தியாயம் 26

## ரஞ்சனி மறைந்தாள்

முதன் முதலாக இதயவர்மனைச் சந்தித்த இரவில், எந்த இடத்தில் நின்றிருந்தானோ அதே இடத்தில் அன்றும் நின்றிருந்தான் பல்லவ சக்கரவர்த்தி. அவன் தலைக்கு மேலேயிருந்த சிம்மவிஷ்ணுவின் சிற்பம் அந்தச் சமயத்தில் அவனை அன்புடன் நோக்கிக்கொண்டுதானிருந்தது. மன்னனிடமிருந்து சிறிது தள்ளியிருந்த இதயவர்மன் முகத்தில் முதலிரவில் இருந்ததைவிட அன்று பெரும் வியப்பு மண்டிக் கிடந்தது. ராஷ்டிரகூடர்கள் படையெடுத்து வந்துகொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவர்களுடைய சேனாதிபதியை வேண்டுமென்றே தப்ப விட்டுத் தர்மத்தைப்பற்றிப் பேசும் அந்தப் புரவலன்மீது தனது கண்களை ஆச்சரியத்துடன் நாட்டிய இதயவர்மன் கேட்டான். ''எதிரிகளுக்கு அனுகூலமாக நடப்பது அரச தர்மத்தில் சேருமா?'' என்று.

தந்திவர்மன் சற்று நேரம் வாளாவிருந்தான். பிறகு வைகுந்தன் கர்ப்பக்கிருகத்துக்குள் கண்ணைச் செலுத்தி, ''அவன் வழிகள் எல்லாமே தர்மத்தின் வழிதான். ஏனென்றால் அவனே தர்மம்'' என்று கூறினான்.

இதயவர்மன், மூடிய கர்ப்பக்கிருகக் கதவுகளின் சதுரத் துவாரங்கள் மூலமே நன்றாகத் தெரிந்த அந்த அர்ச்சாமூர்த்தியைப் பார்த்தான். அந்த மூர்த்தியின் சாந்த முகமும் புன்முறுவல் தவழும் பேரின்ப இதழ்களும் தந்திவர்மன் கூற்றை ஒப்புக்கொள்வனபோல் தோன்றின. இருப்பினும் உலக ரீதியில் எல்லாவற்றையுமே வைதீகக் கிரமத்தோடு இணைப்பது சாத்தியமல்லவென்ற காரணத்தால் கேட்டான் மன்னனை நோக்கி ''சாத்திரங்கள் வகுத்துள்ள தர்மங்களும் தெய்வ சம்மதமுள்ளவைதானே?''

''ஆம்'' மன்னவன் பதில் திட்டமாகவே இருந்தது.

''க்ஷத்திரியர்களுக்கென்று ஒரு தர்மம் உண்டு'' என்று சுட்டிக்காட்டினான் இதயவர்மன்.

''ஆம்.''

''குடிமக்களை காக்கும் தர்மம் அது.''

''ஆம்.''

''அதற்காக எதிரிகளுடன் போராடுவது தர்மம்.''

''ஆம்.''

''போராட்டம் ஏற்படுமானால் எதிரிகளை முறியடிக்கும் எந்த சாதனத்தையும் நாம் கைவிடக்கூடாது. விட்டால் அதர்மம்.'' இதை நன்றாக அழுத்திச் சொன்னான் இதயவர்மன்.

மன்னன் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு சொன்னான் மிகுந்த நிதானத்துடன், ''தர்மத்தில் இருவகை உண்டு'' என்று.

இதயவர்மன் தனது விழிகளை மன்னனை நோக்கி வியப்புடன் உயர்த்தி, ''இரண்டு வகைகளா?'' என்று வினவினான்.

''ஆம் இருவகைகள். ஒன்று சாதாரண தர்மம். இன்னொன்று விசேஷ தர்மம்'' என்று விடையிறுத்த நந்திவர்மன், ''இதயவர்மா? எதிரிகளின் வசதிகளை விலக்கி அசக்தர்களாகச் செய்து முறியடிப்பது ராஜ தந்திரம். க்ஷத்திரிய தர்மம். அவர்களுக்கு சம சக்தியை அளித்து, தேவையானால் உதவியும் புரிந்து மனச்சாந்தியுடனும் தைரியத்துடனும் அவர்களைப் போரிட அனுமதிப்பது விசேஷ தர்மம். இது பகவத் தர்மம்'' என்று கூறினான். இந்த விவரணத்தைக் கேட்டும் இதயவர்மன் ஏதும் புரியாமல் விழிக்கவே நந்திவர்மன் மேலும் விளக்கினான்: ''இதயவர்மா! முதல் நாள் உன்னை இங்கு எதிர்பாராதபடி வரவழைத்தபோதே சொன்னேன் நான் போர்களை வெறுப்பதாக, உயிரழிவை வெறுப்பதாக. ஆண்டவனும் அழிவை விரும்புவதில்லை. எதிரிகளை நாசம் செய்வதைக்கூட விரும்புவதில்லை. பிராட்டியையே தூக்கிச் சென்ற எதிரி, எதிரில் நிராயுதபாணியாக நின்ற



போதும் அவனைக் கொல்லாமல் இல்லத்துக்குப் போக விட்டு மறுநாள் வர அனுமதிக்கவில்லையா? அது விஷேச தர்மம். மகான்களுக்கான தர்மம் அது. நான் மகானல்ல. இருப்பினும் அந்த தர்மத்தைக் கடைப்பிடிக்க விரும்புகிறேன். ராஷ்டிரகூட சேனாதிபதி அவன் மன்னனிடம் செல்வதால் அந்தப் படை பலப்படும். அந்தப் பலத்தோடு கோவிந்தன் இங்கு வரட்டும், இங்கும் சமயத்துக்கு முயலுவோம். இல்லையேல் இருக்கிறது நாசம். ஆனால் இதயவர்மா, அப்பொழுது நாசம் அதிகமாக ஏற்படாத முறையில் போர் முடிவதைப் பார்ப்போம். மக்கள் நாசம் அனாவசியம். எதற்காக ஒருவன் இன்னொருவனோடு போரிட வேண்டும்? வைகுந்தன் தான் எல்லோரும் ஜீவிக்க மாநிலத்தில் வசதிகளை நிரம்பத் தந்திருக்கிறானே.''

இப்படிப் பேசிய நந்திவர்மன் பெருமூச்செறிந்தான் அவனுக்கு ஏக்கம் மிதமிஞ்சியிருப்பது நன்றாகத் தெரிந்தது. அவன் நின்ற நிலையிலிருந்தே இதயவர்மன் பேசும் சக்தியை இழந்திருந்தான். இப்படியொரு மகான் காஞ்சி மண்டலத்தின் மன்னனாக வாய்த்தது பல்லவ குலம் செய்த பேறு என்று எண்ணினான். இருப்பினும் தானும் மன்னனுமிருப்பது வேதகாலமோ, இராமாயண காலமோ அல்லவென்பதைப் புரிந்து கொண்டிருந்தாலும், போர்வேட்கை, வீரனான அவனுக்கு இருந்ததால் மெல்லச் சொன்னான், ''மன்னவா! நாமிருப்பது அந்தக் காலமல்லவே'' என்று.

''உண்மைதான் இதயவர்மா? ஆனால் அந்த தர்மங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்காக ஏற்பட்டவையல்ல'' என்றான் மன்னவன்.

''பழைய கருத்துக்கள்...'' என்று முணுமுணுத்தான் இதயவர்மன்.

''காற்று, மழை, வெயில் எல்லாமே பழையவைதான்'' என்று சுட்டிக் காட்டினான் மன்னவன்.

அதற்கு மேல் மன்னனிடம் அதைப்பற்றி விவாதிப்பதில் அர்த்தமில்லையென்பதைப் புரிந்துகொண்ட இதய

வர்மன், "என்னை எதற்காக இங்கு வரவழைத்தீர்கள் மன்னவா?" என்று வினவினான்.

"இந்த நகரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை உன்னிடம ஒப்படைக்க" என்றான் மன்னவன்.

இதயவர்மன் ஸ்தம்பித்து நின்றான் காஞ்சியின் சேனாதிபதிப் பதவியை மன்னன் தனக்களிப்பதைப் புரிந்து கொண்டதால் அவனுக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை. "அப்படியானால் ரவிவர்மன்..." என்று தட்டுத் தடுமாறி வார்த்தைகளை உதிர்த்தான்

"சேனாதிபதியாக இருப்பான்" என்றான் நந்தி வர்மன் சர்வசாதாரணமாக.

"காஞ்சிக்கு இரண்டு சேனாதிபதிகளா! ஒரு உறையில் இரண்டு கத்திகளா?" என்று கேட்டான் இதயவர்மன்.

"ஆம்."

"அது எப்படிச் சாத்தியம்?"

"ஏன் சாத்தியமில்லை? ரவிவர்மனுக்குக் காஞ்சியைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படும். போர்த் தந்திர ஆலோசனை சபையில் அவன் சொல்வதை யெல்லாம் ஒப்புக் கொள்வோம். அவன் காஞ்சியை, எதிரி களுக்குக் காட்டிக் கொடுக்கவே திட்டம் வகுப்பான். உனக்கு ஒரே ஒரு பொறுப்புதான் அப்பொழுது."

"என்ன பொறுப்பு?"

"சேனாதிபதியைக் கவனிக்கும் பொறுப்பு."

"அதைத்தான் இப்பொழுது செய்து வருகிறேன்."

"இப்பொழுது புரிவது வேவுத் தொழில். நான் சொல்வது போர்த் தொழில். நன்றாகக் கவனி, நான் வைதீகன்! கோவிலே கதியென்றிருக்கிறேன். இது என் அன்னைக்கே தெரியும். ஆகவே என் உத்தரவுகளை சேனாதிபதிக்கு அறிவிக்கவும் முடிவுகளை வந்து என்னிடம் சொல்லவும் போர்களில் அனுபவமுள்ள ஒரு படைத்



தலைவன் தேவை. அவன் நீதான். தவிர உன் கோத்திரமும் என் கோத்திரமும் ஒன்று. ஆகவே உன்னை சேனாதிபதிக்கு உதவ நியமிப்பதிலோ ஒரு பலன் அளிப்பதிலோ யாருக்கும் ஆட்சேபணை இருக்காது."

இதயவர்மன் சற்று யோசித்தான். பிறகு கேட்டான், "மன்னவா! உண்மையில் என் கோத்திரமும் பாரத் வாஜமா? தெய்வ சந்நிதியில் நிஜத்தைச் சொல்லுங்கள்" என்று.

"இல்லை."

"அப்படியானால் நான் யார்?"

"காலத்தில் அதைப் புரிந்துகொள்வாய். அந்த நாளும் தூரத்திலில்லை. இதற்குமேல் எதையும் கேட்காதே. இப்பொழுது உன்னைப் பற்றிக் கவலைப் படுவதைவிட பல்லவ காஞ்சியைப் பற்றிக் கவலைப்படு" என்று அழுத்திச் சொன்ன மன்னவன் "இன்னும் ஒரு வாரத்தில் கோவிந்தன் படைகள் காஞ்சியை வளைத்துக் கொள்ளும். காஞ்சியைக் காப்பதற்குண்டான போர் முறையை ரவிவர்மனே வகுப்பான். என் அன்னையும் அவனுக்கு யோசனை சொல்வார்கள். அவர்கள் திட்டப்படி நடந்தால் காஞ்சி ராஷ்டிரகூடர்கள் வலைக்குள் விழுந்து விடும். ஆனால் விழப்போவதில்லை. நீ சேனாதிபதியைக் கவனி. அவன் சொல்லும் ஏற்பாடுகளை நிறைவேற்று. எதற்கும் எதிர்த்துப் பேசாதே. ஆனால் அவன் உத்தரவுகள் என்ன என்பதை மட்டும் என்னிடம் அவ்வப் பொழுது சொல்" என்று கூறினான்.

"சரி மன்னவா" என்றான் இதயவர்மன்.

"சேனாதிபதியின் திட்டம் நன்றாக உருவாகி காஞ்சியை அவன் எதிரிகளிடம் ஒப்படைக்கும் காலம் ஒன்று சேரும். அந்தச் சமயத்தில் உன்னை உபயோகப் படுத்துவேன். நீ தயாராக இரு" என்றும் கூறிய மன்னவன்

அதற்கு மேல் ஏதும் சொல்லாமல், வைகுந்தனை நோக்கி அஞ்சலி செய்து தலைவணங்கி ஆழ்வார் பாசுரங்களை மெல்லப் பாடினான். இதயவர்மனையும் தன்னுடன் சேர்ந்து பாடச் சொன்னான். பிறகு அவனைத் தன்னுடன் வரும்படி சைகை செய்து வைகுந்தன் கோயிலை விட்டு வெளியே வந்தான்! வாயிலுக்கு வந்ததும் பெரும் போர்வையில் தன்னைப் போர்த்திக் கொண்டு அங்கிருந்த இரு புரவிகளிலொன்றில் ஏறிச் சென்றான். மற்றொரு புரவியில் ஏறித் தனது இருப்பிடம் வந்த இதயவர்மன் மனோநிலை சொல்லத் தரமற்றதாயிருந்தது.

இதயவர்மன் நீண்ட நேரம் படுக்கையில் படுத்துக் கிடந்தான். தான் கோயிலுக்குச் சென்ற உடைகளைச் சிறிதளவும் மாற்றாமலும், வாளைக்கூடக் கழற்றாமலும் அவன் மனத்தே ஒரு வாரத்தில் துவங்கப் போகும் போர், இந்திராதேவியின் நிலை, ரஞ்சனியின் நிலை, இத்தனையும் திரும்பத் திரும்ப வலம் வந்தன. ஒரு வாரத்தில் காஞ்சியை எதிரிகள் சூழ வேண்டுமானால் எதிரிப்படை காஞ்சிக்கு அதிக தூரத்திலில்லையென்பதை அறிந்துகொண்ட இதயவர்மன் எதிரிப்படையை மன்னன் ஏன் எதிர்கொண்டு போராடக்கூடாது? காஞ்சிக்கு வரும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்? என்று கேட்டுக் கொண்டான். மாமனை மட்டும் காவலில் வைத்துள்ள மன்னன் ஏன் சேனாதிபதியை சுதந்திரமாக உலாவவிட்டு அவனைக் கவனிக்கும் பொறுப்பைத் தனக்கு அளிக்கிறான் என்பதும் புரியவில்லை இதயவர்மனுக்கு. சேனாதிபதியைச் சிறை செய்து காஞ்சிப் பாதுகாப்பை மன்னனே ஏற்பது விவேகமாக இருக்க, காஞ்சியைக் காட்டிக் கொடுக்கும் வசதியை சேனாதிபதிக்கு அளித்துப் பிறகு அவனை மடக்கும் முயற்சி கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பதாகும் என்றே நினைத்தான் இதயவர்மன். இத்தனையிலும் மன்னன் மனத்தில் ஏதோ ஆழ்ந்த திட்டமிருக்கிறதென்பதும் இல்லாவிட்டால் இப்படிச்



சற்றி வளைத்துக் காரியங்களைச் செய்யமாட்டானென்றும் தீர்மானித்துக் கொண்டான். காஞ்சியிலுள்ள அனைவரும் அறிந்ததைவிட நந்திவர்மனுக்கு ராஷ்டிரகூடப் படையெடுப்பைப்பற்றி அதிகம் தெரியுமென்று தீர்மானித்துப் பல கேள்விகளுக்கு விடையேதும் கிடைக்காவிட்டாலும் அரசனிடம் ஏதோ மறைவான பெரும் ஆயுதமிருக்கிறதென்று நிர்ணயித்துக்கொண்டதால் சற்று அமைதியும் அடைந்தான்.

ஆனால் அடுத்த விநாடி அவன் கண்முன் எழுந்த இரு பாவையர் அந்த அமைதியைக் குலைத்தார்கள். இந்தச் சதியில் இணைந்துள்ள இந்திராதேவியின் சதியைப்பற்றி எண்ணினான். சதியில் புக இஷ்டமில்லாமலே சேனாதிபதியின் வீட்டிலிருப்பதாலேயே பெரும் அபாயத்தில் சதா இருக்கும் ரஞ்சனியைப் பற்றியும் எண்ணினான். இருவருக்கிருந்த அபாயங்களும் இரு திசைகளிலிருந்து இரு கூர்வேல்களாக வந்து அவன் இதயத்தைப் பிளந்தன. இந்திராதேவியின் இந்தீவிர நயனங்களும் ரஞ்சனியின் குறுகுறுத்த கொஞ்சும் விழிகளும் அவன் இதயத்தில் எழுந்து பார்த்தன. பார்த்தனவா அழைத்தனவா என்று அவனுக்கு விளங்கவில்லை. அவனுக்கு என்ன சக்தியிருந்ததோ ஏது சக்தியிருந்ததோ தெரியாது. ஆனால் அவன் உறக்கத்தையும், நிம்மதியையும் கெடுக்கும் சக்தி மட்டும் இருந்தது அவற்றுக்கு.

இரண்டு நாழிகைகளுக்குமேல் பஞ்சணையில் புரண்டான் அவன். இந்திராதேவி அழகா, ரஞ்சனி அழகா என்று சிந்தித்தான். ஒவ்வொரு முறையில் ஒவ்வொருவர் அழகெனப்பட்டது அவனுக்கு. "இருவருள் யாரை விரும்புகிறேன்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் இதயவர்மன் விடை சரியாகக் கிடைக்கவில்லை அவனுக்கு. இருவரையும் விரும்புவதாகவே தோன்றியது அவனுக்கு. இருப்பினும் ஒரு முடிவு திட்டமாக இருந்தது அவன் இதயத்தில். இந்திராதேவி

தனக்குக் கிட்டமாட்டாள் என்பதுதான் அது. ரஞ்சனி எளியவள், தன் நிலையில் உள்ளவள், அவளை விரும்புவது தான் நியாயம் என்று நினைத்தான் அவன். இன்னொரு ஆசையும் எழுந்தது அடுத்தபடி. "நான் சேனாதிபதிக்கு அடுத்தபடி. ஏன் ஒருபடி மேலே கூட. அரசரால் நியமிக்கப் பட்டதால், என் நிலையும் உயருமே. அப்பொழுது இந்திராதேவி ஏன் கிட்ட மாட்டாள்?" என்று வினவிக் கொண்டான். இப்படிப் பலபடி திண்டாடிய இதயவர்மன் தூங்க முடியாததால் மீண்டும் படுக்கையிலிருந்து எழுந்திருந்து வெளிவந்து புரவி ஏறி சேனாதிபதி மாளிகையை நோக்கி விரைந்தான். மாளிகையை அடைந்ததும் அதன் பின்புறம் வந்ததும் சற்றுத் திகைத்து நின்றான்.

வழக்கத்துக்கு விரோதமாகத் திட்டிவாசல் திறந்திருந்தது. ஏதோ விபரீதம் நடந்துவிட்டதென்ற நினைப்பில் திட்டிவாசலில் நுழைந்து ரஞ்சனியின் விடுதிக்கு ஓடினான். விடுதியும் திறந்து கிடந்தது. உள்ளேயிருந்த ஒற்றைத் தீபம் விடுதி காலியாயிருந்ததை நிரூபித்தது. உள்ளே வேகத்துடன் நுழைந்த இதயவர்மன் விளக்கை எடுத்தான். விளக்குத் தண்டுக்கடியில் இருந்த ஓலை நிமிர்ந்து விரிந்தது. அதை எடுத்துப் படித்தான் இதயவர்மன். அதிலிருந்தவை ரஞ்சனியின் எழுத்துக்கள். "சேனாதிபதிக்குத் தெரிந்துவிட்டது" என்ற வார்த்தைகள் இருந்தன அந்த ஓலையில். ரஞ்சனியின் கதியை நினைத்து நடுங்கிய இதயவர்மன் அந்த இடத்திலேயே சிலையென நின்றுவிட்டான்.

## அத்தியாயம் 27

## அரண்மனைச் சிறை! அதிகாரக் கம்பிகள்!

ரஞ்சனியின் ஓலையிலிருந்தே அவள் சேனாதிபதியால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறாளென்பதை உணர்ந்து கொண்ட இதயவர்மன், அவள் கதி என்னவாயிருக்குமோ என்று கதி கலங்கிப் பல விநாடிகள் கற்சிலையென நின்ற பிறகு உடைந்த மனத்துடன் புரவிக்கூடத்திற்குச் சென்று அங்கிருந்த கல்லைப் புரட்டி நிலவறையைச் சோதனை செய்ய முயன்றான். ஆனால் வழக்கத்துக்கு விரோதமாக அந்தச் சுரங்கப் பாதையின் மூடி நகரவும் மறுத்தது. எத்தனையோ முயன்றும் அதை அசைக்கக்கூட முடியாமற் போகவே மீண்டும் வந்த வழியே தனது விடுதிக்குத் திரும்பி வந்து பஞ்சணையில் படுத்துக்கொண்டான். அவன் மனத்தில் ரஞ்சனியைப் பற்றிய வேதனை மண்டிக் கிடந்ததால் அன்றிரவின் கடைசி ஜாமம் மெல்ல மெல்ல நகர்ந்தது. அடிக்கடி எழுந்து பொழுது புலருகிறதா இல்லையா என்று பார்த்தும் அறைக்குள் சிறிது நேரம் படுக்கையில் உட்கார்ந்தும் சிறிது படுத்தும் பலபடி இம்சைப்பட்டு அந்தக் கடைசி ஜாமத்தைக் கடந்தான். பொழுதும் மெல்ல மெல்லப் புலர்ந்தது.

திடீரென்று மலர் விகசிப்பதுபோல் மலர்ந்து விட்ட அந்தக் காலைப்பொழுது மிக இன்பமாகவே இருந்தது. படை வீட்டின் பின்புறத் தோட்டத்திலிருந்து நானாவிதப் பட்சி ஜாலங்கள் இன்பமாகக் கூவின. பட்சிகள் விழித்துப் பறந்து கிளைகளில் உட்கார்ந்ததால் சலசலவென்ற மரங்களின் இலைகள் விளைவித்த ஒலியிலும் சங்கீதமிருந்தது. அரண்மனை உப்பரிகைப் பொந்துகளிலிருந்து கிளம்பிய பட்சிகளின் கூச்சல் காதுக்கு மட்டுமல்ல மனத்துக்கும் மகிழ்ச்சியை அளிக்கக் கூடியதாய் இருந்தது. நான்காம் ஜாமத்தின் கடைப்பகுதியில் துவங்கிய காஞ்சி பக்தர்களின் உதயகால பஜனை கீதங்கள் காஞ்சியின் ஆத்மீக பலத்துக்குச் சான்று கூறின. இத்தனையும் இதயத்துக்குச் சாந்தியளிக்கும் அம்சங்கள்தாம். ஆனால் இதயவர்மன் இதயத்-

குக் குன்பச்சுமையை அவற்றால் சிறிதும் துடைக்க முடியவில்லை. ரஞ்சனியின் கதியைப் பற்றிச் சிந்தித்த அந்த நேரத்தில் அவன் காஞ்சிக்கு ஒரு வாரத்தில் ஏற்படவிருந்த ஆபத்தை மறந்தான். தனக்கு மன்னர் அளிப்பதாகச் சொன்ன பதவியை மறந்தான். வீரனென்ற முறையில் தனக்கு ஒரு கடமை இருக்கிறதென்பதைக்கூட மறந்தான் 'ரஞ்சனி தகப்பனற்ற குழந்தை. கிட்டத்தட்ட அனாதை. அவளைக் காரணமின்றித் துன்புறுத்தும் அரசியல் எத்தனை கொடுமையானது? அத்தகைய அரசியல் அவசியமா?" என்றுகூட நினைத்தான் இதயவர்மன். ரஞ்சனியின் ஆபத்து அவனைக்கூட போர்களை வெறுக்கச் செய்தது. 'ரஞ்சனியை உதாரணமாக எடுத்துக் கொண்டால் எத்தனை சாமான்யக் குடிமக்கள் போரினால் எத்தனை விதங்களில் இம்சைப்படுகிறார்கள்? அரசன் போர்களை வெறுப்பதிலும் அர்த்தமிருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் இதயவர்மன்.

இப்படி நானாவித யோசனைகளுடன் காலத்தைச் செலவிட்ட இதயவர்மன் நன்றாக விடிந்ததும் எழுந்து நீராடி காலைக் கடன்களை முடித்துக் கொண்ட சமயத்தில் அவனுக்கு அரசனிடமிருந்து அழைப்பு வந்தது. ''மன்னர் தங்களை இன்னும் ஒரு நாழிகையில் அரண்மனையில் எதிர் பார்க்கிறார்'' என்று அரண்மனையிலிருந்து வந்த வீரன் கொண்டு வந்த செய்தி இதயவர்மனுக்கு ஓரளவு சாந்தியையே அளித்தது. எந்த மன வேதனையையும் மாற்ற உழைப்புக்குச் சக்தி உண்டாகையால் கடமை எதிர் கொண்டதும் வேதனையைத் தற்காலிகமாக அகற்றிக் கொண்ட இதயவர்மன் மாளிகைக்குச் செல்லவேண்டிய உடையணிந்து புரவி ஏறிப் புறப்பட்டான் காஞ்சியின் வீதிகளின் வழியே சென்றவன் சென்ற ஒரு ஜாமத்துக்குள காஞ்சி திடீரென மாறிவிட்டதையும், எங்கும் காவல் வீரர் நடமாட்டமும் எச்சரிக்கையும் பலமாயிருப்பதையும் கவனித்தான். அவனிருந்த படை வீட்டு முகப்பிலிருந்து



பல படை வீடுகளையும் சாதாரண வீதிகளையும் தாண்டிச் சென்ற சமயத்தில் ஆங்காங்கு அரண்மனைத் தூதர்கள் புரவிகளில் விரைந்து கொண்டிருந்ததையும் படை வீடுகள் ஒவ்வொன்றிலும் நுழைந்து ஏதோ செய்திகள் சொல்லிப் போவதையுங் கண்டான். செய்தியைச் சொல்லி அந்த வீரர்கள் அகன்றதும் அந்தந்தப் படை வீடுகள் திடீரென உயிருடன் துடித்தெழுவதையும், ஆங்காங்கிருந்த வீரர்கள் பூரண ஆயுதமணிந்து புறப்படுவதையும் கண்ட இதயவர்மன், காஞ்சியைப் பாதுகாக்க மன்னன் கட்டளை பிறப்பித்து விட்டான் என்பதை உணர்ந்து கொண்டான். பெரும் வியப்பு அவனை ஆட்கொள்ளவும் செய்தது அந்த உணர்வின் விளைவாக.

சதா அமைதியைப் பற்றியும், போர்களைத் தவிர்ப்பது பற்றியும் பேசும் காஞ்சிக் காவலன், போர் ஏற்பாடுகளைச் செய்வதானாலும் எத்தகைய ஆலசியத்தையும் காட்டுவதில்லையென்பதை உணர்ந்த இதயவர்மன், "இம்மன்னன் மட்டும் போரில் விருப்பமுள்ளவனாயிருந்தால் பல்லவ சாம்ராஜ்யத்தை எத்தனை தூரம் விரிவுபடுத்தலாம்" என்று எண்ணினான். மண்ணாசை அடியோடு இல்லாதவனும் போரை வெறுப்பவனுமான அம்மன்னன் காஞ்சியின் காவலனாயிருப்பதால்தான் மாற்றரசர்களும் துணிந்து காஞ்சியின் மீது படையெடுக்கிறார்களென்பதும் புரிந்தது அவனுக்கு. ஆகவே மன்னனென்ற முறையில் பல்லவ தந்திவர்மன் தனது கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையென்றே நினைத்தான் இதயவர்மன் இத்தகைய நினைப்புகளுடன் அரண்மனையை அடைந்த இதயவர்மன் தன் நினைப்பு எத்தனை தவறானது என்பதையும், எத்தனை முன்னேற்பாடுடைய அசாதாரண மனிதனுடன் எதிரிகள் போராட வேண்டியிருக்கிறதென்பதையும் எளிதில் புரிந்துகொண்டான்.

அரண்மனையை அடைந்ததும் அங்கிருந்த வீரனொருவனால் அரசனுடைய மந்திராலோசனை

மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இதயவர்மன் அங்கு நிலவிய காட்சியைக் கண்டு பிரமித்து நின்றான். நடுவிலிருந்த அரியணையில் காலைப் பூசையை முடித்து விட்டதால் நெற்றியில் கஸ்தூரி திலகம் துலங்க, வலக் காதை துளசிதளம் அலங்கரிக்கப் பெரும் பட்டாடையுடன் வீற்றிருந்தான் பல்லவ சக்கரவர்த்தி தந்திவர்மன். அவனுக்கு ஒரு பக்கத்தில் ராஜமாதா ரேவாதேவியும், இன்னொரு பக்கத்தில் ராஜமாதுலரான பிரதாபவர்மனும் அமர்ந்திருந்தார்கள். ரணகளத்துக்குப் புறப்படும் சமயத்தில் அணியவேண்டிய பூரண கவசமணிந்து அமர்ந்திருந்தான் சேனாதிபதி ரவிவர்மன். ராஜமாதுலருக்கு சிறிது தள்ளி, ராஜமாதாவான ரேவாதேவிக்குப் பின்புறத்தில் இருந்த ஆசனத்தில் குனிந்த தலையுடன் அமர்ந்திருந்தாள் இந்திராதேவி. மந்திராலோசனை மண்டபத்திலிருந்தவர்கள் மொத்தம் இத்தனை பேர்தான். வேறு படைப் பிரிவுகளின் தலைவர்கள் யாருமே இல்லை.

அங்கு அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும் அவர்களிருந்த இடத்தை நெருங்காமலும் அரசனுக்குக்கூடத் தலை வணங்காமலும் பிரமித்து சில விநாடிகள் நின்றுவிட்ட இதயவர்மன், தான் மன்னன் சந்நிதானத்தில் இருப்பதை உணர்ந்து தலை வணங்கினான். தலை நிமிர்ந்தபோது அரசனைத் தவிர மற்ற ஒவ்வொருவரும் தன்னைக் கூர்ந்து நோக்குவதையும் தன் கண்களைச் சந்தித்த இந்திராதேவியின் கண்களில் விவரிக்க முடியாத ஒரு புத்தொளி 'தாண்டவமாடுவதையும் கண்டான். அங்கிருந்தவர்கள் தன்னை அப்படி ஊன்றிப் பார்த்ததற்கும் இந்திராதேவியின் விழிகளில் அந்தப் புத்தொளி பிறந்ததற்கும் காரணத்தை அறியாமல் நின்றவிடத்திலேயே நின்ற இதயவர்மனை அரசன் நோக்கி "இதயவர்மா! வா இப்படி; இந்த ஆசனத்தில் அமர்ந்துகொள்" என்று தனக்குச் சற்றுப் பின்னால் இருந்த ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான்.



அரசாங்க ரீதிப்படி அரசனுடைய மெய்காவலன் நிற்க வேண்டிய இடம் அது. அங்கு தன்னை நிற்கச் சொல்லாமல் உட்கார மன்னன் சொன்னதால் சிறிது குழப்பமடைந்த இதயவர்மன் மன்னனுக்குப் பின்புறம் சென்று மன்னனுக்கு இடப்புறத்தில் வந்து நின்றுகொண்டு ஆசனத்தைச் சிறிது நகர்த்தினான்.

"ஆசனத்தை நகர்த்தாதே இதயவர்மா! மெய்காவலர் தான் நிற்கவேண்டும். படைத்தலைவன் மந்திராலோசனையில் நிற்க வேண்டிய அவசியமில்லை" என்று தந்திவர்மன் அவனை உட்காரும்படி சைகையும் செய்தான்.

தன்னைப் படைத்தலைவனென்று அத்தனை பேருக்கும் எதிரில் சுட்டிக்காட்டி உட்காரவும் உத்தரவிட்டதால் குழப்பம் அதிகமாக ஆசனத்தில் இதயவர்மன் அமர்ந்ததும் தந்திவர்மன் தனது எதிரே இருந்தவர்களை நோக்கி "படையெடுப்பு விஷயத்தை உங்களுக்கு அறிவித்து விட்டேன். இதயவர்மன் வரச் சிறிது தாமதமாகிவிட்டதால் இவனில்லாமல் சில விஷயங்களைப் பேச நேர்ந்ததல்லவா?" என்று கேட்டு, "சேனாதிபதி! விஷயத்தை உமது உபதலைவனுக்கு விளக்கிச் சொல்லும்" என்று சேனாதிபதிக்கும் உத்தரவிட்டான்

சேனாதிபதி கம்பீரமாக இதயவர்மனை நோக்கினான். "இதயவர்மரே, காஞ்சியின்மீது ராஷ்டிரகூடர்கள் படையெடுத்து வருவதாக நமது ஒற்றர்கள் அறிவிக்கிறார்கள். இன்னும் ஒரு வாரத்துக்குள் காஞ்சி ராஷ்டிரகூடப் படைகளால் சூழப்படும்" என்றும் அறிவித்தான் கம்பீரமும் கடமையும் தொனித்த குரலில்.

தான் ஏற்கெனவே அறிந்ததை சேனாதிபதி அத்தனைக் கம்பீரமாக அறிவித்தது வேடிக்கையாக இருந்ததால் அதை வெளிக்குக் காட்டாத இதயவர்மன், "அப்படியா?" என்று போலி வியப்பைக் காட்டினான்.

''ஆம்; மன்னரின் தனி ஒற்றர்களும், என்னிடம் அலுவல் புரியும் எனது ஒற்றர்களுங்கூட செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்றான் சேனாதிபதி

இதயவர்மனுக்கு உண்மை விளங்க அதிக நேரமாக வில்லை. படையெடுப்பு ஏற்பட்டு விட்டதாக மன்னன் அறிவித்திருப்பா,னென்றும், அது தனக்கும் தெரிந்தது போல் சேனாதிபதி பாசாங்கு செய்திருப்பான் என்பதிலும் சந்தேகமில்லை இதயவர்மனுக்கு. ஆகவே அப்பொழுதும் அவன், ''அப்படியா?'' என்ற சொல்லையே உகுத்தான் போலி வியப்புடன்.

''அந்தப் படையெடுப்பைச் சமாளிக்கும் பொறுப்பை மன்னர் நமக்களிக்கிறார்'' என்றான் சேனாதிபதி மிகப் பெருமையுடன்.

நமக்கு என்று சேனாதிபதி சொன்னதால் உண்மையாகவே பிரமிப்படைந்த இதயவர்மன், ''என்ன! நபக்கா! நான் ஒரு...'' என்று ஏதோ சொல்லப் போனவனை இடைமறித்த சேனாதிபதி, ''சாதாரண வீரரல்ல. உதவிப் படைத் தலைவர்களில் நீங்களும் ஒருவராக்கப்பட்டிருக்கிறீர். கடந்த காலப் போர்களில் நீர் காட்டிய வீரத்துக்குப் பல்லவ சக்கரவர்த்தி அளிக்கும் பரிசு அது'' என்றான்.

இதயவர்மன் முகத்தில் சிந்தனை ரேகை சிறிது படர்ந்தது. ''இதயவர்மா'' என்று அழைப்பதைவிட்டு சேனாதிபதி தன்னிடம் பேசுவதில் மிகுந்த மரியாதையைக் காட்டுவதைக் கண்டு அரசன் ஏதோ பெரும் நாடகமாடியிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டான். அதன் விளைவாகப் பதில் சொல்ல முற்பட்ட இதயவர்மன், ''இத்தனை பெரிய பதவிக்கு நான் தகுதியல்ல'' என்று தொடங்கினான்.

''தகுதியை நிர்ணயிப்பது மன்னர் பொறுப்பு; நம்முடையதன்று. தவிர இப்பொழுது வரும் போரைச் சமாளிக்க என் ஒருவனால் முடியாது. ராஷ்டிரகூடர்கள் பலம் மிக அதிகம். மன்னர் கோவிந்தர் பேராற்றல் பிரசித்தி வாய்ந்தது. ஆகையால் இப்போரை ராஜமாதுலர் உதவி கொண்டு நடத்த பல்லவ சக்கரவர்த்தி ஆணையிட்டிருக்கிறார். ஆகவே அவர் மேற்பார்வையில் நாம் இந்த முற்றுகையைச் சமாளிக்க வேண்டும்'' என்றான் சேனாதிபதி ரவிவர்மன்.



''ஆனால்...'' என்று இதயவர்மன் ஏதோ சொல்ல முயன்றான். பல்லவ சக்கரவர்த்தி காஞ்சியின் பாதுகாப்பை ராஜமாதுலர் கையிலும் சேனாதிபதியின் கையிலும் ஒப்படைப்பாரென்பதை அவன் கனவிலும் நினைக்காததால் சொற்கள் மேலே ஓடவில்லை அவனுக்கு. அந்த இருவரிடம் பாதுகாப்பை ஒப்படைப்பதைவிட மகாராஜா கோவிந்தரிடமே ஒப்படைத்து விடலாமே என்று நினைத்தான் இதயவர்மன். அரசன் போக்கு ஒவ்வொரு நாளும் விபரீத வழியில் மாறுவதாகத் தோன்றியது அவனுக்கு. என்னதான் அரசன் தந்திரசாலியாயிருந்தாலும் அனைத்தையும் எதிரிகள் வசமும் சதிகாரர் வசமும் ஒப்படைத்த பிறகு அந்தத் தந்திரம் எதற்குப் பிரயோசனப்படும் என்று நினைத்தான்.

அவன் ஏதோ சொல்ல முயன்றதையும் பிறகு சிந்தனையில் இறங்கிவிட்டதையும் கண்ட நந்திவர்மன் பின்புறம் திரும்பிப் பார்த்து, ''இதயவர்மா! நம் வேலை எத்தனை சுலபமாகிவிட்டது? நம் அதிர்ஷ்டம் எத்தன்மையது? வைகுந்தன் நமது பக்கம் இருக்கிறார் இதயவர்மா. இல்லாவிட்டால் இந்தச் சமயத்தில் நமக்கு உதவ ராஜமாதுலர் கிடைப்பாரா? அவர் ராஷ்டிரகூடராயிருப்பது பெரும் அனுகூலம்'' என்றான்.

''எப்படி அனுகூலம்?'' இதயவர்மன் குரல் வறண்டு கிடந்தது.

''ராஷ்டிரகூடர்கள் உத்தேசம், கோவிந்தன் போர் முறை, லட்சியம் எல்லாவற்றையும் அவர் அறிவாரல்லவா?

பாம்பின்கால் பாம்பறியும் என்பதை நீ கேட்டதில்லையா?'' என்றான் தந்திவர்மன்.

இதைக் கேட்ட ராஜமாதுலர் வெகுண்டார். "தந்திவர்மா! என்ன சொன்னாய்? பாம்பின் கால் பாம்பறியுமா? என்னைப் பாம்பென்கிறாயா? படையெடுப்பைப்பற்றி உனக்கறிவிக்க கோவிந்தனுக்கும் தெரியாமல் ஓடி வந்த எனக்கு நீ காட்டும் நன்றி இதுதானா?'' என்று சீற்றத்துடன் சொற்களை உதிர்த்தார்.

தந்திவர்மன் முகத்தில் ஆச்சரிய ரேகை பெரிதும் படர்ந்தது. "மாதுலரே! என்ன அநியாயம் இது? பாம்பை எத்தனை அலட்சியமாகப் பேசுகிறீர்'' என்ற மன்னன் கேள்வியில் சற்றுக் கோபமும் துளிர்விட்டது.

"பாம்பை என்ன கொண்டாடச் சொல்கிறாயா?'' என்று சீறினார் ராஜமாதுலர்.

தந்திவர்மன் முகத்திலும் கோபம் உதயமாயிற்று. "பரந்தாமனின் படுக்கை அது. அதைப் பற்றித் துச்சமாக என்னெதிரில் பேச உமக்குப் பெரும் துணிவு வேண்டும். 'வெள்ளத்தரவில் துயில்கொண்ட' என்ற பிரபந்த வரிகள் உமக்குத் தெரியாதா அல்லது மறந்துவிட்டீரா?'' என்று மன்னனும் சீறினான்.

ராஜமாதுலர் ஏதும் பேச வழியின்றி மன்னனை வெறுப்புடன் பார்த்தார். பிறகு ரேவாதேவியையும் பார்த்தார். "இந்த வைதிகப் பைத்தியத்தைப் பெற்றெடுத்தாயே!'' என்று சொல்வது போல. ரேவாதேவியின் கண்களிலும் கோபம் துளிர் விட்டது. பிள்ளையின் பைத்தியத்தை நினைத்து வெகுண்ட ராஜமாதா, "தந்திவர்மா! நாங்கள் இங்கு பிரபந்தம் பாடவோ, உபந்நியாசம் கேட்கவோ கூடவில்லை. காஞ்சியின் பாதுகாப்பைப் பற்றிப் பேசக் கூடியிருக்கிறோம். மன்னனாக அதைக் கவனி'' என்றாள்.



"அதைப்பற்றி இனி எனக்கெதற்குக் கவலை? அதைத் தான் உங்களிடமும் மாமனிடமும் ஒப்படைத்துவிட்டேன். உதவுவதற்குப் பல்லவ சாம்ராஜ்யத்தின் இணையற்ற சேனாதிபதி இருக்கிறார். நாட்டுப் பற்றுக் கொண்ட அவரும் குலப்பற்றுக் கொண்ட நீங்களுமிருக்கையில் நான் ஏன் காஞ்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? உங்களுக்கும் சமாளிக்க முடியாவிட்டால் என்னைக் கலந்து கொள்ள, எனக்குச் சொல்லியனுப்ப இதோ உபசேனாதிபதி இதயவர்மனிருக்கிறான். சிறு பிள்ளை தான். இருப்பினும் போர்களில் வல்லவன்'' என்று கூறிய பல்லவ மன்னன், "விடைத்திறல் வில்லவன் நென் மெலியில் வெருவச் செருவேல் வலக்கை பிடித்த, படைத்திறல் பல்லவர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரமே'' என்று திருமங்கை மன்னன் பாட்டை மெல்லப் பாடி வைகுந்தனையே நேரில் கண்டுவிட்டவன்போல் மண்டபக் கூரையை நோக்கிக் கண்ணுயர்த்திவிட்டு எழுந்து சென்று விட்டான். மன்னவன் போவதைப் பார்த்துக் கொண்டேயிருந்த மற்றவர்கள் அவன் மண்டபத்திலிருந்து வெளியேறியதும் ஒருவரையொருவர் ஏதும் புரியாமல் பார்த்துக் கொண்டனர். அந்தக் குழப்பத்திலிருந்தவர்களை ராஜமாதுலரே காப்பாற்றினார். "சேனாதிபதி! பாதுகாப்பு ஏற்பாடுகள் முறைப்படி நடக்கட்டும். நாம் நாளைக் காலையில் அவற்றைப் பார்க்க வருகிறோம்'' என்று சேனாதிபதிக்கு உத்தரவிட்டார். பிறகு இதயவர்மனை நோக்கி, "இதயவர்மரே! இனிமேல் நீர் மன்னரைவிட்டு அகலக்கூடாது. அரண்மனையிலேயே தங்கவேண்டியது. மன்னர் எது சொன்னாலும் உடனே என்னிடம் தெரிவிக்க வேண்டியது. உமது உடைகள், ஆயுதங்களுடன் மாலைக்குள் இங்கு வந்து சேருங்கள்'' என்று கூறிவிட்டு மந்திராலோசனை முடிந்துவிட்டதற்கறிகுறியாகத் தானும் ஆசனத்தை விட்டு எழுந்தார். மற்றவர்களும் எழுந்தனர்.

அந்த மந்திராலோசனையிலிருந்து படை வீட்டுக்குச் சென்ற இதயவர்மன் அன்று மாலை ராஜமாதுலர்

உத்தரவுப்படி அரண்மனை திரும்பினான். திரும்பியவன் தான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டிருப்பதை ஒரே ஜாமத்தில் உணர்ந்து கொண்டான். சிறைக்கம்பிகள் லெகுவாகவமாக அமைக்கப்பட்டிருந்தன. இரும்புக் கம்பிகளல்ல அவை; கண்ணுக்குப் புலப்படாத அதிகாரக் கம்பிகளுக்கிடை தான் சிறைப்பட்டு விட்டதை உணர்ந்தான். 'இனி காஞ்சி தப்புவது கடினம்' என்று நிர்மானித்துக் கொண்டான். ராஜமாதுலர் அந்தச் சிறையை இத்தனை சாமர்த்தியமாகச் சிருஷ்டித்து இருந்தார்.

அத்தியாயம் 28

## பல்லவ விசித்திரம்

ராஜமாதுலர் உத்தரவுப்படி அன்று மாலையே அரண்மனை வந்த இதயவர்மனை, வாயிலிலேயே இரண்டு வீரர்கள் எதிர்கொண்டு அவன் புரவியிலிருந்து இறங்கு முன்பாகவே புரவியின் பக்கப்பகுதியில் முதுகுச் சேணப் பட்டையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த சிறு மூட்டையை அவிழ்த்தெடுத்துக் கொண்டனர். இதயவர்மன் இடையிலணிந்திருந்த வாளைத் தவிர இரண்டு மூன்று குறுவாள்களையும் கேடயம் கோடரி இவற்றையும் ஒரு பெரும் தோற்பையில் திணித்துக் குதிரையின் மற்றொரு புறத்தில் தொங்கவிட்டிருந்தானாகையால் வீரர்களிலொருவன் அந்தப் பக்கமும் ஓடி அப் பையையும் எடுத்துக் கொண்டான். அரசனுக்கு மேல் தனக்குப் பேருபசாரம் நடப்பதைக் கண்ட இதயவர்மன் தனது சந்தேகக் கண்களை நாற்புறமும் ஓட விட்டான். எங்கும் எந்தப் புறமும் நின்ற வீரர்கள் அவனுக்கு அளவுக்கு அதிகமாக மரியாதையே செலுத்தினார்களானாலும் அந்த மரியாதைக்குப் பின் பெரும் மர்மம் இருப்பதைப் புரிந்து கொண்ட இதயவர்மன் சற்று சாவதானமாகவே புரவியிலிருந்து இறங்கினான். ஆனால், இறங்கிய பின் அவன் சாவதானமாக நிற்க அனுமதிக்காத இரு வீரர்கள், "இப்படி வரவேண்டும். தாங்கள் தங்கும் அறை இங்கு இருக்கிறது" என்று கைகாட்டி முன் சென்றனர். மூட்டையையும் பையையும் தாங்கிய இருவர் அவனுக்குப் பின்னால் வந்தனர். ஆழ்ந்த சிந்தனையுடனும் வியப்புடனும் வீரர்களைப் பின்பற்றிய இதயவர்மன் அவர்கள் தன்னை பிரமுகர்கள் தங்குமிடங்களையும் தாண்டி அழைத்துச் செல்வதைக் கண்டதும், "எங்கு செல்கிறீர்கள்? அடுத்திருப்பது அரசனின் தனி மாளிகைப் பகுதியல்லவா?" என்று சற்று எச்சரிக்கும் பாவனையில் பேசினான்.

வழிகாட்டிச் சென்ற இரு வீரரும் திரும்பி அவனுக்குத் தலைவணங்கி, ''படைத்தலைவர் சொல்வது முற்றும் சரி'' என்று ஒப்புக் கொண்டனர்.

''அங்கு யாருக்கும் செல்லவோ தங்கவோ அனுமதி கிடையாதென்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று வினவினான் இதயவர்மன் அவர்களை நோக்கி.

''தங்களை அந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை'' என்று கூறினான் வீரர்களில் ஒருவன்.

''எந்தப் பட்டியலில்?''

''பொதுப் பிரமுகர்கள் பட்டியலில்'' என்று விடையிறுத்தான் வீரன்.

''நான் மட்டும் என்ன விதிவிலக்கா?''

''ஆம்.''

''யார் சொன்னது?''

''ராஜமாதுலர்.''

''என்ன சொன்னார்?''

''அரசனின் அந்தரங்க ஆலோசனை அறைக்குப் பக்கத்து அறையில் தங்களைத் தங்க வைக்கவேண்டுமென்று.''

''என்ன காரணம்?''

''தாங்கள் படைத்தலைவராக உயர்த்தப்பட்டிருக்கிறீர்களாம்.''

வீரர் சொன்ன பதில்கள் வியப்பைத் தரவில்லை இதயவர்மனுக்கு. ராஜமாதுலரின் உத்தரவுகளின் காரணம் ஓரளவு தெரிந்தே இருந்தது அவனுக்கு. ஆனால், அது திட்டமாக என்னவென்பதை உடனடியாக விளக்க முடியாததால் வீரர்களைத் தொடர்ந்து சென்றான் அந்தப் புதுச் சேனாதிபதி. வீரர்கள் அவனை



அரண்மனையின் பல கட்டுகளையும் இடைவெளிகளையும் தாண்டி மன்னரின் தனி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்த உப்பரிகைப் படிகளில் அழைத்துச் சென்று அரண்மனை அந்தப்புரத்தை அடுத்திருந்த அரசரின் அந்தரங்க மாளிகையில் அரசன் அறைக்கு அடுத்த அறையில் அவனைத் தங்கச் செய்தனர். அவன் அந்த அறைக்குள் நுழைந்ததும், வழிகாட்டி வந்த வீரரும் பின்னால் அவன் உடை மூட்டையையும் ஆயுதப் பையையும் தாங்கி வந்த வீரரும் அவற்றையெல்லாம் அவன் குறிப்பிட்ட இடங்களில் வைத்துக்கொண்டு கதவை மூடிக் கொண்டு சென்றனர்.

அவர்கள் சென்றதும் அறை நடுவே நின்றபடி நாற்புறமும் கவனித்தான் இதயவர்மன். அறையில் பெரும் பிரமுகர்கள் தங்குவதானால் என்னென்ன வசதிகள் செய்யப்படுமோ அத்தனை வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. ஆங்காங்கு பெரும் திரைச்சீலைகள் தொங்கின. ஒரு மூலையில் பெரும் பஞ்சணையிருந்தது. வாட்களையும் இதர ஆயுதங்களையும் செருகக் கூடுகள் இருந்தன. பாதக்குறடுகளை வைக்கவும், கால்களைத் துடைக்கவும் இடங்களும் பட்டுக்களும் இருந்தன. இரண்டு மூன்று விலை உயர்ந்த மஞ்சங்கள் அறை நடுவிலும் ஓரங்களிலும் இருந்தன. மஞ்சங்கள் உட்காரும்படியாகவும், சாயும்படியாகவும், படுத்துக்கொள்ளும்படியாகவும் இருந்ததைக் கவனித்த இதயவர்மன், 'இந்த அறை நன்றாக உறங்குவதற்கும் ஓய்வெடுப்பதற்கும் பயன்படுமேயொழிய படையெடுப்பதைச் சமாளிக்க, சதா சிந்தனையிலும் அலுவலிலும் மந்திராலோசனையிலும் ஈடுபடுபவனுக்குப் பயனுள்ளதல்ல' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அரண்மனைச் சுவர்களுக்குப் பெரிதும் உட்புறம் தள்ளியிருந்த அந்த மாளிகையிலும் நகரத்தின் பல பகுதியிலும் அடிக்கப்பட்டுக் கொண்டிருந்த முரசொலிகள் கேட்டன. வீதியில் வீரர்கள் கூச்சலும் கேட்டது. போர் ஏற்பாடுகள்

மும்முரமாக நடப்பதைப் புரிந்துகொண்ட இதயவர்மன் ''இந்தச் சமயத்தில் அரசர் எதற்காக இந்த அறையில் என்னை உறங்க அனுமதித்திருக்கிறார்?'' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு விடை காணாமல் தவித்தான். பிறகு அங்கிருந்த மஞ்சத்தில் படுத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

மாலை நகர்ந்தது. அரண்மனையெங்கும் தீபங்கள் ஜொலித்தன. அந்த அறைக்கும் வீரனொருவன் வந்து தீபத்தை ஏற்றிவிட்டுப் போனான். காலாகாலத்தில் இரு வீரர்கள் அவனுக்குப் பொன் தட்டில் போஜனம் கொண்டு வந்தார்கள். அதை அரைகுறையாக உண்ட இதயவர்மன் கை கழுவ வெளியே செல்ல முயன்றான். ''உணவுத் தட்டிலேயே கைகழுவி விடலாம்'' என்றான் உணவுத் தட்டைக் கொண்டு வந்த வீரன்.

இதயவர்மன் அவனை விழித்து நோக்கினான். ''வீரன் செய்ய வேண்டிய வேலையா இது?'' என்று சீறவும் செய்தான்.

''அதிகாரிகள் சொல்வதை நிறைவேற்றுவது வீரன் கடமை'' எனப் பதில் வந்தது வீரனிடமிருந்து.

''எந்த அதிகாரி உத்தரவிட்டார் இப்படி?'' என்று மீண்டும் சீறினான் இதயவர்மன்.

''ராஜமாதுலர்'' என்று பதில் கூறிய வீரன் தட்டுக்கு எதிரே அசையாமல் நின்றான்.

வேறு வழியின்றி அதிலேயே கைகழுவிய இதயவர்மன் அந்த வீரன் சென்ற சில விநாடிகளுக்கெல்லாம் அறையை விட்டு வெளியே வந்தான். அந்த அறை முகப்பிலிருந்த தாழ்வரையின் கோடியிலிருந்து ஓடி வந்த இருவர், ''படைத்தலைவருக்கு ஏதாவது தேவையா?'' என்று விசாரித்துத் தலைவணங்கினர்.

'ஏதும் தேவையில்லை, நீங்கள் செல்லலாம்'' என்ற இதயவர்மன் உப்பரிகைப் படிகளில் இறங்கி நடந்தான்.



அப்படிப் படிகளில் இறங்கிய சமயத்தில் அவன் பின்புறம் பார்க்கவில்லையே தவிர தனக்குப் பின்னால் இரு வீரர்கள் வருவதை அவர்கள் காலடி மூலமே அறிந்தான்.

இதயவர்மன், விஷயத்தைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். மன்னன் தனக்களித்த உயர் பதவியைச் சாக்கிட்டுத் தன்னை மன்னனுக்கு அருகிலேயே நிறுத்தி வெளியில் நடக்கும் சதியைப்பற்றி ஏதும் அறியாமல் தடுத்துவிட ராஜமாதுலர் திட்டமிட்டு நிறைவேற்றியும் விட்டார் என்பதை உணர்ந்து கொண்ட இதயவர்மன் இதயத்தில் கோபம் பொங்கி எழுந்தது. ஆனால் அந்தக் கோபத்தால் அந்தச் சமயத்தில் பயனேதுமில்லை என்பதையும் புரிந்து கொண்டான் அவன். அப்படிப் புரிந்து கொண்டே படிகளிலிருந்து இறங்கிக் கீழே வந்ததும் அவன் புத்தியில் திடீரென ஒரு யுக்தி உதயமாகவே தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்டான். அந்த யுக்தியின் விளைவாக மெள்ள மெள்ள அரண்மனை அந்தப்புரத்தையும் அதையடுத்த நந்தவனத்தையும் நோக்கி நடக்கவும் முற்பட்டான். அந்தப்புர நந்தவனத்துக்குள் நுழையும் யாருடைய தலையும் சீவப்படும் என்ற உத்தரவு இருந்ததால் எந்த வீரனும் அங்கு தன்னைத் தொடரமாட்டான் என்பதை உணர்ந்திருந்த இதயவர்மன் வேண்டுமென்றே அந்த நந்தவனத்தை நோக்கி நடையைக் கட்டினான்.

அவன் போக்கு பின்னால் வந்தவர்களுக்குப் பெரும் திகைப்பை அளித்திருக்க வேண்டும். ஆகவே பின் தொடர்ந்த வீரர்களிலொருவன் முன்னால் ஓடிவந்து, ''படைத்தலைவரே!'' என்று அழைத்து வாய் புதைத்து நின்றான்.

''என்ன!'' என்று சாதாரணமாக வினவினான் இதயவர்மன்.

''இது அந்தப்புர நந்தவனம்'' என்றான் வீரன் மிகுந்த பணிவுடன்.

''இதை நீ சொல்லித்தான் அறிய வேண்டுமா?''

''இல்லை. தங்களுக்கே தெரிந்ததுதான்.''

''பின் எதற்காகச் சொல்கிறாய்?''

''இங்கு நுழைபவர்களுக்கு மரண தண்டனை உண்டு.''

''அதுவும் நீ சொல்லித்தான் தெரிய வேண்டுமா எனக்கு?''

''இல்லை தங்களுக்கே தெரிந்ததுதான்.''

''எனக்குத் தெரிந்த விஷயங்களை எதற்காகத் திரும்பத் திரும்பச் சொல்கிறாய்?''

இதற்கு விடை சொல்ல முடியாமல் வாயடைத்து நின்றான் இதயவர்மனைப் பின் தொடர்ந்த வீரன். இதயவர்மன் அவனை நோக்கி, ''நான் இங்கு படைத்தலைவனா அல்லது...?'' என்று பொருள்படக் கேட்டான்.

''படைத்தலைவர்தான். தங்கள் கட்டளையைச் சிரமேற் கொள்ள ராஜமாதுலர் உத்தரவு'' என்று முனறினான் வீரன்.

''அப்படியானால் விலகி நில்'' என்று கூறிய இதயவர்மன் அந்தப்புர நந்தவனத்துக்குள் நுழைந்துவிட்டான். வீரன் வாயடைத்து அவன் போகும் வழியைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனுடன் வந்து கலந்து கொண்ட மற்றொரு வீரனும் பிரமிப்புடன் இதயவர்மன் செல்வதை நோக்கிக் கொண்டு இருந்தான். இரு வீரரும் செய்வதறியாமல் திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்தப்புர நந்தவனத்தின் மலர் மரக் கொடிகள், மரங்கள் இவற்றின் கூட்டத்தில் மறைந்துவிட்ட இதயவர்மன் ஒரு மரத்தின் பின்புறம் நின்று தன்னைத் தொடர்ந்து வந்து நந்தவன எல்லையில் நின்றுவிட்ட வீரர்களைக் கவனித்தான். அவர்கள் வாயைப் பிளந்துகொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்ததைப் பார்த்துப் புன்முறுவல் கொண்ட பிறகு அந்தப்புரத்தை நோக்கி நடந்தான்.



அந்தபபுரத்தின் பக்கத்தில் அவன் அன்றுவரை வந்ததில்லை. ஆகையால் மகாராணியின் அறை எது, ராஜமாதாவின் அறை எது, இந்திராதேவியின் அறை எது, என்ற விவரங்கள் அவனுக்கு அடியோடு தெரியாது. இருப்பினும் எப்படியாவது இந்திராதேவியின் அறையைக் கண்டுபிடித்து அவளிடம் விஷயத்தை அறிய வேண்டுமென்று உறுதி கொண்டு அந்தப்புரத்தை மெள்ளச் சுற்றி வரத் தொடங்கினான். நந்தவனத்தை அடுத்திருந்த அந்த மாளிகையின் உப்பரிகையின் மேலறைகளில் தீபங்கள் தெரிந்தன. மாளிகை முகப்பு, நந்தவனப் புறமில்லாமல் வேறு புறம் இருந்ததால் கீழிருந்த சுவர்ப் பகுதிகள் பெரிதாக எழுந்திருந்தன. அவற்றின் பக்கத்திலிருந்த இருளை, மேலிருந்த தீபங்கள் ஆங்காங்கு சற்றே கிழித்திருந்தனவேயொழிய முழு வெளிச்சம் எங்கும் இல்லாததால் இதயவர்மன் மெள்ள அந்தச் சுவரோரமே சென்று அந்தப்புரத்தின் முன்பக்கம் வர முயன்றான் இருப்பினும் அங்கிருந்த காவலர் கண்ணில் தென்படாமல் வீண் கலவரமுண்டாவதைத் தவிர, தன் தலையும் தோளின்மீது ஸ்திரமாக உட்கார்ந்திருக்க வசதியிருக்காதென்று உணர்ந்தபடியால் சற்று காவலரை நோக்கிய வண்ணம் சுவர்கள் தந்த இருட்டிலேயே நின்று கொண்டிருந்தான். நீண்ட நேரம் அவன் அங்கு நின்றும் காவல் விலகாதிருந்த காரணத்தால் எதற்கும் உப்பரிகையிலேறி இந்திராதேவியிருக்கும் அறையைக் கண்டுபிடிக்க முயன்றான்.

இதயவர்மனுக்கு உதவ வேண்டுமென்ற காரணத்தாலோ என்னவோ அந்தப்புரத்தை நிர்மாணித்த சிற்பி தனது திறமையை முழுதும் காட்டியிருந்தான். சுவர்கள் வெறும் சுவர்களாயிராமல் பல பிம்பங்கள் சுவர்களின் பகுதிகளைத் தாங்கி நின்றன. ஆங்காங்கு தூண்களும் சிறு மாடங்களும் பிம்பங்களும் இருந்ததால் சுவர்களில் யாரும் தொத்தி ஏற வசதியிருந்தது. அந்த வசதியை நன்றாக உபயோகப்படுத்திக் கொண்ட இதயவர்மன்

மெள்ள மெள்ள மேலே ஏறி மேலிருந்த அறைகளை ஒட்டியிருந்த கற்றூண்களை அணுகி எட்டிப் பார்த்தான் அது ராஜமாதாவின் அறையென்பதைக் கண்டு கொண்டதால் அடுத்த அறைகளை நாடி மெள்ள மெள்ள கற்றூண்களைப் பிடித்துத் தாவித் தாவிச் சென்றான். ராஜமாதாவின் அறையை அடுத்து இரு பணிமக்கள் அறைகளிருந்தன. அதற்கும் அடுத்த அறையில் இந்திராதேவி இருந்தாள். அந்த அறையை மெள்ளப் பக்கவாட்டிலிருந்து சாளர மூலம் எட்டிப் பார்த்த இதயவர்மன் பிரமிப்படைந்தான்.

உள்ளே இந்திராதேவியிருந்தாள். சயனத்திலல்ல, நின்று கொண்டிருந்தாள் முகத்தில் கவலை அலைபாய. அவள் மட்டுமில்லை அந்த அறையில், ராஜமாதுலரும் நின்றிருந்தார். அவர் முகத்திலும் கவலை மண்டிக் கிடந்தது. அவர் முகத்தில் மட்டுமல்ல, பேச்சிலும் கவலை தெரிந்தது. ''இந்திரா! இதயவர்மனைக் காவலில் வைத்து விட்டேன். மன்னர் அவனுக்கு வழங்கிய படைத் தலைவர் பதவியையே அவனுக்குப் பிரதிகூலமாக்கி விட்டேன். அவனை எனது வீரர்கள் காவல் புரிகிறார்கள். மேலுக்கு மரியாதை காட்டுகிறார்கள். ஆனால், அவனை எந்தக் காரணத்தை முன்னிட்டும் அரண்மனையை விட்டு வெளியே விடாதிருக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தக் கிளியைப் பொற்கூண்டில் அடைத்துவிட்டேன்...'' என்ற ராஜமாதுலர் தயங்கினார்.

''பின் ஏன் கவலை உங்களுக்கு? பல்லவர் தலைநகர் இனி உங்கள் கையில்தானே?'' என்றாள் இந்திராதேவி.

''இல்லை, இந்திரா! இதயவர்மன் நேர் எதிரி. இவனை நம்ப முடியும் என்றால், நம்ப முடியாதவன் ஒருவனிருக்கிறான்'' என்றார் ராஜமாதுலர்.

அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்தேயிருந்தாள் இந்திராதேவி. இருப்பினும் கேட்டாள், ''யாரது?'' என்று.



''தந்திவர்மன், வைதிக வேஷக்காரன்'' என்றார் ராஜமாதுலர்.

''வேஷக்காரரா?''

''ஆம்; இந்திரா! அவன் உண்மை வைதீகனல்ல. வேஷம் போடுகிறான். அவன் வைதீகம் காரிய வைதீகம். பைத்தியம் காரியப் பைத்தியம். அவனை நினைத்தால் நான் எனக்கும் பயமாயிருக்கிறது.''

இந்திராதேவி புன்முறுவல் செய்தாள். ''நீங்கள் சொல்வது விசித்திரமாயிருக்கிறது'' என்று கூறினாள்.

''இங்கு நடப்பது எல்லாம் விசித்திரமாயிருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டார் ராஜமாதுலர்.

''எதைக் குறிப்பிடுகிறீர்கள்?''

''எல்லாவற்றையுந்தான். சேனாதிபதி மாளிகையில் ரகசியமாகத் தங்கியிருந்த நான் பகிரங்கமாக இங்கு வந்தது இந்த நகரப் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டது—எல்லாமே விசித்திரம்.''

''இவற்றில் விசித்திரமென்ன இருக்கிறது?''

இந்திராதேவியின் இந்தக் கேள்வியைக் கேட்ட ராஜமாதுலர் சிறிது சிந்தித்துவிட்டுக் கேட்டார், ''இந்திரா, நான் ஏன் சேனாதிபதி மாளிகையை விட்டு வந்தேன் தெரியுமா?'' என்று.

''தெரியாது'' என்றாள் இந்திராதேவி.

''சொல்கிறேன் கேள். நான் தங்கிய அறையில் சேனாதிபதியின் வீரன் ஒருவன் வந்து ஒரு ஓலையைக் கொடுத்தான்...'' என்ற ராஜமாதுலர் நிதானித்தார்.

''உம்.'' மேலே சொல்லுங்கள் என்ற வற்புறுத்தல் இந்திராதேவியின் அந்த ''உம்''மில் இருந்தது.

''மகாராஜா கோவிந்தர் படை இன்னும் ஒரு வாரத்தில் காஞ்சியைச் சூழ்ந்துகொள்ளுமென்றும்,

ஆகவே என்னை உடனே வெளி வருமாறும் ராஷ்டிரகூட சேனாதிபதியை நகருக்கு வெளியே செல்லுமாறும் அந்த ஓலையில் எழுதியிருந்தது. ஓலையில் சேனாதிபதி ரவிவர்மன் கையொப்பம் முத்திரை இரண்டுமிருந்தன. நாங்களிருவரும் ரகசிய அறையிலிருந்து வெளி வந்தோம். திட்டி வாசல் வழியாக நாங்கள் வெளி வந்ததும் இரு வீரர்கள் ராஷ்டிரகூட சேனாதிபதியை அழைத்துச் சென்றார்கள். நான் வேறொரு புறம் அழைத்துச் செல்லப் பட்டேன். நான் ராஜவீதிக்கருகாமையில் அழைத்து வரப்பட்டதை முரசுகள் முழங்கிய பின்பே உணர்ந்து கொண்டேன்'' என்ற ராஜமாதுலர், ''இந்த நிலையில் ராஷ்டிரகூட சேனாதிபதி தப்பியது விசித்திரம்'' என்று கூறினார். அத்துடன் வேறு ஒரு விஷயமும் சொன்னார். அந்த விஷயத்தைக் கேட்ட இந்திராதேவி மட்டுமல்ல, அறைக்கு வெளியே இருந்த இதயவர்மனும் பெரும் பிரமிப்புக்குள்ளானான்.

''அந்த ஓலையை அனுப்பியது சேனாதிபதியல்ல'' என்ற சொற்களை மிகுந்த கவலையுடன் உச்சரித்த ராஜ மாதுலர், ''நடப்பது சகலமும் விசித்திரம். அத்தனையும் பல்லவ விசித்திரம்'' என்றும் உரைத்தார்.

அத்தியாயம் 29

# தலைக்கு மேல் ஓடிய வெள்ளம்

எந்த ரகசிய ஓலையை நம்பி தானும் ராஷ்டிரகூட சேனாதிபதியும் வெளிவர நேரிட்டதோ அந்த ரகசிய ஓலையை அனுப்பியவன் உண்மையில் பல்லவ சேனாதிபதி யான ரவிவர்மன் இல்லையென்பதை ராஜமாதுலர் கூறியதைக் கேட்டு வெளியே நின்ற இதயவர்மன் மட்டு மின்றி உள்ளேயிருந்த இந்திராதேவியும் பெரும் பிரமிப்புக்குள்ளானாள் ''அந்த ஓலையில் சேனாதிபதியின் கையொப்பமும் முத்திரையுமிருந்ததாகக் கூறினீர் களே?'' என்று வினவினாள் இந்திராதேவி வியப்புடன் ராஜமாதுலரை நோக்கி.

''ஆம் கூறினேன். அசல் சேனாதிபதியின் கையொப்பத் தைப் போலவும் முத்திரையைப் போலவுமே இருந்தன இரண்டும்'' என்றார் ராஜமாதுலர்.

''அப்படியானால் அவை இரண்டும் உண்மையல்ல என்கிறீர்களா?'' என்று வினவினாள் இந்திராதேவி

''ஆம்.''

''எப்படித் தெரிந்தது உங்களுக்கு? எப்போது தெரிந்தது?''

''இன்று பகல்தான் தெரிந்தது. சேனாதிபதியே சொன்னான்.''

''என்ன சொன்னான்?''

''நாங்களிருவரும் இன்று பகல்தான் தனிமையில் சந்திக்க முடிந்தது அதுவும் கோட்டைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பொழுது சமயம் பார்த்து சேனாதிபதியே கேட்டான், 'நீங்கள் ஏன் ரகசிய அறையி லிருந்து எனக்குத் தெரிவிக்காமல் வெளி வந்தீர்கள்' என்று நல்ல வேளையாக என் கச்சையில் அவனளித்த ஓலையைப் பத்திரமாக வைத்திருந்தேன், எடுத்துக் காட்டி னேன். சேனாதிபதிக்குக் குலை நடுக்கம் எடுத்துவிட்டது. 'இதை நான் அனுப்பவேயில்லை' என்று குளறினான்.

'யார் அனுப்பியது?' என்றும் கேட்டான். அவனும் நான் சந்தேகப்படுவதுபோலவே சந்தேகப்படுகிறான்'' என்றார் ராஜமாதுலர் பெருமூச்செறிந்து.

இந்திராதேவியின் கண்களில் வியப்பு அதிகமாக விரிந்தது. ''அவனுக்கு மன்னர் பேரில்தான் சந்தேகமா?'' என்று வினவவும் செய்தாள்.

''ஆம்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்த ராஜமாதுலர் சொன்னார்: ''இந்திரா, இந்தச் சதியில் நான் இறங்கியபோது இது இத்தனைப் பள்ளத்தில் என்னை இறக்கிவிடுமென்று எனக்குத் தெரியாது. ரேவாதேவி, எனது சகோதரி, ராஷ்டிரகூடர்களின் பலம் காஞ்சியில் ஓங்கவும் வீரனல்லாமல் கோவிலைக் கட்டிக் கொண்டு அழும் தனது மகன் தந்திவர்மன் வீரனாகத் திரும்பவும் பல்லவ காஞ்சியை ராஷ்டிரகூடர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று விரும்பியதன் மேலேயே மகாராஜா கோவிந்தரைப் படையெடுக்கவும் நான் சதியிலிறங்கவும் ஒப்புக்கொண்டேன். ஆனால் சில தினங்களுக்குள் என்னைப் பெரிய சந்தேகம் கௌவிக் கொண்டிருக்கிறது...''

இந்த இடத்தில் ராஜமாதுலர் தன் பேச்சைச் சிறிது நிறுத்தி இந்திராதேவியை நோக்கினார். இந்திராதேவியின் முகத்தில் குழப்பமே மண்டிக் கிடந்தது. ''என்ன சந்தேகம்?'' என்ற அவள் கேள்வியில்கூடக் குழப்பம் ஒலித்தது.

ராஜமாதுலரான பிரதாபவர்மன் தங்கு தடையின்றிப் பதில் கூறினார்: ''சதி-வலையில் சிக்கியிருப்பது நானா தந்திவர்மனா என்ற சந்தேகம்'' என்று.

இந்திராதேவிக்கும் அந்தச் சந்தேகம் உள்ளூர இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாத அவள், ''சரி, இனிமேல் நாம் செய்ய வேண்டியதென்ன?'' என்று வினவினாள்.



பிரதாபவர்மன் திட்டமாகச் சொன்னார், ''எப்படியும் இனி காலைப் பின் வைக்க முடியாது'' என்று.

''ஆம்'' என்றாள் இந்திராதேவி.

''நகரக் காவல் ஏற்பாடுகளை நான் மேலுக்குச் சரியாகவே செய்யப் போகிறேன்.''

''சரி''

''ஆனால், சில முக்கிய இடங்களைப் பலவீனப் படுத்தப் போகிறேன்.''

''எதிரிகள் தாக்கினால் குலைந்துவிட...''

''ஆம் இந்திரா. ஆனால், அவர்கள் நமது எதிரிகள் அல்லர். காஞ்சியைக் காக்கவும், மாற்றாரிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அது தன்னைக் காத்துக் கொள்ளும்படி திடப்படுத்தவும் வந்த நண்பர்கள்'' என்று வலியுறுத்தினார் ராஜமாதுலர்.

இந்திராதேவியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''ஆம்; ஆம்; நண்பர்கள்தான்'' என்றாள் அவள் புன்முறுவலின் ஊடே.

ராஜமாதுலர் சில விநாடிகள் மௌனம் சாதித்தார். பிறகு அவளை மிகக் கூர்ந்து நோக்கி, ''இந்திரா! உன்னிடம் ஒரு சந்தேகம் கேட்க வந்தேன்...'' என்று மெல்லத் தொடங்கினார்.

''சந்தேகமா?'' என்று வியப்பைக் காட்டிய இந்திரா தேவி, ''சரி கேளுங்கள்'' என்றாள் சர்வ சாதாரணமாக.

ராஜமாதுலரின் பார்வை மிகவும் திடப்பட்டது. ''நீ யார் பக்கம் இந்திரா? ராஷ்டிரகூடர் பக்கமா அல்லது பல்லவன் பக்கமா?'' என்று வினவினார் திட்டமாக.

''ஏன் கேட்கிறீர்கள்? குடும்பம் முழுவதுமே மன்னர்க்கு எதிராக நிற்கையில் நான் மட்டும் எப்படி

அவர் பக்கம் சேர முடியும்?'' என்று வினவினாள் இந்திராதேவி.

''மன்னர் குடும்பம் அதாவது ராஜமாதா, ராஜபத்னி, ராஜமாதுலனான நான் நாங்களனைவரும் ராஷ்டிரகூடர்கள். ராஷ்டிரகூடர் பெருமையிலும் ராஜ்ய விஸ்தரிப்பிலும் ஆசையுள்ளவர்கள். ராஷ்டிரகூட சமுதாயத்துக்காக எங்கள் பிள்ளை பெண்டுகளைக்கூடப் பலியிடத் தயங்காதவர்கள்; நீ அப்படியில்லை. உன் குலம் வேறு. உன் உடலில் பாதி ரத்தம்தான் ராஷ்டிரகூடர் ரத்தம். மீதிப் பாதி பல்லவர் குருதி. தவிர...'' என்று நிறுத்தினார் ராஜமாதுலர். அதற்கு மேல் சொல்ல என்ன காரணத்தாலோ தயங்கினார்.

''சொல்லுங்கள் ராஜமாதுலரே! நன்றாக மனம் விட்டுச் சொல்லுங்கள். சதிகாரர்கள் பரஸ்பரம் சந்தேகம் கொண்டால் சதி உடைந்துவிடும்'' என்று ஊக்கினாள் இந்திராதேவி.

''சொல்லுவது சிறிது சங்கடமாகத்தானிருக்கிறது. இருப்பினும் சொல்கிறேன் கேள். நீ என்ன இருந்தாலும் பருவப் பெண்...'' என்று துவங்கிய ராஜமாதுலர் மீண்டும் தயங்கினார்.

இந்திராதேவியின் அழகிய இதழ்கள் இளநகை பூத்தன. ''எத்தனை விசித்திரத்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள்! இது பல்லவ விசித்திரமா அல்லது ராஷ்டிரகூட வித்தையா?'' என்று இகழ்ச்சியுடன் கேட்கவும் செய்தாள்.

இந்த இகழ்ச்சியை ராஜமாதுலர் லட்சியம் செய்யவில்லை. ''நீ பருவம் அடைந்தவள்; இளவயது. தவிர உனக்கு அந்த அயோக்கியனிடம் மயக்கமிருப்பதாக ராஜமாதா நினைக்கிறார்கள்,'' என்று கடுமையாகக் கூறினார் ராஜமாதுலர்.



''எந்த அயோக்கியனிடம்? மன்னரிடமா?'' என்று சீறினாள் இந்திராதேவி திடீரென்று, ஏதுமறியாதவள் போல.

''சேசே! மன்னனிடம் நீ எப்படி மயங்க முடியும்!'' என்றார்.

''ஏன் முடியாது? அவர் என் தாய் மாமன், சக்கரவர்த்தி அப்படியொன்றும் வயதானவருமல்ல. தவிர உங்களையெல்லாம் குழப்பத்திலாழ்த்தக் கூடிய புத்தி கூர்மையும் தந்திரமும் உள்ளவர்'' என்றாள் இந்திராதேவி.

''ஆம்; ஆம்; தந்திரமுள்ளவன்தான். அவனுக்குத் தந்திவர்மன் என்று பெயர் வைத்ததைவிடத் தந்திரவர்மன் என்று பெயர் வைத்திருந்தால் பொருந்தும். அதிருக்கட்டும், அவனைச் சொல்லவில்லை நான். அவனைப் போலவே தந்திரமுள்ளவனும், ஆனால் பெரு வீரனுமான இதயவர்மனைச் சொல்கிறேன்'' என்றார் ராஜமாதுலர்.

இந்திராதேவி முகத்தில் பெரும் கோபம் துளிர் விட்டது. திடீரென எதிரேயிருந்த சுவரின் உச்சியை நோக்கினாள். அவள் முகத்தில் விவரிக்க இயலாத ஏதோ ஒரு புத்தொளி பிறந்தது. பிறகு மீண்டும் கோபம் சுடர் விட்டது. ''ராஜமாதுலரே! உமக்கும் சரி, ராஜமாதாவுக்கும் சரி புத்தி பூரணமாகப் பிசகிவிட்டது. மன்னனிடமுள்ள பயத்தால் கண்டபடி உளற ஆரம்பித்துவிட்டீர்கள். ஊர் பேர் தெரியாத, குலம் யாதென்று அறியாத, ஒரு சாதாரண வீரனிடம் இந்திராதேவி மயங்கி விட்டாள். ராஜகுடும்பத்தைக் காட்டிக் கொடுத்து விடுவாள் என்று நீங்கள் நினைப்பதிலிருந்தே உங்கள் புத்தி எவ்வளவு தூரம் பேதலித்திருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. இனி ஒரு முறை இப்படி நீங்கள் பேசும் பட்சத்தில் நான் மன்னரிடம் சதி விவரம் பூராவையும் சொல்லி விடுவேன். அதனால் என் தலையே போவதாயிருந்தாலும்

கவலைப்படமாட்டேன். தலையைவிட மானம் பெரிது பல்லவ குடும்பத்திற்கு, நினைப்பிருக்கட்டும்'' என்று பெருங்கோபத்துடன் இரைந்தாள் இந்திராதேவி.

''இரையாதே இந்திரா! நான் ஒன்றும் சந்தேகிக்கவில்லை உன்னை. ராஜமாதா சந்தேகப்படுகிறாள் என்று சொல்லி உன்னை எச்சரிக்கவே வந்தேன்'' என்று சற்றுப் பணிந்த குரலில் கூறிய ராஜமாதுலர், ''இந்திரா! இப்பொழுது உனக்கொரு கடமையிருக்கிறது'' என்றும் கெஞ்சினார்.

இந்திராதேவியின் பதட்டமும் கோபமும் அப்பொழுது தீரவில்லை. ''என்ன கடமை?'' என்று சீறினாள்.

''இதயவர்மன் மீது ஒரு கண் வைத்திருக்கும் கடமை'' என்று கெஞ்சும் குரலில் கூறினார் ராஜமாதுலர்.

''நான் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறேனே, அவர் மீதா?'' இப்பொழுதும் சீற்றமிருந்தது இந்திராதேவியின் குரலில்.

''நான் சொன்னதை மறந்துவிடு இந்திரா. ராஜமாதாவுக்கு உன்மேல் அக்கறையில்லையா? ஏதோ சிறு பெண்ணாயிற்றே என்று சொல்லியிருக்கிறாள். இப்பொழுது அரசனுக்கு உதவக்கூடியவன், பல்லவ காஞ்சி பிறர் கையில் விழுவதைத் தடுக்கும் ஆற்றலுள்ளவன் இதயவர்மன் ஒருவன்தான். அவனை அரண்மனையைவிட்டு வெளி வராமல் தடை செய்ய வேண்டியது உன் கடமை. அதைச் செய்வாயா?'' என்றார் ராஜமாதுலர்.

''அவரைத்தான் நீங்கள் கிட்டத்தட்ட சிறைப்படுத்தியிருக்கிறீர்களே'' என்றாள் இந்திராதேவி.

''அந்தச் சிறையில் ஒரு பலவீனமிருக்கிறது.''

''என்ன பலவீனம்?''



''மன்னர் இஷ்டப்பட்டு என்னிடம் ஏதாவது செய்தி யறிய விரும்பினால் இதயவர்மன் அரண்மனையை விட்டு வெளி வருவதை யாரும் தடை செய்ய முடியாது.''

''அப்பொழுது நான் மாத்திரம் எப்படித் தடை செய்ய முடியும்?''

ராஜமாதுலர் சிறிது சங்கடப்பட்டார். ''வீரர்கள் செய்ய முடியாததை நீ செய்ய முடியும்'' என்றார் சங்கடத்துடன் சங்கடமாக.

''புரியவில்லை ராஜமாதுலரே'' என்றாள் இந்திராதேவி, புரிந்தும் புரியாததுபோல.

''கத்திகள் செய்ய முடியாததைக் கண்கள் செய்யும்'' என்று சூட்சுமமாகக் குறிப்பிட்டார் ராஜமாதுலர்.

''அப்படியா! ராஜமாதுலர் மெள்ள மெள்ளப் பெண் வர்க்கத்தின் சூட்சுமங்களை அறிவதாகத் தெரிகிறது. அவர்களை உபயோகப்படுத்தும் முறையையும் அறிந்திருக்கிறார் போல் தெரிகிறது'' என்றாள் இந்திராதேவி இகழ்ச்சியுடன்.

அவள் சொற்கள் ராஜமாதுலரைப் பெரிதும் சுட்டாலும் அதை அவர் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் கம்பீரமாக நிமிர்ந்து நின்றார். ''இந்திரா! அரசாங்கங்கள் மோதும்போது தனிப் பிரஜைகள் அர்த்தமற்ற துரும்புகளாகிறார்கள். அத்தகைய ஒரு துரும்பு நீ; இப்பொழுது ராஷ்டிரகூடர்களின் ஆயுதம். ஆகவே நீ இந்த இதயவர்மனை இந்த அரண்மனையை விட்டு வெளிச்செல்லாமல் தடுக்க வேண்டும். போர் நிகழ்ந்தாலும் அவன் போர்முனைக்கு வரக்கூடாது. அரண்மனையில் உறங்க வேண்டும். இது ராஜமாதாவின் கட்டளை. இடையில் ஏதாவது காரணத்தால் அவன் மடிந்தாலும் பாதகமில்லை என்று ராஜமாதா கூறச் சொன்னார்கள்'' என்று அறிவித்தார் ராஜமாதுலர்.

''எப்படி மடிவார் அவர்?'' என்று கேட்டாள் இந்திரா தேவி.

''அரண்மனை நந்தவனத்துக்குள் வரும் யாருக்கும் மரண தண்டனை உண்டு. அவன் உன்னைக் காண வருவான். வராவிடில் வரும்படி ஓலையனுப்பு. வந்தவுடன் காட்டிக் கொடு'' என்று கூறிய ராஜமாதுலர், ''இன்னும் மூன்றே நாட்களில் ராஷ்டிரகூடர் முரசு பல்லவ காஞ்சியின் எதிரில் ஒலிக்கும். அதற்குள் இதை முடித்துவிடு'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

அவர் சென்றதும் அறையைத் தாளிட்ட இந்திராதேவி தடதடவென சாளரத்தை நோக்கி வந்து ''படைத் தலைவரே! உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள்.

இதைக் கேட்ட இதயவர்மனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் அங்கு மறைவிலிருந்தது இந்திரா தேவிக்கு எப்படித் தெரிந்தது என்று பிரமித்தான். பிறகு மெள்ள சாளரத்தின் வழியாக ஏறி உள்ளே குதித்தான்.

இந்திராதேவி அவனை நோக்கிப் புன்முறுவல் காட்டினாள். ''இனிமேல் சாளரத்தருகில் நிற்கும்போது நீங்கள் நின்ற இடத்தில் நிற்க வேண்டாம். சாளரத்தின் இடதுபுறத்தில் நில்லுங்கள்'' என்றாள் இந்திராதேவி புன்முறுவலினூடே.

''ஏன்?'' என்று வினவினான் இதயவர்மன்.

''இதோ பாருங்கள்'' என்று சுவரிலிருந்த பெரும் தட்டொளியைக் காட்டினாள் தந்திவர்மன் மருமகள். இதயவர்மனுக்கு விஷயம் சந்தேகத்துக்கிடமின்றிப் புரிந்தது. தான் மறைந்திருந்த இடம் சுவரிலிருந்த தட்டொளியில் நன்றாகப் பிரதிபலித்திருந்தது. இதயவர்மன் இந்திராதேவியை நன்றியறிதலுடன் நோக்கினான். ''நல்லவேளை! அதை ராஜமாதுலர் பார்க்கவில்லை'' என்று கூறினான்.



''அவர் கத்தி வீரரல்லவா?'' என்றாள் இந்திராதேவி இகழ்ச்சியுடன்.

''அதனாலென்ன?'' என்று வினவினான் இதயவர்மன்.

இந்திராதேவி சிரித்தாள். ராஜமாதுலர் வார்த்தைகளையே திருப்பிச் சொன்னாள்: ''கத்திகள் செய்யாததைக் கண்கள் செய்யும்'' என்று. அத்துடன் இதயவர்மனை அறையின் மூலையிலிருந்த மஞ்சத்துக்கு அழைத்துச் சென்று உட்காரும்படியும் கூறினாள்.

இதயவர்மன் தயங்கினான். ''நான் இங்கு வந்தது தெரிந்தால் மரணதண்டனை உண்டு இந்திராதேவி'' என்றும் குறிப்பிட்டான்.

''இனி அதைப்பற்றி என்ன பயம்?'' என்றாள் இந்திராதேவி.

''ஏன்?''

''இங்குதான் நீங்கள் வந்தாயிற்றே?''

''ஆம்.''

இந்திராதேவி சிரித்தாள். ''தலைக்குமேல் ஓடிய வெள்ளம் சாண் ஓடினாலென்ன முழம் ஓடினாலென்ன?'' என்ற இந்திராதேவி அவனை மஞ்சத்தில் உட்கார வைத்துத் தானும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். பிறகு பல்லவத் தலைநகருக்கு வந்திருந்த பேராபத்தை விளக்கவும் செய்தாள். ''இது மன்னனுக்குத் தெரியாது'' என்றும் குறிப்பிட்டாள் பெருமூச்சுடன். ''இப்பொழுது பல்லவ காஞ்சியை நீங்கள் ஒருவர்தான் காக்க முடியும்'' என்றும் முடித்தாள்.

இதயவர்மன் கதிகலங்கினான். உண்மையில் வெள்ளம் தலைக்குமேல் ஓடிவிட்டதை உணர்ந்தான்.

அத்தியாயம் 30

## துறவியும் வேந்தனும்

அந்தப்புரத்தின் அந்தத் தனியறையில் அப்ஸரஸைப் போல் நின்ற இந்திராதேவி, 'இனி பல்லவ காஞ்சியை நீங்கள் ஒருவர்தான் காப்பாற்ற முடியும்' என்று கூறி பெருமூச்சுவிட்டதையும், முற்றி வரும் சதியின் முக்கியக் கட்டத்தை அவள் விளக்கியதையும் கேட்ட இதயவர்மன், அவளைப் பல விநாடிகள் ஏறெடுத்து நோக்கினான். கவலை முகத்தில் பாய்ந்த நிலையிலும் அவள் கட்டழகு எட்டு மடங்கு அதிகமாகத் துலங்கியது.

அந்த இரவில் சயனத்துக்குச் செல்லு முன்பு மாற்றப்பட்ட உடையை அவள் அணிந்திருந்தாலும், கச்சை முதலியவைகளை நீக்கி வெறும் பட்டுச்சேலையை மட்டும் போர்த்திக்கொண்டு நின்றிருந்ததாலும், புது மணவறைப் பெண் போல் காட்சியளித்தாள் அவள். அவள் தலையில் சூடியிருந்த ஒற்றை மல்லிகைச் சரங்கூட அவள் அழகை எத்தனையோ மடங்கு அதிகமாக எடுத்துக் காட்டியது. பட்டுச்சேலை சற்றே அகன்றிருந்ததால் தெரிந்த வெண்கழுத்து அந்தப் பச்சைநிறப் பட்டுச் சேலைக்குள் யானைத் தந்தம்போல் தெரிந்தது. அதைச் சுற்றி ஓடியிருந்த வைரமாலை அளவுக்கு அதிகமாகப் பிரகாசித்தாலும், அவள் இந்நீவிர நயனங்களின் பிரகாசத்தின் அளவு அவற்றுக்கில்லையென்றே நினைக்கத் தூண்டியது. இந்திராதேவியின் சமீபம் முன்பு இரண்டு மூன்று தடவைகளில் விளைவித்த மயக்கத்தைவிட அதிக மயக்கத்தை அன்று தந்தது இதயவர்மனுக்கு. அவள் முகத்திலோடிய கவலை அளித்த சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்தி அவளுக்கு ஆதரவு சொல்ல அவளை அணுகிய இதயவர்மனின் இரு கரங்களும் அவள் மலர்க் கைகளைப் பிடித்துக் கொண்டன. அந்தக் கரங்கள் மெல்ல தனது கைகளுக்குள் நடுங்குவதைக் கண்ட இதயவர்மன் அவற்றை நன்றாக இறுக்கிப் பிடித்துக் கொண்டு, "தேவி இப்படி வாருங்கள்" என்று அழைத்துச்



சென்று அவளை அறை மூலையிலிருந்த பஞ்சணையில் உட்காரவைத்துத் தான் மட்டும் அவள் எதிரில் நின்று கொண்டான். பிறகு அவள் கைகளை ஒரு கையால் பற்றி இன்னொரு கையால் அவள் தலையைக் கோதிக் கொடுத்து, "தேவி! இதயவர்மன் உயிரிருக்கும் வரை நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். இந்த உடல் சாய்ந்த பின்புதான் பல்லவ ராஜ குடும்பத்தை யாருக்கும் அணுக முடியும்" என்று தைரியமாகச் சொன்னான்.

இந்திராதேவி அவன் கையிலிருந்த தன் கைகளை விடுவித்துக்கொண்டு அவனைத் தன்னருகில் உட்காரும்படி சைகை செய்தாள். அவன் தயங்கி, "இது முறையல்ல தேவி, தாங்கள்..." என்று ஏதோ சொல்ல முயன்றான்.

"வீரரே! ஆரம்பத்திலிருந்து நமக்குள் முறைப்படி எதுவும் நடக்கவில்லை. சேனாதிபதி வீட்டில் தனிமையில் சந்தித்தோம். இப்பொழுது அந்தப்புரத்தில் என் பள்ளியறையிலே சந்திக்கிறோம். இதெல்லாம் முறையா படைத்தலைவரே? நாம் சிக்கியிருக்கும் அலுவலுக்கும் முறைக்கும் வெகு தூரம்" என்ற இந்திராதேவி அவனை உட்காரும்படி மீண்டும் சைகை செய்தாள்.

சிறிது சங்கடத்துடன் உட்கார்ந்தான் இதயவர்மன்! பஞ்சணை மிருதுவாய் இருந்தது, அதைவிட மிருதுவாயிருந்தது அவன் காலுடன் உராய்ந்த அவள் மலர்க்கால. தலை நிலத்தை நோக்கிக் குனிந்து கிடந்தது. அதை இதயவர்மன் தன் கையால் உயர்த்தி அவள் கண்களை நோக்கினான். இருவர் கண்களும் கலந்தன. இதயங்களும் கலந்திருக்க வேண்டும். இருவரிடமும் பெருமூச்சு பலமாக வந்தது. இதயவர்மன் இரு கைகளாலும் அவள் தோள்களை இறுக்கிப் பிடித்தான். மல்லாந்திருந்த அவள் முகத்தில் புதுப்பொலிவு விரிந்தது. அவள் உதடுகள் மெள்ள அகன்று ஏதோ இரண்டொரு சொற்களை முணுமுணுத்தன. அவை என்ன சொற்கள் எனக் காதில் விழவில்லை இதயவர்மனுக்கு. அதற்காக அவன் கவலைப்

படவுமில்லை, ஒரு கையைத் தோளிலிருந்து எடுத்து இரண்டு விரல்களால் அந்தப் பவள உதடுகளைத் தடவிக் கொடுத்தான்.

அதனால் சிறிது சுரணை வரப்பெற்றோ என்னவோ அவள் விழிகளை மெல்லத் திறந்தாள். உதடுகளையும் திறந்து கூறினாள். "ராஜமாதுலர் உங்களை ஒழித்துவிடத் தீர்மானித்திருக்கிறார். ஆனால், சேனாதிபதி மன்னனையே ஒழித்துவிடத் தீர்மானித்திருக்கிறான். நீங்கள்தான் மன்னனைக் காக்க வேண்டும்" என்று.

இதயவர்மன் முகத்தில் அச்சத்துக்குப் பதில் வியப்பு விரிந்தது. "என்ன தேவி..." என்று துவங்கியவனை இந்திராதேவி இடைமறித்து, "இனி தேவியென்று அழைக்காதீர்கள் என்னை" என்று கடிந்து கொண்டாள்.

"பின் என்னவென்று அழைப்பது?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியவில்லை."

"என்னைத் தொடத் தெரிகிறது..."

"அது... அது."

"என்ன குழம்புகிறீர்கள்? என் பஞ்சணையில் உட்கார்ந்து என்னைத் தொடத் துணிவுள்ளவர், உரிமையை வளர்த்துக் கொண்டவர், அவருக்கு அழைக்கும் முறை மட்டும் தெரியாதாக்கும்?"

"இந்திரா... தேவி."

"உம் உம், ஆரம்பம் மட்டும் போதும்."

"இந்திரா..."

"அது சரி, சொல்லுங்கள் இனி."

"சற்று சிந்தித்துவிட்டுச் சொன்னான் இதயவர்மன் 'இந்திரா! நீ எட்டாப்பழம் எனக்கு" என்று.



இந்திரா அவன் கையை எடுத்துத் தனது தோளைச் சுற்றித் தவழவிட்டுக் கொண்டு, "இப்பொழுது...!" என்று வினவினாள்.

"வீண் பிரமை" என்றான் இதயவர்மன்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று வினவினாள் இந்திராதேவி.

"நீ அரச குடும்பம்."

"நீங்களுந்தான்!"

"இல்லை."

"பாரத்வாஜ கோத்திரந்தானே?"

"அது சதியை வேவு பார்க்க மேற்கொண்ட கோத்திரம்."

"அதைச் சதிகாரர்கள் உண்மையென்று நம்பினால் தானே சதியை உடைக்க முடியும்?"

"ஆம்."

"நானும் சதியில் சேர்ந்தவள், உண்மையென்று நம்புகிறேன்!" இதைச் சொன்ன இந்திராதேவி அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள்.

இதயவர்மன் அந்தப் புன்முறுவலின் வலையிலிருந்து மீளமுடியாமல் பல விநாடிகள் தவித்தான். பிறகு மெள்ளத் தன் எண்ணங்களைப் பலவந்தமாக அறுத்துக் கொண்டு, "இந்திரா! இந்த வீண் கனவை விடுவோம். நமது முன்னே மூன்று நாட்களில் போர் இருக்கிறது" என்று அவளை நோக்கிக் கூறினான்.

இந்திராதேவி தானே எழுந்து சென்று அறைக் கோடியிலிருந்த தீபத்தை இழிய வைத்துவிட்டு வந்து எதிரில் நின்று கொண்டு குனிந்தாள். "வீரரே! போருக்கு மூன்று நாட்கள் இருக்கின்றன" என்றாள்.

''ஆம் இந்திரா'' என்றான் இதயவர்மன், அவன் குனிந்ததால் சற்றே நிலை குலைந்து.

''காதலுக்கு?'' என்று வினவினாள் இந்திராதேவி.

நேரம், நாள் எதுவும் கிடையாதென்பது இதயவர்மனுக்கும் தெரிந்திருந்தாலும் கடமை உணர்ச்சி மேலோங்கி நின்றதால் அவன் சொன்னான், ''இந்திராதேவி! கடமை முடிந்த பின்புதான் அதற்கு நேரமுண்டு'' என்று. அத்துடன் ''உனக்கும் எனக்கும் வேண்டியவர்கள் உயிர்கள் ஆபத்திலிருக்கின்றன. அவற்றையும் காஞ்சியையும் காக்க முதலில் யத்தனிப்போம். சொல், அரசரை ஒழிக்க சேனாதிபதி என்ன ஏற்பாடு செய்திருக்கிறான்?'' என்று வினவவும் செய்தான்.

விவரமாகவே சொன்னாள் இந்திராதேவி, ''வீரரே! பல்லவ காஞ்சியை இன்னும் மூன்று நாட்களில் ராஷ்டிரகூடப் படைகள் சூழ்ந்துவிடும். அவற்றை வடக்கு வாசலிலும் கிழக்கு வாசலிலும் எதிர்க்க ராஜமாதுலர் ஏற்பாடு செய்திருக்கிறார். உண்மையில் அந்த இடங்களிலும் இருக்காது. மேற்கு வாசலில் அதாவது காஞ்சியின் பின்புறத்தில்தான் உண்மைத் தாக்குதல் ஏற்படும். அதுவும் எதிர்பாராத வகையில் ஏற்படும். அதற்கு முன்பு அரசர் அழிக்கப்படுவார். அரசரின் வெண்கொற்றக் குடை தாங்கிய ரதம் கிழக்கு வாசலில் என்றாவது ஒரு நாள் வரும். அன்று திடீரென அங்குள்ள சுழற்கதவுகள் திறக்கும். எதிரி அம்பு ஒன்று அரசன்மீது பாய்ந்துவிடும். இத்தனையும் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நடக்க ஏற்பாடு செய்யப்படும்.''

நயவஞ்சகமும் கொலைப்பாதகமும் நிறைந்த இந்த ஏற்பாட்டைக் கேட்ட இதயவர்மன் பிரமித்துப் போனான். ''இந்தப் பணிகளில் எது எது யாருடையது? பிள்ளை இறப்பதை ராஜமாதாவும் மருமகன் இருப்பதை ராஜமாதுலரும் ஒப்புக்கொள்கிறார்களா?'' என்று வினவினான் இதயவர்மன் சீற்றத்துடன்.



''மேற்கு வாசலைத் தாக்கி காஞ்சியை ராஷ்டிரகூடர் கையில் ஒப்புவிக்கும் திட்டந்தான் ராஜமாதா, ராஜமாதுலர் இவர்களுடையது; அரசரைக் கொல்லுவது சேனாதிபதியின் தனி ஏற்பாடு'' என்றாள் இந்திராதேவி.

இதயவர்மன் சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினான். பிறகு சந்தேகத்துடன் கேட்டான், ''இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?'' என்று.

''சேனாதிபதி விவரிக்கக் கேட்டேன்'' என்றாள் இந்திராதேவி.

''யாரிடம்?''

''ரஞ்சனிவிடம்''

இந்திராதேவியின் பதிலைக் கேட்ட இதயவர்மன் பஞ்சணையிலிருந்து துள்ளி எழுந்தான். ''என்ன! என்ன! ரஞ்சனியிடமா? எங்கே இருக்கிறாள் ரஞ்சனி?'' என்று பதற்றத்துடன் கேட்கவும் செய்தான்.

''சேனாதிபதியின் பாதுகாப்பில்'' என்றாள் இந்திராதேவி.

''அந்தப் பாதகனிடமா?''

''ஆம்.''

''அவளுக்கு?''

''ஆபத்து எதுவுமில்லை. பெரும் தொல்லை உங்களால் ஏதாவது வந்தால் அவளைத் தொலைத்து விடுவதாக உங்களைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் அவளைப் பதுக்கி வைத்திருக்கிறான் சேனாதிபதி.''

''எந்த இடத்தில்?''

''கிழக்கு வாசலுக்கருகில் உள்ள ஆயுதசாலையில்!''

இதயவர்மன் சற்று யோசித்துவிட்டு மீண்டும் கேட்டான்: ''அவளிடம் சொன்னது உனக்கெப்படித் தெரியும்?'' என்று.

''ஒட்டுக் கேட்பது சதிகாரர் சுபாவம்'' என்ற இந்திராதேவி, ''வீரரே! ரஞ்சனி புரவிக்கூட விடுதியில் இல்லையென்று அறிந்தேன். சேனாதிபதி அந்த வாயிலை எல்லோரும் போக வரத் திறந்து விட்டதிலிருந்து. பிறகு சேனாதிபதி மூன்றாநாள் இரவு சென்றவிடத்தைக் கண்காணித்தேன். அவன் ஆயுத சாலையில் நுழைந்ததும் நானும் நுழைந்தேன்...'' என்றாள்.

மீதியை இதயவர்மன் ஊகித்துக் கொண்டான். ரஞ்சனியைப் பாதுகாப்பது இந்திராதேவியின் கடமையென வலியுறுத்தினான். இந்திராதேவி சொன்னாள், ''ரஞ்சனியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவளைக் காப்பது என் கடமை. எக்காரணத்தை முன்னிட்டும் அவளைச் சந்திக்க முயலாதீர்கள். உங்களுக்கு இப்பொழுது பெரும் பொறுப்பு இருக்கிறது'' என்று.

''என்ன பொறுப்பு?'' என்று வினவினான் இதயவர்மன்.

இந்திராதேவி ராணியென நிமிர்ந்து நின்றாள். ''காஞ்சியைக் காப்பது. காஞ்சிக் காவலனைக் காப்பது'' என்று கூறினாள் கடமை பூரணையாகத் தொனித்த குரலில்.

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினான் இதயவர்மன்.

''மேற்கு வாயிலில் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் மன்னன் தனது வெண் கொற்றக் குடை ரதத்தில் கிழக்கு வாசலுக்குச் செல்லாமல் தடுக்கவேண்டும்'' என்றாள் இந்திராதேவி

அதற்கு ஒப்புக்கொண்டு அந்த அறையிலிருந்து கிளம்பினான் இதயவர்மன். ஆனால் அந்த இரண்டு பணிகளில் முக்கியமானதை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. மறுநாளிலிருந்து வெண்கொற்றக் குடை ரதத்திலேயே மன்னன் செல்லத் துவங்கினான். இதயவர்மன் எவ்வளவு



தடுத்தும் கேட்கவில்லை. மிகவும் வலியுறுத்தி ஒரு நாள் விஷயத்தை வினவிய போது நந்திவர்மன் சிரித்துவிட்டு, ''வைகுந்தன் திருவுள்ளமில்லாமல் என் உயிர் போகாது'' என்று திட்டமாகக் கூறிவிட்டான். அதற்கு மேல் என்ன செய்வதென்றறியாமல் தவித்தான் இதயவர்மன். இதயவர்மன் மன்னனை எச்சரித்த நான்காவது நாள் காஞ்சி ராஷ்டிரகூடப் படைகளால் சூழப்பட்டது. மன்னன் எதையும் லட்சியம் செய்யாமல் பிரதிதினம் ஒரு புதுத் துறவியுடன் திரிந்து கொண்டிருந்தான் நகரத்தில் அந்தத் துறவிக்கு வேந்தனே சில சமயங்களில் வெண்கொற்றக் குடையையும் பிடித்தான். நந்திவர்மன் செய்கை வரவர எல்லோருக்குமே ஆத்திரமூட்டியது அந்தத் துறவியை எல்லோரும் வெறுத்தார்கள். துறவியின் பார்வை பெரும் கபடப் பார்வையாயிருந்தது.

## அத்தியாயம் 31

## ஆசார்யரின் போர்ப்பக்குவம்

**பல்லவ** காஞ்சியை மகாராஜா கோவிந்தனின் பெரும் படை சூழ்ந்த பின்னும் அதைப் பற்றிய சிந்தனை அதிகமில்லாமல் பல்லவ சக்கரவர்த்தி ஒரு வைணவத் துறவியைக் கட்டிக்கொண்டு பிராணனை விடுவதையும் அடிக்கடி வைகுந்தன் கோவிலுக்குச் செல்லுவதையும் கண்ட ராஜமாதுலர் உள்ளூர உவகை கொண்டாரென்றாலும், இதயவர்மனுக்கும் பல்லவ காஞ்சியின் பெருமக்களுக்கும் அது மிகுந்த வருத்தத்தையும் ஓரளவு பயத்தையும் அளித்தது. போயும் போயும் அந்தத் துறவி ராஷ்டிரகூடப் படை காஞ்சியைச் சுற்றிக் கொள்ளுவதற்குச் சரியாக இரண்டு நாள் முன்னதாக வந்து சேர்ந்ததைக் கண்ட மக்கள் துறவியை உள்ளூர சபித்தார்கள். துறவிக்கு நடக்கும் பெருபசாரம் அவர்களுக்குப் பெரும் வெறுப்பையே ஊட்டின. அந்தத் துறவி வந்தது முதல் அரண்மனையில் பூஜை பலத்துவிட்டதன்றி வைகுந்த விண்ணகரப் பாடல்களை அரசன் மட்டுமன்றித் துறவியும் இரைந்து அடிக்கடி பாட ஆரம்பிக்கவே அரண்மனைக் காவலர் கூட அந்தத் துறவியை எரித்து விடுவதுபோல் பார்த்தனர்.

நன்றாக ஆறடிக்குப் பஞ்சமில்லாமல் வளர்ந்து ஒல்லியான வயிரம் பாய்ந்த சரீரத்துடன் நரைத்த தாடி மீசைகளுடன் காணப்பட்ட அந்தத் துறவி பன்னிரண்டு திருநாமங்களையும் பரிஷ்காரமாகச் சாத்திக்கொண்டிருந்தாலும், அவர் கண்களில் சதா ஒரு விஷமப் பார்வையும் கடை இதழ்களில் ஒரு கேலிச் சிரிப்பும் இருந்து கொண்டிருந்ததை யாரும் ரசிக்கவில்லை. இருப்பினும் மன்னன் அவர் முன்பு எப்பொழுதும் இடுப்பில் கட்டிய உத்தரீயத்துடன் இருந்தான், தான் செல்லுமிடங்களுக்கெல்லாம் தனது வெண்கொற்றக் குடை அமைத்த ரதத்தில் அவரை அழைத்துச் சென்றான். தனக்கு அவரிடமுள்ள மரியாதையைக் காட்ட ரதத்தில் சென்ற ஓரிரு நாட்கள் அந்த வெண்கொற்றக் குடையை அவருக்குத் தானே பிடிக்கவும்



செய்தான். துறவி, பல்லவ காஞ்சியில் எதைச் செய்தாலும் அதை யாரும் தடுப்பதற்கில்லையென்ற உணர்வை அனைவரிடமும் மன்னன் இரண்டு மூன்று நாட்களிலேயே உண்டாக்கிவிட்டான்.

இத்தனைக்கும் துறவி பல்லவ காஞ்சிக்குப் புதியவரல்ல, ஏற்கனவே ஓரிரு முறை அரண்மனையில் வந்து தங்கி மன்னரால் உபசரிக்கப் பெற்றவர்தான். மன்னனுக்குப் பிரபந்த சம்பந்தமான உபதேசங்களையும் செய்தவர்தான். இருப்பினும் இம்முறை அவர் பிரபந்த பாடம் சொல்லுவதிலும் வைகுந்தன் தரிசனம் செய்வதிலும் கழித்த காலத்தைவிட மன்னனுடன் கோட்டை கொத்தளங்களையும் காஞ்சியின் தற்காப்பு ஏற்பாடுகளையும் பார்வையிட்ட காலம் அதிகமென்பதைக் கண்ட மக்கள், ''துறவிக்கு இந்த வியாபாரமெல்லாம் எதற்கு?'' என்று வினவிக் கொண்டாலும் அதைப் பகிரங்கமாகச் சொல்ல அஞ்சினார்கள்.

துறவியின் தொந்தரவு இதயவர்மனுக்கும் பெரும் வெறுப்பாயிருந்தது. மன்னனின் உயிருக்குப் பெரும் ஆபத்தை சேனாதிபதி ரவிவர்மன் விளைவித்துக் கொண்டிருந்த சமயத்தில் துறவியின் தலையீடும் அவர் போக்கும் பெருத்த விபரீதத்தை விளைவிக்கவல்லதென்பதை உணர்ந்திருந்ததால், என்ன செய்வதென்றறியாமல் கலங்கினான் அவன். எந்தக் கிழக்கு வாசலில் அரசனை அழித்துவிட சேனாதிபதி ஏற்பாடு செய்திருந்தானோ அதே கிழக்கு வாசலுக்குத் துறவி மன்னனை ரதத்துடன் அழைத்துச் சென்றதன்றி, கோட்டை மதில்மீது ஏறிக் கோட்டைக்கு வெளியே முற்றுகையிட்டிருந்த ராஷ்டிரகூட சைன்யத்தைப் பார்க்கவும் செய்தார் பன்னிரண்டு திருநாமங்களுடன் துறவி ஏறி, கோட்டைமீது நின்று முற்றுகையைக் கவனித்தது வீரர்களுக்கு விந்தையாயிருந்தாலும் ஒரு வகையில் பிரமிப்பாகவும் இருந்தது. எதிரிகள் வேலெறிந்து கொன்றுவிடக் கூடிய விதம் கோட்டை

மதிலிலிருந்து துறவி வெளியே எட்டிப் பார்த்ததும், உடம்பில் லவலேசம் அச்சமின்றித் திரிந்ததும் பிரமிப்பாயிருந்தது வீரர்களுக்கு.

ஆனால், அரசனுக்கு அது எதுவுமே பிரமிப்பாயில்லாததால் துறவி சொற்படியெல்லாம் ஆடினான் அவன். கோட்டை மதில்மீது நின்றபடியே துறவியும் மன்னனும் பல முறை தர்க்க விசாரமும் செய்தனர். துறவி சில சமயங்களில் தர்க்க விசாரம் மட்டும் செய்யவில்லை. கோட்டை மதிள் காவலரையும் படைப் பிரிவுகளையும் எங்கெங்கு நிற்கவேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசனைகளும் சொல்லலானார். அதுவே வீரர்களுக்கு வெறுப்பாயிருந்ததென்றால், துறவியின் கட்டளையைத் தலைமேல் தாங்க வேண்டுமென்று அரசன் கூறியது இன்னும் அதிக வெறுப்பாயிருந்தது வீரர்களுக்கு. இதை மெள்ள மெள்ள வீரர்கள் ராஜமாதுலர் காதில் போட்டும் வைக்கவே ராஜமாதுலர் நாளடைவில் பெரும் திகிலடைந்தார். ராஜமாதுலர் படைகளைப் பிரித்து நிற்க வைத்தது, போர் சன்னத்த முறைகளை வகுத்தது, ஆகிய அனைத்திலும் துறவி தலையிடலானார். இதைப் பொறுக்காத ராஜமாதுலர் ஒரு நாள் மன்னனை அரண்மனையில் சந்தித்துப் பெரிதாக இரைந்தார். ''தந்திவர்மா, என்னிடம் உனக்கு நம்பிக்கையிருக்கிறதா இல்லையா?'' என்று வினவினார்.

தந்திவர்மன் தனது கண்களை உயர்த்தி மாதுலரைக் கூர்ந்து நோக்கினான். ''மாதுலர் கேள்வி விந்தையாயிருக்கிறது'' என்றும் பதில் கூறினான். பக்கத்திலிருந்த துறவியும் ''ஆம்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்.

''உம்மைக் கேட்கவில்லை. நீர் தலையிட வேண்டாம்'' என்று துறவியை அதட்டிய ராஜமாதுலர், ''தந்திவர்மா! மீண்டும் கேட்கிறேன், உனக்கு நம்பிக்கையிருக்கிறதா இல்லையா?'' என்று கேட்டார்.



''மாமனைவிட மருமகனிடத்தில் சிரத்தையுள்ளவர் யாரிருக்க முடியும்?'' என்று பதில் கேள்வி கேட்டான் தந்திவர்மன்.

ராஜமாதுலர் அவனைக் கூர்ந்து நோக்கிவிட்டு மீண்டும் வினவினார். ''அப்படியானால் இந்த நகரப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏன் தலையிடுகிறாய்?'' என்று இம்முறை அவர் குரலில் உஷ்ணம் பலமாயிருந்தது.

''நானா? நான் தலையிடவில்லையே'' என்றான் மன்னன்.

''இவர் தலையிடுகிறார்'' என்று துறவியைச் சுட்டிக் காட்டினார் ராஜமாதுலர்.

''யார், குருநாதரா?'' வியப்புடன் எழுந்தது மன்னன் கேள்வி.

இதைக் கேட்டதும் ராஜமாதுலர் பிரமித்துப் போனார். ''என்ன! இவர் உன் குருநாதரா!'' என்று வினவவும் செய்தார் வியப்புடன்.

''ஆம்.''

''திருமங்கை மன்னனல்லவா உனக்கும் உன் தந்தைக்கும் குருநாதர்?''

''என் சிறு வயதிலேயே ஆழ்வார் போய்விட்டார்...''

''பிறகு...?''

மன்னன் உடனே பதில் சொல்லவில்லை. ஆசனத்தை விட்டு எழுந்திருந்து வைணவத் துறவிக்குத் தலை வணங்கினான். ''பிறகு இவர்தான் ஆசார்யன்'' என்றான் வைணவப் பரிபாஷையில்.

''எதற்கு ஆசார்யன்? மதத்துக்கா, அரசியலுக்கா? அகத்துக்கா, புறத்துக்கா?'' என்று சீறினார் ராஜமாதுலர்.

''வைணவனுக்கு மதம், அரசியல், குடும்பம், உணவு சகலமும் ஒன்றுதான். உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்தான். பெருமானடியவர்களுக்கு அகம்புறம் இரண்டும் ஒன்று. அவர்களுக்கு வாழ்வே மதம், மதமே வாழ்வு'' என்ற தந்திவர்மன் முகத்தில் சாந்தி நிலவியது.

மன்னனைத் துறவி பெருமையுடன் பார்த்தார். ராஜமாதுலர் வெறுப்புடன் பார்த்தார். கடைசியாகச் சொல்லி விட்டுச் சென்றார், ''அடுத்த முறை இந்தத் துறவி தலையிட்டால் நகரப் பாதுகாப்புக்கு நான் பொறுப்பாளி அல்ல'' என்று.

அதைப்பற்றி மன்னனோ துறவியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. துறவி இஷ்டப்படி எல்லாவற்றிலும் தலையிட்டார். அவற்றுக்கெல்லாம் மன்னன் தலையாட்டினான். அதனால் ஓரளவு மக்களுக்குப் பயனும் கிடைத்ததைக் கண்ட ராஜமாதுலர் அச்சத்துக்குள்ளானார். முற்றுகை துவங்கிய முதல் வாரத்தில் கிழக்கு வாசலில் ஏற்பட்ட ராஷ்டிரகூடர்களின் இரு பெரும் தாக்குதல்கள் ராஷ்டிரகூடர்களுக்குப் பெரும் நாசத்தை விளைவித்தன. கோட்டையை ராஜமாதுலர் பலவீனமாக வைத்திருந்த இரண்டு இடங்களைத் தாக்கிய ராஷ்டிரகூடப் படைகள் அந்த இரண்டு இடங்களும் பலவீனமில்லையென உணர்ந்தன. மகாராஜா கோவிந்தன் இதனால் மிகுந்த கோபத்துடனிருந்தாலும் காஞ்சிக்குள்ளிருந்து தந்திவர்மன் எந்தவிதக் கவலையுமில்லாதிருந்தான். அவன் கவலை முழுவதையும் துறவி ஏற்றுக்கொண்டார். அதன் பலனாக ஒரு நாளிரவு திடீரென இதயவர்மனை அரசன் பூஜை அறைக்கு வரவழைத்தார். அரசனும் பூஜை அறையிலிருந்தாலும் அவன் ஏதும் பேசாமலும் துறவி சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். துறவி இதயவர்மனை நோக்கி, ''இதயவர்மா! உன்னைப்பற்றி மன்னன் பல சொல்லியிருக்கிறான். ஆகையால்தான் உன்னிடம் பேச விரும்புகிறேன். நீ இருக்கும் காலம் மகத்தானது இதயவர்மா'' என்றார்.



இதயவர்மன் பதில் சொல்லவில்லை. துறவியே பேசட்டுமென்று இருந்தான். ''இதயவர்மா! பலருக்கு மன்னர்கள் கிடைக்கிறார்கள். உனக்குக் கிட்டியிருக்கும் மன்னனைப் போல் மற்றவர்களுக்குக் கிட்டுவதில்லை. தந்திவர்மன் வைணவன். உயிர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையுள்ளவன். அழிவை விரும்பாதவன். ஆனால் அவனும் விரும்பாதது அவனையும் மீறி நடக்கிறது. போர் வந்துவிட்டது. ஓரளவு அழிவு நிச்சயம். ஆனால் அந்த அழிவை எத்தனை குறைக்க முடியுமோ அத்தனைக் குறைக்க வேண்டும். இல்லையேல் மன்னன் மனமுடைந்துவிடுவான். எதிரிகள் சாவதையே அவன் விரும்பவில்லை. தனது குடிமக்கள் சாவதை எப்படிச் சகிப்பான்?'' என்றார் துறவி.

''அரசனுடைய ஆசார்யர் எனக்கும் ஆசார்யர். அவர் சொற்படி நடக்கக் காத்திருக்கிறேன்'' என்றான் இதயவர்மன்.

''நகரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்தாயா?'' என்று கேட்டார் துறவி.

''கவனித்தேன்'' என்று மட்டும் சொன்ன இதயவர்மன் துறவியின் அடுத்த சொற்களைக் கேட்டு மிதமிஞ்சிய வியப்பால் வாயைப் பிளந்தான். ''பாதுகாப்பு மேற்பார்வைக்குப் பலமாயிருக்கிறது. ஆனால் வேண்டுமென்றே இரண்டு மூன்று இடங்களில் பலவீனமாக வைக்கப்பட்டிருக்கிறது. கோட்டைக்குள்ளிருப்பவர் உதவி புரிந்தால் அந்த இரண்டு மூன்று இடங்களில் எதிரிகள் உட்புக முடியும்'' என்றார் துறவி.

இதயவர்மன் கண்கள் பிரமிப்பின் எல்லையை அடைந்து நின்றன. அவர் உண்மையில் துறவிதானா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. ராஜமாதுலர் இந்திரா

தேவியிடம் மிக ரகசியமென்று சொன்ன ஏற்பாட்டை இந்தத் துறவி மேற்பார்வையாகப் பார்த்ததிலிருந்தே உணர்ந்துகொண்டு விட்டாரே என்று வியந்ததல்லாமல் வாய் விட்டும் கேட்டான், "அதை ஆசார்யரும் கவனித்து விட்டாரா?" என்று.

"இந்த விஷயங்களில் எனக்கு அற்பப் பயிற்சி உண்டு பூர்வாசிரமத்தில்." என்றார் துறவி.

இதயவர்மன் மீண்டும் கேட்டான், "பூர்வாசிரமத்தில் ஆசார்யர் படைத்தலைவரா?" என்று.

"இல்லை; லௌகிக பாஷையில் சொல்ல வேண்டுமானால் மந்திரியென்று சொல்லவேண்டும். ஆனால் போரிலும் அற்பப் பயிற்சி உண்டு. அது போகட்டும். இப்பொழுது எனக்குப் போரைப்பற்றிக் கவலையில்லை. வைகுந்த நாதனிருக்கும் இந்தக் காஞ்சிக்கோ பரம வைணவனும் பல்லவ திலகமுமான தந்திவர்மனுக்கோ எந்தத் தீங்கும் வரக்கூடாது" என்ற துறவி மேலும் பேசத் துவங்கி, "தந்திவர்மன் திரிகரண சுத்தியான வைணவன். பல்லவ குலத்துக்கே திலகம் போன்றவன். இவன் பெயர் இனி பல்லவகுல திலகமென்றும் பல்லவ திலகமென்றும் வரலாற்றில் வழங்கப் போகிறது. அவன் கொடி எப்பொழுதும் ஜெயக்கொடியாக விளங்கும். அந்தக் கொடியின் பலமான மரம் நீ. வைணவனான தந்திவர்மனின் கொடிமரமாக விளங்கு நீ. இதயவர்மா, அதற்குப் பூர்வாங்கமாக..." என்றார்.

இந்த இடத்தில் துறவியை இடைமறித்த இதயவர்மன், "ஆணையிடுங்கள ஆசார்யரே" என்றான் தலைவணங்கி.

துறவி ஆணையிட்டார். பிரமித்தான் இதயவர்மன் மீண்டும். இந்திராதேவியிடம் ராஜமாதுலர் தெரிவித்த ரகசியம் அது. "அடுத்த வாரம் மேலைவாசல் ராஷ்டிரகூடப் பெரும் படைகளால் தாக்கப்படும். நீ அந்த



வாசலில் அவர்களை எதிர்கொள் இதயவர்மா" என்றார் துறவி.

"அங்கு..." என்று துவங்கினான் இதயவர்மன்.

"ராஷ்டிரகூடப் படைகளின் கடைசிப் பகுதிகள் வடக்கு கிழக்கு வாயில்களிலிருந்து மெள்ள நகருகின்றன. அவை மேற்கு வாயிலுக்குத்தான் வரமுடியும். முதுகில் குத்துவது ராஷ்டிரகூடர் பழக்கம். அதை நாம் சமாளிப்போம்" என்றார் துறவி.

இதயவர்மன் தலை வணங்கினான் மீண்டும். மேற்கு வாசல் தாக்குதலைச் சமாளிக்கவேண்டிய முறைகளை அணுஅணுவாக விவரித்தார் துறவி. இதயவர்மனுக்குப் பெரும் சந்தேகம் ஏற்பட்டது. மன்னனை நோக்கினான். மன்னன் முகத்தில் மந்தகாசம் விரிந்து நின்றது. "இதில் பிரமிப்பதற்கு ஏதுமில்லை இதயவர்மா. ஆசார்யருக்குப் பூர்வாசிரமத்தில் 'சாயைப் பிடிப்பான்' என்று திருநாமம்" என்றார்.

இதயவர்மன் அதிர்ச்சி உச்சநிலை அடைந்தது.

## அத்தியாயம் 32

## அரசன் அழிவான்?

துறவியின் பூர்வாசிரமப் பெயர் "சாயைப் பிடிப்பான்" என்று மன்னன் சொல்லக் கேட்டதும் இதயவர்மன் அதிர்ச்சி உச்சநிலையை அடைந்ததென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. திருமங்கையாழ்வாரின் நான்கு மந்திரிகளில் கடைசி மந்திரியும், நிழலசைவைக் கொண்டே மனித நடமாட்டத்தை அளவிடக்கூடிய அபார சக்தி வாய்ந்தவரும், திருமங்கையாழ்வாருடன் பல போர்களிலும் கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்டவருமான 'சாயைப் பிடிப்பான்' ஆழ்வார் காலத்துக்குப் பின் அனைத்தையும் துறந்து உலக வாழ்க்கையிலிருந்து விலகிவிட்டதைப் பற்றி இதயவர்மன் அறிந்திருந்தான். அவரே அங்கு வந்து மன்னனுக்கு உதவுகிறாரென்பதை உணர்ந்ததும் அவருக்கிருந்த போர்ப் பக்குவத்துக்குக் காரணம் தென்னெனத் தெரிந்தது இதயவர்மனுக்கு. நந்திவர்மன் காலத்தவரும் அவனுக்குப் பின்னாலும் சில வருஷங்களிருந்து பரமபதம் எய்திவிட்டவருமான திருமங்கையாழ்வாரின் சீடர்களில் ஒருவர், நந்திவர்மனுக்குத் துணை நின்றதில் ஆச்சரியமெதுவும் இல்லையென்றாலும் இத்தகைய திறமையான ஆலோசகர் ஏற்பட்ட பின்பு காஞ்சிக்கோ, காஞ்சிக் காவலனுக்கோ குறைவேதுமில்லையென்பதைப் புரிந்து கொண்டான் இதயவர்மன் ஆகவே துறவி சொல்வதைப் பயபக்தியுடன் கேட்டுக் கொண்டான்.

"இன்னும் ஒரு வாரத்தில் மேற்கு வாயில் போர் துவங்கும் இதயவர்மா! அந்த வாயிலில் தற்சமயம் நமது ரவிப் படையில் ஒரு பகுதியும் காலாட்படையில் ஒரு குதியுமே இருக்கின்றன. யானைப்படையும், ரதங்களும் ...க்கு கிழக்கு வாயில்களில் நிற்கின்றன. இதுகாறும் ...ழ்ந்திருக்கும் போர்கள் பெரும்பாலும் கிழக்கு ...யிலில் நிகழ்ந்திருப்பதால் அங்கு படைபலத்தைக் ...த்திருப்பது நியாயமாகப் படும். அதிலும் சரியாகக்



கவனித்திருந்தால் கிழக்கு வடக்கு வாசல்களுக்கிடையிலுள்ள இரு பெரும் திட்டிவாசல்களுக்கருகாமையில் படைகள் சொல்பமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த இரு திட்டிவாசல்களைத் தாக்க எதிரி செய்த முயற்சிகளை ஒடுக்கிவிட்டேன். இருப்பினும் அங்கு மீண்டும் தாக்குவார்கள் அடுத்த இரண்டு தினங்களில். ஏன் தெரியுமா?" என்று வினவினார் துறவி.

"ஏன்?" என்று வினவினான் இதயவர்மன்.

"நமது கவனத்தைக் கிழக்கு வடக்குப் பகுதிகளிலேயே நிலைக்க வைக்க. நாம் இந்தப் பகுதிகளைக் காத்திருக்கும்போது ராஷ்டிரகூடப் படைகளின் கடைசிப் பகுதிகள் மெல்ல இராக் காலங்களில் நகர்ந்து அவற்றின் பெரும்பகுதி காவல் பலவீனமான மேற்கு வாசலுக்கு வந்துவிடும். இரும்பு முனைகள் கொண்ட பெரும் மரத் தூண்களைக் கொண்டு அந்த வாயில் கதவுகள் பிளக்கப்பட்டு எதிரிப்படைகள் நகரத்துக்குள் நுழைந்துவிடும். அங்கு ஏற்படும் சிறு எதிர்ப்பைச் சமாளிப்பது எதிரிகளுக்கு மிகச் சுலபம். தவிர, கிழக்கு வடக்கு வாசல்களிலுள்ள யானை, ரதப்படைகளை நாம் அங்கு திருப்புவதற்குள் நகரத்தின் மேற்குப்பகுதி எதிரிகள் வசப்பட்டுவிடும். பிறகு காஞ்சி அவர்கள் வசமானது போலத்தான்" என்று சுட்டிக் காட்டினார் துறவி.

"ஆம்" என்றான் இதயவர்மன்.

"இதை நாம் முறியடிக்க வேண்டும்" என்ற துறவி எப்படியென்பதையும் விளக்கத் தொடங்கி, "தந்திரத்தைத் தந்திரத்தால் முறிப்போம் நாம். எதிரி தந்திரத்தை அறியாதது போல் பாசாங்கு செய்வோம். கிழக்கு வடக்கு வாயில்களை மும்முரமாகப் பாதுகாப்பதாகப் பாசாங்கு செய்வோம். ராஜமாதுலருக்கும் சேனாதிபதிக்கும் சந்தோஷமாயிருக்கும். ஆனால், உண்மையில் நமது கண் அதாவது இப்பொழுதே ஒவ்வொரு இரவு நகரும்

ராஷ்டிரகூடப் படைகளின் கடைசிப் பகுதிகள் மேற்கு வாயிலில் குவிந்தபின் ஒரே இரவில் வடக்கு வாயிலின் யானைப்படையை மேற்கு வாசலுக்கு வரவழைப்போம். எதிரிகள் கதவை உடைக்கட்டும். அவர்கள் முன்பு நிற்கப் போவது காஞ்சியின் புரவிப்படைகளோ காலாட்படைகளோ அல்ல. காஞ்சியின் நிகரற்ற யானைப்படை. பிறகு...?'' என்று சொல்லி நிறுத்தினார்.

இதயவர்மன் தொடர்ந்தான். ''யானைப்படை உள்ளிருக்காது. உடைந்த கதவுகளை மீறி வெளியே சென்று எதிரிகளின் புரவிப் படையை நாசம் செய்யும். இப்பொழுதே அந்த நிலையை என் கண்ணால் பார்க்க முடிகிறது ஆசார்யரே! யானைகளின் துதிக்கைகளால் தூக்கியெறியப்பட்டு ஆகாயத்தில் பறக்கும் எதிரி வீரர்களையும், கால்களில் துவைக்கப்படும் மற்றும் பலரையும் அவர்களுடைய ரதங்களை யானைகள் புரட்டுவதையும் என்னால் பார்க்க முடிகிறது. எதிரியின் முதல் தாக்குதல் இப்படி முடிந்தவுடன் யானைப் படையை பின்னுக்கு வரத் தாரை ஊதுகின்றேன் நான். யானைகள் பின்னுக்கு வந்து கோட்டைக் கதவில் வலப்புறத்தில் குவியும்; இடப்புறத்தில் நான் என் புரவிப் படையுடன் நிற்கிறேன். யானைகள் பின்னடைந்துவிட்ட ஏமாற்றத்தில், இடையே தெரியும் பிளவில் மீதியுள்ள ராஷ்டிரகூட ரதங்களும் புரவிப் படையும் நுழையும். கொஞ்சம் அவர்கள் உட்புகுந்ததும் வலப்புறமிருந்து யானைப்படையும், இடப்புறமிருந்து எனது புரவிப் படையும், மதில்மேலிருந்து வேலெறியும் வீரர் படையும் தாக்கும்'' என்று குறிப்பிட்ட இதயவர்மன் முகத்தில் வீரக்களை ஒளிவிட்டது.

துறவி பெரும் குதூகலத்துடன் எழுந்திருந்து அவனை முதுகில் தட்டிக் கொடுத்து, ''இதயவர்மா, என் மனத்திலிருந்ததை அப்படியே கூறிவிட்டாய். அந்தப் போரில் எதிரி பெருநாசமடைவான். அவன் ராஷ்டிரகூடக்குத் திரும்ப வேண்டியதுதான். உன் துணை பெற்ற



இம்மன்னவன் பெரும் பாக்கியசாலி'' என்றார் துறவி அத்துடன் மீதிப் போரையும் விவரித்தார். ''மேலைவாசல் முடிவு ஏற்பட்ட மறுநாள், எதிரிகள் மந்திராலோசனை செய்வதற்காக ஒரு நாள் ஓய்வெடுப்பார்கள். அன்று நாம் கிழக்கு வாயிலை, அதாவது வாயிலின் சுழற் கதவுகளைத் திறந்து நமது ரத புரவிப் படைகளை எதிரிமீது ஏவுவோம். அதே சமயத்தில் வடக்கு வாசலிலும் தாக்குவோம். எதிரிக்குத் தப்பியோடவும் வழியிருக்காது' என்று கூறினார்.

இதயவர்மன் துறவியின் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். ''தாங்கள் துறவியாகி விட்டது காஞ்சி மண்டலத்துக்கும் சக்கரவர்த்திக்கும் பெரும் நஷ்டம்'' என்றும் முணுமுணுத்தான்.

துறவி புன்முறுவல் செய்தார். ''இதில் நஷ்டமேதுமில்லை இதயவர்மா. சமயத்தில்தான் நான் வந்து விட்டேனே. தவிர, எனக்குப் பதில் தலைமை தாங்க நீ இருக்கிறாயே'' என்று கூறினார். அத்துடன் மன்னனை ஒரு கண்ணால் பார்த்து, ''மன்னா! இத்தகைய வீரனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே எனக்கு எதற்காகச் சொல்லியனுப்பினாய்?'' என்றும் வினவினார்.

மன்னன் முகத்தில் முறுவல் நிரம்பியது. ''இதயவர்மன் இஷ்டப்படி விட்டால் ராஷ்டிரகூடர்களில் ஒருவர் கூட ஊருக்குப் போய்ச் சேரமாட்டார்கள் ஆசார்யரே. தங்கள் திட்டமும் அதற்குச் சரியாக இருக்கிறது. இதயவர்மன் இளங்காளை, வீரன், நாசத்தை அதிகம் விளைவித்து விடுவான் என்று பயந்தே தங்களை வரவழைத்தேன். தாங்கள் ராஷ்டிரகூடர்களை நிர்மூலம் செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே'' என்றான்.

''மன்னவா! எதிரிகளை அழிப்பது க்ஷத்திரியன் கடமை அதுவும் உன் குடிமக்களைக் காக்கப் போரிடுவது உன் தர்மம். அதை நீ எப்படிச் செய்யாமல் இருக்க முடியும்?'' என்று வினவினார் துறவி.

"ஆசார்யரே! வைணவ தர்மம் வேறு சொல்கிறதே. அண்டை வீட்டுக்காரன் அவதிப்படும்போது ஐயோ என அனுதாபப்படுபவன் வைணவன் என்று பூர்வாசிரியர்கள் சொல்லுகிறார்களே. கருணைதானே வைணவத்தின் அஸ்திவாரம்?" என்று வினவினான் மன்னவன்.

"ஆம், மன்னவா! கருணையை எங்குக் காட்ட வேண்டும் என்ற நியதியும் உண்டு. கருணாமூர்த்தியான எம்பெருமான் துஷ்டர்களை அழிக்க, அதர்மத்தை வேரறுக்க, அவதாரங்களை எடுக்கவில்லையா? அரக்கரை அழிக்கவில்லையா" என்று கேட்டார் துறவி.

மன்னவன் சிறிது யோசித்தான். "இருப்பினும் அதிக அழிவை நாம் விரும்பவில்லை ஆசார்யரே" என்றான் முடிவாக.

ஆசார்யர் அரசனைக் கருணை நிரம்பிய கண்களுடன் பார்த்தார். "முடிந்தவரை அழிவைக் குறைப்போம் நந்திவர்மா. ஆனால், நம்மையும் மீறி அழிவு ஏற்படுமானால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல" என்று கூறினார்.

அடுத்த நாள் முதற்கொண்டு துறவி மன்னனுடன் திரிவதைவிட்டு இதயவர்மனுடன் திரியலானார். அதன் விளைவாக ராஜமாதுலர் ஏற்படுத்தியிருந்த கட்டாயச் சிறையிலிருந்த இதயவர்மன் விடுதலையடைந்தான். துறவியுடன் இதயவர்மன் செல்வதைத் தடுக்க ராஜமாதுலருக்குத் தைரியமில்லை. பெருவீரனும் படைகளை நடத்துவதில் திறனுள்ளவனுமான இதயவர்மனும் அந்தப் பைத்தியக்காரத் துறவியும் காரியத்தைக் கெடுக்குமுன்பு காஞ்சியைக் கைப்பற்றிவிடத் திட்டமிட்டார் ராஜமாதுலர். அதற்கான செய்தியொன்றும் ரகசியமாகப் பறந்தது மகாராஜா கோவிந்தனுக்கு. துறவி கூறியது போல் அடுத்த வாரம் மேலை வாசல் போர் நடக்கவே செய்தது. துறவி எதிர்பார்த்ததுபோல் ராஷ்டிரகூடர் பெருநாசத்துடன் மேற்கு வாசலிலிருந்து மீண்டும் வெளியே



ஓடினார்கள். அந்த நாசத்தில் மிகவும் கோபமடைந்த மகாராஜா கோவிந்தன் தனது படைத் தலைவர்களைத் தனது பாசறையில் கூட்டி மந்திராலோசனையில் இறங்கினான். "உள்ளே ராஜமாதுலரும் ரவிவர்மனும் என்ன செய்கிறார்கள்? நமக்கு விரோதமாகத் திரும்பி விட்டார்களா?" என்று சீறினான் கோவிந்தன்.

"இல்லை" என்ற குரல் அவன் பாசறையில் ஒலித்தது. கோவிந்தன் திரும்பிப் பார்த்தான். அவன் படைத் தலைவர்களும் திரும்பிப் பார்த்தார்கள். பாசறைக் கூடத்தின் வாயிலில் ரவிவர்மன் நின்றிருந்தான்.

மகாராஜா கோவிந்தனின் புருவங்கள் ஒரு விநாடி ஆச்சரியத்தால் எழுந்தாலும் பிறகு சீற்றத்துடன் குறுகின. "என்ன, இல்லையா?" என்ற குரலில் சீற்றம் ஒலிக்கக் கேட்டான் கோவிந்தன்.

"மகாராஜாவுக்கு எதிராகத் திரும்ப வேண்டுமென்றால் நானும் ராஜமாதுலரும் சதியில் இறங்கியே இருக்க வேண்டாமே" என்று சுட்டிக் காட்டினான் ரவிவர்மன்.

"நீங்கள் சதி செய்த லட்சணமும் உங்கள் திட்டம் பூராவும் அந்தப் பைத்தியத் துறவிக்குக்கூடத் தெரிந்திருக்கிறது" என்றான் கடுமையுடன் ராஷ்டிரகூட கோவிந்தன்.

"ஆம்; அது எப்படியென்பது எங்களுக்கும் புரியவில்லை. ஆனால் ஒன்று..." என்ற ரவிவர்மன் நிதானித்தான்.

"என்ன?"

"மன்னனிருக்கும் வரையில்தான் படைகளின் தைரியமும் இருக்கும்."

"ஆம்."

"நாளைக்கு மறுநாள் மாலை கிழக்கு வாயில் கழற் கதவுகள் திறந்துவிடும். அந்த வாயிலின் நடுவில் மன்னன் ரதமிருக்கும். அதில் மன்னனிருப்பான்."

''தந்திவர்மனா!''

''ஆம்.''

''எப்படி?''

''அதைக் கேட்க வேண்டாம். கண்டிப்பாய் மன்னன் அதில் நிற்பான். அவன் ரதம் உங்களுக்குத் தெரியுமல்லவா? வெண்கொற்றக் குடையுடனிருக்கும் ரதம். அதில் போர்க் கோலத்துடன் தந்திவர்மனிருப்பான். நன்றாகக் குறி பார்த்து அம்பெய்யக்கூடிய ஒருவன் உங்களிடமிருக் கிறானா?'' என்று வினவினான் ரவிவர்மன்.

புரிந்ததற்கு அறிகுறியாக மகாராஜா கோவிந்தன் தலையை அசைத்தான். ''இது மட்டும் நடந்தால் காஞ்சி யில் எனக்கு அடுத்தது நீதான்'' என்றும் கூறினான்.

ரவிவர்மன் மன்னனை வணங்கி காஞ்சியை நோக்கித் திரும்பினான் அவன் வெளியே எப்படி வந்தான், உள்ளே எப்படிச் செல்வான் என்பது கோவிந்தனுக்குப் புரிய வில்லையானாலும் காஞ்சிக்குள்ளிருந்த ஒரு பெண்ணுக்கு மட்டும் புரிந்திருந்தது. ஆயுதசாலை நிலவறைப் படிகளில் அவன் ஏறி வந்ததும் கண்களில் தீப்பொறி பறக்க அவள் நின்றிருந்தாள். ''எங்கு போயிருந்தீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''உன் ஆசை நாயகனையும் அவன் நண்பன் அந்த வைதிகப் பைத்தியத்தையும் ஒழிக்கப் போயிருந்தேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன ரவிவர்மன், மிகுந்த சந்துஷ்டியுடன் ஆயுத சாலைக்குள் புகுந்து சென்று விட்டான்.

அரசனை அழிக்க அவன் திட்டமிட்ட மாலையும் வந்தது. அவன் வேண்டுகோளின்படி தந்திவர்மனும் வெண்கொற்றக் குடை துலங்கிய ரதத்தில் ஏறிக் கொண்டான். கிழக்கு வாயிலுக்கு அதை விடுமாறும் கட்டளையிட்டான். கிழக்கு வாயிலும் நெருங்கியது.

அத்தியாயம் 33

## சதியின் முடிவா? விதியின் முடிவா?

பல்லவ காஞ்சியின் கிழக்கு வாயில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அன்று மாலை மன்னனே நேரிடப் பார்வை யிட வேண்டுமென்று சேனாதிபதி வலியுறுத்தியதும் மன்னன் எந்தவித ஆட்சேபணையும் சொல்லாமல் அதற்கு ஒப்புக் கொண்டான். கிழக்கு வாசலுக்கு திடீரென்று என்ன வந்துவிட்டதென்று கூடக் கேட்காமல் மன்னன் ஒப்புக் கொண்டதே விந்தையாயிருந்தது. சேனாதிபதி ரவிவர்மனுக்கு. அதுமட்டுமின்றி ஆசார்யத் துறவியும் இதயவர்மனுங்கூட மன்னன் கிழக்கு வாசலுக்குச் செல்ல வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது பெரும் பிரமிப்பை யும் சந்தேகத்தையும் விளைவித்தது சேனாதிபதிக்கு. மன்னனை அழித்துவிடத் தான் வகுத்துள்ள திட்டம் அவர் களுக்குத் தெரிந்துவிட்டதோ என்றுகூட நினைத்தான் அவன். ஆனால், அது தெரிவதற்கு எந்தவித முகாந்திரமு மில்லை என்பதை உணர்ந்திருந்ததால் அவன் அரசன் சென்ற ரதத்திற்குப் பின்புறத்தில் இன்னொரு ரதத்தில் சென்றான். அரசன் அன்று ஆயுதமேதும் தரிக்கவில்லையே தவிர சேனாதிபதி மட்டும் பூர்ண ஆயுதந்தரித்துப் போருக்குச் செல்லுபவன் போலவே வந்திருந்தான்.

அன்று மாலையில் மந்தகாசத்துடன் மன்னன் தனது வெண்கொற்றக் குடை ரதத்தில் சென்ற காட்சியைப் பார்த்தவர்கள் அவன் மரண அபாயத்தை நோக்கிச் செல்வதாக நினைத்திருக்க மாட்டார்கள ஏதோ நகர பவனி வரும் நிலையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் அந்த அரண்மனையினின்று புறப்படு முன்பு வைணவத் துறவியார் அவனுக்கு ''ஜெயவிஜயீபவ'' என்று ஆசி கூறினார். பூர்ண கவசமணிந்து போர்க் கோலத்தில் நின்றிருந்த இதயவர்மன் மன்னனுக்குத் தலைவணங்கி நிமிர்ந்து துறவியாரின் கண்களை உற்று நோக்கினான். அந்தக் கண்களில் ஏதோ செய்தியிருப்பதாக சேனாதிபதி யின் சந்தேக இதயத்துக்குப் பட்டதானாலும் மன்னன்

கண்களில் இருந்த மந்தகாசமும் சாந்தியும் அவன் சந்தேகத்தை உடைத்தெறிந்தன.

அன்று சேனாதிபதிக்குப் பல விஷயங்கள் அனுகூலமாயிருந்தன. சதா மன்னனுடன் துறவியோ மன்னன் பாதுகாப்பாளனாக இதயவர்மனோ மன்னனோடு வராமல் தன்னிடம் மன்னனை ஒப்படைத்துவிட்டு வேறு திசைகளில் சென்றுவிட்டது ஓர் அனுகூலம். தன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மன்னன் உடனே கிழக்கு வாயிலுக்குக் கிளம்பிவிட்டது இரண்டாவது அனுகூலம். மூன்றாவது மன்னனுக்குப் பின் தன் ரதம் செல்வதால் மன்னன்மீது அம்பெறியப்பட்டதும் மன்னனைத் தாங்கிப் பிடித்து அவன் மரணத்துக்குப் பழி வாங்கும் முறையில் கிழக்கு வாயிலிலுள்ள அரைகுறைப் படைகளை எதிரிகள்மீது ஏவித் தோல்வியை விளைவிப்பது மூன்றாவது அனுகூலம். ''மன்னன் கொல்லப்பட்ட ஆத்திரத்தில், நான் கிழக்கு வாயிலில் உள்ள சிறு படையை ஏவுவதோ வாயிலைத் திறந்து போரிடுவதோ மக்களால் போற்றப்படுமேயொழிய உண்மையை மக்கள் உணரமாட்டார்கள். மகாராஜா கோவிந்தனும் வாயை மூடிக்கொண்டுதானிருப்பான். சதிக்கொலையால் ராஷ்டிரகூடன் காஞ்சியை வென்றான் என்ற அவப்பெயரை வாங்க எந்த மன்னன் முற்படுவான்? ஆகையால் இதில் எல்லாம் எனக்கு அனுகூலம். புத்திவன்மையால் ஒரு மனிதன் எப்படி ஓர் அரசைக் கவிழ்க்க முடியும் என்பதை இன்று நிரூபிக்கிறேன். பிறகு சொல்கிறேன் பதில் அந்த வைதிகத் துறவிக்கும் இதயவர்மனுக்கும்'' என்று தனக்குள் கறுவிக் கொண்டான் சேனாதிபதி.

இப்படித் தன் ஏற்பாட்டைப் பற்றிய திடபுத்தியுடனும் வெற்றி நிச்சயத்துடன் மன்னன் ரதத்துக்கு நேர் பின்னால் சென்ற சேனாதிபதியை நோக்கி மன்னன் அடிக்கடி திரும்பிப் பல கேள்விகளைக் கேட்டான். ''இந்த இடத்தில் எதற்காக இத்தனைப் படை வீரர்கள்? இங்கு



ஏன் நமது புரவிப்படையைக் காணோம்? ராஜமாதுலர் ஏன் இந்தப் பகுதியைப் பலவீனமாக வைத்திருக்கிறார்?'' என்று போகும் வழியில் பல இடங்களைச் சுட்டிக்காட்டிக் கேட்டான் மன்னவன். அவன் கேள்விகள் வேடிக்கைக்குக் கேட்கப்பட்டனபோல் தோன்றினாலும் ஆணித்தரமாயிருந்ததைக் கவனித்தான் சேனாதிபதி. சாதாரணமாக ரதத்தில் போகும்போது வெறும் பார்வையிலேயே படைப் பிரிவுகளையும் அவற்றின் பலத்தையும் மன்னன் அளவிட்டுக் கொண்டு வருவதைக் கண்ட சேனாதிபதிக்கு உள்ளூர பயமும் ஏற்படவே அதற்கெல்லாம் அவன் ராஜமாதுலர் மீது பழியைப் போட்டான். ''எல்லாம் ராஜமாதுலர் ஏற்பாடு, எனக்கு இவற்றில் அதிகாரமில்லையென்பது தங்களுக்குத் தெரியாதா?'' என்று பதில் கூறினான் ரவிவர்மன்.

''ஆமாம், ஆமாம்; பொறுப்பெல்லாம் அவருடையதுதான். உமக்குத்தான் பொறுப்பில்லையே'' என்ற அரசன் சிந்தனையில் இறங்கினான்.

''என்ன மகாராஜா! எனக்குப் பொறுப்பில்லையா?'' என்று வினவினான் சேனாதிபதி ரவிவர்மன் பயத்துடன்.

''இருக்கிறது இருக்கிறது. இல்லாமலா கிழக்கு வாயில் ஏற்பாடுகளைக் கவனிக்க என்னை அழைத்துச் செல்கிறாய்?'' என்று கூறினான் அரசன்.

சேனாதிபதி அரசனைக் கிலியுடன் நோக்கினான். ஏதோ சொல்ல வாயெடுத்துப் பிறகு வாயை மூடிக் கொண்டான். அரசன் அந்த கேள்விக்குப் பிறகு எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. ரதத்தைச் செலுத்தினான் கிழக்கு வாயிலை நோக்கி. சேனாதிபதி மௌனமாக அரசன் ரதத்துக்குப் பின்னால் தனது ரதத்தைச் செலுத்தினான். கிழக்கு வாயிலை அணுகு முன்பு மறுபடியும் ஓரிடத்தில் த்னது ரதத்தை நிறுத்திய மன்னன் கிழக்கு வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு சிறு

புரவிப்படையை நோக்கி, "இது எங்கே செல்கிறது?" என்று வினவினான்.

சேனாதிபதிக்கும் அது புரியவில்லை. "தெரியவில்லை மன்னா! ஒருவேளை ராஜமாதுலர் இந்தப் படைப் பிரிவை நகரும்படி உத்தரவிட்டிருக்கிறாரோ என்னவோ?" என்ற ரவிவர்மன் பெரும் குழப்பத்துக்குள்ளானான். அந்தக் குழப்பம் அத்துடன் நிற்கவில்லை. கிழக்கு வாயிலை நெருங்க நெருங்க அந்தக் குழப்பம் அதிகரித்தது. அவசியத்துக்கு அதிகமாக, தன் ஏற்பாட்டுக்கு விரோதமாகப் படைகள் சிறுசிறு பிரிவுகளாகக் கிழக்கு வாயிலை நோக்கி வழி நெடுக நகருவதைக் கண்ட சேனாதிபதியின் குழப்பமும் திகிலும் அதிகமாயின. கிழக்கு வாயிலை அடைந்ததும் சேனாதிபதியின் பிராணனே போய்விடும் போலிருந்தது. கிழக்கு வாயிலின் வலது புறத்தில் நந்திவர்மனின் நிகரற்ற யானைப் படையின் ஒரு பிரிவும் நின்றிருந்தது.

கிழக்கு வாயில் ஏதோ போருக்குத் தயாராக இருப்பதாகவே புலப்பட்டது ரவிவர்மனுக்கு. போதாக் குறைக்கு அரண்மனையிலிருந்து வேறு திசைகளில் சென்ற இதயவர்மனும் ஆசார்யத் துறவியாருங்கூட அங்கிருந்தனர். போர்ச் சன்னத்துடனும் பூர்ண கவசத்துடனும் இதயவர்மன் புரவி மீது அமர்ந்திருந்தான். பன்னிரண்டு திருநாமங்களே கவசமாகத் துலங்கத் துறவி ரதமொன்றில் காட்சியளித்தார். ஏதோ தவறு செய்து அகப்பட்டுக் கொண்ட குற்றவாளிபோல் சேனாதிபதி ரவிவர்மன் விழித்தான். அந்தச் சமயத்தில் துறவியார் அவனை நோக்கிக் கூறிய பாராட்டுரைகள் நாராசமென அவன் காதில் விழுந்தன. "சேனாதிபதி! கிழக்கு வாயிலை நன்றாகப் பலப்படுத்தியிருக்கிறீர்கள். இந்தச் சமயத்தில் ராஷ்டிரகூடப் படைகள் உள்ளே நுழைந்தால் அவற்றின் கதி அதோகதிதான்! உம்மைச் சேனாதிபதியாகப் பெற்ற நந்திவர்மன் பெரும் அதிர்ஷ்டசாலி" என்று படைகளுக்கு முன்பாக இரைந்து கூறினார்.



அத்துடன் நிற்கவில்லை அவர். "வீரர்களே! இதோ விளக்குகள் வைக்கும் சமயம் வந்துவிட்டது. வைகுந்தன் கோபுரத்தில் முதல் விளக்கு தெரிந்ததும் இந்தக் கதவுகள் திறக்கப்படும். வைகுந்தன் கோபுரத்தை நோக்கி மன்னன் வணங்குவான். நீங்களும் வணங்கி எதிரியைத் தாக்குங்கள். உங்களை இதயவர்மன் வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வான். வாழ்க வைகுந்தன்," என்று பெரிதாகக் கூறினார். கைகளிரண்டையும் தூக்கி வைகுந்தன் கோவிலை நோக்கிக் கூப்பினார். பெருமானை நோக்கி வீரர்கள் கிளப்பிய வாழித் திருநாமம் வானைப் பிளந்தது.

சேனாதிபதியின் பிரமிப்பு உச்ச நிலைக்குச் சென்றிருந்தது. அவன் கண்கள் கனவைக் காண்பனபோல் அந்தப் படைவீரர் வரிசைகளைக் கண்டன. வாழித் திருநாமத்தின் பேரொலி அவன் காதுகளில் பலமாகப் புகுந்ததால் அவன் இதயங்கூட ஆடியது. அந்த வீரர்கள் கூடி நின்றது, புரவி, யானைப் படைகள் அணிவகுத்து நின்றது, எல்லாமே சொப்பனம் போலிருந்தது அவனுக்கு. இந்த ஏற்பாடு ராஜமாதுலருக்கும் தெரியாமல் நடந்திருக்கிறதென்பதைப் புரிந்துகொண்ட சேனாதிபதி, எந்த நிமிஷத்திலும் கிழக்கு வாயில் சுழற்கதவுகள் திறக்கப்பட்டுக் காஞ்சியைப் பற்றிய இறுதிப்போர் தொடங்கிவிடும் என்பதை உணர்ந்ததால் தானும் அதில் கலந்து கொண்டதாகப் பாசாங்கு செய்து வாழித் திருநாமத்தை தானும் சொல்ல முயன்றான். இருப்பினும் உள்ளே ஏற்பட்ட இதயத்தின் ஆட்டம் அவன் நாவைக் கட்டியிருந்தது. அவன் கைகளை மட்டும் உயரத் தூக்கிக் குவித்தான்.

மாலை முற்றியது. அவன் அரசனை அழிக்க நிர்ணயித்த வேளை அது. திடீரென வைகுந்தன் கோவில் அந்தி மேளம் முழங்கியது. அதைத் தொடர்ந்து நகர முரசுகள் முழங்கின. திடீரென கோவில் கோபுர தீபம் ஒளி விட்டது. இதயவர்மன் தனது புரவியிலிருந்து வலது கரத்திலிருந்த கத்தியை உயர்த்தினான் வானை நோக்கி.

கிழக்கு வாயில் முரசுகள் முழங்கின. சுழற்கதவுகள் பெரு வேகத்துடன் திறந்தன. சேனாதிபதி ஏற்பாடு செய்திருந்தபடி வெண்கொற்றக் குடை ரதத்தை நோக்கி ராஷ்டிரகூட அம்பு ஒன்றும் பறந்து வந்தது. முடிவு அது. யாரும் எதிர்பாராத முடிவு. வைகுந்தன் முடிவை வையகத்தார் எப்படிப் பார்க்க முடியும்? அந்த முடிவு அன்று காஞ்சியின் கதியை மட்டுமல்ல ராஷ்டிரகூடர் சதியையும் ஒரு வழியாக நிர்ணயித்து விட்டது. சதியின் முடிவு மட்டுமல்ல அது. விதியின் முடிவுங்கூட.



## முடிவும் பணிவும்

அந்த அந்திவேளையில் வைகுந்தப் பெருமாள் கோபுரத்தின் உச்சி விளக்கு கண்விழித்த நேரத்தில் ஏற்பட்ட விசித்திர விளைவுதான் அது. போர் முடிவில் அந்த விளக்கு கண் விழித்ததைப் பற்றிப் பிரஸ்தாபித்த நந்திவர்மன் தாண்டிய விமோசன விளக்கென்றே கூறினான். அத்தனை எதிர்பாராத விதமாக நிகழ்ச்சிகள் அந்த விளக்கு தோன்றிய வேளையில் நிகழ்ந்தன. சுழற் கதவுகள் வேகத்துடன் திறந்ததற்கும், கோபுர உச்சி விளக்கு எரிந்ததற்கும், ராஷ்டிரகூடர்களின் கொலைகார அம்பு ஒன்று மன்னன் ரதத்தை நோக்கிப் பறந்து வந்ததற்கும் வேளை மிகச் சரியாயிருந்தது. உண்மையில் மன்னன் அந்த அம்பால் மடிந்துதானிருக்க வேண்டும். சேனாதிபதியின் திட்டம் நிறைவேறித்தானிருக்க வேண்டும். ஆனால், வேறுபட்ட முடிவு ஏற்பட்டது. தெய்வத்தின் சதியா மனித சதியா என்று அந்த சூழ்நிலையிலிருந்த யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் தெய்வ சதியாகத்தானிருக்க வேண்டும். இல்லையேல் அந்த அம்பு பறந்து வருவதற்கும் மன்னன் ரதத்தில் மண்டியிட்டு வைகுந்தன் கோபுரத்தை நோக்கித் தலைவணங்குவதற்கும் நேரம் நூல் பிடித்த மாதிரி அத்தனைச் சரியாகவா இருக்கும்? அதுதான் போகட்டும். மன்னன் எதிர்பாராத விதமாக மண்டியிட்டு விட்டதாலும் தலையைத் தாழ்த்தி வணங்கிவிட்டதாலும் அவன் வெண்கொற்றக் குடையைத் தாண்டிப் பறந்துவிட்ட. அம்பு மன்னன் ரதத்திற்கு நேர் பின்புறத்தில் தனது புரவியில் அமர்ந்திருந்த சேனாதிபதியின் மார்பு மீதா பாய்ந்துவிட வேண்டும்? அத்தகைய நிகழ்ச்சி விதியின் விசித்திரமாயிருக்காமல், தெய்வத்தின் ஏற்பாடாயிருக்காமல், வேறு எப்படியிருக்க முடியும்?

அந்த விபரீதம் கண்ணிமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து விட்டதால் அணிவகுத்த வீரர்கள் ''ஹா ஹா'' என்று கூச்சலிட்ட பிரமிப்பொலி எங்கும் படர்ந்தது. புரவிமீது

திடீரென சாய்ந்துவிட்ட சேனாதிபதியைத் தனது ரதத்திலிருந்து குதித்தோடிய மன்னன் தூக்கிப் பிடித்தான். பிறகு சேனாதிபதியைக் கொண்டுபோய் உடனடியாகச் சிகிச்சை செய்யுமாறு அங்கிருந்த இரு வீரர்களுக்கு உத்திரவிட்டுத் தனது ரதத்துக்குத் திரும்பினான். அவன் திரும்பு முன்னரே ராஷ்டிரகூடர் படைகளும் பல்லவப் படைகளும் கைகலந்து விட்டன. பல்லவர்களின் பிராசீனமான கிழக்கு வாயில், பல போர்களைக் கண்ட காஞ்சியின் கிழக்கு வாயில், அன்று மீண்டுமொரு பயங்கரப் போரைக் கண்டது. பூர்ண கவசமணிந்த இதயவர்மன் கிழக்கு வாயில் திறந்ததுமே தனது வாளை உயர வீசி தனது புரவிப் படையைத் தொடர உத்திரவிட்டுத் தனது புரவியை எதிரி அணிவகுப்பின்மீது பாயவிட்டான். அவன் வாள் பயங்கரமாகச் சுழன்றது. அவன் புரவியும் சுழன்றது. கவசமணிந்த நிலையிலும் அவன் உடல் மிக வாளிப்புடன் பலவிதமாக வளைந்து எதிர்ப்பட்ட நாலைந்து வீரர்களை வெட்டியும், புரவியின் பக்கங்களில் செருகியிருந்த இரண்டு வேல்களை எடுத்து இருவர்மீது வீசியும் எதிரி அணிவகுப்பை உடைத்துப் புகுந்து விட்ட இதயவர்மன் சட்டென்று இடது பக்கம் திரும்பினான். அவன் புரவிப்படையும் சரேலென இரு கூறாகப் பிரிந்து அவன் சென்ற பக்கம் ஒரு பகுதியும், ஆரம்பத்தில் அவன் எதிரி அரணைத் துளைத்த இடத்தில் ஒரு பகுதியும் புகுந்துவிடவே ராஷ்டிரகூட சைன்னியத்தின் அப்பகுதி இரண்டு படைப் பிரிவுகளுக்[illegible]யில் சிக்கிக்கொண்டது; இருப்பினும் போரில் வல்லவர்களான ராஷ்டிரகூடர்களும் மிகுந்த வேகத்துடன் போரிட்டார்கள். அவர்களுடைய புரவிகள் பாய்ந்து பாய்ந்து இதயவர்மன் படையின் இரு படைப் பிரிவுகளையும் பல சிறு துண்டுகளாகத் துண்டிக்க முயன்றன. துண்டிப்பதில் சிறிது வெற்றியும் அடைந்தன. ஆனால், அதே சமயத்தில் அவர்களை மற்றொரு புறத்தில் தாக்க அதுவரை கதவுகளுக்கப்பால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யானைப்படை திடீரென வெளியே வந்தது.



யானைகளின் பயங்கரப் பிளிறல்களும், அலை துதிக்கைகளால் தூக்கியெறிந்த வீரர்கள் ஆகாயத்தில் போட்ட அலறல்களும், அவர்கள் கீழே விழுந்த பின் நசுங்கிய "சொத் சொத்" என்ற பயங்கர ஓசைகளும் வானைப் பிளந்தன. போதாக்குறைக்குக் கிழக்கு வாயிலின் மேல் சுவர்ப் பகுதியிலிருந்த அரண்களிலிருந்து வேல்களும் எரியம்புகளும் ராஷ்டிரகூடர்களை நோக்கிப் பறந்தன. எங்கும் போரின் பயங்கர ஒலி வியாபித்தது. வீரர்களின் வீர கோஷமும் மரணக் கூச்சலும் கலந்தன. ரதங்கள் சில தலைகீழாகச் சாய்ந்தன. புரவிகளில் சில வயிற்றில் வேல்களால் தாக்குண்டு மரணக்கனைப்பை வெளியிட்டன. இந்தப் போரில் வைணவத் துறவி மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டார். சாவைப்பற்றி நிர்ப்பயமாக கைகளை ஆட்டியும், படைகளை இயக்கியும் போரை வளர்த்தார். பிறகு கிழக்கு வாயிற் கதவுகளின் மறைவிலிருந்த ஏணியொன்றில் ஏறிச்சென்று மதில் கூடங்களிலிருந்த பொறிகளை இயக்கவும் வழி காட்டினார். இரண்டொரு நிமிஷங்கள் இதயவர்மன் நிலையையும் கவனித்தார். அவர் முகத்தில் பெருமகிழ்ச்சி தாண்டவமாடியது. இதயவர்மன் தன் படைப் பிரிவுகளிரண்டையும் எதிரிகள் துண்டிக்கவிடாமல், இரண்டுக்கும் இடையே எதிரிகளை உட்புக விட்டு வதைத்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று முறை சேதப்பட்ட எதிரிகள் அந்தப் பகுதியில் சிறிது பின்வாங்கினார்கள்.

கிழக்கு வாயிலின் நடு மத்தியிலும் போர் நடந்து கொண்டிருந்தது. ராஷ்டிரகூடப் படையின் ஒரு பகுதி முன்னேற முற்பட்டதால் இடையே சிக்கிக்கொண்ட அப்பகுதி மிகுந்த கம்பீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டது. இருப்பினும் எதிர்பாராத யானைப்படையின் தாக்குதலால் நாசப்பட்டவர் போக மீதியிருந்தவர் பின்வாங்கினர். யானைப்படை முன்னேறி நடத்திய மும்முரத் தாக்குதலால் மகாராஜா கோவிந்தன் படைகள் சிறிது பின்வாங்

கின. பிறகு மீண்டும் தாக்கின. போர் மும்முரப்பட்டது. யானைகளில் சில வேல்களின் தாக்குதலால் வீறிட்டன. இன்னும் சில தங்கள் மேலிருந்த வீரர்களைத் தூக்கிக் கொண்டு வெறிபிடித்து எதிரிகள் அணிவகுப்புக்குள் ஓடின.

இருதரப்புக்கும் நாசம் பலமாயிருந்தது. அந்தப் போரில் கலந்து கொள்ளாமல் கிழக்கு வாயிலுக்கு நேராகத் தனது ரதத்தில், வெண்கொற்றக் குடையின் நிழலில் நின்றிருந்தான் தந்திவர்மன். அவன் கண்களில் சோகம் விரிந்து கிடந்தது. சுமார் ஒரு ஜாமத்துக்குப் பின்பு எதிரிகள் பலத்த சேதத்துடன் பின் வாங்கி அன்றையப் போரை முடித்துக்கொண்டதற்கறிகுறியாக தாரைகளை ஊதிய பின்னும்கூட அவன் முகத்தில் மகிழ்ச்சியில்லை. தனது படைகளின் வெற்றிச் சங்கொலிகள்கூட அவன் இதயத்தில் மகிழ்ச்சியை அள்ளித் தெளிக்க மறுத்தன. இறுதியாக யானைப்படையும் புரவிப்படையும் பின் வாங்கி உள்ளுக்கு வந்து அந்தப் பெரும் சுழற்கதவுகள் மூடப்பட்ட பின்பும் வருத்தம் தோய்ந்த வதனமே யிருந்தது தந்திவர்மனுக்கு.

எதிரிகளின் குருதி தோய்ந்த வாளுடன் புரவியிலிருந்து குதித்து தந்திவர்மனுக்கு முன் அடிபணிந்து தலை வணங்கி அன்றைய பல்லவ வெற்றியைப்பற்றி இதயவர்மன் அறிவித்தபோதுகூட மன்னன் வதனத்தில் மந்தகாச மில்லை. போர் முடிந்ததும் மதிளிலிருந்து இறங்கி வந்த துறவியும் அவன் முகத்தில் தோய்ந்து கிடந்த வருத்தத்தைக் கண்டு அனுதாபத்துடன் கூறினார்: ''தந்திவர்மா! நாசத்தை நாம் கோரவில்லை; நம்மீது திணிக்கப்பட்டது. சதியை நாம் வகுக்கவில்லை; நம்மை நோக்கி வகுக்கப் பட்டது. சதி செய்த ரவிவர்மன், தான் செய்த சதியா லேயே அழிந்தான்'' என்று.

தந்திவர்மன் துயரக் கண்கள் இதயவர்மனையும் நோக்கித் துறவியாரையும் நோக்கின. அவன் உதடுகளி



லிருந்து உதிர்ந்த சொற்களில் துன்பம் தோய்ந்து கிடந்தது. ''ஆசார்யரே! வைகுந்தன் கோபுர உச்சி விளக்கு எரிந்ததும் என்னை ரதத்தில் மண்டியிட்டு வணங்கச் சொன்னது இந்த விபரீத விளைவுக்கா? இதற்குத்தானா சேனாதிபதியை என் பின்னாலேயே வரும்படியும் நிற்கும்படியும் உத்தரவிடச் சொன்னீர்கள்?'' என்று வினவினான் தந்திவர்மன்.

''ஆம் தந்திவர்மா; தந்திரத்தைத் தந்திரத்தால்தான் வெல்லமுடியும். உன்னை அழித்துவிட அவன் ஏற்பாடு செய்திருப்பதை இதயவர்மன் சுட்டிக்காட்டியும் நீ இங்கு வரப் பிடிவாதம் செய்தாய். அப்படி வருவதானால் என்ன செய்ய வேண்டுமென்பதையும், பல்லவ மன்னனையும் காஞ்சியையும் காஞ்சி மக்களையும் பூர்ண அழிவிலிருந்து எப்படிக் காக்க வேண்டுமென்பதையும் நான் நிர்ணயித்தேன். தர்மத்தின் பணியில், மார்க்கத்தில், நாம் விரும்பாமலே சில வேளைகளில் நாசம் ஏற்படுகிறது. அதற்கு நாம் என்ன செய்யமுடியும். அதோ பார் காஞ்சியின் வெற்றி முரசு கொட்டுகிறது'' என்றார் துறவி.

காஞ்சி வெற்றி முரசு பலமாக ஒலித்தது. சிறிது நேரம் ரதத்தில் நின்ற தந்திவர்மன் ரதத்தில் மீண்டும் மண்டியிட்டான். மற்றப் படைகளையும் மண்டியிடும்படி கையாட்டினான். அன்று படைப்பிரிவுகள் பூராவும் வைகுந்தன் கோயிலை நோக்கி மன்னனுடன் வணங்கின. இதயவர்மனும் தனக்கு இறைவன் அளித்த வெற்றிக்காக வைகுந்தப் பெருமானைத் தியானித்தான். இப்படிச் சில நிமிஷங்கள் சென்றதும் மன்னன் துறவியுடன் அரண்மனையை நோக்கி ரதத்தைத் திருப்பிச் செல்ல விட்டான். மன்னனையும் துறவியையும் தாங்கிய ரதம் வெகு வேகமாகப் பறந்தது.

இதயவர்மன் மன்னனுடன் செல்லவில்லை. அப்பொழுதும், போரில் இறந்து கிழக்கு வாயில் கதவை

களுக்கு இடப்புறம் கிடந்த பிணங்களை அப்புறப்படுத்தவும், அடுத்த போருக்குப் பாதையைச் சுத்தம் செய்யவும் கிழக்கு வாயிலிலேயே நின்றிருந்தான். தனது புரவிப் படையையும் யானைப் படையையும் அணிவகுத்துச் சரியாக மீண்டும் நிற்க வைத்தான். இதயவர்மன் தனது அலுவலில் முனைந்த சமயத்திலும் தந்திவர்மன் நிலை குறித்துப் பெரிதும் வியந்திருந்தான். வெற்றிக்கு மகிழாத ஒரு மன்னன் உலகத்திலிருப்பது பெரும் விசித்திரமாயிருந்தது அவனுக்கு. அவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

அவன் மட்டுமல்ல சிந்தனையிலாழ்ந்திருந்தது. போரைச் சற்றும் எதிர்பாராதவரும், திடீரெனப் போர் ஒலிகள் கிளம்பியதன் காரணமாகக் கிழக்கு வாயிலுக்குப் புரவியொன்றில் விரைந்து வந்தவருமான ராஜமாதுலரும் ஒரு மூலையில் தீவிர சிந்தனையுடன் அதிர்ச்சியுற்று நின்றிருந்தார். தமது அந்த ஏற்பாடும் சிதைந்துவிட்டதை எண்ணிப் பிரமித்தார். சேனாதிபதியின் எதிர்பாராத மரணத்தைப்பற்றி வீரர் பலர் அவர் காதுபடப் பேசிக் கொண்டு போனதைக் கேட்ட அவர், அம்மரணம எதிர்பாராதது அல்லவென்றும், சேனாதிபதி விதைத்த வினையை அறுத்திருக்கிறானென்றும் புரிந்து கொண்டார். மேற்கொண்டு சதியில் சேர்ந்த தமது கதி என்ன ஆகுமோ என்று திகிலடைந்த வண்ணம் நின்றிருந்தார்

இப்படியே ஒரு ஜாமம் நின்றிருந்த பிறகு இதயவர்மனுக்கு மன்னனிடமிருந்து அழைப்பு வந்ததையும் அவன் புரவியொன்றில் ஏறிச் செல்வதையும் கவனித்து அவனைத் தொடர்ந்து தாமும் சென்றார். அரண்மனையில் இதயவர்மனுக்கு மட்டுமல்ல ராஜமாதுலருக்கும் ராஜ மாதாவுக்குங்கூடப் பேரதிர்ச்சி காத்திருந்தது. இதயவர்மன் வந்ததும் தந்திவர்மன் அவனிடம் ஒரு ஓலையை நீட்டினான். "இதயவர்மா! இதைக் கொண்டு போய் கோவிந்தனிடம் கொடுத்துவிடு. காஞ்சி அவனிடம்



சரணடைந்து விட்டதாகத் தெரிவி. சமாதான நிபந்தனைகளை அறிந்து வா" என்றும் கூறினான் தந்திவர்மன்.

இதயவர்மன் பிரமித்தான், "மன்னா! நாம் வெற்றியல்லவா அடைந்திருக்கிறோம்?" என்று மென்று விழுங்கினான்.

தந்திவர்மன் குரலில் துயரம் ததும்பி நின்றது. "ஆம்; பிணக்குவியலின்மீது" என்றான் பல்லவ மன்னன்.

## அத்தியாயம் 35

# தோல்வி

பல்லவ அரண்மனையில் மந்திராலோசனை மண்டபத்தில் அப்பொழுது அமர்ந்திருந்தான் தந்திவர்மன். அவனுக்கருகில் ஒருபுறம் ராஜமாதாவும் மற்றொருபுறம் திருமங்கை மன்னனின் அமைச்சரும் அரசனின் ஆசார்யருமான சாயை பிடிப்பானும் அமர்ந்திருந்தார்கள். ராஷ்டிரகூடப் படைகளை முறியடித்து வெற்றிவாகை சூடியிருக்கும் சமயத்தில் மன்னன் தோல்வியை ஒப்புக்கொண்டு சமாதானம் கேட்பது இதயவர்மனுக்கு மட்டுமல்லாமல் அவனைத் தொடர்ந்து உள்ளே வந்த ராஜமாதுலருக்கும் பிரமிப்பாயிருந்தது. அவர்கள் வியப்பை உணர்ந்து கொண்ட மன்னன் சொன்னான், ''இதயவர்மா! என் தந்தையுடன் சென்று நானும் போர்களைக் கண்டிருக்கிறேன், இன்றைய போரையும் நீ விளைவித்த அழிவையும் பார்த்தேன். என் வெறுப்பு உச்சிக்குச் சென்றிருக்கிறது. ராஷ்டிரகூடர்களின் நஷ்டம் இன்று மகத்தானதுதான். ஆனால் நமக்கும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்துக்கு ஆளானவர்களுக்கெல்லாம் தாய்மார்கள், பெண்டு பிள்ளைகள் இருப்பார்கள். நாளைக்கு நமது ஜய பேரிகையுடன் அவர்கள் அழுகையொலியும் கலக்கும். இன்றைய போரை நாம் தவிர்த்திருக்க முடியாது. ஆகையால் அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டேன். இந்த நகரத்தில் நடந்த சதி வெற்றி பெற்றிருக்குமானால், ராஷ்டிரகூடர்கள் வெற்றிக்களியுடன் காஞ்சிக்குள்ளே நுழைந்திருந்தால் இந்த நகரத்தைச் சூறையாடியிருப்பார்கள். மக்களை நாசப்படுத்தியிருப்பார்கள். அந்த நாசத்தைத் தவிர்க்கவும், அவர்களுக்குக் காஞ்சியின் பலத்தைக் காட்டவும், சதியை உடைக்கவுமே இன்றைய போருக்கு நான் ஒப்புக்கொண்டேன். இனி சமாதானம் பேசுவோம். வெற்றி பெற்றவன் தாழ்வதில் பலமிருக்கிறது. அந்தப் பலத்துடன் போ இதயவர்மா! கோவிந்தனுக்கு என்ன வேண்டுமென்று கேட்டு வா'' என்று.



ராஜமாதுலரும் ராஜமாதாவும் பிரமித்து நின்றார்கள். தங்கள் சதி விவகாரங்கள் பூராவும் மன்னனுக்குத் தெரிந்திருப்பதை உணர்ந்து ஓரளவு அச்சமும் கொண்டார்கள். அத்தனையிலும் ராஜமாதாவுக்கு மட்டும் ஒரு பெருமிதம் இருந்தது. தன் மகன் வீரன்தான் என்ற பெருமிதம் அது. எந்த ராஷ்டிரகூடரைக் கொண்டு காஞ்சியைப் பலப்படுத்தி பக்தி கொண்ட தன் மகனை வீரனாக்கத் திட்டமிட்டாளோ அந்தத் திட்டம் எத்தனை அர்த்தமற்றது என்பதைப் புரிந்து கொண்டாள் ரேவாதேவி. பெரு வீரனும் மகா தந்திரசாலியுமான தந்திவர்மனைப் பெற்றெடுத்தது பற்றிப் பெருமை கொண்டாள் ரேவா தேவி. அந்தச் சமயத்தில் அவளுக்கு ஓர் அச்சமுமிருந்தது. தான் சதியில் சம்பந்தப்பட்டதை அறிந்த தந்திவர்மன் நீதிமானாகையால் தனக்கு எத்தகைய தண்டனையை விதிப்பானோ என்ற பயமும் இருந்தது அவளுக்கு. ராஜமாதுலர் நிலை விவரிக்க இயலாததாயிருந்தது. காஞ்சியைக் காட்டிக் கொடுக்கத் தான் செய்த ஏற்பாடுகள் மன்னனுக்குப் புரிந்துவிட்டதென்றே அவர் எண்ணியதால் உள்ளூர குலை நடுக்கமெடுக்க நின்றார் ராஜமாதுலர்.

பல்லவ மன்னன் அவ்விருவரையும் கவனிக்கவே இல்லை. இதயவர்மனை நோக்கிச் சொன்னான்: ''ஏன் தயங்குகிறாய் இதயவர்மா! சென்று வா'' என்று.

இதயவர்மன் மன்னனை ஏறெடுத்து நோக்கிக் கேட்டான்: ''மன்னவா! கோவிந்தன் சமாதானத்துக்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது?'' என்று.

''ஒப்புக்கொள்வான், கவலைப்படாதே'' என்று திட்டமாகக் கூறினான் தந்திவர்மன்.

''எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?'' என்று வினவினான் இதயவர்மன்.

"தோல்வியுற்றவன், அதிக் நாசத்துக்கு ஆனானவன். நாமளிக்கும் சமாதானத்தை ஏற்கவில்லையென்றால் அவன் முட்டாள். தவிர அவன் நமது சமாதானத்தை ஏற்க வேண்டிய அவசியமும் அந்த ஓலையில் இருக்கிறது இதய வர்மா, கண்டிப்பாய் கோவிந்தன் இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்றுக் கொள்வான்" என்றான் தந்திவர்மன்.

"ஆம்; ஆம். போய் வா இதயவர்மா! இதில் உனக்கும் பயனிருக்கிறது" என்றார் வைணவத் துறவியும்.

இதயவர்மன் அப்பொழுதும் தயங்கி நின்றான். "இன்னும் ஒரு நாள் போர். ராஷ்டிரகூடப் படைகள் தங்கள் நாட்டை நோக்கிப் பறக்கும் அதற்குள் நிலைமையை மாற்றச் சொல்கிறீர்களே. இது சரியா!" என்றும் வினவினான்.

தந்திவர்மன் தன் முன்பு மிகுந்த வருத்தத்துடன் நின்ற இதயவர்மனை நோக்கிச் சொன்னான்: "இதயவர்மா! காஞ்சியில் நடந்தது எதுதான் சரி? தாயும் பிள்ளையும் மாறுபடுவது சரியா? மாமனும் மருமகனும் போரிடுவது சரியா? காஞ்சியைக் காக்க வேண்டிய சேனாதிபதி காஞ்சியைக் காட்டிக் கொடுக்க முயல்வது சரியா? எதுவும் சரியன்று இதயவர்மா. உலகத்தில் உண்மையில் போர்களே தேவையல்ல. இந்தப் போர்கூடத் தேவையில்லை. ராஷ்டிர கூடர்களுக்கு நாடில்லையா, செல்வமில்லையா? எதற்கு இன்னொரு நாட்டைக் கவரவேண்டும்? அங்குள்ளவர்களை அழிக்க வேண்டும்? எல்லாம் பேராசையில்; பொருள் வெறியில் ஏற்படுகின்றன. உண்மையில் இரத்தப் போரைத் தடுக்க என்னாலான சகலத்தையும் செய்தேன். படைகள் ஒரு வாசலிலிருந்து இன்னொரு வாசலுக்கு அனுப்பப்பட்ட போது அவற்றை நானே திருப்பியனுப்பி எல்லாம் தந்தி வர்மனுக்குத் தெரியும்' என்று ஒற்றர் மூலமாகக் கோவிந்தன் காதில் விழச் செய்தேன் அதனால்தான் அவன் தனது சேனாதிபதியை இங்கு அனுப்பினான் அவன் இங்குள்ள நிலைமையைக் கண்ட பிறகு அவனையும் வெளியே செல்ல அனுமதித்தேன். அப்படியும் கோவிந்தன் ஆசை குறையவில்லை. காஞ்சியை நோக்கி வந்தான், என்னையும் காஞ்சியையும் அழிக்க. வைகுந்தனுக்கு அது இஷ்டமில்லை. வைகுந்தனால் நாம் மிஞ்சினோம் போர் ஆரம்பத்தில் வைகுந்தன் கோபுரத்தை நோக்கி வணங்க ஆசார்யர் உத்தரவிட்டதால் வணங்கினேன். வணக்கம் என் உயிரைக் காத்தது; சேனாதிபதியின் உயிரை உறிஞ்சியது. அவன் கையிலிருந்த ரக்ஷைகூட அவனைக் காக்க முடியவில்லை. வைகுந்தன் திருவுள்ளம் அப்படி."



இந்த இடத்தில் சற்றே பெருமூச்செறிந்தான் தந்தி வர்மன். பிறகு மடியிலிருந்து ஒரு ரக்ஷையை எடுத்து ராஜமாதாவிடம் கொடுத்து. "அம்மா! இதை வைத்துக் கொள். இது சேனாதிபதியின் கையிலிருந்தது. இது உன்னையாவது காக்கட்டும்" என்று கூறிவிட்டு, "போய் வா இதயவர்மா!" என்று இதயவர்மனுக்கு அனுமதி யளித்துவிட்டு, "ஆசார்யரே! வாருங்கள், வைகுந்தன் சந்நிதிக்குச் செல்வோம்" என்று துறவியை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

துறவி அரசனைப் புன்முறுவலுடன் தொடர்ந்தார். இதயவர்மன் கையிலேந்திய பெரும் ஓலைச் சுருளுடன் அவ்விருவருக்கும் பின்னால் சென்றான். தனியே அந்த மண்டபத்தில் விடப்பட்ட ராஜமாதுலரும் ராஜமாதாவும் ஒருவரையொருவர் சில விநாடிகள் மௌனமாகப் பார்த்துக் கொண்டார்கள். பிறகு கையிலிருந்த பெரும் ரக்ஷையைப் பிரித்தாள் ராஜமாதா. அதிலிருந்த இரு ஓலைச் சுருள்களையும் எடுத்தாள் அவள் முகத்தில் படர்ந்த கிலி சொல்லத் தரமல்லாதிருந்தது. "அயோக்கியன்! சேனாபதிபதி என்னை நீதிமன்றத்துக்கு இழுக்க ஏற்பாடு செய்துவிட்டானே சதி அம்பலமானால் எனக்கெதிராக இந்த ஓலைகளைக் காட்ட ஏறபாடு

போலிருக்கிறதே'' என்ற ராஜமாதா அந்த ஓலைகளை ராஜமாதுலரிடம் கொடுத்தாள்.

ராஜமாதுலர் ஓலைகளைப் பிரித்துப் படித்தார். ''ஆம்! ரேவா! நீ எழுதிய ஓலைகள்தாம். சேனாதிபதி தான் அகப்பட்டுக் கொண்டால் உன்னையும் நீதிமன்றத் தில் இழுத்துவிட இவற்றைப் பத்திரப்படுத்தியிருக்கிறான். இவை உனக்குப் பயன்படும் என்று தந்திவர்மன் சொன்ன தின் அர்த்தமிருக்கிறது'' என்றார் பயத்துடன்.

''இதில் ஓலையிருக்கிறது என அவனுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றாள் ரேவாதேவி.

''அவனுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது இந்தக் காஞ்சியில்? இந்த ரகசியத் தகட்டை அவன் பிரித்துப் பார்த்து மீண்டும் மூடியிருப்பான். அவன் எதைச் செய்கிறான், ஏன் செய்கிறான் என்பது வைகுந்தப் பெருமானுக்கு ஒருவேளை தெரிந்தால் தெரியும், அதுகூடச் சந்தேகம்'' என்றார் ராஜமாதுலர்.

அதே அபிப்பிராயத்தைத்தான் அடுத்த அரை ஜாமத் தில் காஞ்சிக்கு வெளியே இருந்த மகாராஜா கோவிந்தனும் வெளியிட்டான். கோபத்தின் அறிகுறியாகத் தன் பாசறை யில் உலாவிய மகாராஜா கோவிந்தன் பக்கத்திலிருந்த சேனாதிபதியை நோக்கி, ''சேனாதிபதி! நாம் தந்திவர்ம னால் பூரணமாக ஏமாற்றப்பட்டோம். உள்ளே நடந்த சதியின் ஒவ்வொரு அம்சத்தையும் அவன் அறிந்திருக் கிறான். இங்கு பல்லவ சேனாதிபதி வந்ததுகூட அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் நாம் வெண்கொற்றக் குடைமீது அம்பெறியச் செய்திருந்த ஏற்பாடும் அவனுக் குத் தெரிந்திருக்க வேண்டும்; சந்தேகமேயில்லை. இல்லா விடில் இப்படி எதிர்பாராத விதமாக நம்மை முறியடித் திருப்பானா அவன்?'' என்று வினவினான்

ராஷ்டிரகூடர்களின் சேனாதிபதி உடனே பதிலளிக்க வில்லை. சற்று சிந்தித்துவிட்டுச் சொன்னான்: ''எனக்கு



ஏதும் புரியவில்லை மன்னா. ராஜமாதுலர் சொற்படி மேலை வாசலைத் தாக்கினோம். அங்கும் நம்மை எதிர் பார்த்திருந்தான் தந்திவர்மன். இதே இதயவர்மன் அங்கு மிருந்தான். இந்த வாசலை இன்று பல்லவ சேனாதிபதி ஏற்பாட்டின்படி தாக்க முயன்றோம். இங்கும் பல்லவ மன்னன் நம்மை எதிர்பார்த்திருக்கிறான். இதயவர்மன் தாக்குதலின் நாசம் இங்கு மிக அதிகம். நாம் நாட்டுக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்று கிறது.''

கோவிந்தனுக்கும் அதுதான் வழியென்று பட்டது. 'வேறு வழியில்லை' என்று அவனும் ஆமோதித்த சமயத்தில் காஞ்சியின் கோட்டை மதிலின் பேரிகைகள் ஒலித்தன. பாசறையில் நடந்துகொண்டிருந்த கோவிந்தன் சட்டென்று நின்றான். ''அதென்ன சேனாதிபதி?'' என்றும் வினவினான்.

''சமாதான முரசுகள்! ஒலிக்கும் முறை அப்படித்தான் இருக்கிறது'' என்றான் சேனாதிபதி.

கோவிந்தனுக்கு ஏதும் புரியவில்லை. அவன் புத்தி பெரிதும் குழம்பியிருந்தது. அந்தக் குழப்பத்தை அதிகப் படுத்த அடுத்த கால் ஜாமத்துக்குள் பந்தங்கள் ஏந்திய புரவி வீரர் சூழ்ந்துவர, தனது பெரும் புரவியில் சமாதான ஓலையைத் தாங்கிய இதயவர்மன் கோவிந்தன் பாசறை வாசலில் இறங்கினான்.

இறங்கியவன் வெகு வேகத்துடன் பாசறைக்குள் சென்று நுழைந்து சமாதான ஓலையை நீட்டினான் கோவிந்தனிடம். ''பல்லவ மன்னர் தோல்வியை ஒப்புக் கொள்கிறார். சமாதானத்தை விரும்புகிறார்'' என்ற சொற்களையும் விருப்பமில்லாமல் கடுமையான குரலில் உதிர்த்தான்.

குழப்பமான கண்களுடன் கோவிந்தன் இதயவர்மனை நோக்கினான். பிறகு ஓலையை வாங்கிப் பிரித்துப் படித்

தான். அவன் கண்களில் குழப்பம் மேலும் விரிந்தது. அந்தக் கண்களை இதயவர்மன்மீது நாட்டினான் கோவிந்தன்; நாட்டிய கண்களை நீண்ட நேரம் அவன் எடுக்கவேயில்லை. ''நீ... நீ......'' என்று ஏதோ சொல்ல முயன்றவன் பேசும் சக்தியும் இழந்தான்.

இதயவர்மனுக்குக் கோவிந்தனின் குழப்பமும் பிரமிப்பும் பெரு விந்தையாய் இருந்தது. தோல்வியின் அம்சங்கள் அனைத்தும் கோவிந்தன் முகத்தில் ஒட்டியிருந்தன.

## அத்தியாயம் 36

## பல்லவகுல திலகம்

பல்லவ நந்திவர்மன் ஓலையைக் கண்டதும் குழப்பமும் பிரமிப்புமடைந்து பேச நாவெழாமல் நின்ற மகாராஜா கோவிந்தன் எதிரே நின்ற இதயவர்மனைப் பல முறைகள் உற்று உற்றுப் பார்த்தான். பிறகு பாசறையில் எரிந்து கொண்டிருந்த இரு பந்தங்களையும் பார்த்தான். காற்றிலாடிய அந்த பந்தச் சுடர்கள்கூடத் தன்னைப் பார்த்து நகைப்பனவாகத் தோன்றியது ராஷ்டிரகூட மன்னனுக்கு. தோல்விக் களை கோவிந்தன் முகத்தில் சொட்டிக் கொண்டிருந்தது. பல்லவ மன்னன் ஓலையைப் படித்த மாத்திரத்தில் ஏற்பட்ட பெருமாறுதல் இதயவர்மனுக்கும் வியப்பாயிருக்கவே அவன் மீண்டும் கூறினான். ''ராஷ்டிரகூட மன்னரே! எங்கள் மன்னர் தோல்வியை ஒப்புக்கொள்கிறார். உங்கள் நிபந்தனைகளைக் கேட்டு வரச் சொன்னார்'' என்று.

''தோல்வியை ஒப்புக்கொள்கிறாரா?'' என்று வினவினான் கோவிந்தன். அவன் குரலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

''ஆம்'' என்றான் இதயவர்மன் அந்த வெறுப்புக்குக் காரணத்தை அறியாமல்.

''இந்த ஓலையைப் படித்துப் பார்'' என்ற கோவிந்தன் ஓலையை இதயவர்மனிடம் கொடுத்தான்.

ஓலையின்மீது கண்களை ஓட்டினான் இதயவர்மன். பாதிதான் படிக்க முடிந்தது அவனால். மீதிப் பகுதியைப் படிக்க விடாமல் கண்ணீர் திரையிட்டது. எதற்கும் அசையாத அவன் மனம் அசைந்தது. என்றும் வராத கண்ணீர் அன்று வந்தது. ஓலை நீண்ட ஓலை. அதில் ஒரு கதை மிகச் சுருக்கமாக எழுதப் பெற்றிருந்தது. அது எழுதப்பெற்றிருந்த முறையும் மிக நேர்த்தியாயிருந்தது. நந்திவர்மன் பின்வருமாறு எழுதியிருந்தான்:

''ராஷ்டிரகூட மகாராஜா கோவிந்தருக்குப் பல்லவ தந்திவர்மன் எழுதுவது:

'இன்றைய போரின் முடிவைக் கண்ட நீங்கள் பல்லவர் வெற்றியடைந்து விட்டதாக நினைக்கலாம். அல்லவே அல்ல. வெற்றியடைந்தது ராஷ்டிரகூடர் குலம். வெற்றியை அடைந்த இதயவர்மனை உங்களிடம் அனுப்பி யிருக்கிறேன். அவனும் உங்கள் குலதெய்வ நீதிப்படி உங்கள் சகோதரன்.

'உங்கள் பெரிய தந்தை இரண்டாவது கோவிந்தர் போரில் வல்லவரல்லர். இருப்பினும் ரசிகர் என்பதை உலகம் அறியும். என் தந்லதக்கு மிக நெருங்கிய நண்ப ரென்பது உலகம் அறியும். அவர் காஞ்சியில் தங்கியபோது இங்கு ஒரு ரகசியத் திருமணம் நடந்தது. பல்லவ குலத்தின் கீழ்க்கிளையின் ஒரு பெண்ணை அவர் காதலித்தார். அதனால் எனது தந்தை நந்திவர்மனால் விவாகம் செய்து கொள்ளவும் வற்புறுத்தப்பட்டார், அந்த விவாகத்தின் விளைவுதான் இதயவர்மன். இவன் பிறந்தபோதுதான் உங்கள் தந்தை துருவ மகாராஜாவுக்கும் பெரிய தந்தைக்கும் அரியணைப் போர் தொடங்கியது. நீங்கள் அரியணைக்கு வந்த பின்னும் ராஷ்டிரகூடம் தாயாதிச் சண்டையால் பிளவுபட்டிருக்கிறது, உங்கள் வம்சத்துக்கு இன்னொரு போட்டியைக் காட்டி. அந்தச் சண்டையை வளரவிடாது தடுக்கவே இதயவர்மன் பிறப்பு எங்களால் மறைத்து வைக்கப்பட்டது இனி அதற்குத் தேவையில்லை, நீங்கள் அரியணையில் திடமாகிவிட்டீர்கள். ஆகையால் உங்கள் ஒன்றுவிட்ட சகோதரனை உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன். இவன் பெயர் வரலாற்றில் வராது. ஆனால் சிறந்த வீரர்கள் பட்டியலில், காஞ்சியைக் காத்த பெருமக்கள் பட்டியலில், மக்கள் மனத்தில் என்றுமிருக்கும். உங்களை வென்றவன் உங்கள் தாயாதி. ராஷ்டிரகூடன் தான் ராஷ்டிரகூடனை வென்றிருக்கிறான். ஆகையால் வெற்றி உங்களது. மேலும் உயிர் சேதத்தைத்



தவிர்க்க விரும்பினால் வெற்றியை ஒப்புக் கொள்ளுங்கள். நாளைக் காலையில் நீங்கள் நகருக்குள் வெற்றிப்பவனி வர ஏற்பாடு செய்கிறேன். ஆயிரம் யானைகள் வெற்றிப் பரிசாக அளிக்கிறேன். தவிர எதற்காகப் போர்கள் உலகத்தில் நடந்திருக்கின்றனவோ அந்தப் பொன்னும் மணியும் நிரம்பத் தருகிறேன். என் நாட்டைத் தவிர வேறு எதுவும் நீங்கள் கேட்கலாம்.

''என் மக்கள் சேதத்தை நான் விரும்பவில்லை. ஆகை யால்தான் உங்களுக்கு இந்த வாய்ப்பை அளிக்கிறேன்.

— தந்திவர்மன்"

இந்த ஓலையைப் பாதி படித்துக் கண்களில் நீர் திரண்டதால் நிறுத்தி, பிறகு சில விநாடிகள் கழித்துக் கண்களைத் துடைத்துக்கொண்டு மீதியையும் சிறுகச் சிறுகப் படித்து முடித்த இதயவர்மன் ஓலையைத் திரும்பவும் கோவிந்தனிடம் கொடுத்தான்.

ஓலையை வாங்கிக் கொண்ட கோவிந்தன் கண்கள் இதயவர்மனை மீண்டும் உற்று நோக்கின. பிறகு அவன் இரண்டடி நடந்து வந்து இதயவர்மன் கைகளைப் பிடித்துக் கொண்டான். அந்த இருவரும் நீண்ட நேரம் மௌனமாகவே நின்றிருந்தார்கள். மெள்ள கோவிந்தன் துவங்கினான் ''தம்பி?'' என்று.

இதயவர்மன் தனது கைகளை அவன் கைகளிலிருந்து விடுவித்துக் கொண்டான். பதிலும் பேசினான். ஆனால் தம்பியென்ற முறையிலல்ல. தூதுவன் என்ற முறையில் பேசினான். ''மகாராஜா! என் மூளை குழம்பிக் கிடக் கிறது. ஓலையை நீங்கள் எனக்குக் காட்டியிருக்க வேண்டிய தில்லை. உங்கள் பெரிய தந்தையை நான் பார்த்ததில்லை. அவர் உல்லாச புருஷர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த உல்லாசத்தின் விளைவு நானென்று எனக்குத் தெரியாது. இந்த ஓலையை நான் மறந்துவிடுகிறேன். நீங்களும் மறந்து விடுங்கள். எனக்குத் தெரிந்த தந்தை

நந்திவர்மன்தான். இன்னொரு தந்தையும் உண்டு எனக்கு...'' இந்த இடத்தில் சற்றுப் பேச்சை நிறுத்தினான் இதயவர்மன்.

''யாரது?''

''வைகுந்தநாதன். அவர் எனக்கு மட்டுமல்ல தந்தை, சகல சராசரங்களுக்கும் தந்தை. இந்த இரண்டு தந்தையரே போதும் எனக்கு. ராஷ்டிரகூடத்துக்கும் இந்த உடலுக்குமிருக்கும் உறவை மறந்துவிடுங்கள். என் தர்மம் வைணவ தர்மம். என் உயிர் வைகுந்தனது. என் ஆசார்யர் நந்திவர்மர். காஞ்சி எனது ஊர். இதை மட்டும் நினைப்பில் கொள்ளுங்கள். ஓலைக்கு உத்தரம் தாருங்கள்'' என்றான், இதயவர்மன் இதய நிலையை இறுக்கிக் கொண்டு.

கோவிந்தன் முகத்தில் வியப்பு விரிந்தது. அவனும் அடுத்தபடி தம்பியென்று அழைக்கவில்லை சகோதரர்களிடம் போரிட்டு ராஷ்டிரகூட அரியணையை நிலை நிறுத்திக்கொண்ட கோவிந்தன் அந்தப் பாசத்தை அறுக்க முயன்றான். ஆனால், சொந்த சகோதரர் பாசத்தை அறுத்துவிட்டவனுக்கு இந்த ஒன்றுவிட்ட பாசத்தை அறுப்பது பிரம்மப் பிரயத்தனமாயிருந்தது அதைக் கண்டு அவனே வியந்தான். இருப்பினும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சொன்னான். ''இதயவர்மா! சொல் பல்லவனிடம். இன்று அவன் கொண்ட வெற்றி ராஷ்டிரகூடர்களின் தோல்வியென்று சொல். வெற்றியை ஒப்புக்கொள்ளாமலே காஞ்சியைவிட்டு நான் செல்லத் தயாராயிருப்பதாகச் சொல். ராஷ்டிரகூட கோவிந்தனும் வீரன். அவனுக்கும் வீரர்களுக்கான பெருமிதம் உண்டு. வெற்றியைத் தானமாகப் பெற அவன் இஷ்டப்படவில்லை என்று சொல்.'' இதைச் சொன்ன கோவிந்தன் முகத்தில் வீரக் களை சுடர்விட்டது. அதில் வெறுப்பும் தனக்கொருவன் வெற்றி தானம் வழங்குகிறானே என்ற கோபமும் கூடக் கலந்து கிடந்தன.



இதயவர்மன் கோவிந்தனை ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் நோக்கினான். ராஷ்டிரகூட மன்னனும் பெருந்தன்மையுள்ளவனென்பதைப் புரிந்து கொண்டான். இவ்வளவு பெருந்தன்மையுள்ளவன் எதற்காகச் சதியைக் கிளப்பினான் காஞ்சியில் என்பது புரியவில்லை அவனுக்கு. ஆனால், அந்தச் சந்தேகத்தைக் கோவிந்தனே தீர்த்து வைத்தான். ''இதயவர்மா! சொல் பல்லவ மன்னனிடம். ராஜமாதா, ராஜமாதுலர் தூண்டுதலால் சதியைக் கிளப்பி வெட்கத்தால் குன்றியிருக்கும் கோவிந்தனுக்கு, இல்லாத வெற்றியையும் அளித்து அவனை மேலும் தலைகுனியச் செய்ய வேண்டாமென்று சொல்'' என்றும் தழுதழுத்த குரலில் கூறினான் கோவிந்தன்.

அதுவரை கரையாத இதயவர்மன் இதயமும் கரைந்தது. அவன் கோவிந்தனை அணுகி அவன் கைகளைப் பற்றினான். ''மகாராஜா! உங்கள் அருமை இன்றுதான் புரிந்தது எனக்கு. மகாவீரன் நீங்கள். இருப்பினும் ஒன்று சொல்வேன் உங்களுக்கு, உத்தரவு அளித்தால்...'' என்றான் இதயவர்மனும் நெகிழ்ந்த குரலில்.

''என்ன தம்பீ!''— கோவிந்தன் குரல் மேலும் தழுதழுத்தது.

''பல்லவ மன்னர் சொல்வதை ஒப்புக்கொள்ளுங்கள்'' என்றான் இதயவர்மன்.

''நீயும் என்னை அவமானப்படுத்த விரும்புகிறாயா தம்பி?'' என்று வினவினான் கோவிந்தன்.

''இல்லை மகாராஜா! பல்லவ மன்னன் யாரையும் புண்படுத்த விரும்பாதவர். அவர் யாருக்கும் பெருமை தரவே பாடுபடுவார். இல்லறத்திலிருந்தாலும் அவர் பெரிய துறவி. அவர் சொல்வதைக் கேட்பதில் உங்கள் கீர்த்தி வளரவே செய்யும். உங்கள் இதயங்கூடப் பெரிதும் புனிதப்படும்'' என்றான் இதயவர்மன்.

''அத்தனை நிச்சயமாக எப்படிச் சொல்கிறாய் இதயவர்மா?'' என்று வினவினான் கோவிந்தன்.

இதயவர்மன் மூன்றே சொற்களில் பதில் கூறினான் "நான் மன்னனை அறிவேன்" என்று.

கோவிந்தன் அப்பொழுதும் இசையவில்லை. இல்லாத வெற்றியை ஒப்புக்கொள்ள வீரனான அவன் மனம் இஷ்டப்படவில்லை. அவன் முகத்தில் பெருவேதனை விரிந்தது. இதயவர்மன் மேலும் கேட்டான், "மகாராஜா! தாங்கள் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரர் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று.

"ஒப்புக்கொள்கிறேன். பல்லவனிடம் என்றும் பொய் கிடையாது என்பது பிரசித்தி."

"அப்படியானால் சகோதரனான நான் ஒன்று யாசிக்கிறேன்."

"என்ன இதயவர்மா?"

"இந்த வெற்றியை ஒப்புக்கொள்ளுங்கள்."

"இதயவர்மா!" கோவிந்தன் சீறினான்.

"சகோதரன் கேட்கும் ஒரே பரிசு. வாழ்க்கையில் இனி நாம் சந்திப்பது சந்தேகம். ஆகவே இந்தக் கோரிக்கையை ஒப்புக்கொண்டால் என்ன?" என்று கேட்டான் இதயவர்மன்.

"ஏன் சந்திக்கமாட்டோம்?" கோவிந்தன் வியப்புடன் கேட்டான்.

"காஞ்சியை விட்டும் பல்லவ மன்னனை விட்டும் நான் வரமுடியாது" என்றான் இதயவர்மன்.

"அப்படியானால் ராஷ்டிரகூடம்?"

"பிறப்பிலிருந்து என்னை ஏற்காத நாடு."

"என் பெரிய தந்தை..."

"என்னை ஏற்காத தந்தை."

இதயவர்மன் குரலில் மிகுந்த உறுதியிருந்தது. மகாராஜா கோவிந்தன் இறுதியில் வேறு வழியில்லாமல்



வெற்றியை ஒப்புக்கொள்ள இசைந்தான். "இதயவர்மா! எந்தப் போரும் அளிக்காத விளைவை தந்திவர்மன் வைதீகம் விளைவித்திருக்கிறது. பல துறைகளில் தந்திவர்மன் வெற்றியடைந்திருக்கிறான். காஞ்சியில் விளைந்த சதியின் மீது வெற்றி, உன் இதயத்தின்மீது வெற்றி, இறுதியாக என் எண்ணத்தின்மீதும் வெற்றி. அவனடைந்த வெற்றிகளை ஆயிரம் போர்களைக் கொண்டும் அடைய முடியாது. தந்திவர்மன் ஓலைக்கு மட்டுமல்ல நான் பணிவது. உன் வேண்டுகோளுக்கும் பணிகிறேன்" என்ற கோவிந்தன் பெருமூச்சுவிட்டு இதயவர்மனை அணைத்துக் கொண்டான் பலமாக.

அந்த அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு மீண்டும் பல்லவ காஞ்சி வந்த இதயவர்மன் தந்திவர்மனிடம் நடந்ததையெல்லாம் சொன்னான். தந்திவர்மன் புன்முறுவல் பூத்தான். "இதயவர்மா! உண்மையில் வெற்றி உன்னுடையது. பெரும் நாசத்தைத் தவிர்த்திருக்கிறாய். ஒரு போரில் வெற்றியடைந்து விட்டாய். இன்னொரு போரில் என்ன செய்யப் போகிறாயோ?" என்றும் கூறினான்.

"என்ன போர் மன்னவா?" ஏதும் புரியாமல் கேட்டான் இதயவர்மன்.

"ராஷ்டிரகூடன் போகட்டும் சொல்கிறேன்" என்றான் மன்னன்.

ராஷ்டிரகூடன் போக நாலைந்து நாட்கள் பிடித்தன. காஞ்சியில் கோவிந்தனுக்கு தந்திவர்மன் வெற்றி வாகையைத் தன் கையாலேயே சூடினான். வைகுந்தன் கோபுரத்துக்கு முன்னால் அந்தப் பெருவிழாவை நடத்தினான் தந்திவர்மன். காஞ்சியின் வீரர்கள் அணிவகுத்து நிற்க, பொதுமக்கள் பார்த்து வேண்டா வெறுப்பாக மன்னன் கரகோஷத்தைத் தொடர்ந்து கரகோஷம் செய்ய, ராஷ்டிரகூட சேனாதிபதி தலைகுனிந்து நிற்க, துயரந்

தோய்ந்த வதனத்துடன் அந்த வெற்றிவாகையைச் சூட்டிக்கொண்டான் கோவிந்தன். வெற்றி முரசுகள் கொட்டியதும் தலைதாழ்த்தினான் தந்திவர்மனை நோக்கி. அந்தச் சமயத்தில் வைணவத் துறவி எழுந்தார். மக்களைக் கையமர்த்திச் சொன்னார்: ''காஞ்சியின் இந்தப் பல்லவன், போரில் வல்லவன். ஆனால் நல்லவன். ஆகையால் போரை அனைவரும் விரும்பத்தக்க முறையில், அறத்தின் வழியில் முடித்திருக்கிறான். தன் மக்கள் நலனை விரும்பும் இவனை விடச் சிறந்த மன்னனைப் பல்லவகுலம் கண்டதில்லை. இனிக் காணப்போவது மில்லை. ஆகையால் இவனுக்குப் பல்லவ குல திலகம் என்று நான் திருமங்கை மன்னனை நினைத்து வைகுந்தனையும் மனத்தில் கொண்டு விருது அளிக்கிறேன். இவன் குலத்தாருக்கு இனி இந்த விருது தொடர்ந்து இருக்கும். வாழி தந்திவர்மன், வாழி பல்லவகுல திலகம்.''

இதைத் தொடர்ந்து ''பல்லவ குல திலகம்,'' ''பல்லவ திலகம்'' என்று மக்கள் ஆரவாரித்தனர். இதில் கோவிந்தனும் ராஷ்டிரகூடர்களும்கூடச் சேர்ந்து கொண்டனர். அந்தப் பேரொலி விண்ணை நோக்கிச் சென்றது. அதை வீரனான தன் தந்தையும் கேட்டிருப்பார் என்று தந்திவர்மன் நம்பினான். இதயவர்மன் மட்டும் அந்த விழாவைப் பார்த்துக்கொண்டு நின்றான். ராஷ்டிரகூட மன்னன் வெற்றி வாகைசூடி, ஆயிரம் யானைகளையும் இதர பரிசுகளையும் நிரம்பப் பெற்றுக்கொண்டு சென்றான். அடுத்த இரண்டு நாட்களில் காஞ்சி அமைதி பெற்றது. இதயவர்மன் மனம் மட்டும் அமைதி பெற வில்லை. அரசன் குறிப்பிட்ட போர், பெரும் சோதனை அவன் முன்பு பெரிதாக உருவெடுத்தது. அந்தப் பிரச்னையில் தந்திவர்மன் அவனிடம் யாசித்தான். ''இதயவர்மா! இந்த வரம் உன்னிடம் எனக்கு வேண்டும்'' என்றான். ஆனால் அந்த வரத்தை இதயவர்மன் எப்படிக் கொடுப்பான்? அல்லது எப்படி மறுப்பான்? கேட்பது பல்லவ திலகமல்லவா?

# அத்தியாயம் 37

## சாந்தி

பல்லவ தந்திவர்மன் கேட்ட யாசகம், கேட்ட முறை, கேட்ட இடம், அனைத்துமே இதயவர்மன் நாவைப் பலமாகக் கட்டிவிட்டன. பதிலேதும் சொல்ல முடியாமல், உள்ளத்தில் எழுந்த எண்ணப் போரை, மன உளைச்சலை நிவர்த்தித்துக் கொள்ள முடியாமல் தவித்தான் அவன். மன்னன் சொற்படி அவன் மூன்றாம் முறையாக இரவில் வைகுந்தன் சந்நிதியை நோக்கிச் சென்றான். முதல் தடவைபோல் அன்று ஆலய விளக்குகள் அணைக்கப்பட வில்லை. அவனைப் பிடித்து மர்மமாக உள்ளே அழைத்துச் செல்ல மறைந்த காவலரும் இல்லை. இரண்டாம் முறை சென்றபோது காவலர் இல்லாவிட்டாலும் விளக்குகள் அணைந்தே இருந்தன. ஆனால் ராஷ்டிரகூடப் போர் எனும் இருள் மறைந்துவிட்டதால் கோவில் தீபங்கள் அந்த இரவில் மிக நன்றாக எரிந்தன. அன்றிருந்த காவலர் அவனைத் தலைவணங்கி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். ஆனால் இந்த மூன்றாம் முறை முற்றிலும் புது வகையாயிருந்தது. முதலிரண்டு தடவைகள்போல் மன்னன் அன்று தனித்து இல்லை. அவனுடன் இந்திராதேவியும் இருந்தாள். அவள் இந்தீவர நயனங்கள் இதயவர்மனை நோக்கி ஆசையுடன் ஒருமுறை விழித்துத் தரையில் சாய்ந்தன.

இதயவர்மன் அவள் நின்ற திருக்கோலத்தைக் கண்டு பிரமித்தான். அன்று அவள் அலங்காரம் அபரிமிதமாயிருந்தது. அழகு அவன் இதயத்தை அப்படியே கௌவிக் கொண்டது. இடையொடியத் துவண்டு நின்ற இந்திரா தேவியின் பின்னழகே அவனைச் சிலையென நிற்க வைத்தது. அத்துடன் அவள் திரும்பிப் பார்த்ததால் துலங்கிய முன்னழகு மூச்சைப் பிடிக்க வைத்தது. ஆனால், தந்திவர்மன் வைகுந்தன் முன்பு இதயவர்மன் வந்ததைக் கூடக் கவனியாமல் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். ''இதயவர்மன் வணங்குகிறேன்'' என்று இதயவர்மனே

அறிவுறுத்திய பின்பே திரும்பிய மன்னன் அவன்மீது தனது கருணைக் கண்களை நாட்டிவிட்டுச் சொன்னான், "இதயவர்மா! இன்று அரசாங்க விஷயமாக முக்கிய விஷயங்களை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் அதை வைகுந்தன் முன்பு முடிவு செய்யவே இங்கு வந்தேன்; உன்னையும் வரவழைத்தேன்" என்று.

"ஆணையிடுங்கள் மன்னவா" என்றான் இதயவர்மன் தலைவணங்கி.

"ஆணையிடும் நிலையில் நானில்லை இதயவர்மா. யாசிக்கும் நிலையில் இருக்கிறேன்" என்ற மன்னவன் இதயவர்மனைக் கூர்ந்து நோக்கினான்.

"குடிமக்களிடம் மன்னர் யாசிப்பதில்லை. ஆணையிடுவதே இயல்பு" என்று சுட்டிக் காட்டினான் இதயவர்மன்.

"நீ பல்லவர் குடிமகனல்லன், இதயவர்மா! இன்னொரு நாட்டு மன்னனின் சகோதரன். விதியின் கரங்கள் உன்னை அரசிலிருந்து விலக்கியிருக்கிறது. இருப்பினும் நீ அரச குலத்தவன். ராஷ்டிரகூடன் எனக்குப் பணிய அவசியமில்லை" என்றான் தந்திவர்மன்.

"எனக்கு ராஷ்டிரகூடம் தெரியாது. தொண்டை நாடுதான் தெரியும். பல்லவ காஞ்சிதான் தெரியும். இரண்டாவது கோவிந்தரைத் தெரியாது தந்தையென்று. நானறிந்த தந்தை தந்திவர்மன்தான். வேறு உறவினர் யாரையும் அறியமாட்டேன். காஞ்சி எனது ஊர். பல்லவர் கோன் என் அரசர்" என்றான் இதயவர்மன். அவன் குரலில் உறுதி பூர்ணமாயிருந்தது.

தந்திவர்மன் சிறிது சிந்தித்துவிட்டுச் சொன்னான், "இதயவர்மா! நம் சகலருக்கும் தாய், தந்தை, உறவினர், எல்லாம் அதோ அந்த வைகுந்தனே. ஆனால், மனிதக்



கிரமத்துக்கு, தர்மத்துக்கு, சில வேறுபாடுகளை நாம் சமைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வேறுபாடுகள் காரணமாக உன்னிடம் யாசிக்கிறேன். காஞ்சியின் பாதுகாப்பை நீ ஏற்க வேண்டும்" என்று.

"நானா!" இதயவர்மன் வியப்புற்றான்.

"ஆம், ராஷ்டிரகூடர் அம்பு பாய்ந்ததால் சேனாதிபதி ரவிவர்மன் இறந்து விட்டான். அந்தப் பதவியை ஏற்க நீதான் தகுதியுள்ளவன் என்பது எனது அபிப்பிராயம் மட்டுமல்ல, ஆசார்யர் அபிப்ராயமுங்கூட; மக்கள் அபிப்ராயமும் அப்படி இருக்கிறது" என்ற தந்திவர்மன் பல்லவப் பட்டயம் தீட்டப்பட்ட பெருவாளொன்றைக் கையிலெடுத்து இதயவர்மனிடம் நீட்டினான்.

"நான் இதற்கு..." என்று தயங்கினான் இதயவர்மன்.

"முற்றிலும் தகுதி" என்று அவன் கரத்தில் வாளைத் திணித்த தந்திவர்மன், "இதயவர்மா! இதையும் வைகுந்தன் முன்பு அளிக்கவேண்டுமென்று விரும்பினேன். ஆனால் உன்னை வரவழைத்த காரணம் மகத்தானது. அது என் பரம்பரையைப் பற்றியது. அதையும் நீ ஏற்க வேண்டும்" என்று கெஞ்சினான் தந்திவர்மன்.

"உத்தரவிடுங்கள்" என்றான் இதயவர்மன்.

"இதயவர்மா! மகாராஜா இரண்டாவது கோவிந்தர் நீ பிறந்ததை அறிந்ததும் எனது தந்தைக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். உன்னை ராஷ்டிரகூட அரச பரம்பரைக் கௌரவப்படி வளர்த்து அரச பரம்பரையைச் சேர்ந்த பெண்ணையே மணமுடிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் அது. என் தந்தை அதற்குச் சம்மதித்தார். தந்தையின் வாக்குறுதியை நிறைவேற்ற மகனுக்கும் உரிமை உண்டல்லவா? அந்த உரிமையைக் கூடிய வரையில்

சரியாகவே நிறைவேற்றினேன். உனக்குப் போர்ப்பயிற்சி அளித்தேன். சில போர்களுக்கும் அனுப்பினேன். அடுத்த கடமை இருக்கிறது இதயவர்மா. அதையும் நான் முடிக்க வேண்டும். அதற்காக நீ பல்லவகுலம், ராஷ்டிரகூட குலம இரண்டிலும் சம்பந்தமுள்ள அரசகுல மகளை ஏற்க வேண்டும்! அதில் அதிகக் கஷ்டமிருக்காதென்று நினைக்கிறேன்'' என்று கூறிய மன்னன், அவனையும் நோக்கி இந்திராதேவியையும் நோக்கினான்.

இதயவர்மன் இதயத்தில் எண்ணங்கள் பல எழுந்து உலாவின. எண்ணங்கள் மட்டுமல்ல, ஏந்திழை ரஞ்சனியும் எழுந்து உலாவினாள். அப்பொழுதுதான் அவள் ரவிவர்மன் மாளிகையின் புரவிக்கூடத் திட்டி வாசலைத் திறப்பது போலிருந்தது அவனுக்கு. அவன் பதில் சொல்ல முடியாமல் தவித்தான். ''மன்னா! இதற்கு அவகாசம் வேண்டும்'' என்று தட்டுத் தடுமாறிச் சொன்னான்.

''இதயவர்மா! கிடைத்தற்கரிய அரசமகள் இந்திரா தேவி. அது மட்டுமல்ல, உன்னைப்போல் இவளும் அந்தச் சதி விவரங்களை அறிய எனக்கு உதவியிருக்கிறாள். இவளை மணப்பதால் நம்மிருவர் தந்தைமார்களின் விருப்பமும் நிறைவேறுகிறது'' என்றான் மன்னன்

''தந்தை, அரசு, பதவி— அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஓர் ஏழையும் என்னை நம்பியிருக்கிறாள் மன்னவா'' என்ற இதயவர்மன் நா தழுதழுத்தது.

பல்லவகுல திலகமான தந்திவர்மன் கண்களில் அனுதாபம் குடிகொண்டது. ''அந்த நிலை இப்பொழுது மாறிவிட்டது இதயவர்மா'' என்ற மன்னவன் குரலும் திடமாயில்லை.

இதயவர்மன் கண்களில் சீற்றம் தெரிந்தது. ''எங்கே அந்த அநாதை?'' என்று சீறினான் அவன்



தந்திவர்மன் தனது மடியிலிருந்த ஓலையொன்றை எடுத்து இதயவர்மனிடம் கொடுத்தான். இதயவர்மன் கண்கள் அதில் ஓடின. அந்த வரிகள் அவன் இதயத்தைச் சுட்டுக் கருக்கிக் கொண்டிருந்தன. ''ஆசிரியரே! நீங்கள் யாரென்பதை அறிந்தேன் நீங்கள் இனி எனக்கு எட்டாப் பழம். எட்டினாலும் நான் அடைய முயல்வது என் சுய நலத்தைக் குறிக்கும். என் காதல் அதற்கு அனுமதிக்க வில்லை. காஞ்சியின் நலனை முன்னிட்டு நீங்கள் இந்திரா தேவியை அடைவதுதான் நியாயம். தியாகம் செய்யுங்கள் அன்பரே! தியாகத்தில் இன்பம் எத்தனையோ இருக்கிறது. நான் செல்கிறேன் காஞ்சியைவிட்டு என்னைத் தொடர முயலாதீர்கள். உங்களிடம் பாடங்கற்ற—மனம் கொடுத்த —ரஞ்சனி ''

இதயவர்மன் இதைத் திரும்பத் திரும்பப் படித்தான். ''இதை யார் கொண்டு வந்தது?'' என்று ஓலையைக் காட்டிக் கேட்டான் மன்னவனை.

''யாரும் கொண்டு வரவில்லை. ரஞ்சனி கிழக்கு வாசல் ஆயுத சாலையில் இருப்பதை அறிந்து அவளை அழைத்து வரச் சென்றேன். அவளே என்னிடம் இதை அளித்தாள்'' என்றான் தந்திவர்மன்.

''அவள் எங்கே இப்பொழுது?'' என்று வெறி கொண்டவன் போல் கேட்டான் இதயவர்மன்.

''சொல்ல அனுமதியில்லை இதயவர்மா.''

''அவள் என்ன ஆனாளோ?''

''எதுவும் ஆகவில்லை, சௌக்கியமாயிருக்கிறாள்.''

''யார் பாதுகாப்பில்?''

''என் பாதுகாப்பில்.'' தந்திவர்மன் இதைத் திட்டமாகச் சொன்னான். மேலும் கூறினான், ''இதயவர்மா! க்ஷத்திரியனுக்கு, ஆளும் வம்சத்தாருக்குக் காதலைவிட

முக்கிய கடமைகள் உண்டு. ஆனால், உன்னை நான் கட்டாயப்படுத்தவில்லை.. இந்திராதேவியை வலுக் கட்டாயமாக உன்மீது சுமத்த நான் இஷ்டப்படவும் இல்லை. எந்த முடிவையும் நீயே எடுக்கலாம்'' என்று.

தன்னைத் தெய்வத்தின் முன்பு வைத்து இருவர் பகடை யாடுவதை நினைந்து கண்ணீர் வடித்த இந்திராதேவி திடீரெனத் திரும்பி விடுவிடுவென வெளியே நடந்தாள். அதைக் கவனித்த இதயவர்மன் சுய உணர்வு பெற்றான். அவள் மீதிருந்த காதலின் வேகத்தை அப்பொழுதே உணர்ந்த இதயவர்மன், ''இந்திரா, இரு இரு'' என்று கூறிக்கொண்டு வெகு வேகத்துடன் அவளைத் தொடர்ந் தான்.

அதைப் பார்த்துக்கொண்டு நின்ற தந்திவர்மன் புன்முறுவல் கொண்டான். ''மனிதன் கதையே இது பெண் ஓட ஆண் தொடர்வது. இதற்குப் பெயர் காதல்! எல்லாம் வைகுந்தன் திருவிளையாடல்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு சற்று தூரத்திலிருந்த தூணை நோக்கிக் கையை ஆட்டினான். அதன் மறைவிலிருந்து மெல்ல நடந்து வந்த ரஞ்சனியைச் சிரமேல் தடவிக் கொடுத்த தந்திவர்மன், ''குழந்தாய்! சிலர் தியாகத்தால்தான் உலகம் வாழ்கிறது. உன் தியாகம் மகத்தானது! தியாகத்திலும் சந்துஷ்டியிருப்பதை வெகு சீக்கிரம் புரிந்துகொள்வாய். நீ இன்று காஞ்சிக்கு ஒரு படைத்தலைவனையளித்தாய். காஞ்சி மன்னனின் கடமையை நிறைவேற்ற வழிவிட்டாய். மனித சுகம் அற்ப சுகம். மனித மனம் மாறும் தன்மை யுள்ளது. நிலையற்ற அதைவிட நிலையான இதைப் பார்?'' என்று கூறி வைகுந்தப் பெருமானைச் சுட்டிக் காட்டினான்.

ரஞ்சனி தெய்வத்தின் எதிரே தலை வணங்கி நின்றாள். மனத்தில் பெரும் சங்கடம் இருந்தது. மனமே சுக்கு நூறாக வெடிக்கும் போலிருந்தது. இருப்பினும் ஆசிரிய ஞுக்கு தான் செய்த தியாகத்தைப் பற்றி சாந்தியிருந்தது.



அதில் மெள்ள மெள்ளச் சந்துஷ்டியும் புகுந்தது. அது உண்மையா பிரமையா என்று அவளால் நிர்ணயிக்க முடியவில்லை.

இந்திராதேவியின் நிலை அப்படியில்லை. கோவிலி லிருந்து கிளம்பி வெறிபிடித்ததுபோல் ரதத்தைச் செலுத்தித் தனது அந்தப்புர அறைக்குள் ஓடிய அவளைத் துரத்தி வந்து பிடித்த இதயவர்மன், ''இந்திரா! இந்திரா! இதென்ன பைத்தியம்? என் தயக்கத்தின் காரணத்தை நீ புரிந்து கொள்ளவில்லை'' என்று மன்றாடினான்.

''புரிந்துகொண்டேன். காரணம் ரஞ்சனியின் காதல். விடுங்கள் என்னை. வலுக்கட்டாய மணம் எனக்குப் பிடிக்க வில்லை'' என்று திமிறினாள் இந்திராதேவி.

''இல்லை இந்திரா! ரஞ்சனியிடம் எனக்கு அனுதாபம். அவள் தகப்பனற்ற அநாதை. ஆனால் உன்மேல்...'' என்ற இதயவர்மனைப் பேசவிடாத இந்திராதேவி, "காதல்; தெரியும். தெரியும். போய்விடுங்கள். மன்னன் முன்பு நான் பட்ட அவமானம் போதும்'' என்று சீறித் திமிறினாள்.

இதயவர்மன் அவளைத் திருப்பி இறுக்கிப் பிடித்தான். ''நான் பொய் சொல்லவில்லை. என்னைப் பார்'' என்றான்.

இந்திராதேவி பார்த்தாள். அவன் கண்களின் வேகத்தைக் கண்டு வெட்கினாள். கண்களை மூடிக் கொண்டாள் உள்ளே விரிந்தது பார்வை. பெரும் மோகன உலகம் அதில் தெரிந்தது. அதில் இருவரே இருந்தனர். அவளிருந்தாள்; இதயவர்மன் இருந்தான். வேறு யாரும் இல்லை. மற்றவர் எதற்கு?

அதே சமயத்தில் வைகுந்தன் முன்பு நின்ற தந்தி வர்மன் வைகுந்த விண்ணகரப் பாடல்களைப் பாடினான். மன்னன் மனம் அதில் ரஞ்சனியும் சேர்ந்துகொண்டாள்.

மகிழ்ந்து பாடினான். ரஞ்சனி மனம் துன்பத்தால் நெகிழ்ந்துருகப் பாடினான். இருப்பினும் இரண்டும் சுருதி சேர்ந்தது. தந்திவர்மன் முடிவில் அவளை நோக்கி, "பார்த்தாயா! ரஞ்சனி, துன்பமும் மகிழ்ச்சியும் வைகுந்தன் முன்னால் சுருதி சேருவதை? உன் தியாகத்தின் சுருதி அது. நீ வைணவி மகளே! வைணவத்தின் அடிப்படையே தியாகம். வைகுந்தன் நாமமே யோகம்" என்று கூறினான். பக்தி, ரக்தி இரண்டுமே கலந்து கிடந்தன, பல்லவ திலகத்தின் குரலில். அவன் முகத்தில் பெரும் சாந்தி விரிந்து கிடந்தது.

முற்றும்